NATIONAL BESTSELLER

## ராதாகிருஷ்ணன் பிள்ளை

தேசிய அளவில் விற்பனையில் சாதனைகள் புரிந்துள்ள 'கார்பரேட் சாணக்கியா' மற்றும் 'சாணக்கியரின் 7 தலைமை ரகசியங்கள்' புத்தகங்களின் ஆசிரியர்



Pillai's books have sold over 2 lakh copies worldwide.
2 LAKH COPIES SOLD

ஒரு நவீன
ராஜதந்திரியின்
சாகசப் பயணம்

# உங்களுக்குள் இருக்கும் சாணக்கியன்

# Chanakya in You

NOW IN TAMIL

JAICO

# உங்களுக்குள் இருக்கும் சாணக்கியன்

ஒரு நவீன
ராஜதந்திரியின் சாகசப் பயணம்

# Chanakya in You

NOW IN TAMIL

ராதாகிருஷ்ணன் பிள்ளை

ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
மும்பை டில்லி பெங்களூரு புவனேஷ்வர் கொல்கத்தா
ஹைதராபாத் சென்னை அஹமதாபாத் லக்னோ போபால்

பதிப்பாளர்:
ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
A-2, ஜாஷ் சேம்பர்ஸ், 7அ சர் ஃபிரோஷா மேத்தா சாலை,
போர்ட், மும்பை - 400 001
jaicopub@jaicobooks.com
www.jaicobooks.com

© ராதாகிருஷ்ணன் பிள்ளை

CHANAKYA IN YOU
உங்களுக்குள் இருக்கும் சாணக்கியன்
ISBN 978-81-8495-957-4

First Jaico Impression: 2016

இந்த புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு அல்லது நகல் எடுப்பது, ஒலிப்பதிவு செய்வது அல்லது எந்த தகவலையும் சேமிப்பு மற்றும் திரும்பப் பெறும் முறையில் பயன் படுத்துவதோ கூடாது.

இப்புத்தகத்தை எழுத எனக்கு ஊக்குவிப்பாக இருந்த அனைத்து வாசகர்களுக்கும்.

# பொருளடக்கம்


1. தாத்தாவின் அறிவுரை
2. இந்திய வரலாறு
3. ராஜதந்திரி
4. அர்த்த-சாஸ்திரம்?
5. சதுரங்கம்
6. என்னுள் இருந்த தலைவரை வெளிக்கொண்டு வருதல்
7. புத்தகக் காதல்
8. சாணக்கியர் குறித்தக் குறிப்புகள்
9. குரு - மகத்தானவர்
10. தாத்தாவிடமிருந்து அப்பாவிற்கு
11. ஓர் ஆசிரியர், ஒரு மாணவன்
12. ஆறு மாதப் பிரியாவிடை
13. உள்முகமாக ஒரு பயணம்
14. என் அர்த்தசாஸ்திர குரு
15. விதிமுறைகள்
16. தீட்சை
17. ஆசிரம வாசம்
18. வித்தியாசமானதொரு கணக்காளன்
19. உன்னதமான தொழிலதிபர்
20. படிப்பு முறை
21. மாறுபட்டக் கண்ணோட்டங்கள் - உன் கண்ணோட்டம்
22. சிந்தனை - மனிதகுலத்திற்குக் கிடைத்துள்ள ஒரு பரிசு
23. சிந்தனை செய், அதே சமயம் செயலிலும் இறங்கு
24. கருத்தரங்கு
25. இறுதி நாட்கள்

26. வீடு திரும்புதல்
27. வழிகாட்டிய சோதிடம்
28. சமஸ்கிருதப் பேராசிரியர்
29. நேர்முகத் தேர்வு
30. முன்னோக்கில் பங்கு
31. தலைவரின் பயிற்சி
32. என் புதிய தலைவர்
33. இரு நல்ல செய்திகள்
34. தொடர்பு
35. முன்னோக்கி
36. வணிக முன்வரைவுத் திட்டம்
37. முதலடி
38. விற்பனையாளரிலிருந்து தொழிற்கூட்டாளிக்கு
39. பிரம்மாண்டமான சுற்றுலா
40. ஆன்மீகரீதியான ஒரு சக பயணி
41. அடுத்தக் கட்ட வளர்ச்சி
42. என் பால்ய நண்பனின் வழிகாட்டுதல்
43. என் மனைவியின் வேண்டுகோள்
44. ஓர் இந்தியத் தொழிலதிபரின் உரை
45. பெற்றோர் எனும் ஆனந்தத்தில்
46. பணம் உன்னை விடுதலை செய்யும்
47. உண்மையான சவால்
48. முனைவரை உருவாக்கிய முனைவர்
49. அறிஞரிலிருந்து நூலாசிரியர்
50. விற்பனையில் சாதனை படைத்த ஒரு புத்தகத்தை எழுதுதல்
51. அற்புதமான சுதந்திர உணர்வு
52. எனக்குள் இருந்த தலைவன்
53. குடும்பத் தலைவன்
54. உங்கள் சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தல்

55. உறுதியாக இரு
56. நானா சாதித்தேன்?
57. என்னை நான் கண்டுபிடித்தேன்
58. என் மீதி நாட்கள்
59. கடைசிச் சொற்பொழிவு
60. என் பேரக்குழந்தைகளுக்கு அறிவுரை
நிறைவுக் குறிப்பு
நூலாசிரியரைப் பற்றி
அத்தியாயங்களுக்கான பக்க எண்

# 1

# தாத்தாவின் அறிவுரை

முன்பொரு சமயம், அன்பான தாத்தா ஒருவர் எனக்கு இருந்தார் . . .

எல்லா தாத்தாக்களும் அன்பானவர்கள்தான் என்று நான் நினைக்கிறேன். ஆனால் என் தாத்தாவுக்கும் எனக்கும் இடையே இருந்த உறவு மிகவும் வித்தியாசமானது. முதலில், என் வாழ்க்கையில் எனக்குத் தெரிந்த ஒரே தாத்தா, என் அப்பாவின் அப்பாதான். அதோடு, நான் ஒரு பெருநகரத்தில் வளர்ந்தேன், ஆனால் என் தாத்தாவும் பாட்டியும் ஒரு கிராமத்தில் வாழ்ந்தனர்.

எனவே, ஒவ்வொரு விடுமுறையின்போதும் நான் என் தாத்தாவின் வீட்டிற்குப் போக மிகவும் ஆவலாக இருந்தேன். என்னுடைய கிராமத்து வருகை எனக்கும் அவர்களுக்கும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக இருந்தது. தங்கள் பேரக் குழந்தைகள் தங்கள் வீட்டிற்கு வந்து தங்களோடு நேரம் செலவிடுவதை அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர். நான் அவர்களோடு இருந்த சமயங்களில், என்னுடைய சேட்டைகளைத் தட்டிக் கேட்கும் துணிச்சல் என் பெற்றோர் உட்பட யாருக்கும் இருக்கவில்லை என்பதை நான் முன்னதாகவே தெரிந்து கொண்டேன். என் தாத்தாவும் பாட்டியும் என்னுடன் இருந்தபோது, நான் விரும்பியதைச் செய்யும் சுதந்திரம் எனக்கு இருந்தது.

பின்வரும் கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும்: “தாத்தாக்களும் பாட்டிகளும் பேரக்குழந்தைகளும் ஏன் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கின்றனர்?” “ஏனெனில், அவர்களுக்கு ஒரு பொதுவான எதிரி இருக்கிறான் . . .”

எனவே, இவ்விரு தலைமுறையினருக்கும் இடையேயான பிணைப்பு மிகவும் தனித்துவமானது. நீங்கள் ஒரு பெற்றோராக இருக்கும்போது, ஏகப்பட்டப் பொறுப்புச் சுமைகளை நீங்கள் தாங்க வேண்டியுள்ளதால், நீங்கள் உண்மையிலேயே உங்கள் குழந்தைகளோடு நேரம் செலவிட விரும்பினாலும், போதுமான நேரத்தை அவர்களுக்காக அர்ப்பணிப்பது கடினமாக ஆகிவிடுகிறது.

ஆனால் நம்முடைய தாத்தாக்கள் மற்றும் பாட்டிகளைப் பொருத்தவரை, அவர்களுக்கு எக்கச்சக்கமான நேரம் இருப்பதால்,

தங்களுடைய அன்பையும் அனுபவத்தையும் கொடுப்பதற்கு அவர்களுக்கு யாரேனும் தேவைப்படுகின்றனர். தங்கள் பேரக்குழந்தைகளில் அவர்கள் தங்கள் வாழ்வின் நிறைவைக் காண்கின்றனர். பதிலுக்கு அக்குழந்தைகளும், தங்கள் தாத்தாக்களும் பாட்டிகளும் கூறும் கதைகளின் வடிவிலோ, அவர்களுடன் தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் சந்தைகளிலும் ஆசுவாசமாக நடந்து செல்வதன் மூலமாகவோ, அப்பெரியவர்களிடமிருந்து அவர்களுடைய ஞானத்தைப் பெறுவதற்கு ஆவலாக உள்ளனர்.

கதை சொல்வதில் என் தாத்தா மிகவும் கெட்டிக்காரர். எங்களிடம் கூறுவதற்கு அவரிடம் கதைகளுக்குப் பஞ்சமே இருக்காது. அவருடைய கதைகளில் பல அவருடைய சொந்த வாழ்க்கையிலிருந்து இருந்தாலும், பெரும்பாலான கதைகள் மற்றவர்களுடைய வாழ்விலிருந்து எடுக்கப்பட்டவையாக இருக்கும். புத்தகங்கள் நிரம்பி வழிந்த தன்னுடைய நூலகத்திற்கு அவர் எங்களை அழைத்துச் செல்வார். அப்போது எங்கள் பாட்டி, எங்கள் எல்லோருக்கும் பிடித்தமான அறுசுவை விருந்தைச் சமைப்பதில் சமையலறையில் மும்முரமாக இருப்பார்.

அந்தக் காலகட்டத்தில், என் தாத்தா மிகவும் நேசித்தப் புத்தகங்கள்மீது எனக்கும் என் ஒன்றுவிட்ட சகோதரர்களுக்கும் அவ்வளவு ஆர்வம் இருக்கவில்லை. ஆனாலும் என் தாத்தாவின் நூலகம் அற்புதமாக இருந்தது. அது அவருடைய தனிப்பட்டக் குகை. அந்த நூலகத்தில் இருந்த ஒவ்வொரு புத்தகமும் அட்டையிடப்பட்டு, அழகாகப் பெயர்ச்சீட்டுகள் ஒட்டப்பட்டு, முறையாக வகை பிரிக்கப்பட்டு, அலமாரிகளில் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. என் தாத்தா தன்னிடம் இருந்த புத்தகங்களை ஒரு பெரிய பதிவேட்டில் அழகாகப் பட்டியலிட்டு வைத்திருந்தார். அறிவியல், உலக இலக்கியம், கவிதைகள், ஓவியங்கள் என்று பல்வேறு வகையான சுவாரசியமான புத்தகங்கள் அந்த நூலகத்தை அலங்கரித்தன. ஆனால் அந்தக் கனமான, கடினமான புத்தகங்களைப் படிப்பதைவிட, என் தாத்தா கூறிய கதைகளைக் கேட்பதில்தான் எனக்கு அதிக விருப்பம் இருந்தது. மேலும், தான் படித்திருந்த பல்வேறு நூல்களிலிருந்து நிகழ்வுகளை நினைவுகூர்ந்து, அவற்றைத் தன் கதைகளில் புகுத்தி, குழந்தைகளான எங்களுக்குப் புரியும் விதத்தில் அவற்றை எடுத்துரைப்பதில் என் தாத்தா கைதேர்ந்தவராக இருந்தார்.

என் சகோதரர்களில் மூத்தவன் ஒருவன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். அவன் என் தாத்தாவிடம், “தாத்தா, எது அதிக முக்கியமானது: புத்தகங்களைப் படிப்பதா அல்லது கதைகளைக்

கேட்பதா?” என்று கேட்டான்.

“இரண்டும் முக்கியம்தான்,” என்று உற்சாகமாக பதிலளித்த என் தாத்தா, “புத்தகங்களைப் படிப்பதற்கான ஆர்வமும் பொறுமையும் எல்லோருக்கும் இருப்பதில்லை. ஆனால் கதைகளைக் கேட்பதில் எல்லோருக்கும் ஆர்வம் இருக்கும். கதையை உன்னிப்பாகக் காதுகொடுத்துக் கேட்கும்போது, நீ வித்தியாசமானவனாக ஆகியிருப்பதை நீ காண்பாய்,” என்று கூறிவிட்டு, தன்னைச் சுற்றி உட்கார்ந்திருந்த எங்கள் அனைவரையும் பார்த்து, “பள்ளிக்குச் செல்வதற்கு நீங்கள் எல்லோரும் அதிர்ஷ்டம் செய்திருக்கிறீர்கள். எனவே, புத்தகங்களை வாசிப்பதற்கு நீங்கள் உண்மையிலேயே முயற்சி செய்ய வேண்டும்,” என்று கூறினார்.

அவர் எனக்கு ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவித்திருந்ததைப் போன்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. நல்ல கல்வியைப் பெறுவதற்கான ஆசீர்வாதம் ஒருசில அதிர்ஷ்டசாலிகளாகிய எங்களுக்குக் கிடைத்திருந்ததால், நாங்கள் புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று அவர் கூறினார். பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் அதிர்ஷ்டம் இல்லாத எண்ணற்றக் குழந்தைகள் இவ்வுலகில் இருக்கின்றனர். பள்ளிக்குச் செல்லாத காரணத்தால், அவர்களால் எழுதவோ அல்லது படிக்கவோ முடிவதில்லை. எனவே, ஞானத்தைப் பெறுவதற்கு அவர்களுக்கு இருக்கும் ஒரே வழி, கதை கூறுதல் என்ற ஒரு பாரம்பரியமான வழி மட்டுமே. எனவே, அன்றிலிருந்து, புத்தகங்களைப் படிப்பதற்கு உண்மையிலேயே முயற்சி மேற்கொள்வதென்று நான் தீர்மானித்தேன். என் தாத்தா தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்த இப்பழக்கத்தை நானும் சுவீகரித்துக் கொள்வதென்று நான் தீர்மானித்தேன்.

அன்று மாலையில், நானும் என் சகோதரர்களும், எங்கள் பாட்டியோடும் எங்கள் சிற்றப்பாக்கள் மற்றும் சித்திகளோடும் சந்தைக்குச் செல்லவிருந்தோம். இச்சயமங்களில், சாலையோரங்களில் விற்கப்பட்ட சுவையான பதார்த்தங்கள் எங்களுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டதால், சந்தை விஜயம், குழந்தைகளான எங்களுக்கு எப்போதுமே குதூகலமூட்டுவதாக இருந்தது. ஆனால் ஏனோ அன்று எனக்கு வெளியே செல்வதில் துளிகூட விருப்பமிருக்கவில்லை. மாறாக, நான் என் தாத்தாவோடு சிறிது நேரம் செலவிட விரும்பினேன்.

என் சகோதரர்கள் அனைவரும் என் பாட்டியுடன் வெளியே போன பிறகு, என் தாத்தாவைத் தேடி நான் அவருடைய நூலகத்திற்கு விரைந்தேன். அவர் தன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னால் இருந்த மேசையின்மீது சில புத்தகங்கள் பரப்பி

வைக்கப்பட்டிருந்தன. அவர் ஏறிட்டுப் பார்த்தபோது, நான் தன்னந்தனியாக அங்கு நின்று கொண்டிருந்ததைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்தார்.

“நீ ஏன் சந்தைக்குப் போகவில்லை?” என்று அவர் என்னிடம் கேட்டார்.

“தாத்தா, நான் உங்களுடைய புத்தகங்களைப் பார்க்க விரும்புகிறேன்,” என்று நான் அமைதியாகக் கூறினேன்.

அவருடைய முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது. அது, “என் செல்லமே, புத்தக உலகிற்கு உன்னை வரவேற்கிறேன்,” என்று என்னிடம் கூறியதைப்போல இருந்தது.

அடுத்த ஒரு மணிநேரம், தன்னுடைய புத்தக அலமாரிகள் ஒவ்வொன்றின் ஊடாகவும் அவர் என்னை அழைத்துச் சென்றார். அவர் தன் மனத்திற்கு மிகவும் பிடித்தமான சில புத்தகங்களைத் திறந்து, அவை ஒவ்வொன்றிலும் தான் குறித்து வைத்திருந்த குறிப்புகளை என்னிடம் காட்டினார்.

பண்டைய இந்திய ஞானம் தொடர்பாக அவர் வைத்திருந்த புத்தகங்களின் எண்ணிக்கைதான் உண்மையிலேயே என்னைப் பெரிதும் கவர்ந்தது. ராமாயணம், மகாபாரதம், உபனிஷத்துக்கள் ஆகியவற்றில் தொடங்கி, பஞ்சதந்திரக் கதைகள்வரை அனைத்தும் அவருடைய நூலகத்தில் இடம்பெற்றிருந்தன. அவர் கூறிய கதைகள் எங்கிருந்து வந்தன என்பது அப்போது எனக்குப் புரிந்தது.

திடீரென்று ஒரு கேள்வி என் மனத்தில் பளிச்சிட்டது. “தாத்தா, இவற்றில் உங்களுக்கு மிகவும் பிடித்தப் புத்தகம் எது?” என்று நான் அவரிடம் கேட்டேன்.

அவர் ஒரு கணம்கூடத் தாமதிக்காமல், “கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம்,” என்று பதிலளித்தார்.

“அது என்ன புத்தகம்?” என்று நான் யோசித்தேன்.

என் மனத்தில் ஓடிக் கொண்டிருந்த எண்ணத்தைப் புரிந்து கொண்ட என் தாத்தா, அப்புத்தகத்தை வெளியே எடுத்து, என்னைத் தன்னுடைய மேசைக்குக் கூட்டிச் சென்றார்.

“கௌடில்யருக்குச் சாணக்கியர் என்ற ஒரு பெயரும் உண்டு,” என்று அவர் கூறினார்.

விரைவில், கதைகளை உள்ளடக்கிய ஒரு புதிய உலகம் என் கண்முன்னால் விரியத் தொடங்கியது . . .

# 2

# இந்திய வரலாறு

தொலைவில் கேட்ட உரத்தக் குரல்களும் உற்சாகக் கூப்பாடுகளும் என் சகோதரர்கள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டதை அறிவித்தன. இரண்டு நோக்கங்களுடன் அவர்கள் எல்லோரும் நேராகத் தாத்தாவின் அறையை நோக்கி விரைந்தனர். முதலாவது நோக்கம், தாத்தாவிடம் கதை கேட்பது. இரண்டாவது, சந்தையில் தாங்கள் அனுபவித்தக் குதூகலத்தை என்னிடம் கூறி என்னைப் பொறாமை கொள்ளச் செய்வது. ஆனால் தாத்தாவுடன் நான் வீட்டிலேயே இருந்து கொண்டது எனக்கு நன்மை பயக்கவே செய்தது என்பதை அவர்கள் அறியவில்லை. தாத்தாவுடன் நான் செலவிட்ட அக்கணங்கள் என் மனத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

மீண்டும் நாங்கள் எல்லோரும் தாத்தாவின் அடுத்தக் கட்டக் கதைகளைக் கேட்பதற்காகக் கீழே உட்கார்ந்தோம். என்னுடைய சகோதரர்களுக்கு அது ஒரு புதிய கதையாக இருந்தது, ஆனால் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தது.

தான் கூற வந்த செய்தியைக் கூறுவதற்கு முன்பாக, ஒரு பெரிய பீடிகையோடு கதையைக் கட்டியெழுப்புவதில் தாத்தா திறமைசாலியாக இருந்தார். அவர் கதை கூறிய விதத்தில், கதையில் இடம்பெற்ற நிகழ்வுகள் உண்மையிலேயே எங்கள் கண்முன்னே நடந்து கொண்டிருந்ததைப்போல எங்கள் மனங்களில் அவற்றை எங்களால் காட்சிப்படுத்திப் பார்க்க முடிந்தது. நாங்கள் அந்த வரலாற்றுக் கணங்களில் வாழ்ந்து கொண்டிருந்தது போன்ற ஓர் உணர்வை அது எங்களுக்குள் ஏற்படுத்தியது. எங்களுடைய கற்பனையைத் தூண்டக்கூடிய அபாரமான வல்லமை எங்கள் தாத்தாவிற்கு இருந்தது.

"இந்திய வரலாறு தனித்துவமானது," என்று தொடங்கிய தாத்தா, "அது செழுமையானது, மிகவும் பரந்துபட்டது. கோட்டைகள், அரண்மனைகள், கோவில்கள் ஆகிய பெரிய நினைவுச்சின்னங்களைப் பற்றியது அது. அரசர்கள், துறவிகள் ஆகிய ஆளுமைக்காரர்களைப் பற்றியது அது. அறிவியலில் தொடங்கிக் கலைகள்வரை பல்வேறு

வகையான விஷயங்களை விவரித்த இலக்கியங்களைப் பற்றியது அது. ஆனால் மிக முக்கியமாக, நம்முடைய வரலாறு ஆன்மீகத்தைப் பற்றியதாகும்," என்று கூறினார்.

"ஆன்மீகமா?" என்று என் சகோதர்களில் ஒருவன் கேட்டான்.

"ஆமாம். கடவுள் குறித்து மனிதன் மேற்கொள்கின்ற தேடல்தான் ஆன்மீகம். வாழ்க்கையின் அர்த்தம் குறித்தத் தேடல் அது. ஒரு சாதாரண நபராக இருப்பதிலிருந்து ஓர் அசாதாரணமான நபராக ஆவதையும், உனக்குள் இருக்கும் அளப்பறிய உள்ளார்ந்த ஆற்றலைக் கண்டுபிடிப்பதையும், சாத்தியமற்றவற்றை சாதிப்பதற்கான திறனையும் உள்ளடக்கிய ஒரு பயணம் அது. ஆனாலும், ஆன்மீகம் என்பது உண்மையில் நீ உன்னுடைய அகங்காரத்திலிருந்து மீள்வதைப் பற்றியதுதான்."

இந்திய வரலாற்றின் சாராம்சத்தை ஒருசில ஆழமான வார்த்தைகளில் தாத்தா விவரித்துக் கொண்டிருந்தார்.

"இந்தியாவில் ஆன்மீகத்தை நாம் எங்கே பார்க்கலாம்?" என்று இன்னொரு சகோதரன் கேட்டான்.

"எல்லா இடங்களிலும் அதைப் பார்க்க முடியும். கோவில்களிலும், பிற வழிபாட்டுத் தலங்களிலும், நம்முடைய வீடுகளிலும், தெருக்களிலும் அதை உன்னால் பார்க்க முடியும். நீ வழிபடுகின்ற உருவச்சிலைகளில் அதை நீ பார்க்கலாம். அல்லது, உன் மனம் அமைதியாக இருக்கும்போது, அதில் ஆன்மீகத்தை உன்னால் பார்க்க முடியும். நம்முடைய கலாச்சாரத்தின் மையமே அதுதான்."

எனக்கு லேசான குழப்பம் ஏற்பட்டது. தாத்தா எங்களிடம் என்ன கூற முயற்சி செய்து கொண்டிருந்தார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை, அதைப் புரிந்து கொள்வதற்கு எனக்கு வயது போதாமல் இருக்கலாம். அவர் கூறிக் கொண்டிருந்த விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கு நான் பெரியவனாகும்வரை நான் காத்திருக்க வேண்டியிருக்கக்கூடும். ஆன்மீகத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒருவர் ஒரு குறிப்பிட்டப் பக்குவ நிலையை அடைய வேண்டும்போலும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

"தாத்தா, நான் பெரியவனாக வளர்ந்தவுடன் எனக்குப் பக்குவம் வந்துவிடுமா?" என்று நான் கேட்டேன்.

அவர் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு, "நீ பக்குவம் அடையும்போதுதான் நீ உண்மையிலேயே வளர்கிறாய். பக்குவம் என்பது வயதைப் பற்றியது அல்ல. மாறாக, வாழ்க்கையைப் பற்றிய ஒரு புரிதலிலிருந்து அது வருகிறது. வாழ்க்கையை அணுகுகின்ற விதத்தில்

பக்குவமற்ற முறையில் நடந்து கொள்கின்ற பல முதியவர்கள் இருக்கின்றனர். மறுபுறம், பொறுப்பான நடவடிக்கைகள் மூலம் பக்குவமடைந்துள்ள சில குழந்தைகளும் இருக்கின்றனர்," என்று கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்தார். "உண்மையில், நம்முடைய பல துறவிகள், தங்களுடைய இளம் வயதிலேயே தங்கள் தலைமுறையினரை வழிநடத்தினர். தியானேஷ்வர் மகாராஜ், ஆதி சங்கராச்சார்யா, சுவாமி விவேகானந்தர் போன்ற துறவிகள் மிகச் சிறிய வயதிலேயே தங்களுடைய பூதவுடலைத் துறந்துவிட்டபோதிலும், வயதான நபர்களை அவர்கள் வழிநடத்தினர். மாணவனைவிட வயது குறைந்த ஆசானைக் கொண்ட குரு—சிஷ்யன் உறவுக்கான பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன."

"மாணவனைவிட வயது குறைந்த ஆசானா?" என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு புன்னகைத்தேன். பிறகு, "நான் விரைவில் பக்குவமடைந்தால், என் பள்ளி ஆசிரியருக்கு என்னால் ஒருசில விஷயங்களைக் கற்றுக் கொடுக்க முடியும்," என்று என் மனத்திற்குள் நான் கூறிக் கொண்டேன்.

"ஒருவர் எவ்வாறு பக்குவமடைவது?" என்று நானும் என் சகோதரர்களும் ஒரே நேரத்தில் தாத்தாவிடம் கேட்டோம்.

"அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. ஆனால் வரலாற்றைப் படிப்பதுதான் மிகச் சுலபமான வழி. உங்களுக்கு முன்னால் இவ்வுலகில் நடந்து சென்றுள்ள மக்களின் அனுபவங்களால் வரலாறு நிரம்பி வழிகிறது. நம்முடைய மூதாதையர் தங்கள் வாழ்வில் எதிர்கொண்ட நிகழ்வுகளையும் கதைகளையும் பற்றியதுதான் வரலாறு. நாகரீகங்கள் எவ்வாறு காலத்தின் சோதனைகளையும் கடந்து தப்பிப் பிழைத்தன என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. நம்முடைய மூதாதையர் செய்த தவறுகளையும் அது எடுத்துரைக்கிறது. மிக முக்கியமாக, அது உங்களுடைய கதைகளையும் கூறுகிறது. அதனால்தான் அது வரலாறு என்று அழைக்கப்படுகிறது."

பள்ளியில் வரலாற்றுப் பாடத்தில் நான் அவ்வளவு கெட்டிக்கார மாணவனாக இருக்கவில்லை. ஆனால் தாத்தா அதை சுவாரசியமாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்த விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. "தாத்தா, எனக்கு வரலாறு பிடிக்கவே பிடிக்காது. ஏனெனில், அதில் ஏகப்பட்ட நாட்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். அது எனக்கு மிகவும் கடினம்," என்று நான் கூறினேன்.

அவர் மீண்டும் புன்னகை புரிந்துவிட்டு, "ஆமாம், நீ கூறுவது

எனக்குப் புரிகிறது. சில சமயங்களில் நாட்கள் மிகவும் குழப்பமூட்டுபவையாக இருக்கும். ஆனால் நான் இப்போது உங்களிடம் எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் வரலாறு வெறுமனே சில குறிப்பிட்ட நிகழ்வுகள் இடம்பெற்ற நாட்களை நினைவில் வைத்துக் கொள்வதைப் பற்றியது மட்டும் அல்ல. மற்றவர்கள் செய்த தவறுகளை நாம் மீண்டும் செய்யாமல் இருப்பதைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்," என்று கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்தார். "இவ்வுலகில் மூன்று வகையான மனிதர்கள் இருக்கின்றனர். முதல் வகையினர், தவறுகள் செய்வதிலிருந்து பாடம் கற்றுக் கொள்கின்றனர். இரண்டாவது வகையினர், தவறுகள் செய்கின்றனர், ஆனால் அவற்றிலிருந்து ஒருபோதும் எந்தப் பாடத்தையும் அவர்கள் கற்றுக் கொள்வதே இல்லை. மூன்றாவது வகையினர்தான் மிகவும் அறிவார்ந்தவர்கள். ஏனெனில், மற்றவர்களுடைய தவறுகளிலிருந்து அவர்கள் பாடம் கற்றுக் கொள்கின்றனர்.

"நீ சாமர்த்தியசாலியாக இருந்தால், சக்கரத்தை நீ மீண்டும் கண்டுபிடிக்க வேண்டியதில்லை என்பதை நீ உணர்ந்து கொள்வாய். துவக்கத்திலிருந்தே ஒரு வெற்றியாளனாகத் திகழ உன்னால் முடியும். பல தலைமுறைகள் தேவைப்பட்ட ஒரு காரியத்தை நீ ஒருசில வருடங்களில் சாதித்துவிடுவாய். புத்தகங்களின் வாயிலாகத் தலைமுறை தலைமுறையாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டு வந்துள்ள அறிவின் சக்தி அது."

நான் முற்றிலும் வேறோர் உலகிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தேன். ஆனால் 'புத்தகங்கள்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் நான் திடுக்கிட்டுக் கண்விழித்தேன். "தாத்தா, நீங்கள் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்," என்று நான் கூறினேன்.

துவக்கத்தில் என் சகோதரர்கள்மீது எனக்குக் கோபம் ஏற்பட்டது. அவர்கள் எல்லோரும் சந்தையிலிருந்து திரும்பி வந்து வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்த நேரத்தில்தான் தாத்தா அக்கதையைக் கூறத் தொடங்கியிருந்தார். அவர்கள் ஏற்படுத்திய களேபரத்தில், தாத்தாவின் சிந்தனையோட்டம் தடைபட்டுவிட்டது. ஆனால் இப்போது அவர் மீண்டும் சரியான பாதைக்குத் திரும்பி வந்தார். கௌடில்யரைப் பற்றி நான் அதிகமான விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

"கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் கௌடில்யர் . . ."

வரலாறு ஒரு புதிய அத்தியாயத்தை எனக்காகத் திறந்து

கொண்டிருந்தது . . .

# 3

# ராஜதந்திரி

“அவருக்கு மூன்று பெயர்கள் உண்டு,” என்று தாத்தா கூறினார். அந்த மூன்று பெயர்களுக்குப் பின்னாலும் ஒரு தனிக்கதை உண்டு. அவற்றைப் பற்றி அவர் விபரமாக ஆய்ந்தறிந்துள்ளார்.

“விஷ்ணுகுப்தய், கௌடில்ய்யர், மற்றும் சாணக்கியர்.”

“அவர் முதலில் விஷ்ணுகுப்தர் என்று அழைக்கப்பட்டார். இதுதான் அவருடைய அதிகாரப்பூர்வமான பெயராக இருந்தது. நம்முடைய பிறப்புச் சான்றிதழ்களில் நம் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு ஒப்பானது இது. அவருடைய நண்பர்கள் அவரை விஷ்ணு என்று அழைத்தனர்.

“பின்னர் அவர் கௌடில்ய்யர் என்று அழைக்கப்பட்டார். இது ஒரு தனித்துவமான பெயர். வரலாற்றுப் புத்தகங்களிலும் அறிஞர்கள் வட்டாரத்திலும் கௌடில்ய்யர் என்ற பெயர் மிகவும் பிரபலம்.”

அர்த்தசாஸ்திரம் ஏன் விஷ்ணுகுப்தரின் பெயரோடோ அல்லது சாணக்கியரின் பெயரோடோ இணைக்கப்படாமல் கௌடில்ய்யரின் பெயரோடு இணைக்கப்பட்டுள்ளது என்பதற்கான காரணம் எனக்கு அப்போது புரிந்தது. ஆனால் அர்த்தசாஸ்திரம் எதைப் பற்றியது? இக்கேள்விக்கான விடை பின்னர் வெளிப்படும் என்பதை நான் அறிந்திருந்தேன். அப்போதைக்கு கௌடில்ய்யர் என்ற பெயரின் பொருளை அறிந்து கொள்ள நான் முயன்று கொண்டிருந்தேன்.

“அவருக்குக் கௌடில்ய்யர் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பது குறித்துப் பல கதைகள் நிலவுகின்றன. கோத்திர அமைப்பு என்றோர் அமைப்பு இந்தியாவில் உண்டு. ஒருவருடைய கோத்திரப்படி, அதாவது ஒருவருடைய ரிஷி வம்சாவழிப்படி, அவருக்குப் பெயரிடப்படும். அவர் கௌடில்ய கோத்திரத்தில் பிறந்ததால் அவருக்குக் கௌடில்ய்யர் என்ற பெயர் வந்தது என்று சில அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

“அவருடைய மூதாதையர்கள் கௌடில்யம் என்ற ஊரிலிருந்து வந்ததவர்கள் என்று மற்றொரு குறிப்பு தெரிவிக்கிறது. தங்களுடைய மூதாதையர்களின் சொந்த ஊரின் பெயரை சுவீகரித்துக் கொள்ளும் வழக்கம் இந்தியாவில் இருந்து வந்துள்ளது. அவரது சொந்த ஊர்

கௌடில்யமாக இருந்ததால் அவர் கௌடில்யர் என்று அழைக்கப்பட்டார் என்று அக்குறிப்பு தெரிவிக்கிறது.”

பின் என் தாத்தா மூன்றாவது கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினார். அது நம்புவதற்கு உகந்ததாக இருந்தது.

“சமஸ்கிருத மொழியில், எதிரிகளை வீழ்த்தும் புத்திசாலித்தனமான உத்திகள் என்று பொருள்படும் ‘குட்டா நீதி’யை அவர் பயன்படுத்தியதால் அவருக்கு கௌடில்யர் என்ற பெயர் வந்திருக்கலாம் என்பது பரவலாக நிலவும் நம்பிக்கை.

“அவரது மூன்றாவது பெயரான ‘சாணக்கியர்’ என்ற பெயர்தான் பொதுமக்களிடம் பிரபலமாக இருந்த பெயர். அது அவரது தந்தையான ‘சாணக்’ என்ற பெயரிலிருந்து வந்த ஒன்று. சாணக்கியரின் தந்தை, நந்தர்களின் அரச பரம்பரையில் வந்த கடைசி அரசனான தனநந்தனிடம் ஓர் அமைச்சராகப் பணியாற்றி வந்தார். எனவே, அவர் சாணக்கின் மகனாக இருந்ததால், அவர் சாணக்கியராக ஆனான். தன் தந்தை ஓர் அறிஞராகவும், அரசியல் அறிவியலில் தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கியதால் சாணக்கியர் அவரைத் தன் முன்மாதிரியாகக் கருதினார்.”

எல்லா மகன்களும் தங்கள் மனங்களின் ஆழத்தில் தங்களுடைய தந்தையரைத்தான் முன்மாதிரிகளாக வரித்திருந்தனர் என்பதை வளர்ந்த பிறகு நான் புரிந்து கொண்டேன். தந்தை—மகன் உறவு மிகவும் தனித்துவமானது.

ஒரு மகனுக்குத் தன் தந்தை எப்போதும் பிரம்மண்டமாகவே தெரிவார். பின்னர் அவனே ஒரு தந்தையாக ஆகும்போது தன் தந்தை எவ்வளவு பாடுபட்டார் என்பதை அவன் புரிந்து கொள்கிறான். கொண்டாடுவதில் துவங்கும் அந்த உறவு, முதலில் மரியாதைக்குத் தாவுகின்றது. பின்னர் அது வணக்கத்திற்குரிய ஒன்றாக மாறுகிறது. அதனால் தந்தையும் மகனும் எப்போதும் ஒருவரையொருவர் நாடிக் கொண்டிருக்கின்றனர்.

“சாணக்கியர் தன் தந்தையைப் பெரிதும் கொண்டாடியதால், அவர் தன் தந்தையின் தொழிலுக்குள் நுழைந்தார். அதனால் அவர் அரசியல் அறிவியலைக் கற்றுக் கொடுக்கும் ஓர் ஆசிரியனாகவும், ஒவ்வொரு சூழலையும் கையாள்வதற்கான உத்திகள் குறித்து அரசர்களுக்கு அறிவுரை வழங்கும் ஓர் அமைச்சராகவும் ஆனார்.

“அக்காலகட்டத்தில் மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்கிய தட்சசீலப் பல்கலைக்கழகத்தில் படித்த அவர் அங்கேயே ஓர் ஆசிரியராவும் ஆனார். ஒருவன் ஒரு பேரரசனாக ஆக என்னென்ன வழிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அங்கு கற்றுக் கொடுத்தார். அதனால் அவர் ஒரு ராஜதந்திரி என்று

அழைக்கப்பட்டார்."

ஆஹா! 'ராஜதந்திரி' என்ற வார்த்தை எனக்கு மிகவும் பிடித்துப் போனது.

"யார் சக்திமிக்கவர்? அரசனா? இல்லை ராஜதந்திரியா?" தாத்தா எங்களிடம் ஒரு விவாதத்தை உருவாக்கினார்.

எங்களில் பலருக்கும் ஒரே மாதிரியான கண்ணோட்டம் நிலவியததால், "இதிலென்ன சந்தேகம், அரசன்தான்," என்று நாங்கள் பதிலளித்தோம்.

அதற்கு என் தாத்தா அளித்த பதில் என் வாழ்நாள் முழுவதும் என்னைவிட்டு அகலவேயில்லை:

"உன்னால் ஓர் அரசனாக ஆக முடியும். ஆனால் காலப்போக்கில் அப்பதவி பறி போகவும் கூடும். ஆனால் ஒரு ராஜதந்திரியால் பல அரசர்களை உருவாக்க முடியும். ஓர் அரசன் எப்போதுமே ஒரு ராஜதந்திரியின் மேற்பார்வை, வழிகாட்டுதல், மற்றும் கட்டுப்பாட்டில்தான் இருப்பான். அதனால் ஒரு ராஜதந்திரிதான் அதிக சக்தி வாய்ந்தவன். பதவி ஏதும் இல்லாமல் அவன் ஆட்சி செய்கிறான். அவனிடம் அதிகாரம் எதுவும் இருக்காது. ஆனால் அவன்தான் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறான்."

எனக்கு அதிகமான பொறுப்புகள் வந்தபோது தற்காலத்திலும் ராஜதந்திரிகள் இருக்கின்றனர் என்பது எனக்குப் புரிந்தது. அரசியல், வியாபாரம், பல்கலைக்கழகங்கள், அரசு நிறுவனங்கள் என்று எல்லாத் துறைகளிலும் அவர்கள் இருக்கின்றனர். ராஜாவாக இருப்பதைக் காட்டிலும் ராஜதந்திரியாக இருப்பதே நல்லது.

"சாணக்கியர் பயிற்றுவித்தப் பல மாணவர்களில் மௌரிய அரச வம்சத்தைத் தோற்றுவித்த சந்திரகுப்த மௌரியனும் ஒருவன். சாணக்கியரின் பிற மாணவர்கள் அரசர்களாக ஆகவில்லை என்று அதற்கு அர்த்தமில்லை. சாணக்கியரின் கொள்கைகளைக் கடைபிடித்தவர்களில் சிறந்து விளங்கியவன் சந்திரகுப்தன். உலகிலுள்ள பல ராஜகுரு—ராஜா கூட்டுகளில் அதிகமாக மேற்கோள் காட்டப்படுவது சாணக்கியர்—சந்திரகுப்தன் கூட்டுதான்."

சாணக்கியரின் வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது. அவரது வாழ்க்கையில் பல சுவையான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. விலைமதிப்பிடப்பட முடியாத ஏராளமான படிப்பினைகள் அவை ஒவ்வொன்றிலிருந்தும் நமக்குக் கிடைக்கின்றன. ஆனால் தாத்தாவால் ஒரேயடியாக எல்லாக் கதைகளையும் கூற முடியவில்லை. அவை பல நாட்கள் நீடித்தன. ஆனால் அந்நேரத்தில் எங்கள் தாத்தாவின் புத்தக

வாசிப்புப் பழக்கம் எங்களையும் தொற்றிக் கொண்டது.

தனநந்தன் எவ்வாறு சாணக்கியரின் தந்தையைக் கொன்றான், அப்போது சிறுவனாக இருந்த சாணக்கியர் தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வாறு ஓடி ஒளிந்து கொண்டார், தன் கல்வியைத் தொடர அவர் என்னவெல்லாம் செய்ய நேர்ந்தது, தட்சசீலப் பல்கலைக்கழகத்தில் அவர் படித்தபோது அவர் எவ்வாறு அனைவராலும் விரும்பப்படும் மாணவனாக இருந்தார், பின் அங்கேயே எவ்வாறு ஓர் ஆசிரியராக ஆனார், இறுதியாக அவர் தனநந்தனை மட்டுமல்லாது அலெக்சாண்டரையும் எவ்வாறு தோற்கடித்தார் போன்றவை அதில் அடங்கும்.

அலெக்சாண்டரைப் பற்றி எங்கள் தாத்தா கூறியபோது நான் மிகவும் உற்சாகமடைந்தேன். ஏனெனில் நான் அலெக்சாண்டரைப் பற்றி என் பாடப் புத்தகத்தில் படித்திருந்தேன்.

“ஆம். அதே அலெக்சாண்டர்தான். உலகை வெல்லத் துடித்து இந்தியாவில் தன் தோல்வியைத் தழுவிய அதே மாவீரன் அலெக்சாண்டர்தான். உலகிலேயே மிகப்பெரிய ஆக்கிரமிப்பாளனாக விளங்கிய ஒருவனைத் தன் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட வைக்க ஒரே ஒரு மனிதனின் அறிவாற்றல் போதுமானதாக இருந்தது. அவர்தான் சாணக்கியர்.”

சாணக்கியரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவமும் விரிவாக ஆராயத்தக்கவையாக இருந்தது. எடுத்தக் காரியத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்காத மனப்போக்கு மற்றவர்களுக்குப் பெரும் ஊக்கமளிப்பதாக இருந்தது. சாணக்கியர் ஒரு சிறந்த ஆசிரியராக இருந்ததோடு, ஒரு மாபெரும் வியூகவாதியாகவும், சிறந்த அறிவாற்றல் மிக்கவராகவும், உண்மையான தேசபக்தராகவும் விளங்கினார்.

என்னவொரு தனிச்சிறப்புமிக்க மனிதர்!

“சாணக்கியர் தான் வகித்து வந்த பல பாத்திரங்களைத் திறமையாகச் செய்து வந்தாலும், அவர் எப்போதும் தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கத் தவறவில்லை,” என்று தாத்தா கூறினார்.

“தர்மமா? அப்படியென்றால் என்ன?” என்று நான் கேட்டேன்.

“இந்த வார்த்தையின் ஆழமான பொருளை அறிந்து கொள்ள வேண்டுமென்றால், நீ நம்முடைய வேதங்களைப் படிக்க வேண்டும். பல வேதங்கள் இருக்கின்றன. ஆனால் அதை நீ உன்னுடைய அன்றாட வாழ்வில் எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள விரும்பினால், நீ கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் படித்தால் போதும்.”

இப்படித்தான் அர்த்தசாஸ்திரம் எனக்கு அறிமுகமானது. என்னுள் இருக்கும் சாணக்கியரைக் கண்டுபிடிக்க என்றென்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் என் புனிதப் பயணம் அப்போதுதான் தொடங்கியது.

# 4

# அர்த்த-சாஸ்திரம்?

என் தாத்தா வைத்திருந்த அர்த்தசாஸ்திரம் புத்தகம் கனமாக பைண்ட் செய்யப்பட்டிருந்த ஒன்று. அது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தது. அதை நான் புரட்டிப் பார்த்தபோது அதில் எங்கெல்லாம் இடமிருந்ததோ அங்கெல்லாம் என் தாத்தா குறிப்புகள் எழுதி வைத்திருந்ததை நான் கண்டேன்.

அப்புத்தகத்தோடு கூடவே என் தாத்தாவிடம் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் அவரது தாய்மொழி மொழிபெயர்ப்பும் இருந்தன. அவர் ஒரு சமஸ்கிருத வல்லுனராகவும் ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றவராகவும் இருந்தபோதிலும், மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுக் கொண்டது அவருக்கு அதிகமான புரிதல்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

அப்பெரிய புத்தகத்தில் இருந்த விஷயங்கள் எனக்குக் கடுகளவுகூடப் புரியவில்லை. அதன் பிரம்மாண்டமான பக்கங்களே என்னை பயத்தில் உறைய வைத்தன. இதைப் போன்ற ஒரு புத்தகத்தை யார் படிப்பார்கள்? அதோடு, ஒரு வினோதமான மொழியான சமஸ்கிருதத்தில் அது எழுதப்பட்டிருந்தது. அது எனக்கு முழுக்க முழுக்க அன்னியமாக இருந்தது.

என் மனத்தில் இரண்டு கேள்விகள் முளைத்தன: அர்த்தசாஸ்திரம் ஏன் இவ்வளவு சிக்கலானதாக இருக்கிறது? சாணக்கியரின் போதனைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்குமா?

நான் என் தாத்தாவிடம் இக்கேள்விகளைக் கேட்டபோது அதற்கு அவர் அளித்த பதில் மிகவும் ஆழமானதாக இருந்தது:

“அர்த்தசாஸ்திரம் வெறுமனே ஒரு புத்தகம் மட்டுமல்ல. அது ஒரு தத்துவம், ஒரு சாஸ்திரம், ஒரு வேதம். வேதங்கள் என்பவை ரிஷிகளால் தலைமுறை தலைமுறையாகக் கொடுத்துவரப்பட்ட ஞானம். வேதங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஒரு குரு வேண்டும். நீ அதைச் செழுமையாகப் புரிந்து கொள்கின்ற விதத்தில், அதில் உறைந்திருக்கும் ஞானங்களை உனக்கு எடுத்துரைக்கும் ஓர்

ஆசிரியர் உனக்குத் தேவை.”

சமஸ்கிருதம் குறித்த என் கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்: “வேதங்களைப் படிக்க சமஸ்கிருதம் கற்றிருக்க வேண்டியதில்லை. ஆனால் அதை அறிந்திருப்பது உனக்குப் பெரிய அனுகூலத்தைக் கொடுக்கும். ஏனெனில் நம்முடைய புராதன வேதங்களில் பெரும்பாலானவை சமஸ்கிருதத்தில்தான் எழுதப்பட்டுள்ளன. அதோடு, சமஸ்கிருத மொழிக்கு ஓர் அழகு இருப்பதையும் நீ கண்டு கொள்வாய்.

“வேதங்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்போது அதில் கண்டிப்பாக ஒருசில குறைகள் இருக்கத்தான் செய்யும். எந்தவொரு விஷயத்தையும் அது எழுதப்பட்டுள்ள மூல மொழியில் படிக்கும்போது அதைச் செம்மையாகப் புரிந்து கொள்ள முடியும்.”

இந்திய வேதங்கள் சமஸ்கிருதத்தை எவ்வாறு கொண்டாடின என்பதை நான் அறிவேன். “தாத்தா, அதனால்தான் சமஸ்கிருதம் கடவுளின் மொழி என்று கூறப்படுகிறதா?”

தாத்தா மர்மமாகப் புன்னகைத்துக் கொண்டே இவ்வாறு கூறினார்: “கடவுளின் மொழி மௌனம்!”

“எந்தவொரு மொழியாலும் அல்லது தர்க்க சாஸ்திரத்தாலும் கடவுளை அறிந்து கொள்ள முடியாது. இரண்டையும் கடந்தவர் அவர். ஆனால் மொழியால் அந்த இடத்திற்கு உன்னைக் கூட்டிச் செல்ல முடியும்.

“கடவுள் எனும் கருத்தாக்கத்தை நம்முடைய புராதன முனிவர்களும் ரிஷிகளும் எந்த விதத்தில் உட்கிரகித்துக் கொண்டிருந்தனரோ, அதே விதத்தில் உட்கிரகித்துக் கொள்ள ஒரு நல்ல அறிவியற்பூர்வமான மொழி உதவும். ஆனால் சமஸ்கிருதத்தில் பண்டிதத்துவம் பெற்றிருப்பது மட்டுமே உதவாது.”

“அப்படியென்றால் கடவுளை அடைய எது உதவும்?” என்று நான் கேட்டேன்.

“அகங்காரத்தை ஒழிப்பதன் மூலமாகக் கடவுளை அடையலாம்.” தாத்தாவின் பதில் என்னை மௌனத்தில் ஆழ்த்தியது.

என் தாத்தா என் கண்களை ஆழமாகப் பார்த்தவாறு, “நீ உன் வாழ்க்கையில் வெகு சீக்கிரமே சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்,” என்று கூறினார்.

என் பெற்றோர்கள் என்னை ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்கப்படும் பள்ளியில் சேர்த்திருந்ததால், அக்காலகட்டத்தில், பள்ளி வழியாக சமஸ்கிருத மொழி கற்றுக் கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. தாத்தாவின் அறிவுறுத்தல் ஒருபோதும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. ஆனால் அந்த விதை என் வாழ்க்கையின் ஒரு சரியான

காலகட்டத்தில் முளைத்தெழுந்தது.

வாழ்க்கையில் சரியான நேரத்தில் அளிக்கப்படும் வழிகாட்டுதல்கள் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்தும். சாணக்கியர் சந்திரகுப்தனை ஓர் அரசனாக ஆக்கும்வரை அவன் ஒரு சாதாரணச் சிறுவனாக மட்டுமே இருந்தான். ஆனால் வெறுமனே ஓர் அரசனை உருவாக்குவதன் மூலம் மட்டுமே ஒரு நாட்டை நிர்வகித்துவிட முடியாது. ஓர் அரசனாக ஆன பிறகு நாட்டை எவ்வாறு திறம்பட நிர்வகிக்க வேண்டும் என்பதை ஒருவன் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சாதாரண ராஜதந்திரிக்கும் சாணக்கியர் போன்ற ஒரு ராஜதந்திரிக்கும் இடையே உள்ள வேறுபாடு இதுதான்.

"பணம், அதிகாரம், அடுக்கதிகார அமைப்புமுறை, அல்லது பல தரப்பட்டக் குறுக்குவழிகள் போன்ற பல்வேறுபட்ட வழிகளின் மூலம் மக்கள் தலைவர்களாக ஆகிவிடுகின்றனர். எப்படிப்பட்ட வழியில் தலைவராக ஆனாலும், அதை அடைந்த பிறகு மக்களை வழிநடத்திச் செல்லும் திறன் உங்களிடம் கட்டாயம் இருந்தாக வேண்டும்."

இப்படி நான் ஒருபோதும் சிந்தித்ததேயில்லை. எல்லா இளவரசர்களும் ஒருநாள் நல்ல அரசர்களாக ஆகிவிடுவார்கள் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் யதார்த்த நிலை அப்படியில்லை என்று தெரிகிறது.

"ஒரு மனிதனுக்குத் திறன் இல்லையென்றால் அவனால் தன் நாற்காலியை நீண்ட நாட்கள் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அதனால்தான், தலைமைப் பதவியை அடைந்தவுடன் தங்கள் நாட்டைத் திறம்பட நிர்வகிப்பது எப்படி என்பதை அரசர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தை எழுதினார்.

"ஓர் அரசன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் முடிவுகள் எடுக்க அவனுக்கு உதவுவதற்காகத்தான் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் எழுதப்பட்டது. பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றிய 6,000 சூத்திரங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. தலைமைத்துவக் கோட்பாடுகள், பொருளாதாரம், அமைச்சர்கள் நியமனம், சமுதாயத்தில் குற்றவாளிகளை ஒழித்தல், சட்ட ஒழுங்கைப் பாதுகாத்தல், நீதி மற்றும் தண்டனைகளை வழங்குதல், நிர்வாகம், வெளியுறவுக் கொள்கை, போர், சர்வதேச உறவுகள் போன்ற 180க்கும் மேற்பட்டத் தலைப்புகள் ஆகியவை இதில் விவரிக்கப்பட்டுள்ளன."

அட! ஓர் அரசன் இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டுமா? தாத்தா அப்போது அடுக்கிய பெரிய பட்டிலைக் கேட்ட உடனேயே என் கைகளும் கால்களும் உணர்ச்சியற்றுப் போய்விட்டன.

என் வாழ்க்கையில் நான் ஒருபோதும் ஓர் அரசனாக ஆக விரும்பவில்லை. இவ்வளவு விஷயங்களையும் யார் படிப்பார்கள்?

பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது நான் ஒருபோதும் படிப்பில் சூரப்புலியாக இருக்கவில்லை. அப்படி ஆகும் யோசனையும் எனக்கு இருக்கவில்லை. ஆனால் இங்கு 6,000 சூத்திரங்களை உள்ளடக்கிய அறிவுறுத்தல் புத்தகம் ஒன்று இருக்கிறது. நமக்கு வேண்டாம் சாமி!

அர்த்தசாஸ்திரத்தைப் படித்துவிட்டு அது தனக்கு மிகவும் பிடித்தமான புத்தகம் என்று கூற வேண்டுமானால், ஒன்று தாத்தாவிற்கு மறை கழன்று இருக்க வேண்டும் அல்லது அவர் அதிபுத்திசாலியாக இருக்க வேண்டும். நான் ஓர் எளிய வாழ்க்கையை வாழ ஆசைப்பட்டேன். குதூகலமான ஒரு வாழ்க்கையை ஒருவரால் வாழ முடியும் என்ற நிலைமை இருக்கும்போது, வீணாக மொத்த உலகத்தையும் பற்றி எதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்?

தாத்தா தொடர்ந்தார். “இவை தவிர, கோட்டைகளைக் கட்டியெழுப்புதல், மாணிக்கக்கற்கள் ஆய்வியல், ஆயுர்வேதம், ஆயுதங்கள், மருத்துவம், உளவியல், தத்துவம் போன்ற துறைகளிலும் சாணக்கியர் ஒரு வல்லுனர்.

“அதனால்தான் சாணக்கியரை ஓர் அபூர்வமான வழிகாட்டி என்று மக்கள் அழைக்கின்றனர். அதன் காரணமாகவே இதுவரை தோன்றியுள்ள மனிதர்களிலேயே மகத்தான ராஜதந்திரியாகச் சாணக்கியர் நினைவுகூரப்படுகிறார்.”

இவற்றை அறிந்து கொள்வது சுவாரசியமானதாக இருந்தது. சாணக்கியரைப் பற்றித் தாத்தா பேசப் பேச, அவரைப் பற்றிய வியப்பு என்னுள் மேலும் மேலும் அதிகரித்தது.

“சாணக்கியர்தான் சதுரங்கத்தைக் கண்டுபிடித்தார் என்பது உனக்குத் தெரியுமா?” என்று தாத்தா கேட்டார்.

“என்ன, சதுரங்கமா?” சாணக்கியர் இன்னும் சுவாரசியமானவராக ஆனார்.

“சரியான வழியில் சிந்திப்பது எப்படி என்று சாணக்கியர் அனைவருக்கும் கற்றுக் கொடுத்தார். உத்திநோக்குடன் சிந்திப்பதை ஒருவனுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டதுதான் சதுரங்கம்.”

# 5

## சதுரங்கம்

“பழங்காலத்தில் போர்கள் சர்வசாதாரணமான விஷயமாக இருந்தன. இப்போது போர்கள் நடப்பதேயில்லை என்று அதற்கு அர்த்தமில்லை. இப்போதைக் காட்டிலும் அப்போது போர்கள் பல மடங்கு அதிகமாக நடைபெற்று வந்தன. ஒரு வலுவான படையை வைத்திருப்பதும் தன் எதிரிகளைத் தோற்கடிப்பதும் அரசனின் கடமைகளில் மிகவும் முக்கியமானவையாக விளங்கின.

“எப்போதும் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று சாணக்கியர் தன் மாணாக்கர்களுக்கு வலியுறுத்தி வந்தார். படைவீரர்களிடம் இப்படியொரு பிரபலமான கூற்று உண்டு: போர்கள் போர்களங்களில் நடைபெறுவதில்லை, படைத்தளபதிகளின் மனக்களங்களில் நடைபெறுகின்றன.

“படைவீரர்களைத் தயார்படுத்துவதில் உத்தி முக்கியப் பங்கு வகிக்கிறது. அதனால்தான் சாணக்கியர் உத்தி சார்ந்த சிந்தனைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். அர்த்தசாஸ்திரத்தில் அது ஆன்விக்ஷிக்கி என்றழைக்கப்படுகிறது.”

ஆன்விக்ஷிக்கி! என்ன வார்த்தை இது? வாய்க்குள் நுழைய மறுக்கிறதே! அதைப் பற்றி இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்ளத் துடித்த நான், “தாத்தா, ஆன்விக்ஷிக்கி என்றால் என்ன?” என்று கேட்டேன்.

“தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த அறிவியற்பூர்வமான உத்தி சார்ந்த சிந்தனை அது.”

நான் அப்போது ஒரு சிறுவனாக இருந்தபோதிலும், அந்த விஷயங்கள் குறித்து ஓர் இனம் புரியாத ஈர்ப்பு என்னுள் ஏற்பட்டது. ஆனால் அதற்குமேல் அது குறித்து எனக்கு எதுவும் புரியவில்லை. அது குறித்தத் தத்துவார்த்தமான விவாதத்தில் ஈடுபடவும் நான் அச்சமயத்தில் விரும்பவில்லை. நான் சாணக்கியரின் கதை குறித்து மேலும் அறிந்து கொள்ளவே விரும்பினேன். பேச்சை மாற்ற எண்ணிய நான், “தாத்தா, சதுரங்கத்திற்கும் சாணக்கியருக்கும் என்ன தொடர்பு?” என்று கேட்டேன்.

“சதுரங்க விளையாட்டை ஊன்றிக் கவனித்தால் அது ஒரு போர் விளையாட்டு என்பதை உன்னால் கண்டு கொள்ள முடியும். தன் பகைவனுக்கு எதிரான உத்திபூர்வமான நகர்த்துதல்களை உள்ளடக்கிய விளையாட்டு அது. அது ஒரு விதமான உருவகப்படுத்தும் விளையாட்டு.”

பின் அவர் சதுரங்க விளையாட்டின் அடிப்படைகளை எங்களுக்கு விளக்கினார்: “இவ்விளையாட்டில் சம பலமுள்ள இருவர் பங்கு கொள்வர். அவர்கள் இருவரிடமும் ஒரே எண்ணிக்கையிலான வீரர்கள், யானைகள், குதிரைகள் போன்றவை இருக்கும். மிகச் சிறப்பான உத்திகளை எவன் கையாள்கிறானோ அவனே இதில் வெல்கிறான்.”

அப்போது நான் அதிகாரம் குறித்த ஒரு விஷயத்தை அறிந்து கொண்டேன்: உன் பக்கம் யார் யார் இருக்கிறார்கள் அல்லது எவையெவை இருக்கின்றன என்பது முக்கியமல்ல, அவற்றை நீ எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறாய் என்பதுதான் முக்கியம்.

“தன் மாணாக்கர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் உத்திப்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும் என்று சாணக்கியர் விரும்பினார்; ஒருவனுடைய வெற்றி அல்லது தோல்வியை அதுதான் தீர்மானிக்கிறது,” என்று தாத்தா கூறினார்.

எங்கள் சிந்தனையைத் தூண்டிவிடுவதற்காக, “உத்தி சார்ந்த சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கு எது நல்ல வழியென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?” என்று அவர் எங்களிடம் கேட்டார்.

அது ஒரு வினோதமான கேள்விபோலத் தெரிந்தது. “உத்தி சார்ந்த சிந்தனையை உண்மையிலேயே வளர்த்துக் கொள்ள முடியுமா?” என்று கேட்டுக் கொள்வதுபோல நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். அது எங்களுக்கு ஒரு புதிய செய்தியாக இருந்தது.

தாத்தா வேண்டுமென்றே தன் குரலைத் தணித்துக் கொண்டு, “உத்தி சார்ந்த சிந்தனையை வளர்த்துக் கொள்ளச் சிறந்த வழி . . . விளையாடுவதுதான்!” என்று கூறினார்.

இப்படிப்பட்ட ஒரு பதிலை எந்தவொரு சிறுவன்தான் விரும்ப மாட்டான்? நாங்கள் அதிகமாக விளையாட எங்கள் பெற்றோர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. நாங்கள் படிப்பதற்கும் வீட்டுப் பாடங்களைச் செய்து முடிப்பதற்கும் அவர்கள் முன்னுரிமை கொடுத்தனர். ஆனால் இங்கே என் தாத்தாவோ அதற்கு நேர் எதிரானதைக் கூறுகிறார்!

“விளையாட வேண்டும் என்பதற்காக விளையாடாதீர்கள். விளையாடும்போது சிந்தியுங்கள். எந்தவொரு விளையாட்டிலும்

வெற்றியாளர்களும் இருப்பார்கள், தோல்வியாளர்களும் இருப்பார்கள். ஆனால் இருவராலும் கற்றுக் கொள்பவர்களாக ஆக முடியும். தொடர்ந்து கற்றுக் கொண்டு தன்னை மேம்படுத்திக் கொள்கின்றவனிடம் வெற்றி இயல்பாக வந்து ஒட்டிக் கொள்ளும்.”

அவர் எங்கள் விவாதத்திற்குள் மீண்டும் அர்த்தசாஸ்திரத்தைக் கொண்டு வந்தார். “அர்த்தசாஸ்திரத்திலுள்ள 15 புத்தகங்களில், 8 புத்தகங்கள் போருக்குத் தயாராவதைப் பற்றியும் போரிடுவதைப் பற்றியும் பேசுகின்றன. அமைதிக் காலங்களில் போர்த் தயாரிப்பு எந்த அளவு அதிகமாக இருக்கிறதோ, போர் வரும்போது அந்த அளவு குறைவாக ரத்தம் சிந்தப்படும். செயல்நடவடிக்கையைவிடவும் திட்டமிடுதல் அதிக முக்கியமானது. ஒரு விஷயத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் திட்டமிடுதல் உதவுகிறது.

“அக்காலகட்டத்தில், சதுரங்க ஆட்டத்தில் இருப்பதுபோலவே படைகளும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பெயரும் சதுரங்கம்தான். சமஸ்கிருதத்தில் சதுர் என்றால் நான்கு, அங்கம் என்றால் உறுப்பு. அதாவது, அது ஒரு படையின் நான்கு அங்கங்களைக் குறித்தது.”

பழங்காலத்தில் போர்கள் எவ்வாறு நடைபெற்றன என்பதை எங்கள் தாத்தா எங்களுக்கு விவரித்தார்: “ஒரு படையில், நடந்து சென்று சண்டையிட்டக் காலாட்படையினர், குதிரைகள்மீது அமர்ந்து போரிட்டக் குதிரைப் படையினர், தேர்களில் பயணித்து மோதிய தேர்ப் படையினர், யானைகள்மீது அமர்ந்து சமரிட்ட யானைப் படையினர் என நான்கு பிரிவினர் இருந்தனர்.

“அந்த அணிகளிலிருந்த ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்திருந்த படைப்பிரிவிற்கு ஏற்பப் போர்க்களத்தில் தங்கள் சக்தியை வெளிப்படுத்தினர்.

“அதனால்தான் போர் உண்மையில் துவங்குவதற்கு முன்பே தன் மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சாணக்கியர் விரும்பினார். இப்படித்தான் உலகின் முதல் போர் விளையாட்டான சதுரங்கம் பிறந்தது. அரண்மனையில் சொகுசாக உட்கார்ந்து கொண்டு இந்த விளையாட்டை இரண்டு நண்பர்களால் விளையாட முடியும். யுத்தத்தின்போது போரிடப் புதுமையான முறைகளை வகுத்துக் கொள்ள இது அவர்களுக்கு உதவியது.”

இது நல்ல யோசனையாக இருக்கிறதே என்று நான் நினைத்தேன். உண்மையான சண்டைக்கு முன்பாகப் பயிற்சி எடுத்துக் கொள்வதுபோல இது எனக்குப் பட்டது. இதில் அர்த்தம் இருந்ததாக

நான் உணர்ந்தேன்.

அப்போது எங்களுடன் இருந்த ஆர்வமிக்க என் உறவுச் சிறுவன் ஒருவன், "தாத்தா, சதுரங்கத்தில் ஒட்டகங்களும் உண்டே?" என்று கேட்டான்.

"உன் கவனிப்புத் திறமை அபாரமாக இருக்கிறது." தாத்தா எப்போதுமே சுயசிந்தனையை ஊக்குவித்தார். "காலம் செல்லச் செல்ல, சதுரங்க விளையாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. போர்களில்கூட அத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தன. போர்களில் வேறு விலங்குகளும் பயன்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக, பாலைவனப்பகுதிகளில் ஒட்டகங்கள் பயன்படுத்தப்பட்டன. இன்றும்கூட, ராஜஸ்தான், குஜராத் போன்ற பகுதிகளிலுள்ள நம் ராணுவத்தில் ஒட்டகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை அப்பகுதியை நன்றாக அறிந்து வைத்திருப்பதால் அவை மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதே அதற்குக் காரணம்.

"விளையாட்டு மேலும் பிரபலமடைந்தபோது, இந்தியாவிற்கு வந்த வணிகர்கள் இந்த விளையாட்டை வேறு நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். இந்த விளையாட்டை அரபு நாடுகளில் விளையாடியபோது ஒட்டகங்கள் அங்கு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டன. அதனால்தான் நாம் இன்று சதுரங்கத்தில் ஒட்டகங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த விளையாட்டு ஐரோப்பிய நாடுகளை அடைந்தபோது அதில் மேலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் இதன் அடிப்படைகள் அனைத்தும் அர்த்தசாஸ்திரத்திலிருந்து உருவானவையே."

இப்போது கடந்தகாலத்தை நிகழ்காலத்தோடு எங்களால் தொடர்புபடுத்திப் பார்க்க முடிந்ததால், நமது நாட்டைப் பற்றிய பெருமிதத்தால் எங்கள் நெஞ்சு விம்மிப் புடைத்தது.

இந்த உரையாடல்கள் எல்லாம் சுவாரசியமாக இருந்தாலும் அது எனக்கு எந்த விதத்திலும் உபயோகமாக இருக்கவில்லை என்பதைத் தெரிவிக்கும் விதமாக, நான் குறுக்கிட்டு, "ஆனால் தாத்தா, நான் ஓர் அரசனாக ஆக விரும்பவில்லை, எனக்கு அதில் ஆர்வம் இல்லை," என்று கூறினேன்.

"அரசனாக ஆக விருப்பம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் சாணக்கியரின் கருத்துக்கள் பொருந்தும் என்று யார் சொன்னது?" என்று அவர் எனக்குப் பதிலளித்தார். "நீ யாராக இருக்கிறாய் என்பதோ அல்லது நீ என்ன வேலையில் இருக்கிறாய் என்பதோ முக்கியமில்லை. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் எல்லோருக்கும் பயன்படக்கூடிய

ஒன்று.”

“எல்லோருக்குமா?” ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன.

“ஆம். தலைவராக ஆக விரும்பும் எவரொருவருக்கும் அது பயன்படும். அவர்கள் என்ன வேலை பார்க்கின்றனர் என்பது ஒரு பொருட்டல்ல.”

இதில் அர்த்தம் இருந்ததாக எனக்குத் தோன்றியது. நான் ஒரு தலைவராக ஆக விரும்பினேன். ஆனால் எப்படி ஆவது . . . ?

# 6

# என்னுள் இருந்த தலைவரை வெளிக்கொண்டு வருதல்

“தலைமைத்துவம் என்பது ஒரு சுவாரசியமான விஷயம்,” என்று கூறிய தாத்தா இவ்வாறு தொடர்ந்தார். “அதில் பல பரிமாணங்கள் இருக்கின்றன. மக்கள் ஓர் உயர்ந்த லட்சியத்தை அடைய அவர்களை வழி நடத்தும் திறமை; கடினமான சூழல்களில் சரியான முடிவுகளை எடுக்கத் தேவையான தெளிவு; சாத்தியமற்றதைச் சாத்தியமாக்கும் திறன்; ஒரு குழுவினருக்கு ஊக்கமளித்தல்; சொல்லும் செயலும் ஒன்றுபோல இருத்தல்; விளையாட்டின் விதிகளை அறிந்திருப்பதைக் காட்டிலும் வெற்றி பெறுதலைப் பற்றி அதிகமாக அறிந்திருத்தல்; எல்லாவற்றுக்கும் மேலாக, பிறரால் பார்க்க முடியாத விஷயங்களைப் பார்க்கும் திறன்.”

தலைமைத்துவம் பற்றி என் மனத்திலும் இதயத்திலும் ஆழமாகப் பதிந்த முதல் எண்ணங்கள் இவைதாம். “ஒருவரால் எப்படி ஒரு தலைவராக ஆக முடியும்?” என்று நான் ஆர்வமாகக் கேட்டேன்.

“நல்ல கேள்வி.” என் ஆர்வம் என் தாத்தாவையும் தொற்றிக் கொண்டது. “ஒரு தலைவராக ஆவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. புத்தகங்களைப் படிப்பதன் மூலம், பிற தலைவர்களுடன் பழகுவதன் மூலம், பிற தலைவர்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்வதன் மூலம் அல்லது தலைவர்களைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம் தலைவராக ஆகலாம். சுருக்கமாகக் கூறினால், ஒரு தலைவராக ஆக வேண்டுமென்றால், ஒருவர் ஒரு தலைவரைப்போலச் சிந்திக்கவும் நடந்து கொள்ளவும் வேண்டும்.”

என் தாத்தா தொடர்ந்து இவ்வாறு கூறினார். “தலைமைத்துவம் என்பது ஒருவர் வகிக்கும் பதவி அல்லது அவர் கைக்கொண்டிருக்கும் அதிகாரம் பற்றியதல்ல. தார்மீகரீதியாகச் சரியாக நடந்து கொள்வதும் முக்கியமானது.”

“தார்மீகரீதியாகச் சரியாக இருத்தல் என்றால் என்ன?”

“வேதங்களின்படி ஒரு தலைவன் முதலில் ஒரு தர்மவானாக இருக்க

வேண்டும். அவன் ஒரு நீதிமானாக இருக்க வேண்டும். அதனால்தால் ஒரு கச்சிதமான அரசன் ராஜரிஷி என்று அழைக்கப்படுகிறான். ஒரு ரிஷி போன்ற ராஜா என்று அதற்குப் பொருள்.”

“ஒருவன் தலைவனாக இருக்க வேண்டுமென்றால் எதற்காக அவன் தர்மவானாக இருக்க வேண்டும்?” நான் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன்.

“ஒரு தலைவன் எதிர்கொள்வதிலேயே மிகப் பெரிய சிக்கலுக்குத் தர்மசங்கடம் என்று பெயர். ஒரு விஷயம் நல்லதா அல்லது கெட்டதா என்பதைத் தீர்மானிப்பதை உள்ளடக்கியது அது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில்தான் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.”

என்னுள் இருந்த தலைவன் உசுப்பிவிடப்பட்டதுபோல நான் உணர்ந்தேன். “அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதன் மூலம் ஒருவனால் ஒரு தலைவனாக ஆக முடியுமா?” என்று நான் கேட்டேன்.

“அர்த்தசாஸ்திரம் தலைவர்களுக்காக மட்டுமே எழுதப்பட்ட ஒன்று. அதனால் அதிலுள்ளவற்றைத் தலைவர்களால் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். மற்றவர்கள் அதில் கூறப்பட்டுள்ள முக்கியமான விஷயங்களைத் தவறவிட்டுவிடுவார்கள்.”

தாத்தா எங்கள் விவாதத்தை முற்றிலும் புதியதோர் தளத்திற்கு எடுத்துச் சென்றார். “ஒருவர் அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதற்கு முன்பு பகவத் கீதையைப் படிக்க வேண்டும்,” என்று அவர் கூறினார்.

பகவத் கீதையா? இவை இரண்டிற்கும் என்ன தொடர்பு?

“நான் முன்பே கூறியபடி, ஒரு தலைவர் எதிர்கொள்வதிலேயே மிகவும் சவாலானது தார்மீகத் தடுமாற்றம்தான். மகாபாரதப் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கையில், மிகச் சிறந்த போராளியாக விளங்கிய அர்ஜுனனுக்கு ஏற்பட்ட தார்மீகத் தடுமாற்றத்திற்கு பகவத் கீதை தீர்வளிக்கிறது.

“அர்ஜுனன் மிகத் திறமையானவனாக இருந்தபோதிலும், காரியத்தில் இறங்க வேண்டிய ஒரு முக்கியமான கட்டத்தில் அவனுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. போரில் தன் உறவினர்களைக் கொல்ல வேண்டுமா கூடாதா என்பதே அவனுடைய தடுமாற்றம்.”

அதற்கான தீர்வு?

“அப்போது கிருஷ்ணன் அவனுக்கு ஆன்மீக மற்றும் லௌகீக அறிவுரையை வழங்கினான். கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடல்கள்தான் பகவத் கீதை. கிருஷ்ணனின் உபதேசத்தால் ஊக்கவிக்கப்பட்ட அர்ஜுனன் இறுதியில் அப்போரில் பாண்டவர்கள் வெற்றி பெற உதவினான். கிருஷ்ணன், அர்ஜுனனுக்கு

ஏற்பட்டிருந்த தார்மீகத் தடுமாற்றத்திலிருந்து அவனை விடுவித்ததோடு, மகாபாரதப் போரின் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்டச் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கான உத்திகளையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்."

எங்களுடைய முந்தைய வருகைகளின்போது தாத்தா அப்போர் பற்றிக் கூறியிருந்த பல கதைகள் இப்போது என் நினைவிற்கு வந்தன.

"ஓர் அரசன் பகவத் கீதையை அடித்தளமாக வைத்துக் கொண்டு அர்த்தசாஸ்திரத்தைப் படித்தால் அவன் ஒரு கச்சிதமான அரசனாக ஆவான். அவன் கொள்கை அளவில் மட்டுமல்லாது, நடைமுறையிலும் தார்மீகத்துடன் செயல்படும் ஓர் அரசனாக இருப்பான். இவ்விரு புத்தகங்களும், உங்களுக்குள் இருக்கும் முடிவெடுக்கும் திறனை வெளிக்கொண்டு வருவதையும், உங்களுக்குள் இருக்கும் தலைவனை வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன."

அக்கட்டத்தில்தான் என்னுள் இருந்த தலைவனை என் தாத்தா வெளிக்கொண்டு வந்தாரா?

"உங்களுக்குள் இருக்கும் தலைவனை வெளிக்கொண்டு வர நீங்கள் விரும்பினால், முதலில் உங்களுக்குள் இருக்கும் சாணக்கியரை நீங்கள் வெளிக்கொண்டு வர வேண்டும். அதற்கு அர்த்தசாஸ்திரம் உங்களுக்கு உதவும்."

அக்காலகட்டத்திலிருந்து பகவத் கீதையும் அர்த்தசாஸ்திரமும்தான் என் வாழ்க்கையை வழிநடத்தும் சக்திகளாக விளங்கவிருந்தன என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

தாத்தா அதோடு ஓர் எச்சரிக்கையையும் விடுத்தார்: "தலைமைத்துவத்தை எப்போதும் ஓர் அரசனின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. இன்றுள்ள ஜனநாயக உலகில், ஒவ்வொரு குடிமகனும் ஓர் அரசன்தான். அர்த்தசாஸ்திரத்தை ஆண், பெண் இருபாலாராலும் பயன்படுத்த முடியும். எந்த நாட்டில் இருப்பவராலும், எந்தத் துறையில் இருப்பவராலும் அதை உபயோகிக்க முடியும்."

அது எனக்கு ஒரு புதிய பரிமாணத்தை அறிமுகம் செய்து வைத்தது. சாணக்கியர் சந்திரகுப்தனுக்கும், கிருஷ்ணன் அர்ஜுனனுக்கும் அறிவுரை கூறியிருந்தாலும், அந்த அறிவுரை உங்களுக்கும் எனக்கும் பொருந்தும். அது உலகளாவியது. அதில் கூறப்பட்டுள்ள மணியான கருத்துக்களை யார் வேண்டுமானாலும் எடுத்துத் தங்கள் வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

என் வாழ்க்கையில் தொழில்முறைரீதியாக நான் எந்தத் துறையைத்

தேர்ந்தெடுக்கப் போகிறேன் என்பதை நான் சிறுவனாக இருந்தபோது அறிந்திருக்கவில்லை. ஆனால் நான் எத்துறையைத் தேர்ந்தெடுத்தாலும் அதில் ஒரு தலைவனாக, பிறரை ஊக்குவிக்கும் ஒருவனாக, உலகிற்கு நல்லவற்றைப் பங்களிக்கும் ஒரு நபராக ஆவதை இலக்காகக் கொண்டிருப்பேன் என்று நான் தீர்மானித்தேன்.

எங்களுடைய கோடை விடுமுறை நிறைவுக்கு வந்தது. எல்லா விடைபெறுதல்களும் கண்ணீரோடுதான் நிறைவடைந்தன. ஆனாலும் நாங்கள் எப்போதும் அடுத்த விடுமுறைக்காகத் துடித்துக் கொண்டிருப்போம். நகரை நோக்கி நாங்கள் பயணித்துக் கொண்டிருந்தபோது, தாத்தாவின் அறிவுரைகளை நான் அசைபோட்டுக் கொண்டிருந்தேன்.

அந்த மௌனக் கணங்களில், என் வாழ்வின்மீது ஆழ்ந்த தாக்கம் ஏற்படுத்திய சில முக்கியமான முடிவுகளை நான் எடுத்தேன். ஆனால் என் தாத்தாவை நான் பார்ப்பது அதுதான் கடைசி முறையாக இருக்கும் என்பதை நான் உணரவில்லை.

ஒருசில நாட்களுக்குள்ளாகவே என் தாத்தா மறைந்துவிட்டார். அது திடீரென்று நிகழ்ந்ததால் என் பெற்றோர், என் தாத்தாவின் இறுதிச் சடங்கிற்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டாம் என்று முடிவு செய்தனர். நான் என் தாத்தாவின் பதிமூன்றாம் நாள் சடங்கில் கலந்து கொள்ளத்தான் ஊருக்குச் சென்றேன். அங்கு அப்போது எல்லா உறவினர்களும் கூடியிருந்தனர்.

கடைசியாக ஒரே ஒரு முறை என் தாத்தாவைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஏக்கமாக இருந்தது. அந்த வீட்டின் எல்லா இடங்களிலும் அவரைத் தேடினேன். ஆனால் அவர் நிரந்தரமாக என்னைவிட்டுப் போய்விட்டார்.

அவரைத் தேடிச் சென்றபோது நான் அவருடைய நூலகத்திற்குச் சென்றேன். அவர் எந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு கதை மேல் கதையாக எங்களுக்குக் கூறினாரோ, அந்த நாற்காலியின் அருகே நான் சென்றேன்.

அப்போது, அவருக்கு மிகவும் பிடித்தமான புத்தகமான அர்த்தசாஸ்திரம் அவரது மேசை மேல் இருந்ததை நான் கவனித்தேன். அது திறந்திருந்தது. அவரது வாழ்வின் கடைசி தினத்தில்கூட அவர் அதைப் படித்துக் கொண்டிருந்ததைப்போல அது எனக்குக் காட்சியளித்தது. அவருக்குப் பிடித்தமான புத்தகம் அக்கணத்திலிருந்து எனக்கும் பிடித்தமான ஒரு புத்தகமாக ஆகிவிடும் என்பதை எவராலும் ஊகித்திருக்க முடியாது.

அதைக் கையில் எடுக்காமலிருக்க என்னால் முடியவில்லை. அதை நான் என் பாட்டியிடம் எடுத்துச் சென்று, “பாட்டி, இப்புத்தகத்தை நான் என்னுடன் எடுத்துச் செல்லலாமா?” என்று கேட்டேன்.

அதற்கு என் பாட்டி, “தாராளமாக எடுத்துக்கொள். உன் தாத்தா அவருடைய எல்லாப் புத்தகங்களையும் உனக்குத்தான் விட்டுச் சென்றிருக்கிறார்,” என்று பதிலளித்தார்.

# 7

# புத்தகக் காதல்

மரணம் என்பது வாழ்க்கைக்கு ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது.

என் வாழ்க்கையில் நான் சந்தித்த முதல் மரணம் என் தாத்தாவினுடையதுதான். நான் பல நாட்களுக்கு அழுது கொண்டிருந்தேன். ஏனெனில், அவரை எனக்கு மிகவும் தேடியது. ஆனால் என்றோ ஒரு நாள் இறப்பு நம் அனைவரையும் வந்தடையும் என்று என் பெற்றோர்கள் எனக்கு எடுத்துரைத்தனர்.

ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. பிறரை ஊக்குவிக்கும் ஒரு வாழ்க்கையை அவன் வாழ்ந்தானா என்பதுதான் முக்கியம். ஏற்கனவே இறந்துவிட்டதுபோலப் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதே சமயம், வேறு சிலர், இறந்த பிறகும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த விஷயம் குறித்த ஒரு சுவாரசியமான தகவல் பின்னாளில் நான் படித்த மற்றொரு புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது. அப்புத்தகத்தின் பெயர் கதா உபநிஷத். அது ஒரு வித்தியாசமான புத்தகம்.

அப்புத்தகத்தில் நசிகேதன் என்ற ஒரு சிறுவன் எமனுடன் ஓர் உரையாடலில் ஈடுபடுவான். இப்பூவுலகில் ஒருவனின் நிலை குறித்தும் இறப்பிற்குப் பிறகு என்ன நிகழ்கின்றது என்பது குறித்தும் அவன் எமனிடம் கேள்வி கேட்பான்.

என் தாத்தா இந்த உலகிலிருந்து நிரந்தரமாகச் சென்றுவிட்டார் என்று எனக்குத் தெரியும். ஆனால் எங்கள் நெஞ்சில் என்றென்றும் பசுமையாக இடம்பெற்றிருக்கும் எண்ணற்ற நினைவுப் பொக்கிஷங்களை அவர் விட்டுச் சென்றுள்ளார். ஒரு தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவும் விலைமதிக்க முடியாத குறிப்புகளையும் அவர் எங்களுக்குக் கொடுத்துச் சென்றுள்ளார்.

வாழ்க்கை எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஓடிக் கொண்டிருந்தது. சந்தடி மிகுந்த ஒரு நகரத்தில் நான் வளர்ந்து வந்தேன். ஆனாலும் என் தாத்தா எனக்கு விட்டுச் சென்ற மிகச் சிறந்த பரிசான புத்தகங்கள்மீதான காதலை நான் ஒருபோதும் தொலைத்துவிடவில்லை. என் அப்பா

என்னிடம், “நம் வீட்டில் இடப் பற்றாக்குறை உள்ளது,” என்று கூறியபோதும் தாத்தாவின் புத்தகங்களில் பெரும்பாலானவற்றை நான் எடுத்துக் கொண்டேன். வேதங்கள், பிரம்ம சூத்திரங்கள், மகாபாரதம், முனிவர்களின் வரலாறு ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. நான் எல்லாப் புத்தகங்களையும் படித்துவிடவில்லை என்றாலும் அப்புத்தகங்களின் பக்கங்களுக்குள் குடியிருந்த என் தாத்தா எப்போதும் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்.

நான் என் வகுப்பில் முதல்தர மாணவர்களில் ஒருவனாக இருக்கவில்லை என்றாலும், அதே சமயம் கடைசி பெஞ்சு மாணவனாகவும் விளங்கவில்லை. நான் ஒரு சராசரி மாணவன். நான் பள்ளியிலும் கல்லூரியிலும் எந்தப் பாடத்திலும் தோல்வி அடையவில்லை என்றாலும், வகுப்பில் முதல் மாணவனாக வர வேண்டும் என்று நான் ஒருபோதும் ஆசைப்பட்டதும் இல்லை. ஆனால் வகுப்பு ஆசிரியர்களும், முதல்நிலை மாணவர்களும், என் நண்பர்களும் என்னிடமிருந்த ஒரு விஷயத்திற்காக என்னைப் பாராட்டினர். புத்தகங்கள்மீதான் என் காதல்தான் அது.

பள்ளியிலும் கல்லூரியிலும் எனக்கு ஓய்வு நேரம் கிடைத்தால் நான் நேராக நூலகத்திற்குத்தான் செல்வேன். நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, சினிமா பார்ப்பது, கையில் இருக்கும் கொஞ்சப் பணத்தில் தெருவோரக் கடைகளில் தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடுவது போன்றவை எனக்குப் பிடிக்காது என்று அதற்கு அர்த்தமில்லை.

இவை எல்லாவற்றுக்கு இடையிலும் நான் நூலகத்திற்குள் நுழைந்து கண்ணில் பட்டப் புத்தகங்களையெல்லாம் எடுத்துப் புரட்டுவேன். என் நண்பர்கள் வட்டாரத்தில் என்னைக் காணோம் என்றால், “அவன் நூலகத்தில்தான் இருப்பான்,” என்று அடித்துக் கூறும் அளவுக்கு அப்பழக்கம் என்னுள் ஊறியிருந்தது.

கல்லூரி நூலகருக்கு என்னை மிகவும் பிடிக்கும். பல விதமான புத்தகங்களைப் படிக்கும் ஒரு சில மாணவர்களில் நானும் ஒருவன் என்பதுதான் அதற்குக் காரணம். அறிவியல் புனைகதைகளிலிருந்து புதினங்கள்வரை, புராதன இந்திய இலக்கியங்களிலிருந்து நவீன நிர்வாகவியல்வரை எல்லாவற்றையும் நான் படிக்க முயற்சி செய்திருக்கிறேன்.

என் நூலகர் அவ்வப்போது எனக்குச் சில புத்தகங்களைப் பரிந்துரைப்பார்: “ஒரு புதிய புத்தகம் வந்திருக்கிறது. படித்துப் பார், உனக்குக் கண்டிப்பாகப் பிடிக்கும்.” அவர் ஒரு ஐஸ்கிரீம் விற்பனையாளர் மாதிரி. புதிய ரகங்கள் சந்தைக்கு வந்தால் அதை ருசி

பார்க்க அவர் என்னைத் தூண்டுவார்.

புத்தகங்களிலிருந்து வரும் வாசனை எனக்கு மிகவும் பிடிக்கும். புத்தகங்களோடு இருக்கும்போது நான் தனிமையாக இருப்பதாகவே உணர மாட்டேன். நான் அவற்றோடு ஒன்றிப் போய்விடுவேன். ஒரு புத்தகத்தால் உங்களுடைய சிறந்த நண்பனாக ஆகிவிட முடியும். உங்களோடு பகிர்ந்து கொள்ள அந்த நண்பனுக்கு ஒரு கண்ணோட்டம் இருக்கும். ஆனால் அதே சமயம், அது உங்களுடைய அபிப்பிராயத்தை மாற்ற முயலாது. நான் புத்தகங்களை வெறுமனே படிப்பதோடு நிறுத்திக் கொள்வதில்லை. அவை கூறுவதையும் உன்னிப்பாகக் கேட்பேன். உற்றுக் கவனிக்க விரும்புபவர்களோடு பேசப் புத்தகங்கள் பிரியப்படும்.

அந்த நூலகத்தில் புத்தக விவாதங்கள் நடத்தப்படும். அதில் நான் தவறாமல் கலந்து கொள்வேன். அந்த விவாதங்கள் ஆரோக்கியமானவையாகவும் அறிவைத் தூண்டுகின்ற விதத்திலும் இருந்தன. என்னைவிட அறிவார்ந்த, புத்திசாலித்தனத்துடன் இருந்த நண்பர்கள்கூட என்னை விரும்பினர். ஏனெனில், நான் அந்த விவாதங்களில் ஆர்வத்துடன் பங்கேற்றுக் கொண்டேன். நானும் ஓர் அறிவுஜீவி என்ற நினைப்பு எனக்கு ஏற்பட்டது.

ஒரு நாள் எங்கள் கல்லூரி நூலகத்தில் ஒரு புதிய புத்தக வெளியீட்டிற்கான அறிவுப்பை நான் பார்த்தேன். அது வெளியிடப்படுவதாக இருந்த இடம் நகரின் மற்றொரு மூலையில் இருந்தது. அப்புத்தக வெளியீட்டு விழாவில் அந்த நூலாசிரியரோடு ஒரு பிரபல நபரும் கலந்து கொள்வதாக இருந்தது. புத்தக வெளியீட்டு விழாவில் என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். என் நண்பர்கள் எவரும் அதற்குச் செல்ல முன்வராததால் நான் தனியாகச் செல்லத் தீர்மானித்தேன்.

அது ஒரு மறக்க முடியாத அனுபவம். அது ஒரு பெரிய புத்தகக் கடை. அங்கிருந்த எண்ணற்ற அலமாரிகளில் புத்தகங்கள் நிரம்பி வழிந்தன. அங்கு ஏராளமானவர்கள் கூடியிருந்தனர்.

அங்கு வருகை தந்த பிரபலம் ஒரு சினிமா இயக்குனர். அவருக்கும் புத்தகங்கள்மேல் மிகுந்த காதல் உண்டு. அதனால்தான் அவர் அவ்வளவாகப் பிரபலமாகாத எழுத்தாளர் ஒருவரின் புத்தக வெளியீட்டு விழாவிற்கு வருகை தர சம்மதித்தார். அங்கு வந்திருந்தவர்கள் பெரும்பாலானோர் அந்த நூலாசிரியரைச் சந்திக்கவோ அல்லது அவருடை புத்தகத்தை வாங்குவதற்கோ வரவில்லை. மாறாக, அந்த சினிமா இயக்குனரைப் பார்க்கவே அவர்கள் வந்திருந்தனர்.

அந்த இயக்குனர் தன் பேச்சின்போது ஒரு முக்கியமான விஷயத்தைப்

பற்றிக் குறிப்பிட்டார்: “நண்பர்களே, லட்சக்கணக்கான புத்தகங்கள் இன்று நம்மைச் சுற்றி இருக்கின்றன. அவை வெறும் புத்தகங்கள் அல்ல. லட்சக்கணக்கானவர்களின் அனுபவங்கள். அவர்கள் ஒவ்வொருவரும் நம்மிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட விதத்தில் வாழ்க்கையை அனுபவித்துள்ளனர்.”

இப்புத்தகத்தை எழுத எது அவரைத் தூண்டியது என்று அந்த நூலாசிரியரிடம் யாரோ ஒருவர் கேட்டார். அதற்கு அவர், “படிப்பது ஒருவனை மனிதனாக்குகிறது, எழுதுவது அவனை முழுமையாக்குகிறது,” என்று பதிலளித்தார். தன்னுடைய ஆத்ம திருப்திக்காக அவர் அப்புத்தகத்தை எழுதியிருந்தார்.

நான் என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தேன். இடப் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடி இருந்த போதிலும், நான் என் வாழ்நாள் முழுவதும் புத்தகங்களைச் சேகரித்து வந்துள்ளேன். என் அம்மா என்னிடம், “நீ ஏன் ஒரு நூலகத்தில் சேர்ந்து கொள்ளக்கூடாது? படித்தப் பின் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிடலாம் அல்லவா?” என்று கேட்பார். இடத்தைச் சேமிப்பதற்கு வேண்டுமானால் இந்த யோசனை உதவலாம். ஆனால் ஒரு புத்தகத்தைச் சொந்தமாக்கிக் கொள்வது, அதன் பக்கங்களில் குறிப்பெடுத்துக் கொள்வது, பின்னாளில் அதைப் புரட்டிப் பார்த்து அசைபோடுவது போன்றவற்றிலிருந்து கிடைக்கும் மகிழ்ச்சிக்கு எதுதான் ஈடாகும்? இப்புத்தகக் காதல் ஒரு நாள் என்னை ஒரு பிரபலமான எழுத்தாளனாக உருவாக்கக்கூடும், யார் கண்டது?

புத்தகங்களை வாங்கி அவற்றைப் படிப்பது என்பது ஒன்று. அவற்றிலிருந்து பயனுள்ள குறிப்புகளை எடுத்து வைத்துக் கொள்வது என்பது மற்றொன்று.

இது குறித்து நான் மேலும் விவரிக்கிறேன் . . .

# 8

## சாணக்கியர் குறித்தக் குறிப்புகள்

என் ஆசிரியர்களில் ஒருவர் என்னிடம் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்: "ஒருவன் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவன் அதை மூன்று விதமாகப் படிக்க வேண்டும். அதாவது, மூன்று கோணங்களில் மூன்று முறை படிக்க வேண்டும். முதல் முறை அதை மேலோட்டமாகப் படித்தால் போதும். அப்போது அதில் உங்களுக்கு ஈடுபாடு உள்ளதா என்று நீங்கள் பார்க்க வேண்டும். அதில் உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், அப்புத்தகத்தைப் படிப்பதை விட்டுவிட வேண்டும்." இது நேர நிர்வாகம் குறித்த ஓர் அருமையான ஆலோசனை. ஏனெனில், இன்று உலகெங்கும் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

"முதல் வாசிப்பில் அப்புத்தகம் உங்களுக்கு சுவாரசியமிக்கதாக இருப்பதாகத் தோன்றினால், இரண்டாம் முறை அதை வாசியுங்கள். இம்முறை வாசிக்கும்போது பேனா அல்லது பென்சில் கொண்டு குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு அதில் சந்தேகம் ஏதும் இருந்தால், அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் அல்லது வல்லுனர் யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்." கல்வித்துறையில் சிறந்த பங்களிப்பை அளித்தமைக்காக அவர் பெரிதும் மதிக்கப்பட்டதில் வியப்பேதுமில்லை.

"மூன்றாவது வகையான வாசிப்பு என்பது மறுவாசிப்பு. உங்களுடைய சந்தேகங்கள் அனைத்தையும் தீர்த்துக் கொண்ட பிறகு நீங்கள் அதைப் படிக்க வேண்டும். இப்போது அப்புத்தகத்தைப் பொருத்தவரை நீங்கள் கிட்டத்தட்ட ஒரு வல்லுனர்போல ஆகிவிடுவீர்கள். அப்புத்தகத்தைப் பற்றி நீங்கள் ஒரு கூட்டத்தில்கூடப் பேசலாம்," என்று அந்த ஆசிரியர் மேலும் கூறினார். வெறுமனே ஒரு புத்தக வாசகனாக இருப்பதிலிருந்து அதைப் பற்றி கூட்டத்தில் பேசும் ஒருவனாக ஆகும் இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

என் மனத்தில் ஒரு புதிய யோசனை முளைவிடத் துவங்கியது. சாணக்கியரின் வாழ்க்கை குறித்த ஈடுபாடு சிறு வயதிலிருந்தே என்னுள் ஏற்கனவே உறைந்திருந்தது. நன்றி, தாத்தா!

பின்னர் நான் சாணக்கியர் குறித்தப் பல புத்தகங்களைச் சேகரித்தேன். சிலவற்றை நான் தெருவோரக் கடைக்காரர்களிடமும், சிலவற்றைப் பெரிய புத்தகக் கடைகளிலும், வேறு சிலவற்றை என் பயணங்களின்போதும் நான் வாங்கினேன். பல தலைமுறைகளைச் சேர்ந்த பலர் சாணக்கியர் பற்றி எழுதியிருந்ததைக் கண்டு எனக்கு வியப்பு ஏற்பட்டது.

சாணக்கியரின் வாழ்க்கை மற்றும் அவரது போதனைகள் குறித்தப் புத்தகங்கள் பல மொழிகளிலும் வெளிவந்திருந்தன. சில புத்தகங்கள் உயர்தரத்துடன் எழுதப்பட்டு ஆய்வுக்கு உகந்தவையாக விளங்கின. வேறு சில புத்தகங்கள் பொதுவான வாசகர்களை மனத்தில் வைத்து எழுதப்பட்டிருந்தன. சில புத்தகங்கள் அர்த்தம் பொதிந்தவையாக இருந்தன. பல புத்தகங்கள் ஏற்கனவே வெளிவந்திருந்த கதைகளை வேறு வடிவில் மீண்டும் வெளியிட்டன. ஆனால் சாணக்கியரின் கதைக்கு அப்பால் செல்ல நான் விரும்பினேன்.

சாணக்கியரின் புத்தகங்களில் பிரபலமான புத்தகம் சாணக்கிய நீதி. ஒரு சாதாரண மனிதன் ஒரு நல்ல செழிப்பான வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான அறிவுரைகளை அப்புத்தகம் அளித்தது. புரிந்து கொள்வதற்கு எளிமையான மொழியில் அது எழுதப்பட்டிருந்தது. சாணக்கியரின் எண்ணங்கள் குறித்த இன்னும் இரண்டு முக்கியமான புத்தகங்கள் நீதி சாஸ்திரம் மற்றும் சாணக்கியப் பிரநிதிச் சூத்திரம் ஆகும். முத்ரரக்ஷஸம் எனும் புத்தகம் சாணக்கியரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் தனநந்தனைத் தூக்கியெறிந்த கதையையும் நாடக வடிவில் விவரிக்கிறது. அப்புறம் என் தாத்தாவிற்கு மிகவும் பிடித்த அர்த்தசாஸ்திரம்.

நான் இப்புத்தகங்கள் அனைத்திலிருந்தும் குறிப்புகள் எடுத்து அவற்றை ஒரு கோப்பில் சேகரித்து வைத்திருந்தேன். என் சக மாணவர்களையும் என் ஆசிரியரையும் கவர்வதற்காக இவற்றிலிருந்து அவ்வப்போது நான் சில கதைகளை எடுத்துக் கூறுவதுண்டு. ஆனால் இப்புத்தகங்களில் அர்த்தசாஸ்திரம் தனித்து நின்றது. அதன் கருத்துக்கள் ஆழமானவையாகவும் பிரமிக்க வைப்பவையாகவும் இருந்தன. ஆனால் ஒரு முறை வாசித்தால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதைப் புரிந்து கொள்ள நான் அதைப் பல முறை கவனமாகவும் கூர்ந்தும் படிக்க வேண்டியிருந்தது. அப்புத்தகத்தின் பக்கங்களில் இடம்பெற்றிருந்த தாத்தாவின் குறிப்புகள் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

சாணக்கியரின் வாழ்க்கையில் ஒரு சில விஷயங்களை நான் புரிந்து கொண்டிருந்தேன் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. ஆனால் அதை நான் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை என்பதை நான்

அறிந்திருந்தேன். ஒருவன் ஒரு புத்தகத்தை மூன்று முறை வாசித்தால் அவன் அதில் வல்லுனராக ஆகிவிடுவான் என்று என் ஆசிரியர் கூறியிருந்தது தவறா?

மொத்த அர்த்தசாஸ்திரத்தையும் நான் இதுவரை பத்து முறைக்கு மேல் படித்திருக்கிறேன். அதில் இடம்பெற்றுள்ள 6,000 சூத்திரங்களையும் நான் படித்திருந்தாலும் நான் எதையோ தவறவிட்டிருக்கிறேன் என்றே உணர்கிறேன்.

ஒரு நாள் என் தந்தை என்னை ஓர் ஆன்மீகச் சொற்பொழிவிற்கு அழைத்துச் சென்றார். எங்கள் குடும்பத்தினர் ஆன்மீகச் சொற்பொழிவுகளுக்குச் செல்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தனர். அன்று சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த சாமியார் ஒருவர், கீழ்க்கண்ட சுவாரசியமான தகவல்களைக் கூறினார்:

"வேதங்களைப் படிக்க வேண்டுமென்றால் உங்களுக்கு நான்கு விதமான அனுக்கிரகங்கள் தேவைப்படும். சுய அனுக்கிரகம், கடவுள் அனுக்கிரகம், குரு அனுக்கிரகம், சாஸ்திர அனுக்கிரகம் ஆகியவைதான் அந்த நான்கும்.

"சுய அனுக்கிரகம் என்பது உங்களுடைய சொந்த முயற்சியில் உங்களுக்கு நீங்களே அளித்துக் கொள்ளும் அனுக்கிரகம் ஆகும். சோம்பேறிகளால் வேதத்தைப் புரிந்து கொள்ள முடியாது. வேதங்களைப் படிக்க உண்மையான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் தேவை." இதைப் பொருத்தவரை நான் என்னால் முடிந்த அளவு முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.

"கடவுள் அனுக்கிரகம் என்பது கடவுளின் கிருபை. நீங்கள் கடவுளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால், அவர் உங்களை நோக்கிப் பத்து அடிகள் எடுத்து வைப்பார். நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகக் கடவுளின் அனுக்கிரகம் தூண்டிவிடப்படும்." நான் என்னால் முடிந்த முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டிருந்தாலும் கடவுளின் கடைக்கண் பார்வை என்மீது படவில்லையோ என்று நான் சந்தேகித்தேன்.

"குரு அனுக்கிரகம் என்பது உங்களுடைய ஆசானின் கிருபை. வேதங்களை ஒருபோதும் சுயமாகப் படிக்கக்கூடாது. நன்கு கற்றறிந்த குரு ஒருவரின் வழிகாட்டுதலின்கீழ்தான் அதைப் படிக்க வேண்டும். வேதங்களிலுள்ள புதிய பரிமாணங்களை உங்களுக்கு உங்கள் குரு வெளிக்காட்டுவார்." இது என்னுள் மற்றொரு கேள்வியைத் தோற்றுவித்தது. உண்மையிலேயே வேதங்களைப் படிக்க ஒருவருக்கு ஒரு குரு கண்டிப்பாகத் தேவையா?

“கடைசியாக, சாஸ்திர அனுக்கிரகம் என்பது வேதத்தின் கிருபை. நீங்கள் படிக்கவிருக்கும் வேதம் உங்களுக்குச் செய்யும் கிருபை. வேதங்களைப் படித்தும் ஞானமில்லாமல் இருக்கும் பலர் இருக்கின்றனர். அவர்கள் வேதங்கள் குறித்துப் பேசுவர். ஆனால் வேதங்கள் உங்களிடம் பேச வேண்டும்.” இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அன்று இரவு, சாணக்கியர் குறித்தும் அவரது போதனைகள் குறித்தும் நான் படித்த முறை பற்றி நான் அசைபோடத் தொடங்கினேன். சாணக்கியரின் கதை குறித்து என் தாத்தா என்னுள் ஆர்வத்தைத் தூண்டியதிலிருந்து, அதைத் தீவிரமாகப் படித்துக் குறிப்பெடுத்துக் கொண்டதுவரை என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்தேன். ஆனாலும் என்னைப் பொருத்தவரை நான்கு அனுக்கிரகங்களும் முழுமை பெறவில்லை. எனக்குக் கடவுள் அனுக்கிரகம், குரு அனுக்கிரகம், சாஸ்திர அனுக்கிரகம் ஆகியவை தேவைப்பட்டன.

மறுநாள் காலையில் நான் அந்தச் சாமியாரைப் பார்க்கச் சென்றேன். அவரிடம், “சுவாமி, நீங்கள் கூறிய அனைத்து அனுக்கிரகங்களையும் பெறுவது எப்படி? நான் சாணக்கியரையும் அர்த்தசாஸ்திரத்தையும் முழுமையாகப் புரிந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கும் என் தலைமுறையினருக்கும் சாணக்கியர் ஒரு புதிராக இருக்கிறார். சாணக்கியரை முழுமையாகப் புரிந்து கொள்வது சாத்தியமா?” என்று நான் கேட்டேன்.

“இந்தியப் பாரம்பரியப்படி எல்லாமே சாத்தியம்தான். ஆனால் வேதங்களைப் புரிந்து கொள்ள ஆண்டாண்டு காலமாக நிரூபணமாகியுள்ள குரு—சீடன் மற்றும் குருகுல முறையைப் பின்பற்றுவது நல்லது.”

“அவை என்னென்ன?”

அவர் இன்னொரு சொற்பொழிவை ஆற்றத் தொடங்கினார் . . .

# 9

# குரு - மகத்தானவர்

அந்தச் சாமியார் ஒரு கல்விமான். சிக்கலான விஷயங்களை எளிதாக எடுத்துரைப்பதில் அவர் என் தாத்தாவைப்போலவே இருந்தார். அல்லது, நான் சந்தித்த, என்னிடம் கதை கூறிய ஒவ்வொருவரிடமும் நான் என் தாத்தாவை தேடிக் கொண்டிருந்தது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஒரு சிலர் ஒருபோதும் இறப்பதே இல்லை என்பதை எனக்குப் பக்குவம் வந்தபோது நான் புரிந்து கொண்டேன். உடல்ரீதியாக ஒருவர் சாம்பலாக ஆகலாம். ஆனால் ஒருவர் நம்பிக்கை வைத்திருக்கும் யோசனைகளும் கருத்தாக்கங்களும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும்.

பக்குவம் . . . இந்த வார்த்தை என் மனத்தில் சிறிது நேரம் சுற்றிக் கொண்டிருந்தது. அதன் பொருளை என் தாத்தா என்னிடம் கூறிய காலகட்டத்திற்கு நான் பயனித்தேன்.

“தாத்தா, நான் பெரியவனாக வளர்ந்த பிறகு பக்குவம் அடைந்துவிடுவேனா?”

“பக்குவம் அடைந்த பிறகுதான் நீ உண்மையில் வளர்ந்தவனாகிறாய்.”

நான் வளர்ந்துவிட்டேன் என்பது உண்மைதான். ஆனால் பக்குவத்தை அடைய நான் இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியிருக்கும்.

“இந்தியாவின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் புரிந்து கொள்ள நீ இரண்டு விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்,” என்று அந்தச் சாமியார் கூறினார். என் மனம் நிகழ்காலத்திற்குத் திரும்பியது.

“முதலாவது குரு—சீடன் பாரம்பரியம்.” இதைக் கூறியபோது அவர் வேறு ஏதோ ஓர் உலகிற்குப் பயணப்பட்டுவிட்டதுபோலத் தோன்றியது. “குரு என்பவர் இப்போது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நமக்குப் பாடம் கற்றுத் தரும் ஆசிரியர் போன்றவர் அல்ல. குரு, ஒரு குறிப்பிட்டப் பாடத்தைப் பற்றிக் கற்றுக் கொடுப்பதில்லை. அவர் தொழில்முறைரீதியாக விரிவுரைகளை நிகழ்த்துவதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள ஒருவர் அல்ல. குரு பல விஷயங்களைக் கற்றுக்

கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தான் கற்றுக் கொடுக்கும் விஷயங்களிலிருந்து இறைத்தன்மையை அடையத் தன் மாணாக்கர்களை வழிநடத்தும் கூடுதல் பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

“ஒரு குரு, அறிவியல், கணிதம், கணக்கியல் அல்லது மொழிகள் போன்ற பாடங்களைக் கற்றுக் கொடுக்கக்கூடும். ஆனால் அவற்றின் ஊடாக வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள அவர் தன் மாணாக்கர்களைத் தயார் செய்வார்.

“ஒரு குரு, தன் மாணவன் படிப்பில் முதல் நிலையை எட்டும்போது மகிழ்ச்சி அடைவதில்லை. மாறாக, அவன் ஒரு சிறந்த மனிதனாக உருவாகும்போதுதான் அவர் ஆனந்தம் அடைகிறார். குரு என்பவர் உலக விஷயங்களிலும் ஆன்மீக விஷயங்களிலும் ஒரு ஞானவானாக விளங்குவதால் தன் மாணவர்களும் அந்த நிலையை அடைய வேண்டும் என்று அவர் விரும்புவார்.

“அதேபோல, ஒரு சீடனும் வகுப்பில் முதல்நிலையை எட்டும்போதோ அல்லது தன் தொழில்முறை வாழ்க்கையில் அதிகப் பணத்தைக் குவிக்கும்போதோ கச்சிதமான ஒரு மாணவனின் நிலையை எட்டுவதில்லை. அவன் எப்போதும் தன் எண்ணத்தாலும் மனத்தாலும் தன் குருவோடு இசைவாக இருத்தல் வேண்டும்.”

நம்முடைய நவீனக் கல்வி முறையில் இப்படிப்பட்ட விஷயங்கள் இன்னும் இருக்கின்றனவா என்று நான் சந்தேகப்பட்டேன்.

“குரு—சீடன் உறவு தெய்வீகமான ஒன்று. அவர்கள் இருவருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை நிலவும். குரு தன் ஞானம் முழுவதையும் சொல்லிக் கொடுப்பார். சீடனும் தன் குருவிற்கு அளிக்கும் அர்ப்பணிப்பான சேவை மூலம் அனைத்து ஞானத்தையும் கிரகித்துக் கொள்வான்.”

நான் ஒரு கணம் மௌனமானேன். என் வாழ்க்கையில் எனக்கு குரு என்று யாராவது இருந்தார்களா அல்லது பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் மட்டுமே என்னைச் சுற்றி இருந்தார்களா என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

என் மனவோட்டத்தைப் படித்ததுபோல, அந்தச் சாமியார், “உண்மையான குரு கடவுள்தான். வேறு யாரும் கிடையாது. ஒரு குருவின் வடிவத்தில் கடவுள் நம்மிடம் வந்து சேர்கிறார். ஆனால் அது நடக்க வேண்டுமென்றால், அறிவுத் தாகம் கொண்ட ஒரு கச்சிதமான சீடனாக நீ இருக்க வேண்டும்.”

“இந்தியாவில் இன்றும் நாம் குருவிற்கு மிக உயர்ந்த இடத்தை

அளித்து வருகிறோம். நம்முடைய முதல் குருவாக விளங்கும் நம் பெற்றோர்களுக்கும் மேலான ஓரிடத்தை நாம் அவர்களுக்கு அளிக்கிறோம். சக்திமிக்கப் பேரரசர்கள்கூடத் தங்கள் குருக்களுக்குத் தலைவணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

"இரண்டாவது, குருகுலக் கல்விமுறை. குரு தங்கியிருக்கும் ஆசிரமம்தான் குருகுலம் என்று அழைக்கப்படுகிறது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அங்கு வந்து தங்கிப் பாடம் கற்றுக் கொள்வர்."

"நவீன கால மாணவர் விடுதியைப்போலவா?" என்று நான் கேட்டேன். நான் என் சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினேன்.

"அப்படிச் சொல்ல முடியாது. அதற்கும் இதற்கும் ஒரு பெரிய வேறுபாடு உள்ளது," என்று அவர் பதிலளித்தார். "நவீன கால மாணவர் விடுதி அமைப்புமுறையில், மாணவர்கள் தங்கிக் கொள்ள ஓர் இடம் அளிக்கப்படுகிறது, அவ்வளவுதான். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உறவு வகுப்பறையோடு நின்றுவிடுகிறது. மற்ற நேரங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தம் உலகில் தனித்தனியாக அலைந்து கொண்டிருக்கின்றனர்." அவர் கூற்றில் அர்த்தம் இருந்தது.

"குருகுலத்தில இருக்கும்போது குருவும் சீடர்களும் ஒரு குடும்பம்போல வசித்து வருவர். அவர்கள் ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வர், தினசரி வேலைகளில் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்வர். அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்து வைத்திருப்பர். மாணவர்கள் வகுப்புப்பாடங்களிலிருந்து மட்டுமல்லாமல், குருவின் நடத்தையிலிருந்தும் கற்றுக் கொள்வர்."

பின் அவர் இன்னொரு முக்கியமான விஷயத்தை எடுத்துரைத்தார். "ஒரு மாணவன் தன் குருவிடமிருந்து மூன்று விதங்களில் கற்றுக் கொள்வான். குருவின் நடத்தை, குருவின் சிந்தனைகள், பிறருடன் குரு பழகும் முறை ஆகியவைதான் அந்த மூன்றும். இவை மூன்றுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு உண்டு.

"குரு ஒரு சிறந்த முன்னுதாரணமாக இருப்பார். குருகுல முறையில் கற்றுக் கொள்ளுதல் இருபத்து நான்கு மணி நேரமும் நிகழ்ந்து கொண்டிருக்கும். மாணவர்கள் தங்கள் குருவோடு இருந்து, அவருடைய நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிப்பதன் மூலம் கற்றுக் கொள்வர். குருவின் தினசரி வகுப்புகள் மூலமாகவும், அவருடனான தொடர்புகள் மூலமும் மாணவர்கள் கற்றுக் கொள்வர்."

இந்தியப் பாரம்பரியத்தில், அறிவை ஜீவனுடன் தக்கவைத்துக் கொள்வதற்கு குரு—சீடன் உறவுமுறையும் குருகுல அமைப்புமுறையும் எவ்வாறு உதவின என்ற அடிப்படைத் தகவலுடன் நான் அந்தச் சாமியாரிமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். நான் அர்த்தசாஸ்திரத்தைப் பல முறை படித்திருந்ததால், சுய அனுக்கிரகம் எனக்கு வாய்ந்திருந்தது என்பதையும், மற்ற மூன்று அனுக்கிரகங்களும் எனக்கு வாய்க்கவில்லை என்பதையும் நான் அறிந்து கொண்டேன்.

பாரம்பரிய முறைப்படி எனக்கு அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு குருவை நான் எங்கு போய்த் தேடுவேன்? நான் ஒரு கச்சிதமான சீடனா? குருகுலங்கள் இப்போதும் இருக்கின்றனவா? இதற்கான விடைகள் எனக்கு எங்கு கிடைக்கும்?

என் தாத்தாவும் பாட்டியும் இப்போது உயிருடன் இல்லை. காலப்போக்கில் என் பெற்றோர் என்னுடைய முன்மாதிரிகளாக ஆனார்கள்.

நான் வீட்டிற்கு விரைந்து சென்றேன். உள்ளே நுழைந்தவுடன் நான் என் அப்பாவிடம் இவ்வாறு கூறினேன்: “எனக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது . . .”

# 10

# தாத்தாவிடமிருந்து அப்பாவிற்கு

எங்கள் குடும்பம் ஓரளவு முற்போக்கான சிந்தனையுள்ள ஒரு குடும்பம். வாழ்க்கையின் பல மட்டங்களிலுள்ள பல வகையான மக்கள் எங்கள் வீட்டிற்கு வருகை தருவதை நான் பார்த்து வளர்ந்துள்ளேன்.

பல மணி நேரங்கள் நீடிக்கக்கூடிய உரையாடல்கள் எங்கள் வீட்டில் மிகச் சாதாரணமாக நிகழும். அரசியலிருந்து நவீன அறிவியல் போக்குகள்வரை, இசை மற்றும் கலையிலிருந்து வியாபாரப் போக்குகள் வரை பலதரப்பட்ட விஷயங்கள் அங்கு அலசப்படும்.

என் அப்பா அம்மா இருவருமே நன்கு படித்தவர்கள். அவர்களுக்கு உலகளாவிய விஷயங்கள் அத்துப்படி. ஆனால் அதைவிட முக்கியமாக விளங்கியது எங்கள் வீட்டின் அடிநாதமாக ஓடிக் கொண்டிருந்த ஆன்மீகக் கலாச்சாரம்தான்.

எங்கள் குடும்பம் சமயம் சார்ந்த ஒன்றல்ல. அது ஆன்மீகம் சார்ந்த ஒன்று.

ஆனால் நாங்கள் அனைத்துப் பண்டிகைகளையும் கொண்டாடினோம். வீட்டில் தினமும் வழிபாடுகள் நடைபெறும். அதே சமயம், பல விதமான ஆன்மீகத் தலைவர்கள் எங்கள் வீட்டிற்கு வருகை தருவர், தத்துவார்த்தமான விஷயங்கள் அங்கு விவாதிக்கப்படும். அவர்கள் தனிப்பட்ட நபர்களாகவும் இருப்பர், அமைப்புச் சார்ந்தவர்களாகவும் இருப்பர். சில சமயங்களில், வேறு மதங்களைச் சேர்ந்த மகான்களும் எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. விவாதங்கள் ராமாயணம் மற்றும் மகாபாரதத்தோடு நின்றுவிடாமல், பைபிள், குரான், குரு கிரந்த் சாகிப் மற்றும் ஆகமங்கள்வரை நீளும். புதிய தத்துவப் பரிமாணங்களை ஆராயும் நோக்கோடு, அங்கு ஒரு வெளிப்படையான கலாச்சாரம் நிலவியது.

“கலந்துரையாடல்கள் வேறு, கருத்து மோதல்கள் வேறு. கருத்து மோதல்களின்போது ஒருவர் தன் பக்கம்தான் சரி என்று வாதிடுவார். ஆனால் கலந்துரையாடல்களில், எது சரி என்று அறிந்து கொள்ள ஒருவர் விரும்புவார்,” என்று என் தாத்தா அடிக்கடிக் கூறுவார்.

உண்மையைத் தெரிந்து கொள்ள நாங்கள் காரசாரமாக

விவாதித்தோம். சமயங்களில் நாங்கள் அடுத்தவர்களின் கண்ணோட்டங்களை ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. ஆனாலும் ஒரு தனிநபர் என்ற முறையில் அவரை நாங்கள் மதித்தோம். என் தாத்தா என்னைக் கவர்ந்திருந்ததுபோல என் அப்பாவையும் கவர்ந்திருந்தார். என் அப்பா என் தாத்தாவுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டபோது குறிப்புகள் எடுத்து வைத்துக் கொள்வார் என்பதை நான் பின்னாளில்தான் தெரிந்து கொண்டேன்.

என் தாத்தாவின் மேற்கோள் வாசகம் ஒன்று எப்போதும் எங்கள் வீட்டுச் சுவரை அலங்கரித்துக் கொண்டிருந்தது. என் அப்பா என்னிடம், “இதை யார் கூறினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் இதை என் தந்தையின் வாயிலிருந்து கேட்டதால், இதை அவரே கூறியதாகக் கருதி வந்துள்ளேன்,” என்று ஒருமுறை கூறினார்.

அதிலிருந்த வாசகம் இதுதான்: நீ கூறுவதுடன் என்னால் ஒத்துப் போக முடியாமல் இருக்கலாம். ஆனால் என் உயிர்மூச்சு உள்ளவரை, என்னுடன் ஒப்புக் கொள்ளாமல் இருக்க உனக்கு இருக்கும் சுதந்திரத்தை நான் உன்னிடமிருந்து பிடுங்கிக் கொள்ள மாட்டேன்.

எங்கள் வீட்டில் நடைபெற்ற விவாதங்கள் பெரிய சண்டைகளுக்கு வழி வகுத்தபோதெல்லாம், எங்களில் ஒருவர் இந்த வாசகத்தைச் சுட்டிக்காட்டுவோம். உடனே எங்கள் அனைவரின் உதடுகளிலும் புன்னகை அரும்பிவிடும்.

அறிவார்ந்தவராக விளங்கிய என் அம்மா மிகவும் தெய்வ பக்தியுள்ளவர். சமயங்களில் அவர் தன்னுடைய கண்ணோட்டத்தால் எங்களைத் திக்குமுக்காடச் செய்துவிடுவார். அவர் ஒரு புதிய பாதையில் எங்களைச் சிந்திக்கத் தூண்டுவார். என் அப்பா பீஷ்மரை மேற்கோள் காட்டினால், என் அம்மா ஜாதகக் கதைகளிலிருந்து பொருத்தமான வேறு ஒன்றை மேற்கோள் காட்டுவார்.

வீட்டில் வாழ்க்கை எப்போதும் குதூகலமாகவும் கற்றலுமாகவும் சென்று கொண்டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த குடும்பத்தில் பிறக்க நான் என் முந்தைய பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நான் உண்மையில் கொடுத்து வைத்தவன்தான்.

“அப்பா, நான் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பாரம்பரியமான குருகுலப் பாணியில் படிக்க விரும்புகிறேன்,” என்று நான் அவரிடம் கூறினேன். வெளிப்பார்வைக்கு இது ஓர் அறிவிப்புப்போலத் தோன்றினாலும், உண்மையில் இது குறித்து என் அம்மா, அப்பா இருவரின் அபிப்பிராயங்களையும் நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

என் அப்பா சிந்திப்பதற்கு முன்பாகவே என் அம்மா அதற்கு பதிலளிக்கத் தயாராகிவிட்டார். இது எல்லா வீடுகளிலும் சகஜமாக நடப்பதுதான். தங்கள் அபிப்பிராயங்களைக் கூறப் பெண்கள் எப்போதும் துடித்துக் கொண்டிருப்பர். சமயங்களில் அது அவர்களிடம் கேட்கப்படாமல் இருக்கும்போதுகூட!

“இப்போதுதான் நேரம் கூடி வந்திருக்கிறது. நாங்கள் எல்லோரும் சந்தைக்குச் சென்றிருந்தபோது நீ தாத்தாவின் அறைக்குள் தனியாக நுழைந்த தினத்தன்றே இதை நான் அறிவேன்.” பெண்களுக்கு உளவியல் தெரியாது என்று யார் சொன்னது?

“உன்னைக் கவர்ந்திழுக்க வேதங்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கின்றன,” என்று என் அப்பா கூறினார். “அப்படிப்பட்ட அழைப்பு வரும்போது அதை யாராலும் தடுக்க முடியாது. இது ‘ரிஷிகளின் அழைப்பு’ என்று குறிப்பிடப்படுகிறது. இது வரும்போது உலகின் எந்த சக்தியாலும் அதைத் தடுக்க முடியாது.”

அடடா! என் அப்பாவிடமிருந்து நான் கேட்ட மிக அற்புதமான வார்த்தைகள் அவை. அவர் என் தாத்தாவைப்போலவே பேசினார். அது அவரது ரத்தத்திலேயே ஊறிப் போயிருக்க வேண்டும். ஞானம் என் தாத்தாவிடமிருந்து என் அப்பாவிற்கு வந்திருக்க வேண்டும். அதை என் அப்பா எனக்கு மாற்றித் தர வேண்டிய வேளை வந்துவிட்டது என்று நான் நினைத்தேன்.

இப்பழமொழி குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்: உங்கள் அம்மா உங்களை உங்கள் அப்பாவிடம் அழைத்துச் செல்வார். உங்கள் அப்பா உங்களை உங்கள் குருவிடம் அழைத்துச் செல்வார்.

பிறந்தவுடன் ஒரு குழந்தை தன்னைத் தன் தாயுடன்தான் பிணைத்துக் கொள்கிறது. பின் அந்தத் தாய் தன் குழந்தையை மெதுவாக அதன் தந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். கல்வி கற்பதற்கான நேரம் வரும்போது அதன் தந்தை அக்குழந்தையை ஒரு குருவின் வழிகாட்டுதலின்கீழ் ஒப்படைக்கிறார்.

“நம் பாரம்பரியத்தில் வித்யா—ஆரம்பம் என்ற ஒன்று இருக்கிறது. கல்வியின் தொடக்கம் அது. சிலர் அதை உபநயனம் என்று அழைக்கின்றனர். பூணூல் போடும் விழா. வேதத்தை அறிமுகம் செய்து வைக்கும் நாள் அது,” என்று என் அப்பா விளக்கினார்.

“ஓர் அரசனின் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு விவசாயியின் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு வணிகர் அல்லது ஒரு தொழிலாளியின் குழந்தையாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் கல்வி கற்க சம உரிமை இருக்கிறது. வித்யா—ஆரம்பம் நிகழ்ச்சிக்குப் பின்னர்

பெற்றோர் தங்கள் குழந்தைகளை ஒரு குருவிடம் ஒப்படைக்கின்றனர். பின் அக்குழந்தை அடுத்த சில வருடங்களை அவருடைய குருகுலத்தில் கழிக்கும்.”

“எவ்வளவு வருடங்கள்?” என்று நான் கேட்டேன்.

“12 முதல் 14 வருடங்கள்வரை. தன் மாணவனின் திறமை மற்றும் திறனைப் பொருத்து குரு அதை முடிவு செய்வார். கல்வி கற்பிக்கப்பட்டப் பின் அவன் தன் குடும்பத்தாருடனும் சமூகத்துடனும் சேர்ந்து பயனுள்ள முறையில் வாழ்வதற்காக அனுப்பி வைக்கப்படுவான்.”

“அப்பா, என் குருகுலம் எங்கிருக்கிறது?” என்று நான் கேட்டேன். என் அப்பா என்னை நோக்கிப் புன்னகைத்தார். அதற்கான பதிலை அவர் பல வருடங்களுக்கு முன்பே தயாரித்து வைத்திருந்தது போலத் தோன்றியது . . .

# 11

# ஓர் ஆசிரியர், ஒரு மாணவன்

என் வாழ்க்கையின் ஒரு சாதாரணக் கட்டம் அது. அல்லது, என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்த காலகட்டம் என்று நான் அதை அழைக்க வேண்டுமோ என்னவோ. என் கல்லூரித் தேர்வுகள் துவங்குவதற்கு இரண்டு மாதங்கள் இருந்தன. அது என் கல்லூரியின் இறுதி வருடம். அதற்குப் பிறகு நான் ஒரு பட்டதாரி!

இந்தியாவில் கல்லூரிப் பட்டம் வாங்குவது என்பது ஒரு பெரிய விஷயம். உன் கல்வி முடிந்துவிட்டது, இனி நீ ஒரு வேலையைத் தேடிக் கொண்டு வாழத் துவங்க வேண்டும் என்று கூறுவதைப் போன்றது அது.

என் கல்லூரியில் ஒரு சில மாணவர்கள் ஏற்கனவே பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டு பணம் ஈட்டி வருகிறார்கள். வசதியில்லாத பெற்றோர்களைக் கொண்டிருந்த மாணவர்கள் தங்கள் பெற்றோருக்குப் பொருளாதாரரீதியாக உதவ அப்படிச் செய்து வந்தனர். வேறு சிலர் நல்ல நிலைமையிலிருந்தும் ஏதோ ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தனர் அல்லது தங்களுடைய குடும்பத் தொழிலில் தங்களை இணைத்துக் கொண்டனர். ஏனெனில், படிப்பின் முடிவு என்பது வேலையின் துவக்கம் என்று அனைவரும் நம்பினர்.

நம் சமுதாயத்தில் ஒரு முக்கியப் பிரச்சனை இருக்கிறது. நாம் சந்திக்கும் நபர்கள் அனைவரும் தவறாமல் கேட்கும் ஒரு கேள்வி என்ன தெரியுமா? "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" அதாவது "வாழ்க்கையை ஓட்ட நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்பதுதான் அதற்குப் பின்னால் தொக்கி நிற்கும் வினா. அதற்கு எப்போதும் ஒரு பொருளாதாரரீதியான பதிலே எதிர்பார்க்கப்படுகிறது: "நான் இந்த நிறுவனத்தில் இன்ன வேலையில் இருக்கிறேன்," அல்லது "நான் ஒரு மருத்துவர்," அல்லது "நான் ஒரு தொழிலதிபர்."

என் வாழ்வின் பிற்பகுதியில், ஐரோப்பா போன்ற இடங்களில் இதற்கு வேறு விதமான பதில்கள் கிடைப்பதை நான் கவனித்தேன்: "நான் கால்பந்து விளையாடுகிறேன்," அல்லது "நான் ஓர் ஓவியன்," அல்லது "நான் புத்தகங்களை எழுதிக் கொண்டிருக்கிறேன்."

அவர்களைப் பொருத்தவரை, உங்களுடைய பெருவிருப்பம் எது

என்பதுதான் அக்கேள்வியின் பொருள். அல்லது எது உங்களுடைய பொழுதுபோக்கு? அல்லது உங்கள் வாழ்வில் எதைச் செய்ய நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள்? உங்களுடைய தொழில்முறை வாழ்க்கை உங்களுடைய பெருவிருப்பத்தைச் சுற்றி அமைக்கப்படுகிறது. இந்தியாவைப் பொருத்தவரை, முதலில் உங்களுடைய வேலை. அதற்குப் பிறகுதான் உங்களுடைய பொழுதுபோக்கு அல்லது பெருவிருப்பம் வருகிறது.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நம்முடைய நாடு ஒரு வளர்ந்து வரும் பொருளாதார நாடு. நாம் காலனியாதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றுள்ளோம். முன்பெல்லாம் ஒருவன் தன்னை மட்டுமல்லாது, தன் குடும்பத்தாரின் நலன்களையும் சேர்த்து கவனித்துக் கொள்ள வேண்டும். அக்குடும்பம் பெரும்பாலும் பெரிதாகவே இருந்தது. இந்தியாவைப் பொருத்தவரை, ஒருவனால் தன்னைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது.

தன் மனைவி மக்களைப் பற்றி மட்டுமல்லாது, தன் பெற்றோர்கள், தாத்தாக்கள், பாட்டிகள், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பற்றியும் அவன் சிந்தித்தாக வேண்டும். அவன் தன்னுடைய கல்வியோடு தன் உடன்பிறந்தாரின் கல்வியையும் பார்த்துக் கொள்ள வேண்டும். தன் சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். தன் வயதான பெற்றோரை கவனித்துக் கொள்ள வேண்டும். அதோடு, சமூகப் பணிகளுக்கும் தன் பங்களிப்பை நல்க வேண்டும்.

இதுவரை என்னிடம் யாராவது, “நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டால், என்னிடமிருந்து தன்னிச்சையாக வரும் பதில் இதுவாகத்தான் இருக்கும்: “நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன்.” அடுத்தவரின் வாயை மூட இந்த பதில் போதுமானதாக இருக்கும். பெரும்பாலானவர்கள் அதற்கு மேல் குடைந்து கேள்விகளைக் கேட்க மாட்டார்கள்.

ஆனால் இன்னும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு நான் இதே பதிலை அளிக்க முடியாது. ஒன்று, நான் வேறு எதாவது ஒரு படிப்பில் சேர்ந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், இதே பல்லவியைத் தொடர்ந்து பாடலாம்: “நான் முதுகலைப் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறேன்.” அல்லது ஏதாவது ஒரு வழியில் பணம் ஈட்டும் காரியத்தில் ஈடுபட வேண்டும். இல்லையென்றால் நான் இந்தச் சமுதாயத்தில் பொருந்தத் தக்கவனாக இல்லாமல் ஆகிவிடுவேன். மக்கள் என்னை உதவாக்கரை என்று கருதத் தொடங்கிவிடுவர்.

ஆனால் அக்கட்டத்தில் என் அப்பா கூறியது வழமையான

சிந்தனைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தது.

“கல்லூரித் தேர்வுகள் முடிந்த பிறகு சிறிது இடைவெளி விடு. போய் ஒரு குருகுலத்தில் சேர்ந்து கொள். உன் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உன் சொந்த வருங்காலத்தை நீயே உருவாக்கிக் கொள்ளலாம். உன்னுடன் நேரத்தைச் செலவு செய். உன்னுள் ஆழமாகத் தேடு. உன் வாழ்க்கையை அசை போடு. குருகுலத்தில் ஒரு குருவின் கீழ் அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுக் கொள்.”

இப்படிப்பட்ட ஓர் அப்பாவைப் பெற்றிருப்பதற்கு நான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்? ஆட்டுமந்தைக் கூட்டத்தில் தானும் ஒருவனாக ஆகாதிருக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அதை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

என் அம்மா, “குருகுலத்தில் நீ ஒரு வித்தியாசமான சூழ்நிலையை எதிர்கொள்வாய். அங்கு நீ அதிகமாக யோசிக்க வேண்டியிருக்கும், அசைபோட வேண்டியிருக்கும். அது போன்ற இடங்களில் ஒரு தெய்வீகத் தன்மை குடிகொண்டிருக்கும். அங்கு நீ பாதுகாப்பாக உணர்வாய்,” என்று கூறினார்.

எல்லா அம்மாக்களுக்கும் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்புக் குறித்து எப்போதும் கவலை இருந்து கொண்டேயிருக்கும். ஆனால் என் அம்மாவோ, என் அப்பாவோடு சேர்ந்து கொண்டு, நான் முதலில் ஒரு குருகுலத்திற்குச் சென்றுப் படித்துவிட்டுப் பின் என் வாழ்க்கை எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுமாறு கூறினர்.

என் அப்பா, “பல விதமான குருகுலங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மாணவர்களை உள்ளடக்கிய ஒன்றாக அது இருக்கலாம். அல்லது ஆன்மீகத் தேடல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அடங்கிய ஓர் ஆசிரமாக அது இருக்கலாம். அல்லது அது ஓர் ஆராய்ச்சி நிலையமாக இருக்கலாம். அல்லது ‘ஓர் ஆசிரியர்—ஒரு மாணவன்’ போன்ற அமைப்பாக இருக்கலாம். எந்த விதமான குருகுலத்திற்குச் செல்ல நீ விரும்புகிறாய்?” என்று கேட்டார்.

இக்கேள்வி என்னை வியப்பில் ஆழ்த்தியது. நான் தேர்ந்தெடுப்பதற்கு எனக்கு இவ்வளவு விதமான வழிகள் இருக்கும் என்று நான் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. முதலில் வாழ்க்கையை அலசிப் பார்க்க எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததே பெரிய விஷயம். இப்போது அதைவிட அதிசயமாக, பல விதமான குருகுலங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆனால் அவற்றில் ஒன்றைத் தேர்வு செய்வது எனக்குச் சிரமமாக இருந்தது.

முதலில் இந்த குருகுலம் குறித்த விவகாரமே இப்போதுதான் எனக்கு முதன்முதலாக அறிமுகமாகி இருக்கிறது. அப்படியிருக்கும்போது அதில் எதை நான் தேர்ந்தெடுப்பது? அவற்றுக்கு இடையே என்ன வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நானே ஆய்ந்தறிந்து கொள்ளாமல் என்னால் எப்படி ஒரு முடிவுக்கு வர இயலும்? நீங்கள் முதன்முதலாக ஓரிடத்திற்குச் சென்றிருக்கும்போது அங்குள்ள உள்ளூர்ப் பதார்த்தங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தமானது எதுவென்று கேட்பதைப்போல இருக்கிறது இது.

உண்மையைக் கூற வேண்டுமானால், உங்களால் எதையும் தேர்வு செய்ய முடியாது. இது குறித்து ஓர் உள்ளூர்வாசியின் ஆலோசனையைக் கேட்டறிந்து கொள்வது ஒரு வழி. மற்றொரு வழி எல்லா உணவுகளையும் பரிமாறச் சொல்வது. அப்போது உங்களால் எல்லாவற்றையும் ருசி பார்க்க முடியும். சிலவற்றைச் சுவைக்காமல் இருந்துவிட்டோம் என்ற ஏக்கம் உங்களுக்கு இருக்காது.

இதை மனத்தில் வைத்து நான் அப்பாவிடம், "அனைத்து விதமான குருகுலங்கள் குறித்தும் நான் தெரிந்து கொள்ள உதவும் ஒரு குருகுலத்திற்குச் செல்ல நான் விரும்புகிறேன்," என்று கூறினேன். பாடம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட நான் விரும்பினேன். அங்கு ஓர் ஆன்மீகச் சூழல் நிலவ வேண்டும். என்னைச் சுற்றி நண்பர்களும் இருக்க வேண்டும். எல்லாவற்றையும்விட என்னை அதிகமாகக் கவர்ந்தது எது தெரியுமா?

"ஓர் ஆசிரியர்—ஒரு மாணவன்" உறவுதான்.

அப்பா ஒரு நாட்குறிப்பை எடுத்து அதில் எழுதப்பட்டிருந்த ஒரு தொலைபேசி எண்ணை என்னிடம் சுட்டிக்காட்டி, இவ்வாறு கூறினார்: "இந்த எண்ணில் தொடர்பு கொள். உன் அர்த்தசாஸ்திர குருவை நீ கண்டுபிடிப்பாய்."

# 12

# ஆறு மாதப் பிரியாவிடை

அவர் ஒரு சமஸ்கிருதப் பண்டிதர். முப்பத்து ஐந்து வருடங்கள் ஒரு கல்லூரிப் பேராசிரியராகவும் அவர் பணியாற்றியிருந்தார். அவர் வெகு விரைவில் ஓய்வு பெற இருந்ததால் தான் சேகரித்து வைத்திருந்த அறிவைப் பகிர்ந்து கொள்ள மிகவும் துடிப்புடன் இருந்தார். நம் நாட்டில், பொதுவாக ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டால், அவரது தொழில்முறை வாழ்க்கை நிறைவுக்கு வந்துவிடும் என்றே மக்கள் எண்ணுகின்றனர். வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்திற்கான துவக்கம் அது என்ற புரிதல் பலருக்குக் கிடையாது. அது வாழ்க்கையெனும் விளையாட்டின் இரண்டாவது இன்னிங்ஸ்.

இங்கு வேறுபாடு என்னவெனில், இப்போது நீங்கள் உங்கள் விளையாட்டை மேம்பட்ட விதத்தில் ஆடுவீர்கள். உங்கள் வாழ்க்கையின் முதல் பகுதி, பணம் ஈட்டுதலில், உங்கள் குடும்பத்தை கவனித்துக் கொள்வதில், உங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதில், வாழ்க்கை உங்களிடம் தூக்கியெறியும் மற்ற பிற பொறுப்புகளைச் சமாளிப்பதில் செலவிடப்படுகிறது. இந்த இரண்டாவது இன்னிங்ஸில், நீங்கள் உங்கள் தொழில்முறை வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறும்போது, உங்கள் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் நிலையை அடைந்திருப்பார்கள், உங்கள் பொருளாதாரமும் நிறைவாக இருக்கும். உங்களுடைய லௌகீகப் பொறுப்புகள் அனைத்தும் நிறைவேறியிருக்கும்.

இக்கட்டத்தில் நீங்கள் ஆரோக்கியமான உடலையும் கூரிய மனத்தையும் கொண்டிருந்தால், நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு உங்கள் முன் இரண்டு வழிகள் இருக்கின்றன: ஒன்று, ஒரு சௌகரியமான மரணம் வரும்வரை வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கலாம். அல்லது ஒரு புதிய கனவை வரித்துக் கொண்டு அதை நோக்கிப் பீடுநடை போடத் துணியலாம்.

சுவாரசியமற்ற அன்றாட வாழ்க்கைக்கு மேலான ஒன்று குறித்தக் கனவைக் கொண்டிருப்பவர்களுக்கு ஓய்வு பெறுதல் ஒரு வரப்பிரசாதமே. நீங்கள் விரும்பும் எதை வேண்டுமானாலும் செய்யத்

தேவையான சுதந்திரத்தை அது உங்களுக்கு அளிக்கும். அதோடு, உங்களிடம் அடுத்த அடி எடுத்து வைப்பதற்கான பக்குவமும் இருக்கும்.

நான் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “ஐயா, நான் அர்த்தசாத்திரத்தைப் படிக்க விரும்புகிறேன்,” என்று கூறினேன்.

“அது அர்த்தசாத்திரமில்லை, அர்த்தசாஸ்திரம்,” என்று அவர் கூறினார்.

பிரபலமாக இருந்த அந்த சமஸ்கிருதப் பண்டிதர் என்னைத் தன் மாணவனாக ஏற்றுக் கொள்ளலாமா என்று தீர்மானிப்பதற்கு முன்பே நான் என் முதல் தவறைச் செய்துவிட்டிருந்தேன். அக்கணத்தில் என் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்! நான் அர்த்தசாஸ்திரத்தைப் பல முறை படித்துள்ளேன். அதில் ஓரளவு பாண்டிதத்துவம் பெற்றுள்ள ஒருவனாக என்னை நான் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் என்னைச் சீடனாக ஏற்றுக் கொள்வார் என்று நான் நம்பியிருந்த ஒருவரிடம் முதன்முதலாகப் பேசுகையில் அப்புத்தகத்தின் தலைப்பை உச்சரிப்பதிலேயே தவறு செய்துவிட்டிருக்கிறேன்.

முதல் பந்திலேயே கிளீன் போல்டு!

“சார், எனக்கு அர்த்தசாஸ்திரம் சொல்லிக் கொடுப்பதற்கு நீங்கள் தான் சரியான நபர் என்று என் அப்பா கூறினார். என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள முடியுமா?” நான் ஏன் அவரைத் தொடர்பு கொண்டேன் என்பதை அவரிடம் சரியாக விளக்க நான் மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டேன். அவருக்கு தினமும் இது போன்ற வேண்டுகோள்கள் வருவது சகஜம் போலும் என்று நான் எண்ணினேன். நான் அவரிடமிருந்து பெற விரும்பியது குறித்து அவர் பெரிய ஆர்வம் எதுவும் காட்டவில்லை. அவர் ஒரு பிரபலமான பேராசிரியராக இருந்ததால், மாணவர்களைத் தன்னிடம் ஈர்ப்பதில் அவருக்கு எந்தப் பிரச்சனையும் இருந்திருக்காது.

“நீ ஏன் அர்த்தசாஸ்திரத்தைப் படிக்க விரும்புகிறாய்?” என் ஆர்வத்தின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ள அவர் விரும்பினார்.

அதற்கு எப்படிப் பதிலளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. “சும்மாதான்,” என்று நான் முணுமுணுத்தேன்.

“என்ன, சும்மாவா?” அவர் அதிர்ந்து போனார். புராதன இந்தியப் புத்தகம் ஒன்றை எவரும் சும்மா படிக்க மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அதிலும் குறிப்பாகத் தொழில்முறை வாழ்க்கையில் எப்பாடுபட்டாவது முன்னேற வேண்டும் என்று குறியாக இருக்கும் இக்காலக்கட்டத்தில்! அதனால் என் பதில் சரியான பதிலாக அவருக்குப்

படவில்லை.

"நீ அர்த்தசாஸ்திரத்தை ஓர் ஆய்வுப் பாடமாக எடுத்துப் படிக்க விரும்புகிறாயா?"

அவரை அணுகும் மாணவர்களில் பலரும் கல்வித் துறையில் ஒரு பணியைப் பெறுவதற்கான ஆலோசனைகளைப் பெறவே அவரை நாடுகின்றனர் என்பதை நான் உணர்ந்தேன். அர்த்தசாஸ்திரம் போன்ற புத்தகங்கள் குறித்தச் சிறப்பாய்வு அவர்களுடைய வேலை விண்ணப்பத்திற்கு வலு சேர்க்கக்கூடும். அதோடு, ஓர் அரசுக் கல்லூரியில் ஒரு சமஸ்கிருத ஆசிரியர் வேலை கிடைப்பதற்கு அது உதவக்கூடும்.

"சமஸ்கிருதத்தில் நீ எதுவரை படித்திருக்கிறாய்?"

அவர் என்னிடம் இக்கேள்வியைக் கேட்டபோது, நான் உறைந்து போனேன். நான் என் வாழ்க்கையில் அதுவரை சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக எடுத்துப் படித்தது கிடையாது. ஆனால் இங்கு நான் ஒரு சமஸ்கிருத மேதையுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

"என்ன, சமஸ்கிருதத்தில் எந்த அடிப்படை அறிவும் கிடையாதா?" நான் அவரை இரண்டாவது முறையாக அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தேன் என்பது அவரது குரலின் தொனியிலிருந்து எனக்குத் தெரிந்தது. நான் ஏற்கனவே நம்பிக்கை இழந்துவிட்டேன். என் பேச்சை அத்துடன் முடித்துக் கொள்ள வேண்டியதுதான் என்று நான் எண்ணினேன். அர்த்தசாஸ்திரத்தை அத்துடன் மறந்துவிட வேண்டியதுதான் என்று நான் முடிவு செய்தேன்.

"அப்படியானால் அர்த்தசாஸ்திரத்தைப் படிக்க வேண்டும் என்று எது உன்னை உந்தியது?"

என்னால் தைரியமாகவும் உண்மையாகவும் பதிலளிக்க முடிந்த ஒரே ஒரு கேள்வி அது. "என் தாத்தா அர்த்தசாஸ்திரத்தில் ஒரு வல்லுனர். நான் சிறுவனாக இருந்தபோது அவர் இப்புத்தகத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஆனால் ஒரு குருவின் கீழ் அதைப் படிக்கும் பாக்கியம் எனக்கு இதுவரை வாய்க்கவில்லை."

மறுமுனையில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அவர் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்.

"நீ இதற்கு முன்பு அர்த்தசாஸ்திரத்தைப் படித்திருக்கிறாயா?"

இப்போது நான் முழுத் தெம்புடன் இருந்தேன். செத்தவனுக்கு உயிர் வந்ததுபோல, நான் உரத்த குரலில், "ஆமாம் ஐயா, அதை நான் பல முறை படித்திருக்கிறேன். 6,000 சூத்திரங்களையும் படித்திருக்கிறேன். ஆனால் அவற்றை நான் ஆங்கிலத்தில்தான் படித்திருக்கிறேன். அதை

நான் சமஸ்கிருதத்தில் படிக்க முயன்றேன். ஆனால் அதை என்னால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியவில்லை.”

“சரி, நல்லது. அப்படியானால் உனக்குச் சிறிது பின்புலம் இருக்கிறது.” நான் தேர்வில் கிட்டத்தட்டத் தேறிவிட்டேன் என்று நினைத்தேன். “உன்னால் இங்கு ஆறு மாதங்களுக்கு வர முடியுமா?”

ஆஹா! நான் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டேன்!

“கண்டிப்பாக. நீங்கள் என்ன கூறுகிறீர்களோ, அப்படியே செய்கிறேன்.” நான் கண்டுபிடித்திருந்த குருவிடம் நான் முழுமையாகச் சரணடைய விரும்பினேன்.

அவர் அடுத்த சில மாதங்களில் ஓய்வு பெற்றுவிடுவார். நானும் இரண்டு மாதங்களில் என் கல்லூரிப் படிப்பை முடித்துவிடுவேன். இது சரியாக வரும் என்று எனக்குத் தோன்றியது. அதைத் தொடர்ந்து நானும் அவரும் தொலைபேசி மூலம் பல முறை தொடர்பு கொண்டு சில முடிவுகளை மேற்கொண்டோம். அவர் வசித்து வந்த கிராமத்திற்கு நான் செல்ல வேண்டும். அந்த ஊரில் ஓர் ஆசிரமம் இருந்தது. அந்த ஆசிரமத்தில் ஓர் ஆய்வு நூலகம் இருந்தது.

அந்த ஆசிரமம் அவரது வீட்டிற்கு அருகில் இருந்தது. அவர் தினமும் இரண்டு மணிநேரம் மட்டுமே வகுப்பு எடுப்பார். நாளின் மற்ற நேரங்களில் நான் அந்த நூலகத்தில் படித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த ஆசிரமத்திலேயே நான் தங்கிக் கொள்ளவும் செய்யலாம்.

நகர்ப்புறத்திலிருந்து ஒரு கிராமத்திற்குச் செல்வதில் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். அடுத்த இரண்டு மாதங்களில் நான் என் கல்லூரி இறுதித் தேர்வை ஒரு சடங்குபோல எழுதி முடித்தேன். என் வாழ்க்கையின் ஒரு புதிய அத்தியாயத்தின் துவக்கத்திற்காக நான் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தேன்.

பின், அந்த நாளும் வந்தது . . .

# 13

## உள்முகமாக ஒரு பயணம்

'பயம் என்பது எப்போதும் இனம் புரியாத ஒன்றைப் பற்றியதே' என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஒரு கண்ணாடி முன் நின்று என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். வருங்காலம் எனக்காக எதை வைத்திருந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் மகிழ்ச்சியாக இருந்தேன், பரவசம் அடைந்திருந்தேன்.

கண்ணாடியில் இருந்தவன் என்னிடம் இவ்வாறு கூறினான்: "நீ ஒரு பயணம் மேற்கொண்டிருக்கிறாய். ஆனால் அது வெளிப்புறமான பயணம் அல்ல. உள்முகமான பயணம். தெரியாத இடத்திலிருந்து தெரிந்த இடத்திற்கான ஒரு பயணம். இது வெறுமனே அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதற்கான ஒன்றல்ல. அர்த்தசாஸ்திரப்படி வாழ்வதற்கான ஒன்று."

அதே குரல் மேலும் உறுதியாகக் கூறியது: "நீ சாணக்கியரின் ஞானத்தைக் கண்டுபிடிப்பதற்காகச் செல்லவில்லை. உன்னுள் இருக்கும் சாணக்கியனைக் கண்டுபிடிப்பதற்காகச் செல்கிறாய்."

என் அம்மாவின் குரல் கேட்டு நான் அக்கனவிலிருந்து திடுக்கிட்டு விடுபட்டேன். "நேரமாகிவிட்டது. நாம் கிளம்ப வேண்டும். உணவுப் பொட்டலத்தை உன் பையில் வைத்திருக்கிறாயா? அதை மறந்துவிடாதே!"

என் வாழ்க்கையில் என் குடும்பத்தினரைவிட்டு நான் நீண்டகாலம் பிரிந்து செல்லப் போவது அதுதான் முதல்முறை. நான் ஒரு சில நாட்களுக்கு என் நண்பர்களுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொண்டிருந்தாலும், தனியாகப் பயணிப்பது அதுதான் முதல் முறை. அதுவும் நான் திரும்புவதற்கு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகும்.

நான் என் வாழ்க்கைக் குறித்து என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தேன் என்பதை என் நண்பர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் ஏதோ ஒரு வினோதமான சமஸ்கிருதப் புத்தகத்தைப் படிப்பதற்காக ஏதோ ஒரு கிராமத்திற்குச் செல்லவிருந்தேன் என்றுதான் அவர்கள் நினைத்தனர். தங்கள்

வாழ்க்கையில் திட்டவட்டமாக என்ன செய்யப் போகிறோம் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருந்ததைப்போல இருந்தது அவர்களது செயல். அதை நினைத்து எனக்குச் சிரிப்பாக வந்தது.

என்னால் முடிந்த அளவு நான் அவர்களுக்குப் புரிய வைக்க முயன்றேன். “நான் ஓர் ஆசிரமத்தில் தங்கி, குருகுல முறைப்படி ஒரு குருவிடமிருந்து கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் என்ற நூலைப் படிக்கச் செல்கிறேன்.”

அவர்கள் என் முகத்திற்கு எதிரே எதையும் கூறாவிட்டாலும், எனக்கு மறை கழன்றுவிட்டது என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். என் நண்பர்களில் ஒருவன் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன்: “சமஸ்கிருதமும் ஆன்மீகமும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் கற்றுக் கொள்ள வேண்டியவை. நாம் இளமையின் உச்சக்கட்டத்தில் இருக்கிறோம். இப்போது நாம் நம் தொழில்முறை வாழ்க்கையில்தான் முழுக்க முழுக்க கவனம் செலுத்த வேண்டும்.” அந்த நேரத்தில் அதற்கு பதிலளிக்க வேண்டாம், காலம் பதில் சொல்லிக் கொள்ளட்டும் என்று நான் விட்டுவிட்டேன்.

நான் ரயிலில் ஏறிக் கொண்டிருந்தபோது என் அம்மாவின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. ஆனால் அது துக்கத்தினாலோ அல்லது பிரிவினாலோ ஏற்பட்டது அல்ல என்பதை நான் அறிந்திருந்தேன். அது ஆனந்தக் கண்ணீர். பலர் தேர்ந்தெடுக்க அஞ்சும் ஒரு பாதையைத் தன் மகன் துணிந்து தேர்ந்தெடுத்திருந்தது குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தார்.

எந்தவொரு தாயும் தன் குழந்தைகளைப் பிரியும்போது அவர்களுடைய பாதுகாப்புக் குறித்துப் பெரிதும் அக்கறை செலுத்துவார் என்பதை நானறிவேன். ஆனால் என் அம்மா தீவிரமான ஆன்மீகத்தில் ஈடுபட்டிருந்ததால், வாழ்க்கையெனும் பயணத்தில் கடவுள்தான் இறுதிப் பாதுகாவலர் என்பதை நன்கு அறிந்திருந்தார்.

என் அப்பா ஒரு விட்டேத்தியான பார்வையுடன் இருந்தார். நான் அங்கு எப்படிச் சென்றடைய வேண்டும் என்பதை அவர் எனக்கு ஏற்கனவே தெரிவித்திருந்ததோடு, எனக்குப் போதுமான பணத்தையும் கொடுத்திருந்தார். எனக்குச் சரியான முறையில் வழிகாட்டுமாறு என் குருவிடம் தொலைபேசி மூலம் தனிப்பட்ட முறையில் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

நான் என் பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றேன். நான் என் தாத்தா பாட்டியிடமிருந்தும் மானசீகமாக ஆசீர்வாதங்களைப் பெற்றேன். என் தாத்தாவின்

வார்த்தைகள் என் சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

தன் சொற்பொழிவுகள் மூலம் என் வாழ்க்கையைத் தொட்ட அந்தச் சாமியாரின் வார்த்தைகளையும் நான் நினைத்துக் கொண்டேன்: "மகான்கள் ஒருவரின் வாழ்க்கையில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்த ஒருபோதும் தவறியதே இல்லை. அவர்களுடைய போதனைகள் மண்ணில் ஊன்றப்பட்டுள்ள ஒரு விதையைப்போல மறைந்திருக்கும். சமயம் வரும்போது அது வேர்விட்டு வளர்ந்து ஒரு பெரிய மரமாகும்."

சிறு வயதிலிருந்து என் வாழ்க்கையை எத்தனை மகான்கள் ஆசீர்வசித்துள்ளனர்? என் தாத்தா, பாட்டி, என் அப்பா, அம்மா, அந்தச் சாமியார் மற்றும் நான் சந்திக்கச் செல்லும் இந்த குரு. வாழ்க்கை என்பது மேன்மையான எண்ணங்களைக் கொண்டவர்களோடு கொண்டிருக்கும் தொடர்புகளால் நிறைந்திருக்கும் ஒன்று என்று நான் கருதினேன்.

என் ரயில் புறப்படத் துவங்கியதும் நான் சிறப்பாக ஆசீர்வதிக்கப்பட்டவனாக உணர்ந்தேன். அது இரண்டு நாள் பயணம். நான் என் தாத்தாவின் அர்த்தசாஸ்திரத்தை என்னுடன் எடுத்து வந்திருந்தேன். அந்த இரண்டு நாட்களையும் அப்புத்தகத்தைப் படிப்பதிலேயே நான் செலவிட்டேன். மற்றொரு சோதனைக்கு என்னை நானே தயார்படுத்திக் கொண்டதுபோல அது இருந்தது.

நான் என்னுடைய அர்த்தசாஸ்திர குருவை முதன்முதலாக நேரில் சந்திக்க இருந்ததால், அவர் அதிலிருந்து ஏதாவது கேட்கக்கூடும் என்று அஞ்சினேன். அதற்கு என்னைத் தயார்படுத்திக் கொள்ள நான் முனைந்தேன்.

நான் முதன்முறை அவருடன் தொலைபேசியில் உரையாடியபோது செய்த தவறுகளை மற்றொரு முறை செய்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். நான் என் வாழ்க்கையில் எந்தவொரு தேர்வுக்கும் இதுபோல என்னைத் தயார்படுத்திக் கொண்டது கிடையாது. அப்படிச் செய்திருந்தால், நான்தான் அனைத்து வகுப்புகளிலும் முதல் மாணவனாக இருந்திருப்பேன்.

நான் வந்தடைய வேண்டிய இடத்திற்கு என் ரயில் வந்து சேர்ந்தது. அச்சிறிய ரயில் நிலையத்தில் நான் வந்திறங்கியபோது மதிய நேரம். சுட்டெரிக்கும் வெயிலில் நான் என் பையை இழுத்துக் கொண்டு அருகிலிருந்த பேருந்து நிறுத்தத்திற்கு வந்தேன். அங்கிருந்து என் குருவின் வீட்டை அடைய நான் ஒரு பேருந்தில் ஒரு மணி நேரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

அந்த நீண்ட பயணம் என் சக்தி முழுவதையும் உறிஞ்சிக் கொண்டது. நான் பசியாலும் வாடிப் போயிருந்தேன். ஆனாலும் சிறிது நீரை

அருந்திவிட்டு, என் தலைவிதியை நிரந்தரமாக மாற்றவிருந்த அந்ந நபரை சந்திக்க ஆவலுடன் விரைந்தேன். நான் பேருந்தைவிட்டு இறங்கியதும் ஒரு சிறிய கடைக்காரர் என் குருவின் வீட்டைச் சென்றடைய எனக்கு வழி காட்டினார். நகரத்தோடு ஒப்பிடுகையில் அந்த கிராமத்தில் இருந்த வீடுகள் பெரிதாக இருந்தன. நான் அவற்றைக் கடந்து சென்றபோது அந்த வீடுகளிலிருந்த ஒவ்வொருவரும் என்னை ஆர்வத்துடன் பார்த்தனர். வேறு கோளிலிருந்து பூமிக்கு வந்திருந்த ஒருவன்போல நான் உணர்ந்தேன். பின் நான் என் குருவின் வீட்டை அடைந்தேன். எனக்கு முன் ஒரு கதவு இருந்தது. அதைத் திறந்து உள்ளே நுழைந்தேன். அழைப்பு மணியை ஒத்த ஓர் ஓசையை அது எழுப்பியது. வீட்டிற்குள் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. இரண்டு பேர் வெளியே வந்து என்னை நோக்கி நடந்து வந்தனர்.

முதலில் வந்தவர் கண்டிப்பாக என் குருவாக இருக்க வேண்டும்.

ஆனால் அந்த இரண்டாவது நபர் யார் . . . ?

# 14

## என் அர்த்தசாஸ்திர குரு

“இப்போதுதான் உன் அப்பா கூப்பிட்டார். நீ வந்து சேர்ந்துவிட்டாயா என்று கேட்டார்.” என் குரு குறித்து நான் ஆர்வம் கொண்டிருந்த அளவு அவர் என்மேல் ஆர்வம் கொண்டிருந்ததுபோலத் தெரியவில்லை. அவர் என்னைத் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

சமஸ்கிருதம் தொடர்பாக சிலவற்றைத் தெரிந்து கொள்ளப் பல மாணவர்கள் அடிக்கடி அவருடைய வீட்டிற்கு வருகை தருவது சகஜம்போல என்று நான் நினைத்துக் கொண்டேன். எனக்கு அவர் ஒரு குரு. ஆனால் ஒரு குருவிற்குப் பல சீடர்கள் இருப்பர்தானே? முப்பத்தைந்து வருடங்கள் பேராசிரியராக இருந்த ஒருவரிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அவர் ஒல்லியாகவும் திடகாத்திரமாகவும் இருந்தார். அவருக்கு நரைத்திருந்தது. ஒருவர் குருவாக இருக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் நரைத்த முடியாவது இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. வயதானதற்கு உங்கள் தலையில் அறிகுறி ஏதும் இல்லாதிருந்தால், மண்டைக்கு உள்ளே எதுவுமில்லை என்று மக்கள் நினைத்துவிடுவர்.

அவருடன் வந்த அந்த இரண்டாவது நபர் அவரது மனைவி. நான் கிளம்புவதற்கு முன்னால் என் குருவின் குடும்பம் குறித்தத் தேவையான தகவல்கள் அனைத்தையும் என் அப்பா எனக்கு அளித்திருந்தார். அவருடைய மனைவி என்னிடம், “தம்பி, இந்த இடத்தைக் கண்டுபிடிக்க நீ சிரமப்படவில்லையே?” என்று வினவினார்.

பிறகு, “எங்கள் வீடு கிராமத்தில் கொஞ்சம் உள்ளடங்கி இருக்கிறது. பேருந்து நிறுத்தத்திலிருந்து சிறிது தூரம் நடக்க வேண்டியிருக்கும். ஆனால் இங்கு ஒருவரும் வழி கண்டுபிடிக்க முடியாமல் தொலைந்து போய்விட மாட்டார்கள். கிராமங்கள், நகரங்களைப் போலில்லை. இவை பாதுகாப்பானவை,” என்று அவர் கூறி முடித்தார்.

அவருடைய பெரிய வீட்டிற்குள் நான் நுழைந்து கொண்டிருந்தபோதே என் குரு தன் அறிவாற்றலை என்னுடன் பகிர்ந்து கொள்ளத் துவங்கினார். “ஒரு நகரத்திற்கும் ஒரு கிராமத்திற்கும் இடையேயுள்ள

வேறுபாடு என்னவென்று உனக்குத் தெரியுமா?” என்று அவர் கேட்டார். அவர் என்னை மறுபடி சோதிக்கத் துவங்கிவிட்டார் என்று நான் சந்தேகித்தேன்.

நான் வாயைத் திறப்பதற்கு முன்னால் அவரே அக்கேள்விக்கு பதிலளித்தார். “கிராமத்திலுள்ள முதல் ஆளுக்குக் கடைசி ஆள்வரைத் தெரியும். ஆனால் நகரத்திலுள்ளவர்களுக்கு அடுத்த வீட்டுக்காரனைக்கூடத் தெரியாது.” வெளிப்படையாகத் தெரிந்ததைவிட அதில் ஆழமான பொருள் அடங்கியிருந்ததாக எனக்குப் பட்டது.

அவர் மேலும் விவரித்தார்: “ஒரு கிராமம் என்பது வெறும் வசிப்பிடம் அல்ல. அது ஒரு பெரிய குடும்பம். இங்குள்ள ஒவ்வொருவருக்கும் அடுத்தவரைப் பற்றி நன்றாகத் தெரியும். இங்குள்ளவர்கள் பிறரின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்கின்றனர். ஒருவருக்கு ஒரு பிரச்சனை என்றால் மொத்தக் கிராமமும் திரண்டு வந்து அவருக்கு உதவும்.” அது உண்மைதான். நான் என் தாத்தா வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் மொத்தக் கிராமமும் அவரது வீட்டிற்குப் படையெடுப்பதை நான் பார்த்துள்ளேன்.

“நகரங்களில் பிறரோடு செலவு செய்ய மக்களுக்கு நேரமிருப்பதில்லை. பக்கத்து வீட்டுக்காரன் யார் என்றுகூடப் பலருக்குத் தெரியாது. நான் சமீபத்தில் ஒரு செய்தி படித்தேன். நகரிலுள்ள ஒரு வீட்டில் ஒருவர் இறந்துவிட்டார். ஆனால் பக்கத்து வீட்டுக்காரனுக்கு, அந்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வரும்வரை ஒரு வாரமாக எதுவும் தெரியாது.” இந்த இரண்டு சமூகங்களுக்கும் இடையே மலைக்கும் மடுவிற்கும் இடையே இருந்த அளவு வேறுபாடு இருந்தது.

நான் என் வீட்டைத் தொடர்பு கொண்டு நான் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டத் தகவலைத் தெரிவித்தேன்.

“கை கால்களைக் கழுவிவிட்டு வந்து சாப்பிடு,” என்று என் குருவின் மனைவி என்னை அழைத்தார்.

அவரை நான் எப்படிக் கூப்பிட வேண்டும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். பழங்காலத்தில் மாணவர்கள் குருகுலத்திற்கு படிக்கச் சென்றபோது சில குருக்கள் சன்னியாசிகளாக இருக்கவில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தனர். அப்படிப்பட்ட சமயங்களில், குருவின் மனைவி அந்த மாணவர்களின் அம்மாவாக ஆகிவிட்டார்.

அவரைக் குருவம்மா என்று அந்த மாணவர்கள் அழைத்தனர். அது எனக்கும் பொருந்தும் என்று தோன்றியது. இங்கு எனக்கு ஒரு

குருவோடு ஒரு குருவம்மாவும் கிடைத்துவிட்டார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

என் குருவம்மா சாதாரணப் பெண்மணி அல்ல. அவரும் ஒரு சமஸ்கிருதப் பண்டிதர். அவரும் என் குருவைப்போல அந்த மொழியில் முனைவர் பட்டம் பெற்றிருந்தார். என் குருவம்மா திருமணத்திற்குப் பின்பு மேலும் படிக்க உந்து சக்தியாக இருந்தவர் என் குருதான். அவர்களுடைய குழந்தைகளும் நன்கு படித்துப் பெருநகரங்களில் நல்ல வேலைகளில் இருக்கின்றனர்.

நன்கு படித்த, பிரம்மாண்டமாக சாதிக்கவும் வேலையில் பெரிதாக முன்னேறவும் துடித்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்கு கிராமங்களில் அதிகமான வாய்ப்புகள் இல்லை. மெத்தப் படித்திருந்த இந்த இணையரால் எளிதாக ஒரு நகரத்திற்குக் குடி பெயர்ந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் இந்த இரண்டு உலகங்களின் சிறந்த தன்மைகளை அனுபவிக்க விரும்பினர்.

அவர்கள் இந்த கிராமத்தில் இருந்தாலும் பல மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அடிக்கடிப் பல இடங்களுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் எழுதியுள்ள சமஸ்கிருதப் புத்தகங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளுக்கு உலகளாவிய வாசகர் வட்டம் இருந்தது. அதனால் பல நாடுகளைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் அவர்களைப் பேச அழைத்தன.

வேறு வழியில்லாமல் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் மிகச் சாதாரணமான ஓர் ஆசாமியாக நான் அவரைக் கருதியிருந்தேன். மதிய உணவின்போது நாங்கள் மேற்கொண்ட உரையாடல்கள் என் அபிப்பிராயத்தைத் தலைகீழாக மாற்றின. கிராமத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற முடிவை அவர் விரும்பியே எடுத்திருந்தார்.

“நீ முதலில் என்னைத் தொடர்பு கொண்டபோது எனக்கிருந்த இடைவிடாத பயணங்கள் காரணமாக உன்னை என் மாணவனாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றுதான் நினைத்திருந்தேன்.” எங்களுடைய முதல் உரையாடலின்போது அவர் சிறிது நேரம் பேசாமல் இருந்தது குறித்துத்தான் அவர் பேசிக் கொண்டிருந்தார்.

“பின் ஏன் என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொண்டீர்கள்?” அதைத் தெரிந்து கொள்ள நான் துடித்தேன்.

“அர்த்தசாஸ்திரத்தில் உனக்கு எப்படி ஈடுபாடு வந்தது என்று நான் கேட்டபோது அதற்கு உன் தாத்தாதான் அதைத் தூண்டிவிட்டார் என்று பதிலளித்தாய் அல்லவா? அது என் நெஞ்சைத் தொட்டுவிட்டது.” சரி,

அப்படியானால் இது உணர்வுபூர்மானதொரு தொடர்பு.

“எங்களுக்கு ஒரு பேரன் உண்டு. அவன் என் மகனுடனும் மருமகளுடனும் வெளிநாட்டில் வசித்து வருகிறான்,” என்று அவர் முகமலர்ச்சியுடன் கூறினார். “நாங்கள் அங்கு செல்லும்போதெல்லாம் எங்கள் பேரன் நாங்கள் கூறும் புராதன இந்தியக் கதைகளை கவனமாகக் கேட்பான். கடந்த முறை நாங்கள் அங்கு சென்றபோது நான் அவனுக்குச் சாணக்கியரின் கதைகளைக் கூறினேன்.”

அவர் அடுத்து என்னக் கூறவிருந்தார் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது.

“நான் அவனிடம் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிக் கூறினேன். ஆனால் அந்தப் பிஞ்சு மனத்தால் அதை உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை.” அவர் தன் பேரனிடம் ஏற்கனவே ஒரு விதையை விதைத்துவிட்டார். வேளையும் வாய்ப்பும் கூடி வரும்போது அது ஒரு பெரிய மரமாக வளரும்.

வேறு ஒரு குடும்பத்தில் வரலாறு மீண்டும் துவங்குகிறதா? தாத்தாக்களிலிருந்து பேரன்களுக்கு அளிக்கப்படும் இந்தக் கலாச்சார விழுமியங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு தலைமுறையிலும் இருந்து வருகிறது.

“ஆனால் நீ இங்கு வந்து ஆறு மாதகாலம் தங்கிப் படிக்க ஒப்புக் கொண்டதுதான், நான் உன்னை என் மாணவனாக ஏற்றுக் கொண்டதற்கான முக்கியமான காரணம். உன் அர்ப்பணிப்பு எனக்குப் பிடித்திருந்தது. நகர்புறங்களில் உள்ளவர்களில் வெகு சிலரே இவ்வாறு செய்யத் துணிவர்.” ஓர் அர்ப்பணிப்பான மாணவன் என்ற அங்கீகாரம் கிடைத்ததால் என் மனம் ஆனந்தக் கூத்தாடியது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

“சரி, அடுத்த ஆறு மாதங்களுக்கான படிப்பு அட்டவணையை இப்போது நாம் போடலாம்.”

அவரை இடைமறித்து, “இவன் முதலில் சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுக்கட்டும். வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறான்,” என்று குருவம்மா தன் கணவனிடம் கூறினார்.

# 15

## விதிமுறைகள்

குருவம்மா கூறியபடி, நான் ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு என் குருவின் முதல் அறிவுறுத்தல்களைக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் என் உடலில் அந்த அளவு அசதி இருக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை. நான் கண் விழித்தபோது அந்தி சாய்ந்திருந்தது. வெளியே எட்டிப் பார்த்தேன். வெளியே இருள் சூழத் துவங்கியிருந்ததைப் பார்த்தபோது நான் குற்றவுணர்வு கொண்டேன்.

என்னை நானே சபித்துக் கொண்டேன்: தூங்குவதற்காகவா நீ இவ்வளவு தூரம் வந்தாய்? இதுதான் உன் முதல் வகுப்பைத் துவக்கும் லட்சணமா? உன் குரு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். நீ என்னடாவென்றால் கும்பகர்ணன்போலத் தூங்கிக் கொண்டிருக்கிறாய்.

என் குரு உட்கார்ந்திருந்த இடத்திற்கு நான் ஓடோடிச் சென்றேன். அவரைச் சுற்றி ஒரு சிலர் அமர்ந்திருந்தனர். நான் வருவதைப் பார்த்ததும் தன் பக்கம் வரும்படி அவர் என்னை அழைத்தார்.

"நான் சொன்ன பையன் இவன்தான். அர்த்தசாஸ்திரம் படிப்பதற்காக இவன் நகர்புறத்திலிருந்து இங்கு வந்திருக்கிறான்," என்று அவர் அங்கிருந்தவர்களிடம் பெருமையாக அறிமுகப்படுத்தினார்.

நான் அங்கு வந்திருந்தவர்களிடம் பேச்சுக் கொடுத்தபோது, அவர்கள் ஒரு சமஸ்கிருதக் கருத்தரங்கை நடத்தவிருந்தார்கள் என்பதையும், அதில் பேச என் குருவை அழைக்கவே அவர்கள் அங்கு வந்திருந்தனர் என்பதையும் நான் அறிந்து கொண்டேன்.

"நான் கண்டிப்பாக வருகிறேன். நீங்கள் என் பெயரைப் போட்டு அழைப்பிதழை அச்சிட்டுக் கொள்ளலாம்." அவரது வார்த்தைகளைக் கேட்டு அவரை அழைக்க வந்திருந்தவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் எதற்காக அவரைப் பார்க்க வந்தார்களோ அது நிறைவேறிவிட்டது.

அவர் மேலும் தொடர்ந்தார்: "நான் குறைந்தபட்சம் அடுத்த ஆறு மாதங்களுக்கு எங்கும் பயணம் செய்யப் போவதில்லை. இந்தப் பையன் நகரத்திலிருந்து இதற்காகவே வந்துள்ளான். நான் அவனுடன்

உருப்படியாக நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அதோடு, நான் இப்போதுதான் பேராசிரியர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறேன். நான் என்னுடனேயே சிறிது நேரம் செலவிட விரும்புகிறேன். உங்களுடைய நிகழ்ச்சி உள்ளூரில் நடைபெறுவதால் நான் பயணம் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை.”

என்னைப் பெருமையாகப் பார்த்தபடி, வந்திருந்தவர்களிடம் அவர், “பெரும்பாலும் கிராமத்தில் இருப்பவர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று படிக்க விரும்புவதும், நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க விரும்புவதும்தான் வழக்கமான போக்காக இருந்து வருகிறது. நகர்ப்புறத்திலிருந்து கிராமப்புறத்திற்குப் படிக்க வருபவர்களைப் பற்றி நாம் எத்தனை முறை கேள்விப்பட்டிருக்கிறோம்?” என்று கேட்டார். என்னிடம் அவருக்குப் பிடித்திருந்த சில விஷயங்களை நான் இப்போது அறிந்து கொண்டேன்.

“நிகழ்ச்சிக்கு இவனையும் அழைத்து வாருங்கள்,” என்று அங்கு வந்திருந்தவர்களில் மூத்தவர் ஒருவர் வேண்டுகோள் விடுத்தார்.

“அதிலென்ன சந்தேகம், அவனும் கண்டிப்பாக வருவான். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.” அப்படியானால் அந்த நிகழ்ச்சிக்குப் போக வேண்டாம் என்ற தேர்வை என்னால் எடுக்க முடியாது!

அக்குழுவினர் விடைபெற்றுக் கொண்டபோது, நாங்கள் அவர்களுடன் வாசல்வரை சென்றோம். அப்போது அக்குழுவில் இருந்த இளைஞன் ஒருவன் என்னருகே வந்து “அவர் உன்னைத் தன் மாணாக்கனாக ஏற்றுக் கொண்டுள்ளது நீ செய்த அதிர்ஷ்டம்,” என்று என் காதில் கிசுகிசுத்தான். அது எனக்கே தெரியும். ஆனால் அதையடுத்து அவன் கூறியது என்னை திகைப்புக்கு உள்ளாக்கியது.

“நான் அவரின் கீழ்தான் என்னுடைய முனைவர் ஆய்வை மேற்கொண்டேன். என்னைத் தன் ஆய்வு மாணவனாக அவர் ஏற்றுக் கொள்வதற்காக நான் நான்கு வருடங்கள் காத்திருந்தேன். அதற்குப் பின்னர் நான்கு வருடங்கள் உழைத்துத்தான் முனைவர் பட்டம் பெற்றேன். ஆனாலும் நான் அவருடன் அதிக நேரம் செலவிட்டதில்லை. நீ கண்டிப்பாக என்னைவிடக் கணிசமான அளவு நேரத்தை அவருடன் செலவிடுவாய்.” அவன் என்னைப் பார்த்துப் பொறாமை கொண்டானா அல்லது எனக்கு முன்பே என் குருவிடம் தான் ஒரு மாணவனாக இருந்திருந்தது குறித்துத் தம்பட்டம் அடித்துக் கொண்டானா?

“வாரத்திற்கு அரை மணிநேரம் மட்டும்தான் என்னால் அவருடன் செலவிட முடிந்தது. ஆனால் நீ அடுத்த ஆறு மாதங்களுக்கு அவரது முழு கவனிப்பில் இருக்கப் போகிறாய். அதுவும் தினந்தோறும் அவருடைய

கவனிப்பு உனக்குக் கிடைக்கப் போகிறது. உன் நல்ல நேரத்திற்கு நன்றி கூறு,” என்று கூறிவிட்டு அங்கு வந்திருந்தவர்களோடு கலந்து மறைந்தான்.

“நீ படித்துக் கொண்டிருக்கும் அர்த்தசாஸ்திரம் புத்தகத்தை என்னிடம் கொடு.” நான் அதுவரை என்ன படித்துக் கொண்டிருந்தேன் என்பதை அறிய என் குரு விரும்பினார்.

என் தாத்தா படித்து எனக்கு விட்டுச் சென்ற அப்புத்தகத்தை நான் அவரிடம் கொடுத்தேன். அதில் என் தாத்தாவின் குறிப்புகளோடு என் குறிப்புகளும் இருந்தன. அது தவிர நான் தனியாக ஒரு குறிப்பேடும் வைத்திருந்தேன். அர்த்தசாஸ்திரம் குறித்து என் மனத்தில் பல வருடங்களாகத் தோன்றிய சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் அதில் இடம்பெற்றிருந்தன. அவற்றுக்கான விடைகளை நான் தேடிக் கொண்டிருந்தேன்.

“அர்த்தசாஸ்திரத்தின் நல்ல பதிப்பு இது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் நன்றாக இருக்கும். அடுத்த ஆறு மாதங்களுக்கு இதை உன்னுடைய முதன்மைப் புத்தகமாக வைத்துக் கொள்.” நான் மீண்டும் முதலிலிருந்து துவக்க வேண்டாம் என்பது குறித்து மகிழ்ச்சி அடைந்தேன்.

“ஆனால் பல விதமான கண்ணோட்டங்களைப் பெறுவதற்காகப் பல்வேறு அறிஞர்கள் எழுதியுள்ள அர்த்தசாஸ்திர வெளியீடுகளை நீ படிக்க வேண்டும். எப்போதும் ஒரே ஒரு புத்தகம் அல்லது ஒரே ஒரு தனிநபரோடு உன் அறிவைச் சுருக்கிக் கொள்ளக்கூடாது. மனத்தை அகலத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்.”

நான் அவர் கூறியவற்றை என் மனத்தில் குறித்துக் கொண்டேயிருந்தேன். அவர் தொடர்ந்தார்: “அடுத்த ஆறு மாதங்களுக்குத் தினமும் நீ என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம்.” அவர் ஏற்கனவே அது குறித்துத் தீர்மானித்திருந்தார். “என் வீட்டிற்கு அருகிலிருக்கும் இந்த ஆசிரமத்தில் நீ தங்கிக் கொள். இது ஒரு சாதாரண ஆசிரமம் அல்ல. மத்திய அரசு அங்கீகரித்துள்ள இந்தியவியல் ஆய்வு மையங்களில் ஒன்று இது. இதிலுள்ள உலகத்தரம் வாய்ந்த நூலகத்தில் அபூர்வமான புத்தகங்கள் பல உள்ளன.” அந்த நூலகம் பற்றிய இந்த விஷயம் குறித்து நான் ஏற்கனவே அறிந்திருந்தேன்.

“நான் அந்த நூலகத்தின் ஆலோசனைக் குழுவில் இருக்கிறேன். அவர்களுடைய ஆய்வுக் குழு உறுப்பினர்களில் நானும் ஒருவன். புராதன சமஸ்கிருதப் புத்தகங்களை மீட்டெடுக்கும் முயற்சியில்

ஈடுபட்டுள்ள, உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த பண்டிதர்கள் அடங்கிய குழு அது.” இந்தியவியல் குறித்து அப்போதுதான் நான் முதன்முதலாகக் கேள்விப்பட்டேன்.

“அந்த ஆசிரமத்தில் நீ தங்கியிருக்கும்போது ஆன்மீகரீதியாக நீ வளர அந்த ஆசிரமச் சூழல் உனக்கு உதவும். நீ அந்த ஆசிரமத்திலிருந்து தினசரி இங்கு வா. நான் உனக்கு வகுப்பு எடுக்கிறேன். பாடத்திட்டம் குறித்து நான் நாளை விரிவாகக் கூறுகிறேன்,” என்று அவர் புன்னகையுடன் முடித்தார். அப்புதிய இடத்தில் நான் காலூன்ற எனக்குச் சிறிது காலம் பிடிக்கும் என்பதை அவர் உணர்ந்திருந்தார் என்று நான் நினைக்கிறேன்.

“இன்று இரவு நீ இங்கேயே தங்கிக் கொள். நாளை காலையில் நாம் பிள்ளையாருக்குப் பூசை செய்துவிட்டு நமது பாடத்தைத் துவக்கலாம்.” ஒருவர் தன் இலக்கை நோக்கி எடுத்து வைக்கும் பயணத்தில் எதிர்கொள்ளக்கூடிய தடைகளைத் தகர்த்தெறிய, தொடங்கும் அனைத்துக் காரியங்களையும் பிள்ளையாரை வணங்கிவிட்டுச் செய்வதுதான் வழக்கம். பிள்ளையார் வெற்றிக்கு உத்தரவாதம் அளிப்பார்.

என் குரு பாரம்பரியமாகவும் இருந்தார், நவீனமாகவும் இருந்தார். அவருக்குச் சடங்குகளில் நம்பிக்கை இருந்தது. அதே சமயம், அவற்றுக்குப் பின்னால் இருந்த தர்க்கவாதமும் அவற்றின் முக்கியத்துவமும் அவருக்குத் தெரிந்திருந்தன. பின்னர் அவர் ஆன்மீகத்திற்குப் பின்னாலிருந்த தர்க்கவாதத்தை எனக்கும் கற்றுக் கொடுத்தார்.

என் தோளைத் தொட்டு, நான் படுக்கச் செல்லலாம் என்று அவர் எனக்கு உணர்த்தினார்.

“நாளை நீ மறுபிறவி எடுக்கப் போகிறாய் . . .”

# 16

## தீட்சை

அடுத்த நாள் சூரிய உதயத்திற்கு முன் எழந்துவிட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். நான் எழுவதற்கு முன்பே குருவும் குருவம்மாவும் எழுந்துவிட்டிருந்தனர். சமையலறையில் இருந்து சத்தம் வந்து கொண்டிருந்தது. நான் குளித்து முடித்துத் தயாராகி அவர்களுடைய தினசரி நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்று வியந்தபடி வரவேற்பறைக்குள் எட்டிப் பார்த்தேன்.

"வா, வா, நாம் முதலில் பூசையை முடித்துவிடலாம்." குரு எனக்காகக் காத்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவர் ஒரு சிறிய அறைக்கு என்னை அழைத்துச் சென்றார். அது ஒரு பூசை அறை. அதில் பல கடவுள்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. விளக்கு ஏற்கனவே ஏற்றப்பட்டிருந்தது. பிள்ளையார் சிலை ஒன்று நடுநாயகமாக வீற்றிருந்தது.

"பிள்ளையார் அறிவுக் கடவுள். வேதங்களைத் தொகுத்த மகாபாரதத்தை எழுதிய வியாசரின் எழுத்தராக இருந்தவர் பிள்ளையார்." அவர் பிள்ளையாரின் தத்துவார்த்த அம்சங்கள் குறித்து என்னிடம் விளக்கினார். "பிள்ளையார் மட்டும் புராதன அறிவைத் தொகுத்து வைத்திருக்காவிட்டால், அவற்றைத் தலைமுறை தலைமுறையாக நம்மால் பாதுகாத்து வைத்திருந்திருக்க முடியாது."

என்னை ஒரு பாயில் அமரும்படி அவர் கூறினார். பிறகு அவர் என் நெற்றியில் ஒரு சந்தனக் கீற்றை இட்டார். பின் சில மந்திரங்களை உச்சரித்தபடித் தன் பிரார்த்தனையைத் துவக்கினார். தன்னோடு சேர்ந்து நானும் அவற்றை உச்சரிக்கும்படி அவர் கூறினார். பின் அவர் என்னுடைய அர்த்தசாஸ்திரப் புத்தகப் பிரதியை எடுத்து அதை அந்தப் பிள்ளையார் சிலைக்கு முன் வைத்தார். அதன்மீது ஒரு சில பூக்களைத் தூவிவிட்டு, அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்: "இப்போது பிள்ளையாரை மட்டும் நினைக்காதே, பிற தெய்வங்கள், உன்னுடைய முன்னோர்கள், உன் பெற்றோர் மற்றும் உன் நலம் விரும்பிகள் ஆகியோரையும் நினைத்துக் கொள்."

நான் என் கண்களை மூடி அவர்களை என் மனக்கண்முன்

கொண்டுவர முயன்றபோது, அவர், "நீ உன் படிப்பில் முழு கவனமும் அர்ப்பணிப்பும் செலுத்தி அதை முடிக்க அவர்களுடைய ஆசீர்வாதங்களைக் கேட்டுப் பிரார்த்தனை செய்," என்று கூறினார்.

அடுத்து அவர் ஒரு ருத்ராட்ச மாலையை எடுத்து, பிள்ளையார் சிலைக்குப் பக்கத்திலிருந்த சிவனின் சிலைக்கு முன் வைத்தார். அவர் சில மந்திரங்களைக் கூறினார். பின் அவர் அந்த ருத்ராட்ச மாலையை எடுத்து என் கையில் கொடுத்து, "இமயமலையிலுள்ள மானசரோவருக்கு நான் சென்றபோது அங்கு இந்த ருத்ராட்ச மாலையை நான் வாங்கினேன். இது ஒரு தெய்வீகமான இடத்திலிருந்து வந்துள்ளது," என்று கூறினார். நான் அந்த மாலையை எடுத்து பயபக்தியுடன் என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

"இதில் 108 கொட்டைகள் உள்ளன." நூற்றியெட்டு என்பது ஆன்மீகம் தொடர்பான ஓர் எண் என்பதை நான் அறிவேன். இது போன்ற மாலைகளில் பலர் நூற்றியெட்டுக் கொட்டைகளைப் பயன்படுத்துவர். "நீ தினமும் இந்த மாலையைப் பயன்படுத்தி காயத்திரி மந்திரத்தைக் கூற வேண்டும்," என்று அவர் என்னிடம் கூறினார். அதாவது, நான் காயத்திரி மந்திரத்தை நூற்றியெட்டு முறை கூற வேண்டும். இந்த மந்திரம் ஒருவரின் அறிவைப் பிரகாசிக்கச் செய்யும்.

பழங்காலத்திலும் சிறுவர்களுக்கு முதன்முதலாகக் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டபோது இந்த மந்திரம் பயன்படுத்தப்பட்டது. என் பாடத்தைத் துவக்குவதற்கும் இந்த முறை பயன்படுத்தப்பட்டது என் அதிர்ஷ்டம்தான். பின் அவர் அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த சூரியனைக் காட்டி இவ்வாறு கூறினார்: "அதற்கடுத்து, சூரிய பகவானை நோக்கிப் பிரார்த்தனை செய். சூரியன் சக்தி மிகுந்தவன். அறிவு அனைத்திற்கும் அவன்தான் ஆதாரம்.

"அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதை ஒரு தவம்போல மேற்கொள். ஒவ்வொரு கட்டத்திலும் கடவுளின் அனுக்கிரத்தை யாசி. சில நேரங்களில் உன் படிப்பு சுவாரசியமற்றதாகவும் சோர்வு ஏற்படுத்துவதாகவும் அமையக்கூடும். ஆனால் ஒவ்வொரு காரியத்தையும் அர்ப்பணிப்போடு செய்து முடி." படிப்பது குறித்துச் சிறப்பான மனப்போக்கைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது என்று அவர் என்னிடம் வலியுறுத்தினார்.

உடனே நான் அவர்முன் அமர்ந்து ருத்ராட்ச மாலையுடன் காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினேன். பின்னர் ஆராதனை காட்டப்பட்டது. நான் என் குரு மற்றும் குருவம்மாவின் பாதங்களைத் தொட்டு ஆசி பெற்றேன்.

“சிற்றுண்டி தயார்,” என்று குருவம்மா அறிவித்தார். அன்று சிற்றுண்டி விஷேசமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அது சுவையாக இருந்ததோடு தெய்வீகமாகவும் இருந்தது. சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நான் குருவிடம், “இந்தியவியல் என்றால் என்ன?” என்று கேட்டேன்.

“இந்தியாவில் தோன்றியுள்ள அனைத்து அறிவியல்களையும் பற்றிய படிப்பு அது. வேதக் கணிதம், ஆயுர்வேதம், நாட்டிய சாஸ்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அர்த்தசாஸ்திரம் குறித்த ஆய்வும் இந்தியவியலின் கீழ்தான் வருகிறது.” இந்தியவியல் என்ற சொல் மேற்கத்தியக் கல்வியாளர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதை நான் பின்னர் அறிந்து கொண்டேன். இந்தியக் கலாச்சாரம், இந்தியப் பாரம்பரியம், இந்திய இலக்கியம் உள்ளிட்ட இந்தியா தொடர்பான அனைத்தும் அதில் அடங்கும்.

“இந்தியவியல் வல்லுனர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் கிடையாது,” என்று குரு அறிவித்தார். அது குறித்து நான் மகிழ வேண்டுமா அல்லது வருத்தம் கொள்ள வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை. இந்திய அறிவு பிற நாட்டவரால் போற்றப்படுகிறது, ஆய்வு செய்யப்படுகிறது என்று மகிழலாம். அல்லது நம்முடைய சொந்த ஞானத்திற்கு நாம் எந்த முக்கியத்துவமும் கொடுப்பதில்லை என்று வருத்தப்படலாம்.

“ஆனால் இது மாறிக் கொண்டிருக்கிறது. ஏராளமான இந்தியர்கள் இந்தியவியல் குறித்துத் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்,” என்று குரு கூறியபோது எனக்குள் சிறிது நம்பிக்கை பிறந்தது.

இப்போது நானும் அதிகாரப்பூர்வமாக ஓர் இந்தியவியல் மாணவனாக ஆகிவிட்டது குறித்துப் பூரிப்படைந்தேன். “உன்னைப் போன்ற மாணவர்கள் இந்திய ஞானம் குறித்துப் படிக்க வேண்டும். அதோடு, அதை நவீன காலத்திற்குப் பொருத்தமானதாக ஆக்க வேண்டும்.”

அவர் மறைமுகமாக ஒரு பெரிய பிரச்சனை குறித்துப் பேசிக் கொண்டிருந்தார் என்பது எனக்குப் புரிந்தது. “நமது புராதன இந்திய அறிவு குறித்தப் பிரச்சனை, தற்போதைய தலைமுறைக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பதுதான் அது. இந்தியர்கள் தங்களுடைய புராதனப் பாரம்பரியம் குறித்துப் பெருமை கொண்டிருக்கின்றனர் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் நமக்குச் சிக்கல் இருக்கிறது.”

இந்தியாவையும் பிற நாடுகளையும் ஒப்பிட்டு அவர் இவ்வாறு கூறினார்: “நம்மைவிடச் சிறிய, நமக்குப் பிறகு விடுதலை அடைந்த நாடுகள் நம்மைவிட வேகமாக முன்னேறியுள்ளன. ஆனால் இங்கு,

கடந்தகாலங்களில் கணக்கிட முடியாத அளவு அறிவு தொடர்பான வேலைகள் நடைபெற்ற போதிலும், நாம் தள்ளாடிக் கொண்டிருக்கிறோம்." அதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கும் அவரது வலி புரிந்தது.

"நாம் நம்முடைய கடந்தகாலப் புகழைப் பாடுவதோடு நிறுத்திக் கொள்கிறோம். நாம் நமது புராதன வேதங்களைப் படித்து ஆய்ந்தறிந்து இக்காலப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை அதிலிருந்து பெற வேண்டும். அற்புதமான வருங்காலம் ஒன்றை உருவாக்க நிகழ்காலத்தைப் பயன்படுத்த வேண்டும். நம்முடைய சொந்த ஞானத்தையும் நம்முடைய நாட்டையும் நாம் மறுகண்டுபிடிப்பு செய்ய வேண்டும்."

அவருடைய கனவு என் கரங்களுக்கு மாற்றப்பட்டது . . .

# 17

## ஆசிரம வாசம்

குருவின் வீட்டிலிருந்து இருபது நிமிடம் நடந்து செல்லும் தூரத்தில் அந்த ஆசிரமம் இருந்தது.

“இன்று நாம் அந்த ஆசிரமத்திற்கு நடந்தே செல்லலாம். உனக்கும் இந்தத் தெருக்கள் பழக்கமாகும். விரைவாகச் செல்ல வேண்டுமென்றால் பேருந்துகளும் இருக்கின்றன. அதற்குப் பேருந்துகளின் கால அட்டவணையை நீ தெரிந்து கொள்ள வேண்டும்,” என்று குரு கூறினார்.

நாங்கள் நடந்து சென்றபோது வழியில் எதிர்ப்பட்டப் பலர் குருவிற்கு வணக்கம் தெரிவித்தனர். குரு என்னிடம் கூறியது என் நினைவிற்கு வந்தது: “கிராமத்திலுள்ள முதல் ஆளுக்குக் கடைசி ஆள்வரைத் தெரியும்.” நான் அங்கு படிக்க வருவதை அங்கிருந்தவர்கள் அனைவரும் அறிந்திருந்தனர் என்பதை அவர்களுடைய உரையாடல்கள் வெளிப்படுத்தின. நான் பாதுகாப்பாகவும் வீட்டில் இருந்ததுபோலவும் உணர்ந்தேன்.

நாங்கள் அந்த ஆசிரமத்தை அடைந்தபோது அங்கிருந்த வாயிற்காப்போன் குருவிற்கு வணக்கம் தெரிவித்தான். வேறு சில ஊழியர்களும் வந்து அவருக்கு வணக்கம் தெரிவித்தனர். அந்த ஆசிரமம் பல ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தது. குரு முதலில் என்னை அந்த ஆசிரமத்துக்குள்ளிருந்த ஒரு சிறிய கோவிலுக்கு அழைத்துச் சென்றார். “இக்கோவில் இங்கு காலங்காலமாக இருந்து வருகிறது. நாங்கள் சிறுவர்களாக இருந்தபோதே இக்கோவில் பற்றிய கதைகளைக் கேள்விப்பட்டுள்ளோம். இங்கு ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு, அறிவை உலகின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லும் பாக்கியம் கிட்டுகிறது.

“ஆனால் இக்கோவில் பல காலமாகப் பராமரிக்கப்படாமல் கிடந்தது. ஒரு சில வருடங்களுக்கு முன்பு இக்கோவிலின் தெய்வம் பணக்காரத் தொழிலதிபர் ஒருவரின் கனவில் தோன்றி இக்கோவிலைப் புதுப்பிக்குமாறு கூறியது.”

இப்போது எனக்கு இக்கதையில் சுவாரசியம் ஏற்பட்டது. “அந்த தொழிலதிபர் இங்கு வந்தபோது அவர் இக்கோவிலைப் புதுப்பித்ததோடு நின்றுவிடவில்லை. இதை ஓர் ஆய்வு மையமாக

ஆக்கவும் அவர் தீர்மானித்தார். அதற்குப் பிறகு அவருக்கு உதவப் பலர் முன்வந்தனர். இன்று இந்த மையம் இந்தியவியல் குறித்த ஆய்வில் உலகப் புகழ் பெற்ற ஒன்றாகத் திகழ்கிறது.”

பின் அவர் அதன் நிர்வாக அலுவலகத்திற்கு என்னைக் கூட்டிச் சென்றார். அங்கு மாட்டப்பட்டிருந்த அந்த மேன்மையான தொழிலதிபரின் புகைப்படத்தை எனக்குக் காட்டி, “இப்போது இவரின் மகன் இதன் அறங்காவலர் குழுவில் ஒருவராக இருக்கிறார். அவர் தன் வணிகத்தில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தாலும், இந்த ஆசிரமத்தின் செயல்பாடுகள் அனைத்திலும் தவறாது பங்கு கொள்கிறார். வா, நாம் அவரைச் சந்திக்கலாம்,” என்று குரு என்னை அவரிடம் அழைத்துச் சென்றார்.

என்ன காரணத்தினாலோ எனக்கு செல்வச் செழிப்பான தொழிலதிபர்களைப் பிடிப்பதில்லை. அவர்கள் பணம் குவிப்பதற்காக மொத்த உலகையும் ஏமாற்றத் தயங்குவதில்லை. எவ்வாறு லஞ்சம் கொடுக்க வேண்டும், அரசை எவ்வாறு ஏமாற்ற வேண்டும் என்பதை மட்டுமே தொழிலதிபர்கள் அறிந்து வைத்துள்ளனர்.

என் குரு என்னை அவரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தபோது அவர் என் கண்களை நேராகப் பார்த்து, “கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் படிக்க நீ இங்கு வந்திருப்பது குறித்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி,” என்று கூறினார். நான் இங்கு வந்து அர்த்தசாஸ்திரத்தைப் படிக்கவிருந்தேன் என்ற செய்தி மற்றவர்களைப் போலவே இவரையும் வந்தடைந்திருந்தது.

“அர்த்தசாஸ்திரம் என்பது பழங்காலத்தில் அரசர்கள் எப்படிச் செம்மையாக அரசாள வேண்டும் என்பதைக் குறித்தப் புத்தகம் என்ற கருத்துதான் பொதுவாக நிலவுகிறது. ஆனால் அது உண்மையல்ல. இதை எவரும், எக்காலத்திலும், எந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.”

அவர் இந்த வார்த்தைகளை உறுதியாகவும் மிகுந்த நம்பிக்கையுடனும் கூறியதால் அது மின்னலென என்னைத் தாக்கியது.

“நான் ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக ஆக அர்த்தசாஸ்திரம் எனக்கு வெகுவாக உதவியுள்ளது.”

இவர் என்ன குழப்புகிறார்? அர்த்தசாஸ்திரத்திற்கும் வணிகத்திற்கும் என்ன தொடர்பு? இப்படிப்பட்டக் கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக என்னுள் முளைத்தன. அப்போது அங்கு ஓர் இளைஞன் வந்தான். அவன் அந்த ஆசிரமத்தின் கணக்குவழக்குகளைப் பார்த்துக் கொள்கிறான். குரு அவனிடம் என்னைச் சுட்டிக்காட்டி, “இவனைக் கூட்டிப் போய்

ஆசிரமத்தைச் சுற்றிக் காட்டு," என்று கூறினார். பின்னர் என் குருவும் அத்தொழிலதிபரும் இந்தியவியல் குறித்த ஒரு தீவிர விவாதத்தில் ஈடுபடத் துவங்கினர்.

அந்த இளைஞன் என்னை ஆசிரமத்தின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினான். அங்கு வேலை பார்த்தப் பலரை அவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். நிர்வாகப் பகுதி, சமையலறை, உணவருந்தும் அறை, ஆய்வாளர்கள் தங்கும் விடுதி, காய்கறித் தோட்டம் ஆகிய இடங்களுக்கு நாங்கள் சென்றோம்.

காவி உடையில் ஒரு சில சாமியார்கள் அங்கு இருந்தனர். "இவர்கள் பல விதமான ஆன்மீக அமைப்புகளைச் சார்ந்த சன்னியாசிகள். படிப்பதற்காகவும், ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும் இவர்கள் இங்கு வந்துள்ளனர்."

பின் அவன் ஒரு பெரிய கட்டடத்திற்குள் என்னை அழைத்துச் சென்றான். "இதுதான் நூலகம். இந்த ஆசிரமத்தின் மையம் இதுதான். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டுள்ள பல புத்தகங்கள் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து ஆய்வு செய்வதற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வல்லுனர்கள் வருகின்றனர்."

நூலகம் என்ற வார்த்தையைக் கேட்டதும் புத்தக உலகிற்குள் நான் பயணப்பட்டுவிட்டேன். ஒரு நூலகத்திற்குள் இருக்கும்போது, அது எந்த நூலகமாக இருந்தாலும் சரி, நான் என் சொந்த வீட்டில் இருப்பதுபோல உணர்கிறேன்.

அந்த நூலகத்தின் பிரம்மாண்டம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. "இங்கு இந்தியவியல் குறித்த ஒரு லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் இருக்கின்றன," என்று அவன் பெருமைமிக்கக் குரலில் கூறினான்.

"என்ன, ஒரு லட்சம் புத்தகங்களா?" என்னைப் போன்ற புத்தகப் பைத்தியங்களுக்கு ஒரே இடத்தில் ஒரு லட்சம் புத்தகங்கள் என்ற செய்தி ஒரு பெரும் கனவு கண்முன்னால் நனவாவதைப் போன்ற ஒன்று.

"மொத்தமாக இல்லை, இந்தியவியலில் மட்டும் ஒரு லட்சம் புத்தகங்கள்," என்று அவன் திருத்தினான். "எங்களுக்குப் பல விதமான புத்தகங்கள் வருகின்றன. ஆனால் எவற்றை நூலகத்தில் வைத்திருப்பது என்பது குறித்து நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம். பல நன்கொடையாளர்கள் பலதரப்பட்டப் புத்தகங்களை எங்களுக்குக் கொடுக்கின்றனர். ஆனால் நாங்கள் இந்தியவியல் குறித்தப் புத்தகங்களை மட்டுமே வைத்துக் கொள்வது என்பதில் உறுதியாக இருக்கிறோம். மற்றப் புத்தகங்கள் இங்கு வைக்கப்படுவது இல்லை."

இது இந்தியவியல் ஆய்வு மையம் என்று ஏன் அழைக்கப்படுகிறது என்பதை நான் இப்போது புரிந்து கொண்டேன்.

அவன் ஒரு மூலையைச் சுட்டிக்காட்டி, “அந்த இடத்தைப் பார்த்தாயா? அது உனக்காக ஒதுக்கப்பட்டுள்ள மேசை,” என்று கூறினான். இது ஆய்வாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம். அது ஒரு தனிப்பட்ட அறைபோல இருந்தது. தீவிர ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் இப்படித் தனியிடம் ஒதுக்கப்படுகிறது. அங்கு அவர்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து வைத்துக் குறிப்புகள் எடுத்துக் கொள்ளலாம்.

“இப்பகுதிக்குள் வந்து ஆய்வாளர்களை எவரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். இதைப் பலர் ஒரு தியான அறை என்று கருதுகின்றனர்.” இங்கு நானும் ஓர் ஆய்வாளராகக் கருதப்பட்டது குறித்து எனக்குப் பெருமையாக இருந்தது. என்னுடைய இந்தச் சாதனையை என் கல்லூரி நண்பர்கள் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

கேட்பதற்கு என்னிடம் ஒரே ஒரு கேள்விதான் இருந்தது: “இவ்விடத்தை யார் நிர்வகிக்கின்றனர்? இது செம்மையாகவும் தெய்வீகத்துடனும் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வது யார்?”

அதற்கு அவன் இவ்வாறு பதிலளித்தான்: “இதன் நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் இதன் முதுகெலும்பாக இருப்பவர் நீ தற்போது சந்தித்தாயே அந்த அறங்காவலர்தான். அவர் ஓர் உன்னதமான நபர். நல்ல முன்மாதிரியான தொழிலதிபர் அவர்.”

“என்னது? நல்ல முன்மாதிரியான தொழிலதிபரா? இப்படிப்பட்டப் பிணைப்பு உண்மையில் சாத்தியமா?” என்று நான் சந்தேகத்துடன் கேட்டேன்.

“அவரது கதையைத் தெரிந்து கொள்ள உனக்கு விருப்பமா?” என்று அவன் கேட்டான்.

“கண்டிப்பாக,” என்று நான் பதிலளித்தேன்.

“நாம் உணவருந்தும் அறைக்குச் செல்லலாம். தேநீர் பருகிக் கொண்டே அவரைப் பற்றிப் பேசலாம்.”

# 18

# வித்தியாசமானதொரு கணக்காளன்

சமையலறை படுசுறுசுறுப்பாக இருந்தது. மதிய உணவுக்கான தயாரிப்பு வேகவேகமாக நடந்து கொண்டிருந்தது. அங்கு தினமும் நூறு பேருக்கு உணவு பரிமாறப்பட்டு வந்தது.

அந்த இளைஞன் சமையலறைப் பொறுப்பாளரை எனக்கு அறிமுகம் செய்து வைத்து, “இவன் இங்கு இன்னும் ஆறு மாதங்களுக்குத் தங்கியிருப்பான். நகரத்திலிருந்து அர்த்தசாஸ்திர ஆய்வுக்காக ஓர் இளைஞன் வருவான் என்று முன்பே கூறியிருந்தோம் அல்லவா, அது இவன்தான்,” என்று அவரிடம் கூறினான்.

பின் அவன் என்னை நோக்கித் திரும்பி, “இந்த சமையல்காரர்கள் இந்த ஆசிரமத்திற்கு அருகேயுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். ஆசிரமம் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கிறது. அதனால் அவர்கள் தங்களை ஆசிரமத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். இவர்கள் இப்போது இக்குடும்ப உறுப்பினர்கள்போல,” என்று கூறினான். அவர்கள் முகங்களில் பெருமை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

நாங்கள் ஆளுக்கொரு கோப்பைத் தேநீரைக் கையில் எடுத்துக் கொண்டு அருகில் இருந்த ஒரு மேசைக்குச் சென்று எதிரும் புதிருமாக அமர்ந்தோம். “உங்களுடைய அறங்காவலராக இருக்கும் அந்த உன்னதமான தொழிலதிபரைப் பற்றி மேலும் கூறு.” என் குரலில் ஒருவிதமான எகத்தாளம் ஒலித்திருக்கலாம். அந்த இளைஞன் அதை கவனித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

“எல்லாச் செல்வந்தர்களும் கேடிகளாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.” இது குறித்து நான் அவனுடைய கண்ணோட்டத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அவன் மேலும் தொடர்ந்தான்: “நானும் முன்பெல்லாம் உன்னைப்போலத்தான் சிந்தித்து வந்தேன். பின்னர் இங்கு வருகை தரும் பலரை சந்தித்தப் பிறகு, செல்வந்தர்கள் உன்னதமான காரியங்களை மேற்கொள்ளும்போது உன்னதமானவர்களாக ஆகிவிடுகின்றனர் என்பது எனக்குப் புரிந்தது.”

“ஒரு செல்வந்தன் எதற்காக ஓர் உன்னதமான காரியத்தில் இறங்க

வேண்டும்?” என்று நான் கேட்டேன். “அவர்கள் தங்களுடைய பெயர் எல்லா இடங்களிலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புவதுதான் அதற்குக் காரணம். கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் போன்றவற்றுக்கு நன்கொடை அளிக்கும் நபர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுடைய பெயர்கள் கொட்டை எழுத்துக்களில் எழுதப்படுகின்றன. அவர்களுக்கு அந்த விளம்பரம் பிடித்திருக்கிறது. அதற்காகத்தான் அவர்கள் நன்கொடை அளிக்கின்றனர்.”

அவன் ஒரு புன்னகையுடன் எனக்கு பதிலளித்தான்: “ஆம். அதில் ஓரளவு உண்மையிருப்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் இந்த ஒரு காரணத்திற்காகத்தான் செல்வந்தர்கள் நன்கொடை அளிக்கின்றனர் என்று கருதுவது சரியல்ல. நான் இந்த ஆசிரமத்தில் பல வருடங்களாகக் கணக்காளராக வேலை பார்த்து வருகிறேன். அதனால், இந்த ஆசிரமத்திற்குப் பணம் எங்கிருந்து வருகிறது, அதை யார் கொடுக்கிறார்கள், எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்த ஆசிரமத்திற்கு நன்கொடை அளிப்பவர்களில் பெரும்பாலானோர் தங்கள் பெயர் பிறருக்குத் தெரிய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றனர் என்ற தகவல் உனக்கு வியப்பளிக்கலாம். அவர்கள் அதை ரகசியமாக வைத்திருக்கவே விரும்புகின்றனர்.

“ஒரு திட்டத்திற்கு நன்கொடை அளிப்பவர்களின் பெயர்கள் விளம்பரப்படுத்தப்படக்கூடாது என்று நான் கூற வரவில்லை. செல்வந்தர்கள் குறித்து நாம் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் செல்வம் சேகரிப்பது குறித்த வேதப் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. நீ இங்கு தங்கிப் படித்துக் கொண்டிருக்கும்போது, இவ்வுலகில் செல்வம் எந்தெந்த வழிகளில் எல்லாம் செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்வாய்.”

அட! இந்தக் கணக்காளன்கூட அர்த்தசாஸ்திரத்தை மேற்கோள் காட்டுகிறான்! எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்ன மாதிரியான மக்களை நான் இங்கு சந்தித்துக் கொண்டிருக்கிறேன்? முதலில் அறங்காவலர் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிப் பேசினார். இப்போது இந்தக் கணக்காளன் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிப் பேசுகிறான்! அடுத்து யார் இது குறித்துப் பேசப் போகிறார்கள்? சமையல்காரரா? அல்லது வாயில்காப்போனா? எனக்குத் தலை கிறுகிறுத்தது.

“நீ அர்த்தசாஸ்திரத்தைப் படித்திருக்கிறாயா?”

“நீ படித்த அளவுக்கு நான் படித்ததில்லை. ஆனால் படித்திருக்கிறேன். இந்த மேன்மையான புத்தகத்தைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும்,”

என்று அவன் பெருமையுடன் கூறினான். “உன்னை இங்கு கூட்டி வந்த உன் குரு ஒரு மகத்தான மனிதர். அவர் அர்த்தசாஸ்திரத்தில் ஒரு மேதை. இப்புத்தகத்திலுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக உலகெங்கிலுமுள்ள வல்லுனர்கள் இங்கு வருகை புரிகின்றனர்.” என் குரு ஒரு வல்லுனர் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும்.

“அந்த உன்னதமான தொழிலதிபர் ஒரு நாள் உன் குருவிடம் இவ்வாறு கேட்டார்,” என்று அவன் துவங்கினான். அவன் முகத்தில் விஷமமான ஒரு புன்னகை மலர்ந்திருந்தது. அந்த அறங்காவலரை உன்னதமானவர் என்று அழைப்பதில் எனக்கு உடன்பாடில்லை என்பதை அவன் அறிந்திருந்ததால் வந்த புன்னகை அது. “அந்த அறங்காவலர் உன் குருவிடம், ‘சார், அர்த்தசாஸ்திரத்தைப் பற்றி அதிகமாகப் புரிந்து கொள்ள உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமானவர்கள் உங்களிடம் வருகின்றனர். அர்த்தசாஸ்திரத்தின் ஞானத்தை நீங்கள் ஏன் எங்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது?’ என்று கேட்டார். குரு அதற்கு ஒப்புக் கொண்டார். அவர் அர்த்தசாஸ்திரத்தை எங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதற்காக, பல நாட்கள் நீடித்த ஒரு தொடர்ச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.”

“எங்களுக்கு என்று கூறினாயே, யார் யாருக்கு?” நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

“ஆசிரமத்தில் தங்கியிருந்தவர்கள், அறங்காவலர்கள், நிர்வாக ஊழியர்கள் ஆகியோருக்கு. முதலில் அவர் எங்களுக்குத்தான் அச்சொற்பொழிவைத் துவக்கினார். ஆனால் பின்னர் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராம மக்களும் இதில் கலந்து கொண்டனர். சுமார் நூறு பேர் இதைக் கேட்டனர்.”

எனக்கு ஆர்வம் அதிகரித்தது. “இச்சொற்பொழிவு எவ்வளவு நாட்கள் நீடித்தது?”

“அர்த்தசாஸ்திரம் பற்றிய பொதுவான அறிமுகமாக விளங்கிய அச்சொற்பொழிவு முப்பது நாட்கள் நீடித்தது. அலுவலக நேரம் முடிந்த பிறகு தினமும் சுமார் ஒன்றரை மணி நேரம் அச்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. உன் குரு அப்போது கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டிருந்ததால், அவரால் இதைத் தன் வேலை நேரத்திற்குப் பிறகே அளிக்க முடிந்தது. அதனால் நாங்கள் மாலைநேரச் சொற்பொழிவிற்கு ஒப்புக் கொண்டோம்.”

அவன் பழைய நினைவுகளில் திளைத்துக் கொண்டிருந்தான். “எங்களைப் பொருத்தவரை அது தினசரி நடைபெற்ற ஓர் ஆன்மீகக் கூட்டம். சாணக்கியரது வாழ்க்கையைப் பற்றியும் அர்த்தசாஸ்திரத்தின்

ஆறாயிரம் சூத்திரங்களைப் பற்றியும் நாங்கள் அறிந்து கொண்டோம். அதோடு, சாணக்கியர் எழுதிய அல்லது அவர் எழுதியதாகக் கருதப்படுகின்ற பிற புத்தகங்களான, லகு சாணக்கியர், ராஜநீதி சாஸ்திரம், சாணக்கியர் நீதி, சாணக்கியர் சூத்திரங்கள் ஆகியவற்றைப் பற்றியும் நாங்கள் அறிந்து கொண்டோம். முக்கியமாக, சாணக்கியருக்கு முன்பு எழுதப்பட்டிருந்த பிற அர்த்தசாஸ்திரங்களைப் பற்றியும் அவர் கூறினார்."

"என்ன? சாணக்கியரைத் தவிர வேறு பலரும் அர்த்தசாஸ்திரத்தை எழுதியிருக்கிறார்களா?" எனக்கு அது தெரியாது.

"சாணக்கியருக்கு முன்பு பதினான்கு அர்த்தசாஸ்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. அதற்குப் பின்பும் பல அர்த்தசாஸ்திரங்கள் எழுதப்பட்டுள்ளன." அந்தக் கணக்காளனே ஓர் ஆசிரியரைப்போல இருந்தான். தான் கற்றுக் கொண்டிருந்தவற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்காமல் மீதி ஆசிரமத்தைச் சுற்றிக் காட்டும் பணியைத் தொடர வேண்டும் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

"ஆனால் நீ பெரும் அதிர்ஷ்டசாலி. நீ இப்போது படிக்கப் போகும் முறைப்படி நாங்கள் எவரும் படித்தது கிடையாது. ஆறு மாதகாலம் குருவிடம் தனியொருவனாக அர்த்தசாஸ்திரத்தை நீ விரிவாகக் கற்றுக் கொள்ளப் போகிறாய்," என்று அவன் கூறினான். "சரி, வா, நீ தங்கிக் கொள்ளப் போகும் அறையை நான் உனக்குக் காட்டுகிறேன்." பின் அவன் என்னை ஒரு தாழ்வாரத்தின் வழியாக அழைத்துச் சென்றான்.

நான் மேலும் தெரிந்து கொள்ள விரும்பினேன்: "குரு சொற்பொழிவு கொடுத்தபோது யாராவது குறிப்புகள் எடுத்தார்களா?"

"ஆம், அப்போது இந்தியவியல் குறித்த ஆய்வில் ஈடுபட்டிருந்த மாணவர் ஒருவர் குருவின் சொற்பொழிவு குறித்து தினசரிக் குறிப்புகள் எடுத்தார். பின்னர் அக்குறிப்புகள் ஒரு சிறிய புத்தகமாகத் தொகுக்கப்பட்டன. அது நூலகத்தில் உள்ளது." அவன் நூலகம் இருந்த திசை நோக்கிச் சுட்டிக்காட்டினான்.

"ஆனால் அர்த்தசாஸ்திரத்தை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவது எப்படி என்பதை நீ தெரிந்து கொள்ள விரும்பினால், நீ அந்த அறங்காவலரைச் சந்தித்து அவருடன் உரையாட வேண்டும்," என்று கூறிவிட்டு அவன் புன்னகைத்தான்.

"அர்த்தசாஸ்திரத்தின் ஓர் வாழ்வுருவாக இருப்பவர் நம் அறங்காவலர்தான். அவர் புறவுலகில் எவ்வளவு செழிப்பாக இருக்கிறாரோ அதே அளவு அகவுலகிலும் செழிப்பாக உள்ளார்."

# 19

# உன்னதமான தொழிலதிபர்

குருவும் அந்த அறங்காவலரும் உட்கார்ந்திருந்த அந்த அறைக்கு நாங்கள் திரும்பிச் சென்றோம்.

“சார், நீங்கள் கூறியபடி நான் இவனுக்கு ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பித்துவிட்டேன்,” என்று அந்த இளைஞன் அந்த அறங்காவலரிடம் தெரிவித்தான். என் போக்கு எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நான் அவரை அறங்காவலர் என்று நினைக்க விரும்பவில்லை. உன்னதமான தொழிலதிபர் என்ற சொற்றொடர் எனக்கு இப்போது பிடித்திருந்தது. இப்படிப்பட்டதோர் இணைப்பு சாத்தியமென்றால், என்றாவது ஒரு நாள் நான் அப்படிப்பட்ட ஒருவராக ஆக விரும்புகிறேன்.

என்ன? இப்போது நான் ஒரு தொழிலதிபராக ஆக விரும்புகிறேனா? எனக்கு என்னவாயிற்று?

இது எப்படி நிகழ்ந்தது? கல்லூரிப் படிப்பை முடிக்கும்வரை நான் என் எதிர்கால வாழ்க்கை எவ்வாறு இருக்குமென்றோ அல்லது நான் எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுப்பேன் என்றோ ஒருபோதும் சிந்தித்ததில்லை. நம்மில் பெரும்பாலானோருக்கு வாழ்க்கையில் நமக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவு கிடையாது. நம் வழியில் எதிர்ப்படும் அனைத்து சந்தர்ப்பங்களையும் நாம் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு தொழிலதிபரால் உன்னதமானவராக இருக்க முடியுமென்றால், அவரால் அர்த்தசாஸ்திரத்தை நடைமுறையில் கடைபிடிக்க முடியுமென்றால், நானும் ஏன் ஒரு தொழிலதிபராக ஆகக் கூடாது? ஆனால் இது குறித்து அந்த உன்னதமான தொழிலதிபரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள நான் ஆசைப்பட்டேன்.

“உனக்கு இந்த இடம் பிடித்திருக்கும் என்று நான் நம்புகிறேன்,” என்று அவர் என்னிடம் கூறினார். ஒரு புதிய விருந்தினருக்குத் தன் ஆசிரமத்தை மகிழ்ச்சியுடன் சுற்றிக் காட்டும் ஓர் அறங்காவலர் போலத்தான் அவர் பேசினார்.

“உனக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறை உனக்கு சௌகரியமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.” நான் நன்றாக கவனிக்கப்பட வேண்டும், வீட்டில் இருப்பதுபோல உணர வேண்டும் என்று அவர் அக்கறை

எடுத்துக் கொண்டார்.

“உனக்கு ஏதாவது தேவையென்றால் அதை கவனித்துக் கொள்ள இங்கு பலர் இருக்கின்றனர்,” என்று அவர் எனக்கு உத்தரவாதம் அளித்தார்.

பின் அவர் குருவை நோக்கித் திரும்பி, அவர்களது உரையாடலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்: “ஆமாம் ஐயா, நீங்கள் சொல்வது சரிதான். வரி செலுத்துவது என்பது சமுதாயத்தின் மொத்த நலனுக்கு முக்கியமானது. அரசாங்கத்திலுள்ள லஞ்சத்தைப் பற்றி அர்த்தசாஸ்திரம் பேசினாலும் தர்மத்துடன்கூடிய சமுதாயத்தைச் சுட்டிக்காட்ட அது தவறவில்லை.” அவர்கள் ஒரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

“இதைப் பற்றி நாம் பின்னர் விரிவாக அலசலாம். எனக்கு இன்னும் பல சந்தேகங்கள் இருக்கின்றன,” என்று அவர் முடித்தார்.

குரு என்னை நோக்கித் திரும்பி, “சரி, நீ இங்கு தங்கிக் கொள். நான் வீட்டிற்குச் செல்கிறேன். எனக்குக் கொஞ்சம் எழுத்து வேலை இருக்கிறது. நீ நாளைக்கு வீட்டுக்கு வா,” என்று கூறினார். அத்துடன் அவர் கிளம்பிப் போய்விட்டார்.

அந்த உன்னதமான தொழிலதிபருடன் நான் தனியாக விடப்பட்டேன். “உன்னை அர்த்தசாஸ்திரம் படிக்க எது தூண்டியது?” என்று அவர் இயல்பாகக் கேட்டார்.

“என் தாத்தா.” நான் என் கதையை மறுபடியும் கூற வேண்டி வந்தது. முற்றிலும் புதியதோர் ஆய்வை எடுத்துக் கொண்ட ஒருவனைப்போல நான் தோன்றுகின்றேனா அல்லது தான் என்ன செய்கிறோம் என்பதை அறிந்திராத ஒருவனைப்போல நான் காட்சியளிக்கிறேனா? எனக்குக் குழப்பமாக இருந்தது.

“ஒரு தொழிலதிபர் என்ற முறையில் இப்புத்தகம் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது,” என்று அவர் வெளிப்படையாகக் கூறினார்.

இதைத்தான் அவரிடம் கேட்க வேண்டும் என்று நான் துடித்துக் கொண்டிருந்தேன். “எப்படி?” அவர் மேலும் தொடர நான் எடுத்துக் கொடுத்தேன்.

“சாஸ்திரங்களையும் புனித நூல்களையும் நாம் படிக்கும்போது, அதை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு கடைபிடிப்பது என்பது குறித்தத் தெளிவு பெரும்பாலான சமயங்களில் நமக்கு இருப்பதில்லை. வாழ்க்கையின் இக்கட்டான கட்டங்களிலும் சோதனையான நேரங்களிலும்தான் அவற்றில் பொதிந்துள்ள ஞானம் நமக்கு வெளிப்படுகிறது. அர்த்தசாஸ்திரம் அதைத்தான் எனக்குச் செய்தது.”

என் வாழ்க்கையில் எதிர்காலத்தில் நான் சந்திக்கவிருக்கும் சவால்களைச் சமாளிக்க அவரது வார்த்தைகள் பின்னர் எனக்குக் கைகொடுக்கும்.

"நான் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தேன். எங்களுடையது ஒரு வணிகக் குடும்பம். அது வெறும் செல்வச் செழிப்பான ஒரு குடும்பம் அல்ல. விழுமியங்களோடு வாழ்ந்து வந்த செல்வச் செழிப்பானதொரு குடும்பம் அது."

அவர் தன் தந்தையை நினைவுகூர்ந்தபடி, "என் தந்தை தன் பணத்தின் பெரும்பகுதியை ஆன்மீகக் காரியங்களுக்குச் செலவிட்டுள்ளார். அவரது திட்டங்களில் ஒன்றுதான் இந்த ஆசிரமம். அவர் இங்கு புராதன இந்திய வேதங்களைப் புதுப்பிக்க விரும்பினார்," என்று கூறினார்.

"அதைப் பற்றி மேலும் கூறுங்கள்." அவர் தன் கதையைத் தொடர வேண்டும் என்பதில் நான் குறியாக இருந்தேன்.

"அவர் இந்த ஆசிரமத்தைக் கட்டியபோது, அதோடு நிறுத்திக் கொள்ளாமல் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து மதிப்புமிக்கப் பல புத்தகங்களைச் சேகரித்தார். அரிய, பலரால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காத நூல்கள் இவ்விடத்தில் உள்ளன. உன்னைப் போன்ற அறிஞர்களை நாங்கள் இங்கு வரவேற்கிறோம். நீங்கள் அவற்றை இளம் தலைமுறையினருக்குப் புரியும் விதத்தில் எடுத்துரைக்க வேண்டும்.

"உன்னைப்போலவே புராதனப் புத்தகங்களை ருசி பார்த்த அனுபவம் எனக்கும் இருக்கிறது. ஆனால் படித்து முடித்தப் பிறகுதான் உண்மையான பயணம் துவங்குகிறது. நான் என் வணிகத்தில் சவால்களை எதிர்கொள்ளும்போதெல்லாம், அர்த்தசாஸ்திரத்தை எடுத்துப் புரட்டுவேன். அச்சவால்களுக்கான தீர்வுகள் தவறாமல் அதன் பக்கங்களிலிருந்து எனக்குக் கிடைக்கும்."

"எடுத்துக்காட்டாக?" அவர் கூறியதைத் தெளிவுபடுத்திக் கொள்ள நான் விரும்பினேன்.

"செல்வத்தைக் கண்டுபிடித்தல், செல்வத்தை உருவாக்குதல், செல்வத்தை நிர்வகித்தல், செல்வத்தை வினியோகித்தல் போன்ற பலவற்றைப் பற்றி அர்த்தசாஸ்திரம் பேசுகிறது. அதனால் நான் செல்வத்தை உருவாக்குவதற்கு முன்பு அது எங்கிருந்து வரக்கூடும் என்பதை நான் கண்டுபிடித்தாக வேண்டும். அதே சமயம், அதை உருவாக்கி நிர்வகித்து வந்தால் மட்டும் போதாது. நான் அதை எந்தச் சமுதாயத்திலிருந்து பெற்றேனோ அதற்குத் திருப்பியளிக்க வேண்டும்." நான் உண்மையாகவே அசந்து போனேன்.

“உங்களுடைய மேலாளர்களை எவ்வாறு வேலைக்கு எடுப்பது, உங்களுடைய பங்காளிகளுடன் எவ்வாறு உறவாடுவது, சந்தையில் உங்களுடைய போட்டியாளர்களை எவ்வாறு சமாளிப்பது ஆகியவை உட்படப் பல பிரச்சனைகளைச் சமாளிக்கவும் அர்த்தசாஸ்திரம் ஒருவருக்கு உதவும்.”

அவர் பேசப் பேச, என் வாழ்க்கை எவ்வாறு மலரப் போகிறது என்பது குறித்த ஒரு வரைபடம் என் மனக்கண்ணில் விரியத் துவங்கியது.

“ஐயா, வாழ்க்கையில் நான் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இதுவரை நான் துளிகூட அறிந்திருக்கவில்லை. இப்போது என் மனத்தில் ஓர் எண்ணம் உதயமாகி இருக்கிறது . . . “என்று கூறிவிட்டு நான் சிறிது தயங்கினேன். பின்னர் தொடர்ந்து, “நானும் ஒரு தொழிலதிபராக ஆக விரும்புகிறேன்,” என்று கூறி முடித்தேன். அவருக்கு என் யோசனை பிடித்திருந்ததா என்று அறிய நான் விரும்பினேன்.

“பிரமாதம்! சமுதாயத்திற்குப் பயனளிக்கும் விதத்தில் பங்களிப்பை அளிக்கும் ஓர் உன்னதமான தொழிலதிபரைவிட வேறு எதுவும் சிறப்பாக இருக்க முடியாது.”

“ஒரு தொழிலதிபராக ஆவது எப்படி?” என்று நான் ஆர்வமாகக் கேட்டேன்.

“நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. முதலில் அர்த்தசாஸ்திரத்தைப் படி. நீ செல்ல வேண்டிய பாதை தானாவே உன் முன் தோன்றும்,” என்று கூறி அவர் புன்னகைத்தார்.

பலரும் சமீப காலத்தில் என்னை நோக்கி வீசியெறிந்து கொண்டிருந்த, “வாழ்க்கையில் நீ என்ன செய்யப் போகிறாய்?” என்ற கேள்விக்கு அன்றுதான் எனக்கு முதன்முதலாக பதில் கிடைத்தது.

“ஒரு வித்தியாசமான தொழிலதிபர்,” என்று நான் என்னைப் பற்றி அவர்களிடம் பெருமையாகக் கூறுவேன்.

நான் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை அர்த்தசாஸ்திரம் எனக்குக் காட்டும்.

# 20

# படிப்பு முறை

அடுத்த நாள் காலையில் நான் கண் விழித்தபோது, ஆசிரமத்தின் தினசரி நடைமுறைகள் என்னவாக இருக்கும் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. சூரிய உதயத்திற்கு முன்பே ஆசிரமம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. கோவில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது, வேத சுலோகங்கள் ஓதப்பட்டுக் கொண்டிருந்தன. சமையலறையில் உணவு தயாராகிக் கொண்டிருந்தது.

நான் தயாராகிக் கோவிலுக்குச் சென்றேன். நான் சென்றபோது அக்கோவிலின் பூசாரி தீபாராதனை காட்டிக் கொண்டிருந்தார். நான் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி நடந்தேன். அடுத்த ஆறு மாதங்களுக்கு நான் தங்கியிருக்கவிருந்த இடம் எப்படியிருக்கிறது என்பதைக் கண்டுணர நான் விழைந்தேன்.

அது எனக்கு ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. கிராமவாசிகள் தங்களுடைய தினசரிக் கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்க, பறவைகள் உற்சாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தன. வீட்டில் என் அம்மா தினமும் காலையில் என்னை எழுப்பிவிட்டு, காலை உணவு தயாராகிவிட்டதாகக் கூறுவார். ஆனால் இங்கு அப்படி எவரும் இருக்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, காலை உணவு தயார் என்பதை அறிவிக்கும் ஒரு மணி சமையலறையிலிருந்து ஒலித்தது. நான் அதை நோக்கி நடந்து அங்கிருந்த ஒரு சிலருடன் சேர்ந்து கொண்டேன்.

நான் அடுத்த சில மாதங்கள் அங்கு தங்கியிருக்கப் போவதால் எனக்குப் பலருடைய உதவியும் ஆதரவும் தேவைப்படும். அதனால் நான் எல்லோருடனும் நட்புறவு கொள்ளத் துவங்கினேன். இனி இவர்கள்தானே என்னுடைய புதிய குடும்ப உறுப்பினர்கள்!

பின்னர் நான் என் அறைக்குச் சென்று என் அர்த்தசாஸ்திரத்தையும் என் குறிப்பேட்டையும் எடுத்துக் கொண்டு நூலகத்தை நோக்கி நடந்தேன். அங்கு எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த மூலைக்குச் சென்று அவற்றை அங்கு வைத்தேன். அங்கிருந்த நூலகர் என்னை நோக்கிப் புன்னகைத்தவாறு, “இந்த இடத்தைச் சுற்றிப் பார். அர்த்தசாஸ்திரம் தொடர்பான பல புத்தகங்கள் இங்கு இருக்கின்றன,” என்று கூறினார்.

நான் அவருடைய பரிந்துரையை ஏற்றுக் கொண்டு, கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நேர்த்தியுடன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் பார்வையிட்டேன். பின் அர்த்தசாஸ்திரம் என்ற தலைப்பில் இருந்த பகுதிக்குச் சென்றேன்.

அப்பகுதியில் இருநூற்றுக்கும் மேற்பட்டப் புத்தகங்கள் இருந்தன. அவை வெவ்வேறு வல்லுனர்களால் எழுதப்பட்டிருந்தன. அவற்றில் சில நூல்கள் மொழிபெயர்ப்புகளாகவும், சில நூல்கள் குறிப்பேடுகளாகவும், சில நூல்கள் சொற்பொழிவுகளின் தொகுதிகளாகவும், சில நூல்கள் கருத்தரங்குகளின் தொகுப்புகளாகவும் இருந்தன. சில புத்தகங்கள் வெறும் முப்பது பக்கங்களே இருந்தன. சில புத்தகங்கள் தடிமனாக இருந்தன.

எனக்குப் பிடித்த ஒரு விஷயம் தொடர்பாக அங்கு விதவிதமான புத்தகங்கள் இருந்தது எனக்கு மகிழ்ச்சியூட்டியது. என் தாத்தா எனக்களித்த அதே அர்த்தசாஸ்திரத்தின் பிரதி ஒன்றும் அங்கு இருந்தது.

அர்த்தசாஸ்திரத்தின் அறிமுகம் என்றொரு புத்தகத்தை அங்கு நான் கண்டேன். அந்த கணக்காளர் கூறிய புத்தகம் அது. என் குரு அந்த ஆசிரமத்திலிருந்தவர்களுக்கு அளித்தச் சொற்பொழிவுகளின் தொகுப்பு அது.

இப்புத்தகங்களைப் புரட்டியபோது நான் என் சொந்த வீட்டில் இருந்ததுபோல உணர்ந்தேன். நூலகத்தின் பிற பகுதிகளுக்கும் நான் சென்றேன். அங்கு வேறு பல விஷயங்களைப் பற்றிய புத்தகங்கள் நிறைய இருந்தன. அவற்றில் சில ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்தன. ஒரு சில நூல்கள் துணியில்கூட எழுதப்பட்டிருந்தன!

"உனக்கு வேண்டிய எந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் நீ எடுத்துச் சென்று உன் படிப்பு மேசையருகே வைத்துக் கொள்ளலாம்," என்று நூலகர் கூறினார். எனக்குத் தேவைப்பட்ட உதவிகளை அளிப்பதற்காக அவர் என் அருகிலேயே வலம் வந்து கொண்டிருந்தார்.

அந்த தெய்வீகமான இடத்தில் குவிந்து கிடந்த அறிவுக் களஞ்சியம் என்னைத் திக்குமுக்காடச் செய்தது. எங்கு ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஆசைப்பட்டாலும் இங்குள்ள புத்தகங்கள் அனைத்தையும் படித்து முடிக்க ஒரு வாழ்நாள் போதாது என்று நான் நினைத்துக் கொண்டேன்.

நான் என் மேசைக்கு வந்து, என் கண்களை மூடி, நான் எடுத்து வைக்கவிருந்த பாதையில் எனக்கு வழிகாட்டுமாறு எல்லாம் வல்ல இறைவனிடம் நான் பிரார்த்தனை செய்தேன்.

பின் நான் என் அர்த்தசாஸ்திரப் பிரதியை எடுத்து விரித்துப் படிக்கத் துவங்கினேன்.

அதன் முதல் பக்கத்திலிருந்த முதல் சூத்திரமே ஒரு பிரார்த்தனையாக இருந்தது:

ஓம் நமோ சுக்ர பிரகஸ்பதி பயம் . . .

அதன் பொருளைப் புரிந்து கொள்ள நான் முனைந்தேன். யார் இந்த சுக்கிரனும் பிரகஸ்பதியும்? நான் வேறு சில புத்தகங்களை அலசிப் பார்த்து, சுக்கிரன் அசுரர்களின் குரு என்பதையும், பிரகஸ்பதி தேவர்களின் குரு என்பதையும் கண்டறிந்தேன்.

சாணக்கியர் ஏன் ஒரே சமயத்தில் இரண்டு குருக்களிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று நான் வியந்தேன். இதை நான் குருவிடம் கேட்டுத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும் என்று குறித்து வைத்துக் கொண்டேன்.

நான் மேலும் ஒரு சில மணி நேரங்களை அந்த நூலகத்தில் கழித்தேன். மேலும் பல குறிப்புகளை எடுத்தேன். மதிய உணவிற்குப் பின் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, மீண்டும் படிக்கத் துவங்கினேன்.

பின் குருவிடம் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்தபடி மாலையில் அவரது வீட்டிற்குச் சென்றேன்.

அவர் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். "இன்று என்ன செய்தாய்?"

"நூலகத்திலுள்ள பிற அர்த்தசாஸ்திரப் புத்தகங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருந்தேன்," என்று தெரிவித்தேன். என் குரலில் துளிகூடப் பெருமை தொனிக்காமல் நான் பார்த்துக் கொண்டேன்.

"நீ என்ன முடிவுக்கு வந்தாய்?"

"இது குறித்து ஏராளமான புத்தங்கள் உள்ளன. என்னால் முடிந்த அளவு அவற்றைப் படித்து ஒப்பிட விரும்புகிறேன். அதோடு, எனக்குத் தெளிவில்லாமல் இருக்கும் விஷயங்களை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் நான் ஆசைப்படுகிறேன்."

"கற்பதற்கு இது உகந்த முறைதான். நீ புத்தகங்களைப் படி. உனக்குப் புரியாதவற்றைப் பற்றி நாம் விவாதித்து அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

"நம் பாரம்பரிய முறைப்படி, தயாராக இருக்கும் ஒருவன்தான் சிறந்த மாணவன்." அவர் என்னைக் குறித்து திருப்தியடைந்திருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

“பெரும்பாலான மாணவர்கள் தங்கள் புத்தகங்களுடன் வந்து ஆசிரியர் முன் உட்கார்ந்து, அப்புத்தகங்களில் இருக்கும் அறிவை அவர் தன் கையால் எடுத்துத் தங்களுக்கு ஊட்டிவிட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர்.

“நீ அர்த்தசாஸ்திரத்தை இப்படிப் படி: ஒரு சூத்திரத்தை எடுத்துக் கொண்டு அது வெவ்வேறு புத்தகங்களில் எவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் படித்து ஒப்பீடு செய். பின்னர் என்னிடம் வா. உனக்கு இருக்கும் சந்தேகங்களை நான் போக்குகிறேன்.

“ஒரு நாளைக்கு ஓர் அத்தியாயம் என்ற கணக்கில் நீ படித்தால், ஆறு மாதங்களுக்குள் உன்னால் முழு அர்த்தசாஸ்திரத்தையும் படித்து முடித்துவிட முடியும்.” இந்த இலக்கு சாதிக்கத்தக்கதாகவே இருந்தது.

“இன்று நீ எந்த சந்தேகத்தை என்னிடம் எடுத்து வந்துள்ளாய்?” என்று அவர் கேட்டார்.

நூலகத்தில் நான் குறித்து வைத்திருந்த குறிப்புகளைப் பார்த்து, “ஐயா, சாணக்கியர் ஏன் ஒரே சமயத்தில் சுக்கிரனையும் பிரகஸ்பதியையும் பிரார்த்தித்தார்? அவர்கள் இருவரும் எதிரும் புதிருமாக இருந்தவர்கள்தானே?”

“நான் இதை விளக்குகிறேன் . . .” என்று அவர் துவங்கினார்.

# 21

# மாறுபட்டக் கண்ணோட்டங்கள் - உன் கண்ணோட்டம்

எந்தவொரு விஷயத்தைப் பற்றியும் விபரமாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால், அதன் பின்புலத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

"அர்த்தசாஸ்திரத்திற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. அது அரசியல் அறிவியல் என்று பொதுவாக அறியப்படுகிறது. ஆனால் அரசியல் அறிவியல் என்பது பரந்துபட்ட ஒன்று. அதில் பொருளாதாரம், சமூக அறிவியல், சட்டம், கலை போன்றவையும் அடங்கும்," என்று குரு விவரித்தார். "எந்தவொரு விஷயத்தைப் பற்றியும் படிப்பதற்குச் சிறந்த வழி அத்துறையில் அதற்கு முன்பு இருந்த ஆசான்கள் அல்லது வல்லுனர்கள் என்ன செய்துள்ளனர் என்பதை அறிந்து கொள்வதுதான். அது உனக்கு அந்த விஷயம் குறித்த வரலாற்றுரீதியான பின்புலத்தைக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, பல விதமான கண்ணோட்டங்களையும் கொடுக்கும். சுக்கிரன், பிரகஸ்பதி இருவருமே அர்த்தசாஸ்திரத்தின் ஆசான்கள். அதாவது, அரசியல் அறிவியலின் ஆசான்கள்." இது எனக்குத் தெரியாது.

"அதனால்தான் சாணக்கியர் தன்னுடைய சொந்த அர்த்தசாஸ்திரத்தை எழுதுவதற்கு முன்பு முந்தைய குருக்களை வணங்கி அதைத் துவங்கினார். அதன் காரணமாகவே அது கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் என்று அழைக்கப்படுகிறது."

"சுக்கிரன், பிரகஸ்பதி ஆகிய இருவரின் அர்த்தசாஸ்திரம் இப்போதும் இருக்கிறதா?"

"அதைக் காலவெள்ளம் சூறையாடிவிட்டது. ஆனால் யாருக்குத் தெரியும்? இந்தியாவிலிருக்கும் அனைத்து ஓலைச்சுவடிகளையும் ஆராய்ந்தால், ஒருவேளை அதை நீ கண்டுபிடிக்கக்கூடும். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமே அப்படித்தான் கண்டுபிடிக்கப்பட்டது."

"என்ன, கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் கண்டுபிடிக்கப்பட்ட

ஒன்றா? எப்போது, எங்கு அது கண்டுபிடிக்கப்பட்டது?” கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் முறைப்படி எழுதப்பட்டுத் தலைமுறை தலைமுறையாகக் கொடுக்கப்பட்டு வந்த ஒரு பொக்கிஷம் என்றுதான் நான் இதுவரை கருதி வந்திருந்தேன். அது காணாமல் போய் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று என்பது எனக்குத் தெரியாது.

“பல வருடங்களுக்கு முன், சியாமா சாஸ்திரி என்னும் சமஸ்கிருதப் பண்டிதர், மைசூர் பல்கலைக்கழகத்திலுள்ள சமஸ்கிருதப் படிவங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். அப்போது எதேச்சையாக அவர் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைக் கண்டுபிடித்தார்.” அக்கதையைக் கூறியபோது என் குருவின் கண்கள் பிரகாசித்ததை நான் கண்டேன்.

“அவர் அதைத் தற்செயலாகக் கண்டுபிடித்திருந்தார். நமக்காக என்னவோர் அருமையான பொக்கிஷத்தை அவர் வெளிக்கொண்டு வந்திருந்தார்!

“அவர் அக்கண்டுபிடிப்புக் குறித்துப் பெரிதும் உவகை அடைந்திருந்தார். அதனால் அவரே அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதன் காரணமாக, ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் அது மிகவும் பிரபலமானது.” ஓ! இப்படித்தான் இப்புத்தகம் பல்வேறு அந்நிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதா?

“உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா?” என் குருவின் உற்சாகம் இன்னும் குறைந்தபாடில்லை. “அவர் மீதியிருந்த படிவங்களை முறைப்படித் தொகுத்து, அது பல தலைமுறைகளுக்கும் பயனளிக்கும்படி செய்தார். அவர் மிகச் சிறந்த ஒரு மேற்பார்வையாளர். இன்றும்கூட அந்நூலகத்தில் அவற்றை உன்னால் பார்க்க முடியும்.” என்றாவது ஒரு நாள் அங்கு செல்ல வேண்டும் என்று நான் என் மனத்தில் உறுதியெடுத்துக் கொண்டேன்.

சாணக்கியரின் பிரார்த்தனைக்கு அவர் மீண்டும் வந்தார். சுக்கிரனையும் பிரகஸ்பதியையும் சாணக்கியர் வணங்கியதில் ஆழமான அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

“அர்த்தசாஸ்திரத்திற்கு ராஜநீதி சாஸ்திரம் என்றொரு பெயரும் உண்டு. சுக்கிரனும் பிரகஸ்பதியும் குருக்கள். வரலாற்றின் வேறுபட்டக் காலகட்டங்களில் இவ்விரு குருக்களும் தங்களுடைய மாணவர்களுக்கு முரண்பட்ட அறிவுரைகளைக் கொடுத்துள்ளனர். அதாவது, அவர்கள் ஒரே பிரச்சனையை வெவ்வேறு கண்ணோட்டங்களில் அணுகியுள்ளனர்.” ஒரே பிரச்சனை, வெவ்வேறு அணுகுமுறை!

“சாணக்கியர் தன்னுடைய சொந்த அர்த்தசாஸ்திரத்தை எழுதுவதற்கு முன்பாக, அதற்கு முன்பு எழுதப்பட்டிருந்த அனைத்து

அர்த்தசாஸ்திரங்களையும் படித்திருந்தார். அதனால்தான் அந்த இரண்டு குருக்களுக்கும் அவர் தலைவணங்கினார். அவர்களுடைய கண்ணோட்டங்களைத் திறந்த மனத்துடன் அவர் ஏற்றுக் கொண்டார். பல சமயங்களில், அதற்கு முன்பு அர்த்தசாஸ்திரம் எழுதியவர்களோடு சாணக்கியர் ஒத்துப் போகவில்லை. தனக்கென்று தனியானதொரு கண்ணோட்டத்தைச் சாணக்கியர் கொண்டிருந்தார்."

எந்தவொரு விஷயத்திலும் மற்றவர்கள் நம்புவதை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல் நமக்கென்று சொந்தமாக ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

"இது உனக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது?" என்று குரு என்னிடம் கேட்டார்.

"முந்தைய ஆசான்கள் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், அவற்றை அறிந்து கொண்டு, நமக்கென்று தனித்துவமான ஒரு நிலைப்பாட்டை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அது கற்றுக் கொடுக்கிறது," என்று நான் கூறினேன்.

"பிரமாதம்!" குரு மகிழ்ந்தார். அவர் மேலும் இவ்வாறு கூறினார்: "முந்தைய ஆசான்களையும் அவர்களுடைய ஞானத்தையும், அது பழமை வாய்ந்ததாக இருக்கும் ஒரே காரணத்தினால், ஒருபோதும் சிறுமைப்படுத்தக்கூடாது. எல்லா ஆசான்களையும் மதிக்க வேண்டும். இதுதான் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயம்." குறிப்பாக இதைக் குறித்துக் கொள்ளுமாறு அவர் என்னிடம் கூறினார்.

"நீ இப்போது கற்றுக் கொண்டதை உன் தனிப்பட்ட வாழ்க்கையில் உன்னால் எவ்வாறு நடைமுறைப்படுத்த இயலும்?" அவர் என்னைத் துளைத்தார்.

இப்படிப்பட்ட ஒரு கேள்வி அவரிடமிருந்து வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அர்த்தசாஸ்திரத்தின் நடைமுறைப் பயன்பாடுகள் குறித்தே என் குரு அதிக கவனம் செலுத்தினார் என்பதை என்னால் உணர முடிந்தது.

"எந்த அம்சத்தில் நடைமுறைப்படுத்துவதைப் பற்றி நீங்கள் கேட்கிறீர்கள்?" எந்தத் திசையில் சிந்திக்க வேண்டும் என்பது குறித்து எனக்கு அதிகமான தெளிவு தேவைப்பட்டது.

"எதில் வேண்டுமானாலும். அர்த்தசாஸ்திரத்திலிருந்து கற்றுக் கொண்டவற்றை எந்தச் சூழ்நிலைக்கும், எந்த வேலைக்கும் பயன்படுத்தலாம்," என்று அவர் கூறினார்.

"வணிகத்தில்கூடவா?" நான் துணிந்து ஊகத்தில் இறங்கினேன்.

“கண்டிப்பாக. நான் முன்பே கூறியபடி, அது எந்தத் துறையாக வேண்டுமானாலும் இருக்கலாம்,” என்று அவர் மீண்டும் கூறினார்.

நான் என்னை ஒரு தொழிலதிபராகக் கற்பனை செய்யத் துவங்கினேன். இந்தப் பிரார்த்தனையைப் பயன்படுத்தும் ஒரு சூழல் குறித்து நான் சிந்தித்தேன்.

நான் என் சிந்தனையை ஒருமுகப்படுத்தி, கதையை இப்படி வளர்த்துக் கொண்டு போனேன்: “நான் ஒரு தொழிலதிபர் என்று வைத்துக் கொள்வோம். நான் என் அலுவலகத்தில் உட்கார்ந்திருக்கிறேன். என் ஊழியர்களில் இருவர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். நான் அவர்கள் இருவரையும் என் அறைக்கு அழைத்து அவர்கள் இருவர் கூறுவதையும் கேட்பேன். அவ்விருவரின் கண்ணோட்டங்களையும் நான் கணக்கில் எடுத்துக் கொள்வேன்.”

குரு சுவாரசியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். “அப்புறம்?”

“பின் நான் அச்சூழ்நிலையை என் சொந்தக் கண்ணோட்டத்துடன் அலசுவேன். நான் அவர்கள் இருவர் கூறுவதைக் கேட்டாலும், அவர்களின் கண்ணோட்டங்களால் அலைக்கழிக்கப்படாமல் இருப்பேன். என்னுடைய சொந்த தர்க்கவாதத்தைப் பயன்படுத்தி என் சொந்த நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்வேன்,” என்று நான் முடித்தேன்.

“பிரமாதம். மிகவும் நல்லது,” என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

கற்பனையாக மற்றொரு சூழலை எடுத்துரைத்து அவர் மேலும் என்னைச் சோதித்தார்: “நீதான் அவர்களுடைய மேலதிகாரி என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் இருவரில் யார் சரி என்பதை நீ முடிவு செய்ய வேண்டும். அப்போது நீ என்ன செய்வாய்?”

“நான் அச்சூழல் குறித்து உணர்ச்சிவசப்பட மாட்டேன். என் நிறுவனத்தின் மொத்த நலனையும் கருத்தில் கொண்டுதான் நான் ஒரு தீர்மானத்திற்கு வருவேன். நான் ஒரு நியாயமான நீதிபதியாக இருக்கவும், சரியான முடிவுகளை மேற்கொள்ளவும் முயல்வேன்.” நான் ஆழமாகவும் தெளிவாகவும் சிந்திக்கத் துவங்கியிருந்தது எனக்கே தெரிந்தது.

“நீ ஏற்கனவே ஒரு தலைவனைப்போலச் சிந்திக்கத் துவங்கிவிட்டாய். சூழ்நிலைகளைச் சரியாக எடைபோடுவதும் சரியான தீர்மானங்களை மேற்கொள்வதும்தான் ஒரு தலைவனின் குணாதிசயம் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்,” என்று குரு கூறினார்.

“எப்படிச் செம்மையாகச் சிந்திக்க வேண்டும் என்பது குறித்து நாம் நாளை விரிவாகச் சிந்திக்கலாம்.”

“சிந்திப்பது குறித்தச் சிந்தனையா?” எனக்குச் சிறிது குழப்பம் ஏற்பட்டது.

“ஆமாம். சாணக்கியரின் வழி அது. அதற்கு ஆன்விக்ஷிக்கி என்று பெயர்.” இந்த வார்த்தையை நான் முன்பே கேள்விப்பட்டிருந்தேன்.

“அர்த்தசாஸ்திரத்தின் முதல் அதிகாரத்தின் பெயர் வினையதிகாரிகம். அது கையாளும் விஷயம் வித்யாசமுதேஷம் என்று அழைக்கப்படுகிறது. சாணக்கியர் அதை ஆன்விக்ஷிக்கி ஸ்தாபனம் என்பதில் துவக்குகிறார். அதைப் படி. நாளைக்கு நாம் அது குறித்து விரிவாக விவாதிக்கலாம்.”

அன்று இரவு நான் ஆசிரமத்திற்குத் திரும்பியபோது, நான் முற்றிலும் வேறுபட்ட ஒருவனாக இருந்தேன்.

என்னுள் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. நான் உண்மையிலேயே சிந்தித்துக் கொண்டிருந்தேன்!

# 22

# சிந்தனை - மனிதகுலத்திற்குக் கிடைத்துள்ள ஒரு பரிசு

அடுத்த நாள் காலையில் நான் கண்விழித்தபோது, நான் மிகுந்த புத்துணர்ச்சியுடன் இருந்தேன். அன்றைய தினத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் இருந்தது. வெளியே அழகாக இருந்ததால் எனக்கு அப்படித் தோன்றியதா? புதிய சூழ்நிலையில் என்னைப் பொருத்திக் கொள்ள முடியுமா என்று எனக்கு இருந்த கவலை நீங்கி, நான் இங்கு இந்த ஆசிரம வாழ்க்கைக்கு ஒருவழியாகப் பழகிவிட்டேன் என்பது அதற்குக் காரணமாக இருந்திருக்குமோ? அல்லது என்னுள் ஏதோ ஒன்று ஆழமாக மாறியிருந்ததால் அது ஏற்பட்டிருக்கக்கூடுமோ?

என் குரு கூறியபடி நான் அர்த்தசாஸ்திரத்தின் முதல் அத்தியாயமான ஆன்விக்ஷிக்கி ஸ்தாபனத்தைப் படிக்கத் துவங்கினேன். ஆன்விக்ஷிக்கி என்ற அந்த வார்த்தையில் ஏதோ இருந்தது. அதில் ஏதோ புதிர் இருந்ததுபோலத் தோன்றியது. ஆனால் அதை என்னால் முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அது குறித்துப் பல அறிஞர்கள் எழுதியுள்ள உரைகளை நான் படித்தேன். எண்ணற்ற மொழிபெயர்ப்புகள் இருந்தன. தத்துவம், ஆன்மீக ஞானம், தர்க்கபூர்வமான சிந்தனை போன்ற பல அர்த்தங்கள் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்தன.

அது குறித்து என் குரு என்ன கூறப் போகிறார் என்று அறிந்து கொள்ள நான் ஆவலாக இருந்தேன். அந்த அத்தியாயம் கீழ்க்கண்ட சூத்திரத்துடன் தொடங்கியது.

*ஆன்விக்ஷிக்கி, த்ரை, வர்த்தா, தண்டநீதி சேதி வித்யா **(1.2.1)***

“ஓர் அரசன் அல்லது தலைவன் நான்கு விதமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். ஆன்விக்ஷிக்கி (தத்துவம்), த்ரை (வேதங்கள்), வர்த்தா (பொருளாதாரம்), மற்றும் தண்டநீதி (அரசியல் அறிவியல்),” என்று குரு அதற்கு விளக்கம் தந்தார். “இந்த நான்கு அறிவையும் ஒரு தலைவன் புரிந்து கொண்டால் அவன் செயற்திறன் மிக்கவனாக

இருப்பான். இவை ஒவ்வொன்றும் அர்த்தசாஸ்திரத்தில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் மிகவும் முக்கியமானது ஆன்விக்ஷிக்கிதான்," என்று அவர் குறிப்பிட்டார்.

"ஏன் அது முக்கியமானது?" என்று நான் கேட்டேன்.

"சாணக்கியர் அதை இந்த அத்தியாயத்தின் வேறொரு இடத்தில் விளக்குகிறார்:

> அனைத்து அறிவியலுக்கும் விளக்கேற்றி வைக்கும் ஒன்றாக ஆன்விக்ஷிக்கி கருதப்படுகிறது. அனைத்துச் செயல்நடவடிக்கைகளுக்கான ஆதாரமாகவும் அனைத்து விதிமுறைகளுக்கு உதவும் ஒன்றாகவும் அது விளங்குகின்றது. ***(1.2.12)***

"அது ஒரு வழிகாட்டி," என்று குரு தெரிவித்தார். "எந்தவொரு நடவடிக்கைக்கும் அடிப்படையாக விளங்குவது சிந்தனைதான். அதை அடிப்படையாக வைத்துத்தான் மனிதர்கள் தலைமுறை தலைமுறையாக வளர்ச்சியடைந்து வருகின்றனர்.

"ஆன்விக்ஷிக்கியை சிந்தனைக்கான அறிவியல் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். மனிதனுக்கு இயற்கை அளித்துள்ள அற்புதமான பரிசுதான் சிந்தனை. அவர்களிடம் அறிவு சக்தி எனும் மாபெரும் சொத்து ஒன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடவுளின் படைப்பிலேயே மிக உயர்ந்த இடத்தை நாம் பெற்றுள்ளதற்கு அதுதான் காரணம்." நான் சிந்திக்கிறேன். அதனால் நான் இருக்கிறேன்.

"ஆனால் ஓர் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், மனிதன் சிந்திக்க விரும்பவில்லை," என்று குரு வருத்தமாகக் கூறினார்.

"நாம் ஏன் சிந்திக்க விரும்புவதில்லை?" நான் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்தேன்.

"சிந்திப்பதற்கு ஏராளமான ஆற்றல் தேவை. தர்க்கரீதியாகச் சிந்திப்பது எளிதல்ல என்று அறிவியல் ஆய்வுகளும் நிரூபித்துள்ளன. அது மிகவும் சோர்வடைய வைக்கும் ஒரு நடவடிக்கை. மனிதன் பொதுவாக எளிதான வழியைப் பின்பற்றவே விரும்புகிறான்.

"எதற்காக ஆற்றலை வீணாக்க வேண்டும்? சிந்திக்காமல் இருந்துவிட்டால் நல்லதுதானே? ஆனால் இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், சிந்தனையாளர்களால்தான் மனிதகுலம் முன்னேறி இருக்கிறது. அவர்கள் சிக்கலான கேள்விகளைக் கேட்டு, அவற்றுக்கான கடினமான பதில்களைப் பெற்றுள்ளனர். அவர்கள் பொது இயல்பை

உடைத்துள்ளனர்.”

நான் இவ்வாறு கேட்டேன்: “வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான சிந்தனை இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும், அப்படித்தானே? அர்த்தசாஸ்திரம் இதைத்தான் வலியுறுத்துகிறதா?”

“குருட்டாம் போக்கான சிந்தனை அல்ல. சரியான சிந்தனை. குறிப்பாக, தத்துவார்த்தமான சிந்தனை,” என்று அவர் விளக்கினார்.

“மாற்றுச் சிந்தனை பற்றி, வித்தியாசமான சிந்தனை பற்றி, ஒரு குறுகிய வட்டத்திற்குள் முடக்கப்படாத சிந்தனை பற்றி ஆன்விக்ஷிக்கி பேசுகிறது. அதோடு, சிந்தனையை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடக்க முடியுமா என்ற கேள்வியையும் அது எழுப்புகிறது.” எத்தனை விதமான பரிமாணங்கள்!

“வெறுமனே சிந்தித்தால் மட்டும் போதாது. அது தர்மத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.” ஆன்விக்ஷிக்கி ஏன் ஒரு தத்துவம் என்று அழைக்கப்படுகிறது என்பது எனக்கு லேசாகப் புரியத் தொடங்கியது.

“தத்துவம் மற்றும் ஆன்மீக அடிப்படை இல்லாமல்கூட ஒருவரால் சிந்தித்துப் புதிய விஷயங்களைப் படைக்க முடியும். ஆனால் அப்படிச் செய்வதன் மூலம் அவர் பிற மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடும்,” என்று குரு எச்சரித்தார்.

“அதனால்தான் சாணக்கியர் ஆன்விக்ஷிக்கியைப் பற்றி அர்த்தசாஸ்திரத்தின் துவக்கத்திலேயே விளக்குகிறாரா?” என்று நான் கேட்டேன்.

“ஆமாம். சாணக்கியரைப் பொருத்தவரை, இப்படிப்பட்டத் தத்துவார்த்தமான சிந்தனையை அடித்தளமாகக் கொண்டுதான் ஒரு தலைவர் உருவாக்கப்படுகிறார். என்ன இருந்தாலும், ஒரு ராஜரிஷியை, ஒரு தத்துவார்த்தமான அரசனை உருவாக்குவதுதானே அவரது நோக்கமாக இருந்தது!”

“குருவே, ஆன்விக்ஷிக்கி என்ற வார்த்தை தனித்துவமான ஒன்றாக இருக்கிறது. இது சாணக்கியர் புதிதாகக் கண்டுபிடித்த வார்த்தையா?” இது குறித்து அறிந்து கொள்ள நான் வெகுவாக ஆர்வம் கொண்டிருந்தேன்.

“இல்லையில்லை. இது புதிய வார்த்தை கிடையாது. இந்த வார்த்தை நம் புராதன இந்தியப் படைப்புகளில் பரவலாகக் காணப்படுகிறது. மகாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் மற்றும் எண்ணற்ற சமஸ்கிருத இலக்கியங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. சமஸ்கிருத அறிஞர்களுக்குப் பிடித்த வார்த்தைகளில் இதுவும் ஒன்று. இந்த

வார்த்தை சாணக்கியருக்கு முன்பே இருந்து வந்துள்ளது.” அட! இவ்வளவு பிரபலமான வார்த்தையாக இது இருந்தும், எனக்குத் தெரிந்த எவரும் இதை அறிந்திருக்கவில்லை.

எங்கள் விவாதம் திடீரென்று வேறு புறம் திரும்பியது.

“மகாபாரதத்தில் திரௌபதி பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறாள். அதில் ஒரு பெயர் ஆன்விக்ஷிக்கி என்பது உனக்குத் தெரியுமா?” என்று குரு கேட்டார்.

உண்மையாகவா? “இல்லை. எனக்குத் தெரியாது,” என்று நான் ஒப்புக் கொண்டேன். இது தொடர்பாக நான் படிக்க வேண்டிய சில புத்தகங்களின் பெயர்களை அவர் எனக்குக் கொடுத்தார்.

“உத்திபூர்வமான சிந்தனை தொடர்பான இலக்கியங்கள் இந்தியாவில் நிறைய இருக்கின்றன. நம்முடைய முன்னோர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் மிகவும் அறிவார்ந்தவர்கள். நாம் ரிஷி புத்திரர்கள். அதாவது, நாம், மாபெரும் சிந்தனாவாதிகள் மற்றும் ஆன்மீகவாதிகளின் புதல்வர்கள்.”

அவர் இது குறித்து மேலும் விவரித்தார்:

“ஆன்விக்ஷிக்கிக்கு பிரம்ம வித்யா என்றொரு பெயரும் உண்டு. சுயஅறிதல் குறித்த உச்சகட்ட அறிவு அது. அதனால்தான் நாம் ஆன்மீகரீதியாகவும் லௌகீகரீதியாகவும் வெற்றிகரமாக விளங்குகிறோம். ஒரே சமயத்தில் ஆன்மீகதியாகவும் லௌகீகரிதீயாகவும் வெற்றிகரமாக விளங்குவது எப்படி என்பதை ஆன்விக்ஷிக்கி கற்றுக் கொடுக்கிறது.”

நான் அதற்கு மேல் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. நான் ஆச்சரியத்தோடு அதிர்ச்சியும் அடைந்திருந்தேன். ஒரே ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி, என் குரு, அர்த்தசாஸ்திரத்தில் புதைந்திருந்த அறிவுக்களஞ்சியத்தை எனக்காகத் திறந்துவிட்டார். சாணக்கியர் தன் பிற புத்தகங்களில் வேறு என்னவெல்லாம் கூறியிருப்பார் என்று நான் கற்பனை செய்து வியந்தேன்.

என் மனவோட்டத்தை என் குரு உணர்ந்திருக்க வேண்டும். அவர், “இன்றைக்கு இது போதும். சாணக்கியரின் சிந்தனைப் போக்கு எவ்வாறு இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளும் பயணத்தை நாம் இப்போதுதான் துவக்கியுள்ளோம். நாம் செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.” என்று கூறினார்.

நான் சிந்திப்பதை நிறுத்தினேன். அல்லது துவக்கினேனா?

# 23

## சிந்தனை செய், அதே சமயம் செயலிலும் இறங்கு

நான் ஆன்விக்ஷிக்கி குறித்த எண்ணங்களில் பெரிதும் மூழ்கிக் கிடந்தேன். நான் அதற்கு முன்பு அதுவரை ஒருபோதும் இதுபோல என் சொந்த உலகில் ஆழ்ந்திருந்தது கிடையாது. நேரம் படுவேகமாக ஓடியது. நான் என் சிந்தனைகளோடு தனியாக இருந்ததை வெகுவாக ரசித்தேன்.

ஒருவர் ஒருபோதும் தனிமையாக இருப்பதாக உணரக்கூடாது என்றாலும் தனியாக இருப்பதை ரசிக்க வேண்டும் என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். சிந்திப்பது பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

அடுத்த நாள் நான் அர்த்தசாஸ்திரத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு சுவாரசியமான சூத்திரத்தைக் கண்டேன்:

> ஒரு வில்லாளியிடமிருந்து வெளிப்படும் அம்பு ஒருவனைக் கொல்லலாம் அல்லது கொல்லாமலும் போகலாம். ஆனால் அறிவார்ந்த ஒருவனின் வார்த்தைகள் கருவிலிருக்கும் குழந்தையைக்கூடக் கொன்றுவிடும். ***(10.6.51)***

கூர்தீட்டப்பட்ட அறிவு. இதைத்தான் சாணக்கியர் தன் தலைவர்களுக்குக் கற்றுக் கொடுக்க விரும்பினார் என்பது எனக்குப் புரிந்தது. அதாவது, தலைவர்கள் தங்களுடைய அறிவைத் தங்களால் முடிந்த அளவு சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார். இதனால் ஊக்கம் பெற்ற நான், அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதற்குப் பல மணி நேரங்களைச் செலவிட்டேன்.

நான் அப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலிருந்து கடைசி அத்தியாயம்வரை புரட்டினேன். அப்புத்தகம் சிந்தனையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசுகிறது என்ற உண்மையை நான் முதன்முதலாக உணர்ந்தேன். அது என்னை மிகவும் கவர்ந்தது.

அன்று மாலை நான் குருவின் வீட்டிற்குச் சென்றபோது, அவரிடம், “ஒருவருடைய அறிவை முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி

என்பதை அர்த்தசாஸ்திரம், குறிப்பாக ஆன்விக்ஷிக்கி, கற்றுக் கொடுக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஆம். அதோடு, எங்கு ஒருவர் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தக்கூடாது என்பதையும் அது எடுத்துரைக்கிறது," என்று அவர் பதிலளித்தார்.

"என்ன கூறினீர்கள்? எங்கு ஒருவர் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தக்கூடாது என்றா?" எனக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதே சமயம், என் உற்சாகமும் கணிசமாகக் குறைந்தது. இந்நூல் ஒருவரின் அறிவைக் கூர்தீட்டப் பயன்படும் ஒன்று என்ற முடிவுக்கு நான் வந்திருந்தேன்.

"அறிவார்ந்தவர்களுக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது. அவர்கள் சிந்திப்பதை நிறுத்துவதே இல்லை. அவர்கள் அளவுக்கதிகமாகச் சிந்தித்துக் கொண்டேயிருப்பதால், எந்த நடவடிக்கைகளிலும் இறங்குவதில்லை," என்று அவர் கூறினார்.

"எந்நேரமும் சிந்தித்துக் கொண்டேயிருந்தால் சித்தம் கலங்கிவிடும்," என்று கூறி அவர் சிரித்தார். "நீ கூறுவது சரிதான். அர்த்தசாஸ்திரம் தர்க்கரீதியான சிந்தனை பற்றிப் பேசுகிறது. ஆனால் அறிவாற்றல் மற்றும் மனிதப் புரிதல்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் பல இருக்கின்றன என்பதை அறிவார்ந்தவர்களில் பெரும்பாலானோர் அறிவர்," என்று கூறிய அவர், அருகிலிருந்த அர்த்தசாஸ்திர நூல் ஒன்றை எனக்குச் சுட்டிக் காட்டி, "இப்புத்தகத்திலுள்ள ஆறாவது பகுதியைப் புரட்டு. ஓர் அரசன் அல்லது ஒரு தலைவனின் பண்புநலன்கள் பற்றி அது பேசுகிறது," என்று தெரிவித்தார்.

நான் அதை உடனடியாக என் கைகளில் எடுத்து அவர் குறிப்பிட்ட அப்பக்கத்தைப் புரட்டினேன். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

ஓர் அரசனின் உன்னதங்கள் அறிவாற்றலும் துடிப்பும்தான். ***(6.1.3)***

அவர் அந்தச் சூத்திரத்தை விரிவாக விளக்கி ஒரு செம்மையான தலைவனை என் மனத்தில் காட்சிப்படுத்தும்படிக் கேட்டுக் கொண்டார்.

"ஓர் அருமையான தலைவர் அறிவார்ந்தவராக இருப்பதோடு, துடிப்பானவராகவும் இருக்க வேண்டும். ஒரு தலைவரிடம் துடிப்பும் உற்சாகமும் இல்லாமலிருந்தால், அவரால் பிறரை ஊக்குவிக்க முடியாது," என்று அவர் உத்வேகத்துடன் கூறியதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

"சிந்திப்பது முக்கியம்தான். ஆனால் நடவடிக்கையில் இறங்க

வேண்டிய வேளை வரும்போது ஒருவர் துணிந்து அதில் குதித்துவிட வேண்டும்.”

“ஆனால் எந்த அளவு சிந்திக்க வேண்டும், எப்போது அதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நம்மால் எப்படி அறிந்து கொள்ள முடியும்?” என்று நான் கேட்டேன்.

“நல்ல கேள்வி. ஒருவர் சிந்தித்துச் செயல்பட வேண்டும். செயல்பட்டுக் கொண்டே சிந்திக்கவும் வேண்டும். சிந்தனையும் செயல்பாடும் ஒருசேர நடைபெற வேண்டும். அது ஒன்றாகக் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.”

“இக்கூற்றை நீ கேள்விப்பட்டிருக்கலாம்: ‘உங்கள் செயலைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் திட்டத்தைச் செயல்படுத்துங்கள்.’

“ஒரு விஷயம் குறித்து எல்லாக் கோணங்களிலிருந்தும் சிந்தித்தப் பிறகே ஒருவர் செயலில் குதிக்க வேண்டும். செயல் இல்லாவிட்டால், திட்டமிடுதல்களால் எந்தப் பயனும் விளையாது,” என்று அவர் அறிவுரை கூறினார்.

“சிந்திப்பதை நிறுத்திவிட்டுச் செயலில் குதிக்க வேண்டுமென்றால், ஒருவருக்கு வலுவான ஆன்மீக அடித்தளம் இருக்க வேண்டும். எப்போது சிந்திக்க வேண்டும், எப்போது செயல்பட வேண்டும் என்பது ஓர் ஆன்மீகவாதிக்குத் தெரியும். இரண்டுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.”

“என்னிடம் ஆன்மீக அடித்தளம் இல்லாவிட்டால் என்ன செய்வது? ஆன்மீகத்தைப் பொருத்தவரை நான் ஒரு கற்றுக்குட்டியாக இருக்கும் பட்சத்தில் என்னவாகும்?” என்று நான் கேட்டேன்.

“அது எளிது. அப்படிப்பட்ட சமயங்களில் ஒரு குருவின் அறிவுரையைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்போது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை அவரால் கூற முடியும். அப்படிப்பட்ட வழிகாட்டுதல்கள் இன்றுகூடக் கிடைக்கின்றன.”

ஒரு சமயம் என் அப்பா ஒரு பணக்காரத் தொழிலதிபருடன் நடத்திய விவாதத்திற்கு என் மனம் தாவியது. அத்தொழிலதிபர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். நான் அவர்களுடைய உரையாடலைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது:

என் அப்பா அவரிடம், “நீங்கள் எவ்வாறு இத்தொழிலுக்குள் நுழைந்தீர்கள்?” என்று கேட்டார்.

“அதுவா? நான் ஒரு தொழிலைத் துவக்க வேண்டுமென்று என் குரு கூறினார். நான் உடனே அவ்வாறே செய்தேன். நான் அது குறித்து அளவுக்கு அதிகமாகச் சிந்திக்கவில்லை. இன்று நான் எவ்வளவு

பணக்காரனாக இருக்கிறேன் என்று பாருங்கள்! எல்லாம் குருவின் ஆசீர்வாதம்!” என்று அத்தொழிலதிபர் சிரித்துக் கொண்டே கூறினார்.

என் மனம் மீண்டும் அர்த்தசாஸ்திரத்திற்குத் திரும்பி வந்தபோது, என் வாழ்க்கையில் வருங்காலத்தில் நான் இது போன்ற சிக்கலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது சரியான தீர்மானங்களை எடுக்கக்கூடிய திறமை எனக்கு இருந்ததா என்று நான் யோசித்தேன்.

“அரசர்கள் எப்போதும் தங்கள் அருகிலேயே ராஜகுருக்களை வைத்திருப்பர். அவர்கள்தாம் அரசர்களுடைய முதன்மையான அறிவுரையாளர்கள்,” என்று குரு கூறினார். அவர் பழங்கால இந்தியாவில் நிலவி வந்த அமைப்புமுறை குறித்து எனக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

“ராஜகுருக்கள் அறிவாற்றல் மிக்கவர்களாக விளங்கியதோடு, அவர்களிடம் சிறப்பான ஆன்மீக அடித்தளமும் இருந்தது. எதை எப்போது செய்ய வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். மாபெரும் அரசர்கள் அவ்வாறு சிறந்து விளங்கியதற்கு அவர்கள் சிறந்த அறிவுரையாளர்களையும் சிறப்பான ஆன்மீக வழிகாட்டிகளையும் தங்கள் அருகே வைத்திருந்ததுதான் காரணம்.”

நான் அர்த்தசாஸ்திரத்தின் ஒவ்வோர் அத்தியாயமாகப் படிக்கப் படிக்க, நான் மேலும் மேலும் சிந்திக்கத் தொடங்கினேன்.

நாட்கள் வேகமாக உருண்டோடின. திரும்பிப் பார்ப்பதற்குள் நான்கு மாதங்கள் ஓடிவிட்டன.

இன்னும் இரண்டு மாதங்கள்தான் பாக்கி இருந்தன. எனக்கு அப்போதுதான் காலம் குறித்த நினைப்பு வந்தது. நான் இதுவரை அர்த்தசாஸ்திரத்தின் எத்தனை அத்தியாயங்களைப் படித்து முடித்திருந்தேன் என்று பார்த்தேன். ஐம்பது சதவீதத்தைக்கூட நான் முடித்திருக்கவில்லை.

திடீரென்று, தன் ரன் குவிப்பு விகிதத்தை அதிகரித்துக் கொள்ள விரும்பிய கிரிக்கெட் வீரனைப்போல நான் என் முயற்சிகளை அதிகப்படுத்தினேன். இருக்கும் நேரத்திற்குள் அதிகமாகக் கற்றுக் கொள்ள முயன்றேன். இப்போது நான் ஒரு நாளைக்குப் பதினெட்டு மணிநேரம் படித்துக் கொண்டிருந்தேன். சமஸ்கிருதத்திலும் ஓரளவு பிடிமானம் கிடைத்திருந்தது. நான் நூலகத்தில் இரவு வெகு நேரம் படித்துக் கொண்டிருந்ததையும், அதிகாலையிலேயே எழுந்து கொள்வதையும் ஆசிரமத்தில் இருந்தவர்கள் கவனித்தனர். அர்த்தசாஸ்திரத்தில் இருக்கும் ஆறாயிரம் சூத்திரங்களையும் ஆறு மாதங்களுக்குள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் நிச்சயித்திருந்த

இலக்கை அடைய என்னை நானே உந்தித் தள்ளிக் கொண்டிருந்தேன்.

என் முயற்சிகளைக் கூடவே இருந்து கவனித்தவர்போல என் குரு ஒரு நாள் என்னிடம், “அர்த்தசாஸ்திரத்தை வெறுமனே நூலகத்தில் இருந்து கொண்டு படிப்பதற்கு பதிலாக அதைக் கற்றுக் கொள்ள வேறு பல வழிகளும் உள்ளன,” என்று அமைதியாகக் கூறினார்.

“அது என்ன?” என்று நான் அவரிடம் கேட்டேன்.

“அர்த்தசாஸ்திரத்தில் வல்லுனர்களாக இருக்கும் பலரை சந்திப்பதுதான் அது,” என்று அவர் பதிலளித்தார்.

“அடுத்த இரண்டு நாட்களும் அர்த்தசாஸ்திரம் குறித்து தேசிய அளவில் நடைபெறும் கருத்தரங்கு ஒன்றில் நாம் கலந்து கொள்ளப் போகிறோம். அங்கு நீ பலரிடமிருந்தும் அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுக் கொள்ளலாம்.”

# 24

## கருத்தரங்கு

அன்று நான் வழக்கத்தைவிட முன்னதாக எழுந்து என் குருவை சந்தித்தேன். அவரை அவரது வீட்டிலிருந்து கருத்தரங்கு நடக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் குருவின் வீட்டில் முதல் நாளில் சந்தித்திருந்த நபர்கள்தான் அக்கருத்தரங்கை நடத்துபவர்கள் என்பது என் நினைவிற்கு வந்தது. அவர்கள் அன்று அக்கருந்தரங்கில் கலந்து கொள்ள என் குருவை அழைக்கவே அங்கு வந்திருந்தனர்.

தேசிய அளவில் நடத்தப்பட்ட இந்த இரண்டு—நாள் கருத்தரங்கில் கலந்து கொள்ள நாடு முழுவதிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அர்த்தசாஸ்திரத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தக் கட்டுரைகளைச் சமர்பிக்க வந்திருந்த சமஸ்கிருத வல்லுனர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் அதில் அடங்குவர்.

கருத்தரங்கு நடக்கவிருந்த இடத்திற்கு நாங்கள் முன்னதாகவே வந்துவிட்டோம். அம்மாநில முதல்வர் அதைத் துவக்கி வைப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் வந்தவுடன் அங்கிருந்த முக்கிய விருந்தாளிகளுக்கான வரவேற்பறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தேநீர் கொடுத்து உபசரிக்கப்பட்டார். குரு அக்கருத்தரங்கின் முக்கியப் பேச்சாளர்களில் ஒருவர் என்பதையும், அவர் ஒரு சமஸ்கிருதப் பண்டிதர் என்பதையும் நான் ஏற்கனவே அறிவேன். ஆனால் அந்த மாநில முதல்வருக்கு என் குருவைத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதை நான் அப்போது அறிந்து கொண்டேன். முதல்வர் இருந்த அறைக்கு என் குருவும் அழைக்கப்பட்டார்.

“என்னோடு வா, என் கூடவே இருந்து கொள். இல்லையெனில் இந்தக் கூட்டத்தில் உன்னைக் கண்டுபிடிப்பது கடினமாகிவிடும்,” என்று குரு என்னிடம் கண்டிப்புடன் கூறினார். நான் அவரோடு சேர்ந்து செல்லாவிட்டால், முக்கிய விருந்தாளிகளின் அறைக்கு அருகில் செல்லக்கூட எவரும் என்னை அனுமதிக்க மாட்டார்கள் என்பது எனக்குப் புரிந்தது.

ஓர் அரசியல்வாதியை அவ்வளவு நெருக்கமாக நான் சந்தித்தது அதுதான் முதல் முறை. அது ஒரு கனவுபோல இருந்தது. அங்கிருந்தவர்கள் சக்தி மிக்கவர்களாகத் தெரிந்தனர். அவர்களது விவாதங்களில் பல எனக்குப் புரியவில்லை. ஆனால் முதல்வர் என் குருவிடன் கூறியது என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அந்த முதல்வர் என் குருவிடம், “நல்ல அரசு நிர்வாகம் குறித்துச் சாணக்கியரின் கருத்துக்கள் பற்றி நீங்கள் எழுதியிருந்த கட்டுரையை நான் படித்தேன். அத்தலைப்பில் என் அமைச்சர்களுக்கு உங்களால் ஒரு வகுப்பு எடுக்க முடியுமா?” என்று கேட்டார். என் குருவும் அதற்கு உடனே ஒப்புக் கொண்டார். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி முதல்வர் தன் உதவியாளரைக் கேட்டுக் கொண்டார்.

எனக்கு அர்த்தசாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த குரு குறித்து நான் மிகவும் பெருமை கொண்டிருந்தேன். ஒரு மாநில முதல்வர் போன்ற அதிகார பீடத்தில் இருந்தவர்களும் அவரை நாடினர் என்ற விஷயம் அவர்மீது எனக்கிருந்த மரியாதையை பன்மடங்கு உயர்த்தியது.

“நீ ஓர் அதிர்ஷ்டசாலி என்று நான் ஏற்கனவே கூறியிருந்தது உனக்கு நினைவிருக்கிறதா?” என்று குருவின் வீட்டில் நான் முதல் நாள் சந்தித்த, அவரிடம் முனைவர் பட்டம் பெறப் படித்த அதே இளைஞன் என் காதில் கிசுகிசுத்தான். நான் என் தலையை ஆட்டி அவனை நோக்கிப் புன்முறுவல் பூத்தேன். அவன் என்ன கூறினான் என்பதன் முழு அர்த்தமும் எனக்கு அப்போது புரிந்தது.

துவக்க விழாவுடன் அக்கருத்தரங்கு துவங்கியபோது அந்த மேடையைப் பல பிரபலங்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். குரு, முதல்வரின் அருகில் அமர்ந்திருந்தார். அக்கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிப் புகழ்ந்து தள்ளினர். அந்த நிகழ்ச்சி முடிவடைந்ததும் முதல்வர் விடைபெற்றுக் கொண்டார். ஒரு சிறிய தேநீர் இடைவேளை விடப்பட்டது.

நான் இக்கூட்டம் குறித்து உத்வேகம் கொண்டிருந்தாலும், எதையோ தொலைத்தவன்போல நின்று கொண்டிருந்ததை என் குரு கவனித்தார். அவர் என் முதுகில் தட்டிக் கொடுத்து, “இனிமேல்தான் அர்த்தசாஸ்திரம் குறித்த உண்மையான பாடம் தொடங்கப் போகிறது,” என்று கூறி என்னை உற்சாகப்படுத்தினார்.

அவர் என்னைத் தனியாக அழைத்து, “முதல்வர் சென்றவுடன் பத்திரிகையாளர்களும் இடத்தைக் காலி செய்துவிட்டனர். இனி அர்த்தசாஸ்திரத்தின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிப் பல வல்லுனர்கள்

பேசுவர். அவர்கள் அனைவரிடமிருந்தும் கற்றுக் கொள்வதை உறுதி செய்து கொள். நண்பர்களை உருவாக்கிக் கொள், தொடர்புகளைப் பெருக்கிக் கொள். இது உன் வாழ்நாள் முழுவதும் உனக்கு உதவும்," என்று என்னிடம் கூறினார்.

பின்னர் அர்த்தசாஸ்திரத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்துப் பல அறிஞர்கள் பேசினர். தத்துவம், நிர்வாகம், தலைமைத்துவம், அயலுறவு, சர்வதேச விஷயங்கள் போன்றவை அவற்றில் அடங்கும். ராணுவ வல்லுனர் ஒருவர்கூட அங்கு பேசினார்.

நான் ஒருவன்தான் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றிப் படிக்க விரும்பினேன் என்று அதுவரை நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் ஆணவத்தை அக்கருத்தரங்கு தவிடுபொடியாக்கியது. நான் செய்து கொண்டிருந்த அதே காரியத்தை வேறுபட்ட விதங்களில் பலர் செய்து கொண்டிருந்தனர் என்பதை நான் உணர்ந்தேன்.

ஒரு முறை என் தாத்தா என்னிடம் கூறியது என் நினைவுக்கு வந்தது: "அர்த்தசாஸ்திரம் எந்தவொரு தனிப்பட்ட நபரின் சொத்தல்ல. அது ஒரு நாட்டின் அல்லது ஒரு தலைமுறையின் சொத்துக்கூட அல்ல. சாணக்கியரைப் புரிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் சொந்தமானது அது."

குரு என்னிடம் கூறியிருந்தது சரிதான். அங்கு பேசிய வல்லுனர்களின் பேச்சைக் கேட்டபோது, அர்த்தசாஸ்திரத்தை நான் அவர்களின் பார்வையிலிருந்து புரிந்து கொண்டேன். அது ஒரு சிறப்பான கற்றல் அனுபவமாக இருந்தது.

குருவோடு அங்கு பேசிய பல வல்லுனர்களிடம் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். நான் சௌகரியமாக உணர வேண்டும் என்று அவர்கள் அனைவரும் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர்.

அந்த இரண்டு நாட்களும் நான் அக்கருத்தரங்கின் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, குறிப்பெடுத்துக் கொண்டேன். அர்த்தசாஸ்திரம் குறித்து அங்கு கிடைத்த அனைத்து வெளியீடுகளையும் சேகரித்துக் கொண்டேன். அங்கு வந்திருந்த அறிஞர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டேன். அங்கிருந்த புத்தகக் கண்காட்சியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அர்த்தசாஸ்திரம் குறித்தப் பல புத்தகங்களை நான் வாங்கினேன்.

அக்கருத்தரங்கில் பேசப்பட்ட அனைத்தும் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளிவரும் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அப்புத்தகத்திற்கு முன்பதிவும் செய்து கொண்டேன். அது பின்னர் என்னுடைய சொந்த நூலகத்தை அலங்கரிக்கும்.

கருத்தரங்கு நிறைவடையும் தருவாயில் ஓர் இளம் பேராசிரியர் என்னிடம் வந்து, “குருவின் கீழ் அர்த்தசாஸ்திரம் படித்துக் கொண்டிருக்கும் இளைஞன் நீங்கள்தானே?” என்று கேட்டார்.

“ஆமாம்,” என்று நான் பதிலளித்தேன். அந்த இரண்டு நாட்களில் எப்போதாவது நான் அவரை சந்தித்திருந்தேனா என்று நான் யோசித்தேன். ஆனால் எனக்குச் சரியாக நினைவில்லை.

“வெகு விரைவில் எங்கள் மாநிலத்தில் இதே போன்ற ஒரு கருத்தரங்கை நடத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். அங்கு வந்து உங்களால் ஒரு கட்டுரையை வாசிக்க முடியுமா?” என்று அவர் கேட்டார்.

“நானா?” என்று நான் கேட்டேன். நான் வெலவெலத்துப் போனேன். என்ன பதில் கூறுவதென்று எனக்குத் தெரியவில்லை. “இல்லை, சார். நான் இத்துறைக்குப் புதியவன். நான் ஒரு வல்லுனன் அல்ல. உங்களுக்குத் தெரிந்த அளவு எனக்குத் தெரியாது. நான் குருவிடம் சமீபத்தில் சேர்ந்துள்ள ஒரு மாணவன், அவ்வளவுதான்.”

“குருவின் மாணவன்?” என்று கூறி அவர் புன்னகைத்தார். “அடுத்தக் கருத்தரங்கில் பேசுவதற்கு உங்களைத் தகுதியாக்கிக் கொள்ள அது ஒன்றே போதும்.”

நான் அடுத்த வார்த்தை பேசுவதற்குள் அவர் என்னிடம், “நான் இது குறித்த விவரங்களை உங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கிறேன்,” என்று கூறி அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

# 25

# இறுதி நாட்கள்

“வீட்டிற்குத் திரும்பிப் போகிறோம் என்று குஷியாக இருக்கிறாயா?” என்று குருவம்மா கேட்டார்.

அது கடைசி மாதம் என்பதை நான் உணர்ந்தேன். நல்ல நேரங்கள் வேகமாக ஓடிவிடுகின்றன. நான் என் அப்பா அம்மாவையும் என் நண்பர்களையும் சந்திக்க விரும்பினேன் என்பது உண்மைதான். ஆனால் என் குருகுல நாட்கள் நிறைவடையவிருந்தன என்ற எண்ணம் என்னுள் சோகத்தைத் தோற்றுவித்தது.

அதோடு, ஒரு நாளைக்கு எத்தனை அர்த்தசாஸ்திர சூத்திரங்களைப் படிக்க வேண்டுமென்று எனக்கு நானே நிர்ணயித்து வைத்திருந்த இலக்கிலிருந்தும் நான் வெகுவாகப் பின்தங்கி இருந்தேன். இன்னும் இரண்டாயிரம் சூத்திரங்கள் பாக்கியிருந்தன. எடுத்தக் காரியத்தைச் செய்து முடிக்க என்னால் இயன்ற அனைத்தையும் செய்ய நான் தயாராக இருந்தேன். இது நெடுந்தூர ஓட்டம்போல இருந்தது. ஆனால் இதில் நான் நேரத்திற்கு எதிராக ஓடிக் கொண்டிருந்தேன். நான் ராப்பகலாகப் படித்துக் கொண்டிருந்தேன். பல இரவுகள் தூங்காமல், என் ஆய்வுகளில் அதிகமான நேரத்தைச் செலவிட்டேன்.

பல சமயங்களில், நூலகத்தில் என்னை அறியாமலேயே நான் தூங்கி விழுந்தேன். என் வாழ்க்கையில் நான் அவ்வளவு கடினமாக ஒருபோதும் உழைத்ததில்லை. வகுப்பில் முதல் தர வரிசையில் இருக்கும் புத்திசாலி மாணவர்கள் எவ்வாறு படித்தனர் என்பதை என்னால் உணர முடிந்தது. இவை கொணர்ந்த மன அழுத்தம் அனைத்தும் என் முகத்தில் பிரதிபலித்தது.

நான் ஒரு நாள் என் குருவின் வீட்டிற்குச் சென்றபோது, அவர் என்னிடம், “உனக்கு என்னவாயிற்று?” என்று கேட்டார். “நீ ஏன் இவ்வளவு சோர்வாக இருக்கிறாய்? ஏன் தூங்கி வழிகிறாய்?”

“நான் பாடங்களை முடிக்க வேண்டும் என்பதற்காக ராப்பகலாகப் படித்து வருகிறேன். இங்கு இது என்னுடைய கடைசி மாதமாக இருப்பதால், நான் என் முயற்சிகளை இரட்டிப்பாக்கி இருக்கிறேன்.” அவர் என் முயற்சிகளை மெச்ச வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன்.

ஆனால் அவர் என்னுடைய எதிர்பார்ப்பிற்கு நேர் எதிரானதைச் செய்தார். “இப்படிப் படிப்பதை உடனடியாக நிறுத்து. ஒரு வாரம் ஓய்வெடுத்துக் கொள்,” என்று கூறினார்.

“என்ன கூறினீர்கள்? ஓய்வெடுத்துக் கொள்ளவா?” அவர் கூறியதை நான் சரியாகக் காதில் வாங்கிக் கொண்டேனா என்று எனக்கு சந்தேகமாக இருந்தது.

“அளவுக்கதிகமாக உழைக்காதே. உன் செயற்திறன் மேலும் மோசமடைவதற்குத்தான் அது உதவும்,” என்று அவர் கூறினார். “இந்த கிராமத்தைச் சுற்றிப் பல அழகான இடங்கள் உள்ளன. கடந்த ஐந்து மாதங்களில் நீ ஆசிரமத்தைவிட்டு வேறு எங்கும் செல்லவில்லை. இந்த இயற்கைப் பகுதிகளை நீயாகவே சென்று சுற்றிப் பார்.”

அந்த வார்த்தைகள் எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தன. பிய்ந்துவிடும் நிலைவரை இழுக்கப்பட்டிருந்த ரப்பர் வளையம் ஒன்றைத் தளர்த்தியதுபோல இருந்தது அது.

குருவும் குருவம்மாவும் ஒரு சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தனர். அருகிலிருந்த பல புராதனக் கோவில்கள், மலைகள், கடலோரப் பகுதிகள் ஆகியவை அதில் அடங்கியிருந்தன. அவர்கள் தங்களுடைய நண்பர்களை அழைத்துப் பேசி, நான் அப்பகுதிகளில் தங்கிக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தனர்.

“நீ கிளம்பும்போது கவனமாக அர்த்தசாஸ்திரம் புத்தகத்தை இங்கே விட்டுச் செல்.” இது குருவின் கண்டிப்பான உத்தரவு. குருவம்மா புன்னகைத்தவாறு, “சமயங்களில், சில விஷயங்களை நன்றாகப் புரிந்து கொள்வதற்குச் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்,” என்று கூறினார்.

நான் திரும்பி வந்தபோது என் ஆற்றல் முடுக்கிவிடப்பட்டிருந்தது. எந்த சவாலையும் எதிர்கொள்ள நான் தயாராக இருந்தேன். குருவின் உதவியுடன், மீதமிருந்த அனைத்தையும் அந்த மாதம் முடிவதற்கு ஒரு வாரம் இருந்தபோது நான் படித்து முடித்துவிட்டேன்.

“சரி, இப்போது தேர்வுக்கு உன்னைத் தயார் செய்து கொள்,” என்று குரு கூறினார். நான் கடும் அதிர்ச்சியடைந்தேன்! இன்னொரு தேர்வு எழுதுவதற்காக நான் இங்கு வரவில்லை. ஒருவருடைய அறிவை மூன்று மணிநேர வினாத்தாள் மூலம் சோதனை செய்யும் கல்விமுறையை நான் கடுமையாக வெறுத்தேன். துரதிர்ஷ்டவசமாக, அவரை எதிர்த்து என்னால் பேச முடியாது. நான் குருவின் அறிவுறுத்தல்களை எந்தக் கேள்வியும் கேட்காமல் பின்பற்ற வேண்டிய நிலையில் இருந்தேன்.

“சரி, நான் எப்போது வினாத்தாளுக்கு பதிலளிக்க வேண்டும்?” என்று

நான் கேட்டேன். அது தெரிந்தால், அதற்கு ஏற்றவாறு என்னைத் தயார் செய்து கொள்ளலாம்.

“என்ன வினாத்தாள்?” என்று என்னை அவர் கிண்டல் செய்தார். “நீ இங்கு ஆறு மாதம் அர்த்தசாஸ்திரம் குறித்துப் படித்ததை வைத்து ஓர் ஆய்வுக் கட்டுரை எழுது. நீ அர்த்தசாஸ்திரத்தை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டுள்ளாய் என்பதை அது காட்டும்.” நான் ஆழமாகப் பெருமூச்சுவிட்டேன். என் மனம் நிம்மதியானது.

அர்த்தசாஸ்திரம் குறித்த என் முதல் ஆய்வுக் கட்டுரையை நான் அப்போது எழுதினேன். என் கட்டுரை தொழில்முறைரீதியான ஒரு கட்டுரைபோலத் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக நூலகத்திலிருந்த சில ஆய்வு இதழ்களை நான் படித்தேன். என்ன இருந்தாலும் இப்போது நான் ஓர் அறிஞர் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது அல்லவா!

நான் என் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்த நாளன்று குரு என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

“உன் கட்டுரை பிரமாதமாக இருந்தது. அர்த்தசாஸ்திரத்தைப் பற்றியும் அதை நவீன வர்த்தகத்தில் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது குறித்தும் நீ கொண்டிருக்கும் சிந்தனையோட்டம் எனக்குப் பிடித்திருந்தது. உன் கண்ணோட்டம் தனித்துவமாக இருந்தது,” என்று அவர் கூறினார். நான் என் தேர்வில் தேர்ச்சியடைந்துவிட்டேன்.

“இப்போது உன் படிப்பு முடிந்துவிட்டது,” என்று கூறி அவர் புன்னகைத்தார். “நீ கிளம்புவதற்கு முன்பு மறக்காமல் உன் சான்றிதழை எடுத்துக் கொள்.”

“என்னது, சான்றிதழா?” என்று நான் கேட்டேன். வழக்கமாக இது போன்ற ஒன்றைக் கொடுப்பார்களா?

“எங்கள் ஆசிரமத்தில் அர்த்தசாஸ்திரம் குறித்து முறைப்படி ஆய்வு செய்த முதல் இந்தியவியல் மாணவன் நீதான். நாங்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் ஆய்வு நிறுவனம் என்பது உனக்குத்தான் ஏற்கனவே தெரியுமே,” என்று அவர் விளக்கினார்.

“ஒருசில நாட்களுக்கு முன்பு, நானும் அந்த அறங்காவலரும் படிப்புக் குறித்த உன் அர்ப்பணிப்பைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அப்போது உனக்கு ஒரு சான்றிதழ் வழங்குவது என்று நாங்கள் முடிவு செய்தோம்.” அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டியிருந்ததாக நான் நினைத்தேன்.

“அதோடு, இந்த ஆசிரமத்தில் தங்கியிருக்கும் மற்றொரு மூத்த சாது ஒருவரும் உன் அர்ப்பணிப்பால் கவரப்பட்டிருந்தார். அவரும் இதையே

பரிந்துரைத்தார்." ஆசிரமத்தில் இருந்தவர்கள் என்னை இவ்வளவு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரியாது.

பின்னர் மென்மையான குரலில் அவர் தொடர்ந்தார்: "எல்லா ஆசிரியர்களும் கனவு காணும் ஓர் அற்புதமான மாணவன் நீ." குரு இவ்வாறு கூறியபோது நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன்.

"இச்சான்றிதழ் உன் வாழ்நாள் முழுவதும் உனக்கு உதவும். இது இன்னுமொரு காகிதம்போல உனக்கு இப்போது தோன்றலாம். ஆனால் பின்னர் இது உனக்குப் பல விதங்களில் பலனளிக்கும். இங்கு நீ அர்த்தசாஸ்திரத்தைப் படித்தாய் என்பதற்கான சான்று இது." குருவால் பின்னால் வரவிருப்பவற்றை முன்கூட்டியே அறிய முடியும் என்பதுபோல அவரது குரல் ஒலித்தது.

"உங்களுடைய கட்டணம் எவ்வளவு? மன்னிக்கவும். நான் எவ்வளவு குரு தட்சணை கொடுக்க வேண்டும்?" என்று நான் கேட்டேன். புறப்படும் முன்பு என் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள விரும்பினேன்.

"கட்டணம் எதுவும் கிடையாது. ஆனால் அர்த்தசாஸ்திரத்திலிருந்து நீ கற்றுக் கொண்டுள்ளவற்றை உன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்ற உன் அர்ப்பணிப்பை ஒருபோதும் கைவிட்டுவிடாதே. சாஸ்திரங்கள் படிப்பதற்கல்ல, வாழ்க்கையில் பின்பற்றுவதற்குத்தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்." இதைக் கேட்டதும் என் கண்களில் கண்ணீர் உருண்டோடியது.

ஆசிரமத்தில் நான் இருந்த கடைசி நாளன்று அந்த அறங்காவலரைச் சந்தித்து அவருக்கு நன்றி கூறினேன்.

"ஐயா, நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு, வேறொன்றையும் உங்களிடம் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்." அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். "நானும் உங்களைப் போன்ற உன்னதமானதொரு தொழிலதிபராக ஆக விரும்புகிறேன்," என்று தெரிவித்தேன். அவர் எதுவும் கூறவில்லை. மாறாக, அவர் என்னை நோக்கி ஒரு புன்னகையை வீசினார்.

பேருந்து நிறுத்தத்திற்குப் புறப்படும் முன்பாக, நான் கடைசி முறையாக என் குரு மற்றும் குருவம்மாவின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டேன். அப்போது ஒரு சிறிய குரல் என்னுள் ஒலித்தது: "உனக்குள் இருக்கும் அறிவைக் கொண்டு இந்த உலகை வெல்லப் புறப்படு. இப்போது நீ அதற்குத் தயாராகிவிட்டாய்."

என் வாழ்க்கையின் ஓர் அத்தியாயம் முடிந்தது. வேறோர் அத்தியாயம் தொடங்கியது.

# 26

## வீடு திரும்புதல்

ரயிலில் நான் நகர்ப்புறத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது நான் இதுவரை வாழ்ந்து வந்திருந்த வாழ்க்கையை அசை போட்டுக் கொண்டிருந்தேன். என் தாத்தா, சிறு வயதில் புத்தகங்கள்மீது எனக்கிருந்த ஈடுபாடு, அர்த்தசாஸ்திரம் படிக்க வேண்டும் என்ற தாகம், குருகுல முறைப்படி அதை ஒரு குருகுலத்தில் கற்றுக் கொண்டது என்று என் மனம் அலைந்தது.

பின்னர் என் நினைவு தற்காலத்திற்குத் திரும்பியது. என் மனம் ஓர் அலாதியான கிறக்க நிலையில் இருந்தது. நான் கடந்த ஆறு மாதங்களை, வருங்காலம் பற்றிய எந்தக் கவலையுமின்றி சுகமாக அனுபவித்தேன்.

நான் என்னுடன் மிகவும் ஒன்றிப் போயிருந்தேன். இதில் சிறப்பான விஷயம் என்னவென்றால், எந்த விதமான எதிர்பார்ப்புகளுமின்றி, நான் தானாகவே எல்லாவற்றையும் செய்திருந்தேன்.

இறுதியில், நான் என் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் துவங்கினேன். நான் என் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவுடன், நகர்புற வாழ்க்கை என்னுடைய அமைதியான மனநிலையை மெதுவாக அரிக்கத் துவங்கிவிடும்.

“அடுத்து நீ என்ன செய்யப் போகிறாய்?” என்று அனைவரும் கண்டிப்பாகக் கேட்பர். அதற்கான பதில் என்னிடம் இருந்ததா என்று உறுதியாக எனக்குத் தெரியவில்லை. உலகம் எனக்காக ஒரு பாதையை வகுத்துக் கொடுக்க அனுமதிக்காமல், எனக்கென்று ஒரு சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள நான் விரும்பினேன்.

நான் என் வீட்டை அடைந்தபோது பத்தாண்டுகள் கழிந்திருந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. பல விஷயங்கள் நான் விட்டுச் சென்றபடி அப்படியே இருந்தாலும், நிறைய விஷயங்கள் மாறியிருந்தன.

படுதாக்கள் மாறியிருந்தன. அறைகலன்களில் மாற்றம் ஏதுமில்லை. பல புதிய புத்தகங்கள் சேர்ந்திருந்தன. ஆனால் புத்தக அலமாரி அப்படியே இருந்தது.

தன் மகன் மீண்டும் வீட்டுக்கு வந்துவிட்டான் என்ற பூரிப்பில் அம்மா

வேகமாக ஓடி வந்து, "முதலில் சாப்பிடு," என்று கூறினார். அவர் எனக்கு குருவம்மாவை நினைவுபடுத்தினார். நான் குருவம்மாவை முதன்முதலாகப் பார்த்தபோது அவரும் இதையேதான் சொன்னார்.

"அப்புறம், பயணம் எப்படியிருந்தது?" என்று அப்பா கேட்டார். இக்கேள்வியை என் குரு கேட்கிறாரோ என்று நான் வியந்தேன். ஆறு மாதங்களுக்கு முன்பு நான் விட்டுச் சென்றிருந்த இடத்துடன் மறு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள எனக்குச் சிறிது காலம் பிடித்தது.

"நீ எங்கே காணாமல் போய்விட்டாய் என்று உன் நண்பர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்," என்று அப்பா கூறினார். நான் இங்கு இல்லாமல் இருந்தபோது என் நண்பர்கள் என்னைப் பற்றி விசாரித்தது குறித்து அவர் நினைவுகூர்ந்தார்.

"நீ ஒருசில குடும்ப நிகழ்ச்சிகளையும் விழாக்களையும் தவறவிட்டுவிட்டாய். இதோ இப்புகைப்படங்களைப் பார்," என்று அம்மா தன் கதைகளோடு எங்கள் உரையாடலில் புகுந்தார்.

பின்னர் நான் என் அனுபவங்களை விவரிக்கத் தொடங்கினேன். நான் வாழ்ந்து வந்த வாழ்க்கைமுறை பற்றி, ஆசிரமத்தின் தெய்வீகச் சூழல் பற்றி, என் தியான அறையாக மாறிவிட்டிருந்த நூலக மூலை பற்றி, நான் அங்கு தங்கியிருந்த காலகட்டத்தில் குருவும் குருவம்மாவும் என்னை கவனித்துக் கொண்ட விதம் பற்றி, மாநில முதல்வர் கலந்து கொண்டிருந்த கருத்தரங்கிற்கு நான் சென்றது பற்றி, அடுத்து வரவிருந்த ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்ற எனக்கு விடுக்கப்பட்ட அழைப்புப் பற்றி நான் பெற்றோரிடம் கூறினேன்.

மிக முக்கியமான விஷயம் ஏதோ ஒன்று தனக்குத் திடீரென்று நினைவுக்கு வந்ததுபோல என் அப்பாவின் முகக்குறிப்பு மாறியது. "சில மாதங்களுக்கு முன்பு உன் கல்லூரிப் பட்டப்படிப்பு முடிவுகள் வெளியாயின. நீ அருமையான மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறாய். ஒரு குறிப்பிட்டப் பாடத்தில் நீ உன் கல்லூரியிலேயே முதலாவதாக வந்துள்ளாய்," என்று கூறினார்.

என் அப்பாவின் கருத்துப்படி இதுதான் என் கல்லூரி வாழ்வில் நான் அடைந்திருந்த மிகப் பெரிய சாதனை. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, அது என்னைப் பெரிதாகப் பரவசப்படுத்தவில்லை. நான் வெறுமனே என் தோள்களைக் குலுக்கிவிட்டு, "அப்படியா?" என்றேன்.

அதே சமயம், என் குரு எனக்குக் கொடுத்திருந்த அர்த்தசாஸ்திர ஆய்வு குறித்தச் சான்றிதழை நான் என் பையிலிருந்து மெதுவாக வெளியே எடுத்தேன். என் கல்லூரிப் பட்டத்தைவிட இச்சான்றிதழை நான்

பெருமையாகக் கருதினேன்.

என் அப்பா அம்மா இருவரும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். நான் ஒரு சான்றிதழுடன் திரும்பி வருவேன் என்று என்னைப்போலவே அவர்களும் எதிர்பார்த்திருக்கவில்லை.

என் அர்த்தசாஸ்திரச் சான்றிதழைப் பார்த்த என் அம்மா, “நீ நல்ல மதிப்பெண்களைப் பெற்றுள்ளாய்,” என்று குதூகலித்தார்.

“என்ன மதிப்பெண்கள்?” எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

“நீ 92 சதவீத மதிப்பெண்களைப் பெற்றுள்ளாய். ஏ பிளஸ் கிரேடு கொடுக்கப்பட்டுள்ளது. இது சான்றிதழில் இருக்கிறது.”

நான் என் சான்றிதழை உற்று கவனித்தேன். குரு அச்சான்றிதழை என்னிடம் கொடுத்தபோது என் பெயர் சரியாக எழுதப்பட்டிருந்ததா என்பதையும், அது எந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் மட்டுமே நான் பார்த்தேன்.

அச்சான்றிதழில் என் மதிப்பெண்களும் கிரேடும் அச்சிடப்பட்டிருந்ததை நான் கவனிக்கவே இல்லை. என் மதிப்பெண்கள் சில காரணிகளைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். அவை எவையெவை என்பதைக்கூட நான் அறிந்திருக்கவில்லை. எனக்குத் தெரியாமலேயே நான் ஓர் ஆய்வு அறிஞராக ஆகியிருந்தேன். குரு அதை ஏன் ஒரு தேர்வென்று அழைத்தார் என்பது இப்போதுதான் எனக்குப் புரிந்தது.

ஆகா, நான் என் வாழ்க்கையில் ஒருபோதும் இவ்வளவு நல்ல மதிப்பெண்களைப் பெற்றதே இல்லை.

ஆனால் நான் ஒரே சமயத்தில் என் கல்லூரியிலும் இந்தியவியல் ஆய்வு மையத்திலும் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்றிருந்தேன். இதுதான் குரு அனுக்கிரகம், ஈஸ்வர அனுக்கிரகம், மற்றும் சாஸ்திர அனுக்கிரகமா?

“உன் நண்பர்கள் இன்று மாலையில் இங்கு வருவதாகக் கூறியுள்ளனர்,” என்று அம்மா தெரிவித்தார்.

என் நண்பர்களை சந்திப்பதில் எனக்குப் பெரிய ஆர்வம் இருக்கவில்லை. அதே சமயம், கடந்த ஆறு மாதங்களில் என்ன நடந்திருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள நான் விரும்பினேன்.

மாலையில் நாங்கள் சந்தித்துக் கொண்டபோது, நாங்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். கல்லூரித் தேர்வில் தான் தேர்ச்சியடைவேன் என்று தான் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை என்று என் நண்பர்களில் ஒருவன் கூறினான். இன்னொருவன் உடனடியாக ஒரு வேலையில் சேர இருந்தான்.

வகுப்புத் தோழி ஒருத்திக்கு விரைவில் திருமணம் நடக்கவிருந்தது. அவள் எப்போது பட்டப்படிப்பை முடிப்பாள் என்று அவளுடைய பெற்றோர் காத்திருந்ததுபோல இருந்தது அவர்களுடைய செயல்.

வேறு சிலர் வேலை தேடிக் கொண்டிருந்தனர். ஒருவன் மேற்படிப்பைத் தொடரவிருந்தான்.

"நீ என்ன செய்யப் போகிறாய்?" என்னை நோக்கி இக்கேள்வி வீசப்படும் என்பதை நான் அறிந்திருந்தேன்.

அதனால் அதற்கான பதிலை நான் தயாராக வைத்திருந்தேன்: "நான் ஒரு தொழிலதிபராக ஆகப் போகிறேன்!"

அவர்கள் அனைவரும் பெரும் ஆச்சரியம் அடைந்தனர். எங்களுடைய பல வருடப் பழக்கத்தின்போது நான் ஒருபோதும் இத்தகைய ஆசையை வெளிப்படுத்தியதில்லை. அவ்வப்போது என்னிடம் வந்து போகும் எண்ணச் சிதறல்களில் இதுவும் ஒன்று என்று அவர்கள் கருதியிருக்கலாம்.

"நான் உண்மையாகத்தான் கூறுகிறேன். நான் ஒரு தொழிலதிபராக ஆகப் போகிறேன். நான் செல்வத்தைச் சேர்க்க விரும்புகிறேன்." என் எண்ணத்தை அவர்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன்.

"எந்த மாதிரியான தொழிலில் இறங்கப் போகிறாய்?" என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

அந்த அறங்காவலரை மனத்தில் வைத்துக் கொண்டு, "ஓர் உன்னதமான தொழிலில்," என்று நான் கூறினேன்.

"சரி, அது எந்தப் பிரிவில் அடங்கும்?"

எனக்கு அது குறித்துச் சுத்தமாக எதுவும் தெரியாது.

அதனால் நான் சிந்திக்கத் துவங்கினேன் . . .

# 27

## வழிகாட்டிய சோதிடம்

மீண்டும் நான் அப்பாவின் உதவியை நாடினேன்.

"அப்பா, நான் ஓர் உன்னதமான தொழிலதிபராக ஆக விரும்புகிறேன். நான் வேறு எவரின் கீழும் வேலை செய்ய விரும்பவில்லை," என்று நான் துவக்கினேன். என் அப்பா பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நீ கூறுவதெல்லாம் சரிதான். ஆனால் நீ எந்த விதமான தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதை நீ தெளிவாக முடிவு செய்ய வேண்டும்," என்று கூறினார். தெளிவான திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அவர் என்னைத் தூண்டினார். ஆனால் நான் ஆழ்ந்த சிந்தனையுடன் இவ்வாறு பதிலளித்தேன்:

"என்னைப் பெரும் பணக்காரனாக ஆக்கும் ஒரு தொழில்!"

என் முதல் பதிலைவிட இது உறுதியான ஒன்று என்பதுபோல அவர் பாவித்தார். பின் என்னிடம், "சரி, எவ்வளவு பணம்?"

நான் மேலும் பிதற்றிக் கொண்டிருந்தேன்: "பணக்காரனாக, பெரிய பணக்காரனாக . . . உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக நான் விரும்புகிறேன்."

திடீரென்று கடுமையான அமைதி நிலவியது. நான் கூறிய வார்த்தைகள் எங்களை உறைய வைத்துவிட்டதுபோல இருந்தது.

இப்படிப்பட்டப் பக்குவமற்ற ஒரு தகவலைத் தெரிவித்து நான் என் குழப்பநிலையை வெளிப்படுத்திக் கொண்டேன். என் யோசனை குறித்து ஆழமாகச் சிந்திக்காமல் எனக்குத் தோன்றியதையெல்லாம் கூறி என் முட்டாள்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினேன்.

"நல்லது. எனக்கு உன் யோசனை பிடித்திருக்கிறது," என்று அப்பா என்னை ஊக்குவிக்க முயன்றார். "உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக விரும்புவதில் எந்தத் தவறும் கிடையாது." அப்பா என்னை லேசாக சீண்டியதாக எனக்குத் தோன்றியதால் நான் எரிச்சல் அடைந்தேன்.

"என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா," என்று கூறியபோது எனக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. "வாழ்க்கையில் நான் என்ன செய்யப் போகிறேன் என்று எல்லோரும் கேட்கும்போது நான் மிகவும்

சலிப்படைந்துவிடுகிறேன்.”

என் அம்மா என் தோளில் கையை வைத்து மெதுவாக அழுத்தினார். அப்பாவும் என் மனநிலையை உற்சாகப்படுத்த முயன்றார். “நான் உண்மையாகத்தான் கூறுகிறேன். பிரம்மாண்டமாகக் கனவு காண்பதிலும், உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக விரும்புவதிலும் எந்தத் தவறும் கிடையாது. பல தலைமுறைகளுக்கும் ஒரு நல்ல முன்மாதிரியாக உன்னால் விளங்க முடியும். நீ உன் கனவை அடைய என்னால் உனக்கு உதவ முடியும்.” இந்த வார்த்தைகள் என் மனத்திற்கு இதமாக இருந்தன.

“இதைப் பற்றி மேலும் சொல். உனக்கு இந்த எண்ணம் எப்படி ஏற்பட்டது?” என் அப்பா உண்மையிலேயே இதைத் தெரிந்து கொள்ள விரும்பினார் என்பதை என்னால் உணர முடிந்தது.

நாம் நிம்மதியடைந்தேன். தங்கள் குழந்தைகள் இதுபோன்ற பிரம்மாண்டமான இலக்குகளை வரித்துக் கொண்டால், பெரும்பாலான நடுத்தர வர்க்கப் பெற்றோர் அதற்குக் கண்டனம் தெரிவிப்பர். ஆனால் என் பெற்றோர் நான் என் கனவைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்று விரும்பினர். அவர்கள் துருவித் துருவிக் கேட்டக் கேள்விகள் நான் திசையறியாது தவித்தேன் என்பதை வெளிப்படுத்தின.

நான் இப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள விரும்பியதால், ஆசிரமத்தில் நான் சந்தித்த அந்த அறங்காவலரைப் பற்றிய நினைவுகளை அசை போட்டேன்.

செல்வத்தை உருவாக்குவது என்பது ஓர் ஆசீர்வாதம் என்று அவர்தான் கூறினார் என்பதை நான் என் பெற்றோரிடம் தெரிவித்தேன். அவர் ஏராளமான செல்வத்தைக் குவித்திருந்ததால், அவரால் பல நல்ல காரியங்களை மேற்கொள்ள முடிந்தது என்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

“ஆனால் எந்த வகையான தொழிலைத் துவக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை,” என்று கூறி நான் என் இயலாமையை வெளிப்படுத்தினேன்.

“கவலைப்படாதே. சோதிடம் உனக்கு வழிகாட்டும்,” என்று என் அப்பா கூறினார்.

அது எனக்கு வினோதமாகப்பட்டது. அப்பா என்ன சொல்ல வருகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. என் குழப்பத்தைக் கண்ட அவர் இவ்வாறு கூறினார்:

“சோதிடம் என்பது ஒரு தெய்வீக அறிவியல். நீ தற்போது இருப்பது போன்ற சிக்கலான சூழ்நிலையில் இருக்கும் மனிதர்களுக்கு

வழிகாட்டுவதற்காக நமது ரிஷிகள் இதை உருவாக்கியுள்ளனர்.” என் அப்பாவுக்கு சோதிடத்தில் ஈடுபாடு உண்டு என்பது எனக்கு அதுவரை தெரியாது.

“பெரும்பாலான மக்களுக்கு சோதிடம் குறித்து அறவே தெரியாது. அல்லது சோதிடம் குறித்தும் சோதிடர்கள் குறித்தும் அவர்கள் தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்.”

இதனால் என் சந்தேகம் தீரவில்லை. அதை மேலும் விளக்குமாறு நான் அவரிடம் கூறினேன்.

“சோதிடத்திற்கும் சோதிடர்களுக்கும் இடையே ஒரு வேறுபாடு உள்ளது. சோதிடம் என்பது ஓர் அறிவியல். சோதிடர்கள் அறிவியலறிஞர்கள். ஓர் அறிவியலையும் அதன் விதிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளாத ஒரு தவறான அறிவியலறிஞரை நாம் எதிர்கொண்டால், அந்த அறிவியலே கச்சிதமற்றது என்று நாம் கருதுவோமா?” என்று அவர் கேட்டார். அதில் பொருள் இருந்தது.

“ஓர் அறிவியலைச் சரியாக எடுத்துரைக்கக்கூடிய ஓர் அறிவியலறிஞர்தான் நமக்குத் தேவை,” என்று அவர் வலியுறுத்தினார். “அதாவது, நமக்காக சோதிடத்தைத் தெளிவாக எடுத்துரைக்கக்கூடிய ஒரு சோதிடரைக் கண்டுபிடிப்பதுதான் இங்கு முக்கியம்.”

கடந்த பல வருடங்களாக, சோதிடர்கள், சோதிடச் சமூகத்தின்மீது உருவாக்கி வைத்திருந்த களங்கமான பெயர் குறித்தும் அவர் கவலை கொண்டிருந்தார்.

“மக்கள் இந்த அறிவியலின்மீதே அவநம்பிக்கை கொள்ளும் அளவுக்கு மோசமான வியாபாரத்தனமான விஷயங்களில் பல சோதிடர்கள் இறங்கியுள்ளது துரதிர்ஷ்டவசமானது.”

சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்டிருந்த ஒன்று என் நினைவுக்கு வந்தது:

> ஒலியியல்**,** சடங்குகள்**,** இலக்கணம்**,** சொற்பிறப்பியல்**,** யாப்பு**,** மற்றும் சோதிடம் **-** இவை அனைத்தும் வேதாங்கங்கள்**.** ***(1.3.3)***

ஆமாம், சாணக்கியர் சோதிடத்தையும் வானியலையும்கூடப் படித்தறிந்து, தான் அறிவுரை வழங்கி வந்த மன்னர்களுக்கு வழிகாட்ட அந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டார்.

“சோதிடத்தின் மூலம் மக்கள் தங்கள் வருங்காலத்தை அறிந்து கொள்ள விரும்புகின்றனர் என்பது சோதிடத்தில் உள்ள இன்னொரு முக்கியமான பிரச்சனை. ஆனால் யதார்த்தத்தில் சோதிடத்தால்

வருங்காலத்தைச் சுட்டிக்காட்ட மட்டுமே முடியும். தங்கள் வருங்காலத்தை மக்கள் தாங்களேதான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.”

இந்த அறிவியல் குறித்து மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்திற்கு வழிவகுத்தக் காரணிகளை நான் புரிந்து கொள்ள வேண்டும் என்று என் அப்பா விரும்பினார்.

என் முகத்தில் தொக்கி நின்ற கேள்விப் பார்வை அவர் தன் பேச்சைத் தொடர அவரை ஊக்குவித்தது.

“சரி, அதை நாம் இப்படிப் பார்க்கலாம்,” என்று அவர் துவக்கினார். “ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏதாவது ஒரு திறமை ஒளிந்திருக்கும். அதை நாம் அந்த மனிதனுக்கு இறைவன் கொடுத்த வரம் என்று அழைக்கிறோம். ஆனால் நம்மிடமுள்ள அத்திறமையில் நம் கவனத்தைக் குவிப்பதற்கு பதிலாக, முற்றிலும் புதியதொரு விஷயத்திற்கு நாம் தயாராக இருக்கிறோமா என்பதைக் குறித்துச் சிறிதும் யோசிக்காமல், நாம் கண்மூடித்தனமாகப் பிறரைப் பிரதியெடுக்கத் துடிக்கிறோம்.” இது எனக்குப் புரிந்தது.

அவர் மேலும் தொடர்ந்து பேசினார். “ஒரு கழுதையால் பாட முடியாது. அது அதற்காகப் படைக்கப்பட்டதல்ல. ஆனால் ஒரு கழுதையால் செய்ய முடிகின்றவற்றைப் பிற விலங்குகளால் செய்ய முடியாது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, அதன் பொதி சுமக்கும் திறன். ஒரு கழுதையைப் பாட வைக்க முயல்வது முற்றிலும் தவறான ஒரு செயல்.”

இன்றுள்ள இளைஞர்கள், தங்களுக்கு விருப்பம் இல்லாதபோதிலும், மருத்துவம், பொறியியல் போன்ற சில துறைகளைத் தேர்ந்தெடுக்கக் கட்டாயப்படுத்தப்படுவதோடு, கழுதையின் எடுத்துக்காட்டை என்னால் சுலபமாக ஒப்பிட முடிந்தது.

தாம் எதில் தேர்ந்தவர்கள் என்பதை ஒவ்வொருவராலும் கண்டுபிடிக்க முடிந்தால், அதன் அடிப்படையில் நம்மால் நம் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்.

“இங்குதான் சோதிடம் கைகொடுக்கிறது. ஒருவர் எதில் தேர்ந்தவராக இருக்கிறார் என்பதை அவருக்குக் கண்டுபிடித்துக் கொடுப்பதோடு, அவர் தன் இலக்கை வேகமாக அடையத் தேவையான வரைபடத்தையும் அது அளிக்கிறது.” சோதிடம் குறித்து நான் கொண்டிருந்த சில தவறான கண்ணோட்டங்களைக் களைய இது எனக்கு உதவியது.

“ஆனால் அப்பாதையில் நீதான் நடக்க வேண்டும் என்பதையும்,

வெறுமனே வரைபடத்தைப் பின்பற்றுவது உனக்கு உதவாது என்பதையும் நீ ஒருபோதும் மறக்கக்கூடாது," என்று கூறி அவர் என்னைப் பார்த்து புன்னகைத்தார்.

"ஒரு நல்ல அறிவியலறிஞரை எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று நான் கேட்டேன். இன்றுகூட உண்மையிலேயே நல்ல சோதிடர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகம் என் கேள்வியில் தொக்கி நின்றது.

"இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, என் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். அவர் சோதிடத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அவருடன் பேசி உன்னைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்," என்று கூறிவிட்டு, அப்பா அவரது தொலைபேசி எண்ணைத் தேடத் துவங்கினார்.

என் வாழ்க்கையின் மிக முக்கியமான தீர்மானமான, என் தொழில்வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதற்குச் சாணக்கியரின் ஞானம் என் உதவிக்கு வந்தது.

அது ஒரு துவக்கம்தான்.

என் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், சோதிடம், கடவுளின் தெய்வீக ஒளிபோல (சோதிபோல) எனக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக இருந்து வந்துள்ளது.

அதனால்தான் அது சோதிடம் என்றழைக்கப்படுகிறது.

# 28

## சமஸ்கிருதப் பேராசிரியர்

அச்சோதிடர் எங்களைத் தன் அலுவலகத்திற்கு வரும்படி அழைத்தார். எங்கள் நகரத்திலிருந்த பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறையில் அவர் ஒரு மூத்தப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

நான் இரண்டாவது முறையாக ஒரு சமஸ்கிருதப் பேராசிரியரைச் சந்திக்கிறேன். முதலாவது என் குரு. அத்துறையின் எல்லா மூலைகளிலும் புத்தகங்கள் குவிந்து கிடந்தன. நான் கற்பனை செய்து வைத்திருந்ததைவிட அத்துறை சுறுசுறுப்பாக இருந்தது.

நாங்கள் அப்பேராசிரியரின் அறையில் உட்கார்ந்தவுடன் அவர் என் அப்பாவிடம், “கடந்த சில வருடங்களாக சமஸ்கிருதப் படிப்பிற்கான ஆர்வம் அதிகரித்துள்ளது. எங்கள் பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து வகுப்புகளும் நிறைந்துவிட்டன. அது தவிர ஒவ்வொரு வருடமும் ஏராளமான மாணவர்கள் தங்கள் பெயர்களைக் காத்திருப்புப் பட்டியலில் பதிவு செய்து வைத்துள்ளனர்,” என்று கூறினார்.

பல வருடங்களுக்கு முன்பு சமஸ்கிருதத்தைப் பரப்ப நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் அப்பேராசிரியர் என் தந்தையை முதன்முதலாகச் சந்தித்திருந்தார். பின் அவர்களுடைய நட்பு நன்றாக வளர்ந்திருந்தது. அவர்கள் இருவருக்கும் ஒருவரையொருவர் பிடிக்கும்.

“நான் உங்கள் மகனின் ஜாதகத்தைக் கணித்துள்ளேன்,” என்று அவர் விஷயத்திற்கு வந்தார்.

என் ஜாதகம் அவர் முன் இருந்தது. அதோடு, கையால் எழுதப்பட்டிருந்த சில குறிப்புகள் அடங்கிய தாளும் அருகே இருந்தது. அடுத்து அவர் என்ன கூறவிருந்தார் என்று நான் ஆவலுடன் காத்திருந்தேன்.

“இது விசேஷமான ஜாதகம். நான் என் வாழ்க்கையில் எண்ணற்ற ஜாதகங்களைப் பார்த்துள்ளேன். ஆனால் இது மிகச் சிறப்பானதொரு ஜாதகமாக இருக்கிறது. உங்கள் மகனுக்கு மிகவும் வலுவான மனத்திடம் உள்ளது. அவன் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதில் வெற்றியடைய அது அவனுக்கு உதவும்.” என் அப்பா முன்னால் வேறு ஒருவர் என்னைப் பற்றி புகழ்ந்து பேசுவது குறித்து நான் மிகவும்

மகிழ்ச்சியடைந்தேன்.

அவர் தன் கணிப்புகளைச் சுட்டிக்காட்டி, "அவனது ஜாதகத்தில் வியாழன் இருக்கும் இடம்தான் எல்லாவற்றையும்விடச் சிறப்பானது," என்று கூறினார்.

எனக்குத் திடீரென்று சுவாரசியம் ஏற்பட்டது. "சார், வியாழன் பற்றிக் கூறினீர்களே அது என்ன?" என்று அவரிடம் கேட்டேன்.

"வேத சோதிடவியலில் வியாழனுக்கு குரு என்று பெயர். அது அதிர்ஷ்டத்தையும் செல்வத்தையும் குறிக்கும் ஒன்று. மதம், தத்துவம், ஆன்மீகம், செல்வம், சந்ததி ஆகியவற்றின்மீது வியாழன் ஆதிக்கம் செலுத்தும். இது சாதகமாக இருந்தால், இக்கிரகம், பெயர், புகழ், வெற்றி, கௌரவம், செல்வம், நல்ல உறவுகள் ஆகியவற்றைக் கொடுக்கும்."

"வேத சோதிடவியலா?" நான் மேலும் தகவலை வேண்டினேன்.

"இவ்வுலகில் பலவகையான சோதிடங்கள் இருக்கின்றன. இந்தியாவில் நாம் வேத சோதிடவியலைப் பின்பற்றுகிறோம். வேதங்கள் இந்தியத் தத்துவவியலின் அடிப்படையாக விளங்குவதுதான் அதற்குக் காரணம். உலகின் பிற பகுதிகளிலிருக்கும் பிற வகைகளைப் பற்றியும் அவர் தெரிவித்தார்.

பின் என் காலை வாரும் நோக்கத்துடன் அவர் என்னிடம், "உன் சாணக்கியர்கூட, அரசர்கள் வேதங்களைப் படிக்க வேண்டுமென்று அர்த்தசாஸ்திரத்தில் கூறியுள்ளார்," என்று கூறினார். அப்பா என்னைப் பற்றி அவரிடம் ஏற்கனவே கூறியிருந்திருக்க வேண்டும்.

சாணக்கியர் இதைப் பற்றி எங்கு கூறியிருந்தார் என்று யோசித்தேன். அது உடனே என் நினைவுக்கு வந்தது:

> தத்துவம், மூன்று வேதங்கள், பொருளாதாரம், அரசியல் குறித்த அறிவியல் - இந்த அறிவியல்களைத்தான் ஒரு தலைவர் கற்றுக் கொள்ள வேண்டும். ***(1.2.1)***

ஆன்விக்ஷிக்கியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சாணக்கியர் எடுத்துரைக்கும் அதே அத்தியாயத்தில்தான் இதுவும் இடம்பெற்றுள்ளது.

"உன் ஜாதகத்திலுள்ள குரு ஆற்றல்மிக்கவராக விளங்குவதால் நீ எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாலும் அதில் நீ சிறப்பான முன்னேற்றத்தை அடைவாய்," என்று கூறி அப்பேராசிரியர் பெரிதாகப் புன்னகைத்தார்.

என்னைப் பொருத்தவரை குரு என்பது ஒரு கிரகமல்ல, அது ஒரு நபர்.

என் வாழ்வில் இடம்பெற்றிருந்த ஓர் ஆசான் எனக்கு ஆசீர்வாதங்களை அளிப்பதுபோல நான் கற்பனை செய்து கொண்டிருந்தேன். விண்ணில் வளைய வரும் ஒரு கிரகமாக அது எனக்குப் படவில்லை. நான் வாழ்க்கையில் வெற்றி பெறுவது உறுதியாக இருக்கும் பட்சத்தில் அது எப்படியிருந்தாலும் எனக்குக் கவலையில்லை.

“உனக்குத் தோன்றிய சந்தேகங்களை என்னிடம் கேள். நான் அவற்றைத் தீர்த்து வைக்கிறேன்,” என்று அவர் கூறினார்.

“என்னால் ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக ஆக முடியுமா?” என்பதே என் முதல் கேள்வியாக இருந்தது.

“நான் ஏற்கனவே கூறியதுபோல உன் மனத்திடம் உறுதியாக உள்ளது. நீ எதைத் தேர்ந்தெடுத்தாலும் அதில் வெற்றியடைவாய். அதனால் தொழிலில், கல்வித்துறையில் அல்லது வேறு எந்தத் துறையிலும் வெற்றியடைவது என்பது ஒரு பிரச்சனையே அல்ல.” அவரது வாயிலிருந்து இதைக் கேட்டபோது எனக்கு ஆறுதலாக இருந்தது.

“எந்த மாதிரியான தொழிலை நான் துவக்க வேண்டும்?”

“உன் ஜாதகத்தில் சில குறிப்பிட்டக் குறியீடுகள் உள்ளன. அவற்றின்படி, எழுத்து, பேச்சு, உலோகங்கள் தொடர்பான விஷயங்கள், பச்சை நிறம் தொடர்பான தொழில்கள் உனக்குப் பொருத்தமாக இருக்கும். நீ விரும்பினால் உன்னால் பல தொழில்களையும் மேற்கொள்ள முடியும். அவை எல்லாமே உனக்குச் சிறப்பாக அமையும்.”

அவர் மேலும் தொடரும் முன்பு சிறிது இடைவெளி விட்டார். பின்னர், “ஆனால் உனக்கு மனத்தெளிவு பிறக்கச் சிறிது காலமாகும். உன் ஜாதகப்படி, ஒரு சில வருடங்கள் கழித்தே உன்னால் உன் தொழிலை துவக்க முடியும்,” என்று தெரிவித்தார்.

அது ஓரிரு கணங்களுக்கு என்னை நிலைகுலைய வைத்தது. நான் உடனடியாக சுதாரித்துக் கொண்டு, அப்போது என் மனத்தை அரித்துக் கொண்டிருந்த முக்கியமான கேள்வியைக் கேட்டேன்: “அப்படியானால் நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?”

நான் என் பட்டப்படிப்பை முடித்திருந்ததால், உடனடியாக ஒரு தொழிலைத் துவக்க விரும்பினேன்.

“தற்போதைக்கு நீ ஒரு வேலையில் சேர்வது நல்லது என்பது என் அபிப்பிராயம்.”

அவர் கூறியது எனக்கு அறவே பிடிக்கவில்லை.

“ஒரு வேலையில் சேர நான் கண்டிப்பாக விரும்பவில்லை. என் நண்பர்கள் அனைவரும் ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துள்ளனர்.

ஆனால் நான் பிறருக்கு வேலைகளை உருவாக்கி கொடுக்க விரும்புகிறேன்.”

“உன் வாழ்வின் இக்கட்டத்தில் உனக்கு எந்த அனுபவமும் இல்லை. ஒரு நிறுவனத்தில் உனக்குக் கிடைக்கும் வேலை அனுபவம், பின்னர் உனக்குக் கண்டிப்பாக வெகுவாக உதவும். அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு நீ உன் சொந்தத் தொழிலைத் துவக்கலாம். சம்பளத்திற்காக ஒரு வேலையில் சேராதே. அனுபவத்திற்காக அதில் சேர்ந்து கொள்,” என்று அவர் அறிவுரை கூறினார்.

அவர் அப்படிக் கூறியபோது எனக்கு அது ஒரு நல்ல யோசனையாகப்பட்டது. என்ன காரணமோ தெரியவில்லை, அப்பரிந்துரைக்கு என் மனம் தயாராக இருந்தது.

பின்னர் அவர் என அப்பாவைப் பார்த்து, “இவன் தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடர்ந்து கற்றுக் கொண்டேயிருப்பான். இவன் மேற்படிப்புப் படிப்பான். அறிவார்ந்தவர்கள் மற்றும் வல்லுனர்கள் சூழ இருப்பதை அவன் பெரிதும் நேசிப்பான்,” என்று கூறினார்.

அவர் கூறியது உண்மைதான். ஒரு பட்டதாரியாக ஆனால் போதும் என்று நான் முன்பு நினைத்திருந்தேன். வேறு ஓரிடத்தில் ஆறு மாதங்கள் தங்கியிருந்து அர்த்தசாஸ்திரத்தைப் படித்தப் பிறகு, வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற தணியாத தாகம் என் மனத்தையும் இதயத்தையும் ஆக்கிரமிக்கத் துவங்கியது.

“சார், சமஸ்கிருத முதுகலைப் பட்டம் பெற விண்ணப்பிக்கலாம் என்ற அறிவிப்பை நான் வெளியே பார்த்தேன். என்னால் அதில் சேர இயலுமா?”

“நீ முதலில் ஓர் அடிப்படை வகுப்பில் சேர்ந்து கொள். பின்னர் முதுகலைப் படிப்பைப் படிக்கலாம்.”

சமஸ்கிருத மொழியைப் படிக்க வேண்டும் என்ற யோசனை எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் சமஸ்கிருதத்தில் முதுகலைப் பட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றால், நான் அதில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதைப் பின்னர் அறிந்தேன். எனக்கு அந்த மொழியில் முன் அனுபவம் இல்லாததால் என்னால் அடிப்படை வகுப்பில் மட்டும்தான் சேர முடியும்.

“அதே சமயத்தில், நீ ஒரு வேலையிலும் சேர்ந்து கொள்ளலாம். இதற்கான பாடங்கள் வார இறுதியில் மட்டும்தான் நடக்கும். வார நாட்களில் வேலை பார்த்துக் கொள். வார இறுதியில் இதைப் படி,” என்று அப்பேராசிரியர் எனக்குப் பரிந்துரைத்தார்.

அது முடிவாகிவிட்டது. அடுத்து நான் ஒரு வேலையைத் தேடும் காரியத்தில் இறங்க வேண்டும்.

# 29

## நேர்முகத் தேர்வு

நான் வேலை வேட்டையில் இறங்கினேன். நான் ஒரு தொழிலைத் துவக்கவிருந்ததாக என் நண்பரிகளிடம் ஏற்கனவே கூறியிருந்ததால், இதை அவர்களிடம் வெளிபடுத்த நான் விரும்பவில்லை.

ஒரு நாள் நான் பத்திரிகைககளைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஒரு பெரிய நிறுவனத்தில் ஒரு வேலை காலியாக இருந்ததைத் தெரிவிக்கும் விளம்பரம் ஒன்றை நான் கவனித்தேன். வர்த்தக வளர்ச்சி நிர்வாகி என்ற வேலை அது. அதில் இடம்பெற்றிருந்த வர்த்தகம் என்ற வார்த்தை என் கவனத்தைக் கவர்ந்தது.

நான் அதற்கு விண்ணப்பித்தேன். ஒரே வாரத்தில் நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வந்தது. பிரபலமான அந்த நிறுவனம் ஒரு புதிய தொழிலைத் துவக்கியிருந்தது. அதை விரிவாக்கம் செய்வதற்கு இளமையான விற்பனைக் குழு ஒன்றை அமைக்க அவர்கள் முடிவு செய்திருந்தனர்.

ஒரு பெரிய அலுவலகத்திற்கு நான் சென்றது அதுதான் முதல் முறை. நான் நன்றாக உடையணிந்து சென்றிருந்தேன். அந்த நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்த மற்றவர்களுடன் வரவேற்பறையில் நான் காத்திருந்தேன். அவர்களில் பலர் பதற்றத்துடன் காத்திருந்ததை நான் கவனித்தேன்.

நான் அங்கிருந்தவர்களுடன் பேச்சுக் கொடுத்தேன். அவர்களில் பலருக்கு இந்த வேலை மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. அவர்களில் சிலர் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்திருந்தனர். இந்த வேலை அவர்களது குடும்பத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டிருந்தது.

ஒருபோதும் எந்தவொரு வேலையையும் இளக்காரமாகப் பார்க்கக்கூடாது என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். எல்லா வேலைகளும் ஏதோ ஒருவருக்கு கண்ணியத்தை அளிக்கின்றன. இந்த வேலை எனக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் எண்ணற்ற நபர்களுக்கு இது அவர்களுடைய வாழ்க்கையை ஒரேயடியாக மாற்றவல்லது.

என் முறை வந்தது. என்னை அவர்கள் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று என் ஆழ்மனத்தில் ஏதோ ஓர் எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது. வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை நான் கைவிட்டுவிடவில்லை. ஆனால் என்னைவிட அதிகத் தேவையிருக்கும் ஒருவருக்கு இந்த வேலை கிடைத்தால் அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற சிந்தனை எனக்குள் ஓடிக் கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணம்.

நீங்கள் மிகக் குறைவாக ஒன்றை எதிர்பார்த்திருக்கும்போதுதான் அது உங்களுக்கு கிடைக்கும் என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

நேர்முகத் தேர்வில் என்னிடம் கேட்கப்பட்டக் கேள்விகளில் பலவற்றுக்கு என்னால் எளிதாக பதிலளிக்க முடிந்தது. நான் அந்நிறுவனம் குறித்தும் அவர்களுடைய தயாரிப்புகள் குறித்தும் ஏற்கனவே விரிவாக ஆய்வு செய்திருந்தேன். என் தன்னம்பிக்கை உச்சகட்டத்தில் இருந்தது. எனக்கு இந்த வேலை கிடைக்காவிட்டால் நான் அதைப் பற்றிப் பெரிதாகக் கவலை கொள்ள மாட்டேன் என்ற நினைப்பு என்னிடம் இருந்தது.

பின் என்னிடம் மிகவும் முக்கியமானதொரு கேள்வி கேட்கப்பட்டது: “நீ எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறாய்?”

என் பதில் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது என்று நான் நினைக்கிறேன்: “நான் வர்த்தக வளர்ச்சி நிர்வாகி வேலைக்கு விண்ணப்பித்துள்ளேன். வர்த்தகத்தை வளர்க்காமல் என்னால் எப்படி இவ்வளவு சம்பளம் கொடுங்கள் என்று கேட்க முடியும்?”

ஒருசில நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் என்னிடம், “சரி நாங்கள் உன்னைத் தேர்வு செய்துள்ளோம். அடுத்த மாதம் பயிற்சி துவங்குகிறது,” என்று தெரிவித்தனர்.

நான் அந்த வேலையில் சேர்வதற்கு முன்பாக, பல்கலைக்கழகத்திற்குச் சென்று சமஸ்கிருத அடிப்படை வகுப்பில் சேர்வதற்காக விண்ணப்பித்தேன்.

என் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கவிருந்தது. ஒரே நேரத்தில் நான் வேலையும் பார்க்கப் போகிறேன், படிக்கவும் போகிறேன். நான் என் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று ஒரு வேலையில் சேர்ந்துவிட்டது குறித்து நான் மிகவும் பெருமை கொண்டிருந்தேன்.

என் நண்பர்களில் சிலர் இன்னும் வேலை கிடைக்காமல் அல்லாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி பெற வேண்டும் என்று நான் பிரார்த்தித்தேன். அவர்களுக்கு அவசியமாக ஒரு

வேலை தேவைப்பட்டது என்பதோடு, அவர்கள் அதற்குத் தகுதியானவர்களாகவும் இருந்தனர்.

நான் வேலையில் சேர்வதற்கு ஒரு வாரமே மீதமிருந்தபோது, திடீரென்று அந்த நிறுவனத்திலிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது: “நாளை காலையில் எங்கள் நிறுவனத்திற்கு வந்து எங்கள் நிறுவனத் தலைவரைச் சந்திக்க முடியுமா?” அது ஓர் உத்தரவுபோல இல்லாமல் ஒரு வேண்டுகோள்போல இருந்தது.

“கண்டிப்பாக வருகிறேன்,” என்று நான் பதிலளித்தேன்.

என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. வேலை எனக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்தது என்று நான் நினைத்திருந்தேன். இன்னுமொரு சுற்று நேர்முகத் தேர்வு பாக்கியிருந்ததா?

இம்முறை நான் மற்றுமொரு நேர்முகத் தேர்வுக்குச் செல்வதுபோல அதை இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் ஏற்கனவே என்மீது செலவழித்திருந்த நேரத்தை நான் மதித்தேன். அதனால் இன்னும் சிறப்பாக என்னைத் தயார் செய்து கொண்டேன்.

மறுநாள் நான் அந்நிறுவனத்திற்குச் சென்றபோது, அதன் வரவேற்பறையில் வேறு எவரும் காத்திருக்கவில்லை என்பதை நான் கண்டேன். அது குறித்து யோசிக்க எனக்கு நேரம் அளிக்கப்படவில்லை. உடனடியாக நான் நிறுவனத் தலைவரின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

என்ன நடந்து கொண்டிருந்தது என்று நான் யோசித்து முடிப்பதற்குள், இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக நிறுவனம் ஒன்றின் தலைவரின் அறைக்குள் நான் நுழைந்து கொண்டிருந்தேன்.

ஒரு கணம் அது ஒரு கனவுபோல இருந்தது. நான் அவரைத் தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் பார்த்திருந்தேன். பெரிய தொழிலதிபர்கள் பேசுவதற்காக அழைக்கப்படும் இடங்களிலெல்லாம் அவர் தோன்றியிருந்தார்.

நான் சௌகரியமாக உணர்வதற்காக அவர் என்னிடம், “வா, தம்பி, இங்கே வந்து உட்கார்,” என்று கூறி ஒரு நாற்காலியைக் காட்டினார். “காபி, டீ ஏதேனும் அருந்துகிறாயா?”

“வேண்டாம் சார். தண்ணீர் மட்டும் போதும்.” தண்ணீரைக் கொண்டுவந்து கொடுக்கும்படி உத்தரவிட்டுவிட்டு, தன் மேசையிலிருந்த சில காகிதங்களை அவர் தன் கையில் எடுத்தார்.

“புதிதாக வேலைக்கு எடுத்துள்ளவர்கள் இந்நிறுவனத்தில் சேரும் முதல் நாளன்று அவர்களிடம் நான் உரையாற்றுவது வழக்கம். அதற்காக

யார் யார் என் நிறுவனத்தில் சேர்ந்துள்ளனர் என்ற பட்டியலைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது உன் விண்ணப்பதையும் பார்த்தேன்," என்று அவர் கூறினார்.

"ஆனால் உன்னைப் பற்றிய தகவல் என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதனால்தான் நான் உன்னை இப்போது இங்கு விவாதத்திற்கு அழைத்துள்ளேன்," என்று கூறி அவர் புன்னகைத்தார்.

அவரது இந்தக் கூற்று என் குழப்பத்தை இன்னும் அதிகப்படுத்தியது. எனக்கு வேலை முன் அனுபவம் எதுவும் கிடையாது என்பதை நான் என் விண்ணப்பதில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அப்போதுதான் பட்டப்படிப்பை முடித்திருந்த ஓர் இளைஞன் நான். அவர் என் விண்ணப்பத்தில் அப்படி என்ன பெரிய சிறப்பைக் கண்டிருக்கக்கூடும்?

என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், நான்தான் அது குறித்துக் கேட்க வேண்டும் என்பதை உணர்ந்த நான், அவரிடம், "சார், என் விண்ணப்பத்தில் எது உங்களைக் கவர்ந்தது?" என்று கேட்டேன்.

"கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் படித்துள்ளதாக நீ குறிப்பிட்டுள்ளதுதான் என்னைக் கவர்ந்துள்ளது. அது நம்ப முடியாத ஒன்றாக இருக்கிறது. நீ அதிலுள்ள 6,000 சூத்திரங்களையும் படித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளாய். அதற்கான சான்றிதழையும் இணைத்துள்ளாய்," என்று அவர் குறிப்பிட்டார்.

ஒருவழியாக மர்ம முடிச்சு அவிழ்ந்தது. "சார், அது தொழில்முறைரீதியான படிப்பு அல்ல. நான் என் சொந்த விருப்பத்தின்பேரில் அதைப் படித்தேன்." நான் கூறிய விதம், அர்த்தசாஸ்திரம் படித்ததை ஒரு சாதாரணமான விஷயம்போலக் காட்டியது. உண்மையில் உலகின் மிகப் பெரிய தொழிலதிபர்களில் ஒருவரின் அறையில் நான் உட்கார்ந்து கொண்டிருந்ததற்கு அதுதான் காரணம்.

அவர் என்னிடம் சாணக்கியரைப் பற்றி, அர்த்தசாஸ்திரத்தைப் பற்றி, அதை நான் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருந்தேன் என்பதைப் பற்றிக் கேட்டார். சிந்தனை அறிவியலான ஆன்விக்ஷிக்கி பற்றியும், தலைமைத்துவம் என்பது தர்மத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், என் குரு எனக்குக் கற்றுக் கொடுத்திருந்த விஷயங்களைப் பற்றியும் நான் அவரிடம் கூறினேன்.

அந்த விவாதம் ஒரு மணி நேரத்திற்கு மேலாகச் சென்றது.

"நான் உனக்கு வேறொரு வேலை கொடுக்கத் தயாராக இருக்கிறேன்," என்று அவர் கூறினார்.

“என்ன வேலை?” என்று நான் பிரமிப்புடன் கேட்டேன். அதே சமயம், எனக்குக் குழப்பமாகவும் இருந்தது.

# 30

# முன்னோக்கில் பங்கு

“அர்த்தசாஸ்திரம் குறித்து நீ படித்திருந்த தகவலோடு, உன்னை நேர்முகம் செய்த அதிகாரி உன் விண்ணப்பத்தில் குறித்திருந்த குறிப்பையும் நான் பார்த்தேன்,” என்று கூறி என் விண்ணப்பத்தைக் கையிலெடுத்துக் காட்டினார். அதில் அந்த அதிகாரி எதையோ எழுதியிருந்தார்.

அக்குறிப்பில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: ‘இவர் தனக்கு இந்த அளவு சம்பளம் வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. முதலில் வர்த்தகத்தை மேம்படுத்த விரும்புகிறார்.’

அத்தலைவர், “மற்றவற்றைவிட இதுதான் என்னை அதிகம் கவர்ந்த்து,” என்று கூறினார்.

“வேலைக்கு விண்ணப்பிக்கும் நபர்களில் பெரும்பாலானோர் இப்படிப்பட்ட மனநிலையுடன் நேர்முகத் தேர்வுக்கு வருவதில்லை. எங்கள் நிறுவனத்தின் பெயருக்காகவும், நாங்கள் அளிக்கும் உயர்ந்த சம்பளத்திற்காகவும்தான் அவர்கள் இங்கு வேலை செய்ய வருகின்றனர். உன் வயதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், நீ சிறப்பான மனப்போக்கைக் கொண்டிருக்கிறாய் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

“நான் உன்னை இங்கே அழைத்ததற்குக் காரணம், நான் உன்னிடம் ஒன்றைக் கேட்க விரும்பியதுதான்,” என்று கூறிய அவர், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவர்போல, ஒரு கணம் தன் பேச்சை நிறுத்தினார்.

“என்கீழ் நேரடியாக வேலை பார்க்க உனக்கு விருப்பமா? தலைவரின் அலுவலகத்தில்?”

என்னால் என் அதிர்ஷ்டத்தை நம்பவே முடியவில்லை. நான் கனவிலும் எதிர்பார்த்திருக்காத ஒரு வாய்ப்பு அது!

“கண்டிப்பாக, சார்!” என்று நான் உடனடியாகக் கூறினேன்.

“அவசரப்படாதே,” என்று அவர் ஓர் எச்சரிக்கையுடன் தொடர்ந்தார்: “இதில் ஒரு நிபந்தனை உள்ளது. உனக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. நாங்கள் உனக்குக் கொடுத்திருந்த வேலை

அளிப்புக் கடிதத்தில் உனக்கு ஒரு சம்பளம் நிர்ணயித்து இருந்தோம். நீ என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்ய ஒப்புக் கொண்டால் உனக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கப்படாது.”

இது கண்டிப்பாக இன்னொரு சோதனையாக இருக்கும். சம்பளம் இல்லாமல் வேலை செய்ய நான் ஒப்புக் கொண்டேனா என்பதைப் பார்ப்பதற்காகத்தான் அவர் இவ்வாறு கூறினார். நான் என் நேர்முகத் தேர்வின்போது சம்பளம் பற்றிக் கூறியிருந்தது உண்மைதானா என்று அறிவதே இதன் நோக்கமாக இருக்கலாம்.

அவர் தொடர்ந்து பேசினார்: “இதை நினைவில் வைத்துக் கொள். நாங்கள் உனக்கு முதலில் அளித்த வர்த்தக மேம்பாட்டு நிர்வாகி வேலை வாக்குறுதியில் எந்த மாற்றமும் இல்லை. நீ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்பினால், அந்த வேலைக்கு நாங்கள் தருவதாக ஒப்புக் கொண்ட சம்பளம், அதற்கான பயிற்சி அனைத்தும் உனக்கு அளிக்கப்படும். ஆனால் நீ என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்ய ஒப்புக் கொண்டால் உனக்குச் சம்பளம் எதுவும் அளிக்கப்படாது. இங்கு நீ அலுவலகத்தில் அமர்ந்து வேலை பார்க்கும் ஒருவனாக இருப்பாய்.”

அவர் கூறியதை நான் கவனமாக என் மனத்தில் அலசினேன். ஒரே ஒரு கேள்வியைக் கேட்க நான் விரும்பினேன்:

“சார், உங்களிடம் உண்மையைக் கூற வேண்டுமென்றால், ஒரு தொழிலதிபராக ஆவதே என் விருப்பம். நான் வர்த்தக மேம்பாட்டு நிர்வாகி வேலைக்கு விண்ணப்பித்ததே, தொழில் தொடர்பான விஷயங்களைக் கற்றுக் கொள்வதற்கு அது வாய்ப்பளிக்கும் என்பதால்தான். ஓர் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு என்னால் எப்படித் தொழிலைக் கற்றுக் கொள்ள முடியும் என்று நீங்கள் கூறுங்கள்,” என்று அவரிடம் கேட்டேன்.

“நான் ஒரு தொழிலதிபர். அதை உலகமே அறியும். ஆனால் நான் ஓர் ஆசான் என்பது யாருக்கும் தெரியாது. வியாபாரம் பற்றிக் கற்றுக் கொடுப்பதில் எனக்கு அலாதி விருப்பமுண்டு,” என்று கூறி அவர் புன்னகைத்தார்.

பின்னர் அவர் தொடர்ந்து பேசினார்: “அதனால்தான் நான் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், மேலாண்மைக் கல்லூரிகளிலும் சிறப்பு விரிவுரைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன். நான் என் அறிவைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள ஆவலாக உள்ளேன். ஆனால் வெகு அபூர்வமாகவே உன்னைப் போன்ற நல்ல மாணவர்களை நான் சந்திக்கிறேன். அர்ப்பணிப்புள்ள ஒரு மாணவனாக இருக்க நீ தயாராக இருந்தால், தொழில் தொடர்பான அனைத்து விஷயங்களையும்

உனக்குக் கற்றுக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.”

ஆகா! எனக்கு இன்னொரு குரு. அதுவும் தொழில் குரு. அர்த்தசாஸ்திரத்திலிருந்து ஒரு சூத்திரம் என் நினைவுக்கு வந்தது.

> குறிப்பிட்டத் துறைகளிலுள்ள ஆசான்களின் அதிகாரத்துவத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம்தான் அத்துறையில் பயிற்சியையும் கட்டுப்பாட்டையும் ஒருவரால் பெற முடியும்**. *(1.5.6)***

பெரியவர்களுடான தொடர்பு எனும் அத்தியாயத்தில், ஒரு துறையில் வல்லுனர்களாக இருப்பவர்களிடமிருந்து ஒருவரால் கற்றுக் கொள்ள முடியும் என்று சாணக்கியர் கூறுகிறார்.

உலகிலுள்ள பெரிய தொழிலதிபர்களில் ஒருவரிடமிருந்து நேரடியாகத் தொழிலைப் பற்றிக் கற்றுக் கொள்வதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு. என் அதிர்ஷ்டத்தைக் கண்டு என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

“நான் தயார்,” என்று அறிவித்தேன்.

நான் இதற்குக் கண்டிப்பாக உடன்படுவேன் என்று அவர் எதிர்பார்த்திருக்க வேண்டும். இல்லையெனில் அவரைப் பொன்ற முக்கியமான நபர் ஒருவர் ஒரு மணி நேரத்தை என்னைப் போன்ற ஒருவனிடம் ஏன் செலவழிக்க வேண்டும்?

“சரி, நான் என்னுடைய மனிதவளத் துறையினரிடம் கூறி, என் அலுவலகத்தில் நிர்வாகப் பயிற்சியாளராகச் சேர்ந்து கொள்ள அழைப்பு விடுக்கும் கடிதம் ஒன்றை உனக்கு அனுப்பி வைக்குமாறு கூறுகிறேன்,” என்று கூறினார். அவரது செயலாளர் அவர் கூறியதைக் குறித்துக் கொண்டார்.

“ஆனால், சம்பளம் எதுவும் கிடையாது என்பதை மறந்துவிடாதே!” இருவரும் பலமாகச் சிரித்தோம்.

நான் அந்நிறுவனத்தில் வேலையில் சேர்வதற்கான தேதியில் எந்த மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. நான் நேரடியாக நிறுவனத் தலைவரின் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும், அதுதான் ஒரே வேறுபாடு.

குறித்த நேரத்திற்கு முன்பே நான் அங்கு சென்றுவிட்டேன். சிறப்புரிமை பெற்றிருந்த ஒருவன்போல நான் உணர்ந்தேன். நிறுவனத் தலைவரின் அலுவலகத்திற்குச் செல்ல எனக்கு அனுமதியுண்டு என்பது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. பின் என் கதாநாயகர் வருவதற்காக நான் காத்திருந்தேன்.

அவர் வந்தவுடன் முதலில் என்னைத்தான் கவனித்தார். “உன் முதல் நாளில் நான் உன்னை இந்த அலுவலத்திற்கு வரவேற்கிறேன்,” என்று அவர் என்னைப் பார்த்துக் கூறினார். நான் தலைவருடன் இருக்கும் நபர் என்பதை அவரது வார்த்தைகள் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தின.

தன்னுடன் தன் அறைக்குள் வருமாறு அவர் என்னிடம் கூறினார். அங்கு அவர் தனது மூன்று உதவியாளர்களுடன் நடத்தும் தினசரி மதிப்பாய்வில் கலந்து கொள்ளுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். அவர்கள் அத்தலைவரிடம் சில அறிக்கைகளைக் கொடுத்தனர். அவருடைய சந்திப்புகள் மற்றும் பயணங்கள் குறித்த விபரங்கள், பயண ஏற்பாடுகள் ஆகியவற்றையும் அவர்கள் விவாதித்தனர். நிறுவனத் தலைவரின் அலுவலகம் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள நான் முயன்று கொண்டிருந்தபோது, அந்த உதவியாளர்களில் ஒருவர் தலைவரிடம் இவ்வாறு கூறினார்:

“சார், நம் நிறுவனத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்துள்ளவர்கள் வந்துவிட்டனர். நீங்கள் இப்போது அவர்களுடன் பேச வேண்டும்.”

அவர் என்னைப் பார்த்து, “வா, நாம் போகலாம்,” என்று கூறினார்.

நாங்கள் மின்தூக்கிக்குள் நுழைந்தவுடன் அவர் என்னிடம், “புதிதாகச் சேர்ந்துள்ள அனைவரிடமும் நான் நேரடியாகப் பேசி அவர்களை வரவேற்க விரும்புகிறேன். பல வருடங்களின் ஊடாகப் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ள இந்நிறுவனத்தின் முன்னோக்குக் குறித்து நான் அவர்களுடன் பகிர்ந்து கொள்ள அது வாய்ப்பளிக்கும்,” என்று கூறினார்.

மின்தூக்கியிலிருந்து வெளியே வந்ததும், நாங்கள் ஓர் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டோம். அந்நிறுவனத்தில் வெவ்வேறு பதவிகளில் புதிதாக வேலைக்கு எடுக்கப்பட்டிருந்த ஐம்பது பேர் அங்கு அமர்ந்திருந்தனர். அதில் என்னுடன் நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்தவர்கள் சிலரும் இருந்ததை நான் கவனித்தேன்.

நான் அவர்களுடன் உட்கார்ந்திருக்காமல், நிறுவனத் தலைவருடன் சேர்ந்து வந்ததைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

என் இடத்தில் கடைசி நிமிடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த ஒருவனின் புன்னகை பூத்த முகத்தைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த வேலை தனக்கு எவ்வளவு அத்தியாவசியமாகத் தேவை என்று அவன் என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது குறிப்பிட்டிருந்தான்.

முதன்முதலாக அந்நிறுவனத் தலைவரை நான் சந்தித்தபோது என் முகத்தில் எத்தகைய உணர்ச்சிகள் தவழ்ந்தனவோ அதே உணர்ச்சிகள்

இப்போது அவர்கள் அனைவரின் முகங்களிலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. மொத்தத் தொழிலுலகத்தையும் தன் மதிப்பால் கட்டிப் போட்டிருந்த ஒரு மனிதரின் முன்னால் அவர்கள் பெருமையுடன் உட்கார்ந்திருந்தனர்.

அந்நிறுவனத்தின் கொள்கைகள் என்னென்ன, அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்பட்டது என்பது குறித்துத் தலைவர் அவர்களிடம் சுமார் அரை மணி நேரம் உரையாடினார். பின்னர் அவர்களின் கேள்விகளுக்குத் திறமையாக பதிலளித்தார். அப்போது அவரது குரல் சாதாரணமாக உரையாடும்போது எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

அவரது இந்தச் செய்கை, அவருடன் நாங்கள் இயல்பாக இருக்க உதவியதோடு, அந்த மாபெரும் நிறுவனத்தில் இப்போது நாங்களும் ஓர் அங்கம் என்ற நினைப்பையும் எங்களிடம் ஏற்படுத்தியது.

அவர் தன் பேச்சை இவ்வாறு முடித்தார்: "இது உங்களுக்கு ஒரு சிறந்த கற்றல் அனுபவமாக இருக்கும் என்றும், நீங்கள் நம் நிறுவனத்தின் முன்னோக்குத் தூதுவர்களாக விளங்குவீர்கள் என்றும் நான் நம்புகிறேன். நாம் வெறுமனே வர்த்தகத்தில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. நம்முடைய பல தொழில்களின் மூலமாக நாம் இச்சமுதாயத்திற்குச் சேவை செய்கிறோம் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்."

அவர் தன் அலுவலகத்திற்குத் திரும்பியபோது நானும் அவருடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

அவர் என்னைப் பார்த்து, "நீ ஒரே ஒரு விதிமுறையை மட்டும் கடைபிடிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்," என்று கூறினார்.

# 31

## தலைவரின் பயிற்சி

உன்னதமான தொழிலதிபர் என்பது யார் என்பது எனக்கு இப்போது தெளிவாகிவிட்டது. முதலில் ஆசிரமத்தில் நான் சந்தித்த அறங்காவலர். பின்னர் இந்நிறுவனத்தின் தலைவர். இவர்கள் இருவருமே சமுதாயத்திற்குச் சேவை செய்ய விரும்பினர்.

“இனிமேல் நீ என்னிடம் எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது,” என்பதுதான் அவருடைய ஒரே ஒரு விதிமுறையாக இருந்தது. “நீ எதையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாயோ அதையெல்லாம் கவனித்தல் மூலமே நீ பெற்றுக் கொள்ள வேண்டும்,” என்று அவர் கூறினார்.

அவரது இந்த அறிவுறுத்தலைக் கேட்டு நான் ஆடிப் போய்விட்டேன். அப்படியானால், அவர் கூறுபவற்றையெல்லாம் செய்து கொண்டு அவர் செல்லுமிடமெல்லாம் செல்ல வேண்டியது மட்டும்தான் என் வேலையா?

தலைவர் அது குறித்து விளக்கினார்: “உன் மனம் கேள்வியால் நிறைந்திருக்கும்போது அது கலங்கிய குட்டைபோல இருக்கும். கற்பதற்குப் பொறுமை அவசியம் தேவை. பொறுமையை வளர்த்துக் கொண்டால் நீ தேடும் அனைத்து பதில்களும் உனக்குக் கிடைக்கும்.”

என் மனத்தில் தோன்றிய குழப்பத்தை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. “கவலைப்படாதே. என்னிடம் கேள்வி கேட்கும் சுதந்திரம் உனக்குப் பின்னர் கிட்டும். எப்போது கேள்விகளைக் கேட்க வேண்டும் என்பதையும் நானே உனக்குக் கூறுகிறேன். இப்போதைக்கு இந்த நிறுவனத்திலிருந்து உன்னால் முடிந்த அனைத்தையும் கற்றுக் கொள்.”

அவர் அடுத்து இன்னொருவரைச் சந்திக்க ஒப்புக் கொண்டிருந்த நேரம் வந்துவிட்டிருந்தது. அதற்கு அவர் என்னையும் உடன் அழைத்துச் சென்றார்.

பல நாட்கள் அவர் எங்கு சென்றாலும் ஒரு நிழல்போல நான் அவரைத் தொடர்ந்தேன். அவரது அறிவுரையைத் தவறாது பின்பற்றி மௌனமாக எல்லாவற்றையும் கவனித்து வந்தேன். அவர் தன்னுடைய சந்திப்புக் கூட்டங்களுக்கு, சமூக நிகழ்ச்சிகளுக்கு, தன் வீட்டிற்கு, தான் உறுப்பினராக இருந்த சங்கத்திற்கு என்று எல்லா இடங்களுக்கும்

என்னை அழைத்துச் சென்றார். பகவத் கீதையைப் படிப்பதற்காகத் தான் வாராவாரம் சென்ற ஆன்மீக அமைப்பு ஒன்றுக்குக்கூட அவர் என்னை அழைத்துச் சென்றார்.

நான் அவருடைய நிறுவனத்தில் வேலை செய்வதற்காகத்தான் விண்ணப்பித்திருந்தேன். ஆனால் அவர் தன்னுடைய மொத்த உலகையுமே எனக்காகத் திறந்துவிட்டார். அதில் அவருடைய தனிப்பட்ட உலகமும் அடங்கும். என் மனத்தில் ஏகப்பட்டக் கேள்விகள் பிறந்தாலும் சிரமப்பட்டு அவற்றை நான் அடக்கிக் கொண்டேன்.

பின்னர் அவர் வேறு ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது என்னுடைய கேள்விகளுக்கான விடைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படும். அவர் ஒரு சிறந்த ஆசான் என்பதை நான் அறிவேன். அவருடைய பயிற்றுவிக்கும் முறை வித்தியாசமான ஒன்றாக இருந்தது.

ஆறு மாதங்கள் உருண்டோடிவிட்டன. ஒரு புறம் நான் என் தலைவருடன் ஒன்றும் செய்யாமல் சுற்றிக் கொண்டிருந்தேன். மறுபுறம் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத வகுப்புகளுக்குத் தவறாமல் சென்று கொண்டிருந்தேன். இந்தச் சிறப்பான இந்திய மொழி குறித்த என் அறிவை வளர்த்துக் கொள்ளக் கடுமையாக நான் உழைத்து வந்தேன்.

இந்த ஆறு மாதங்களில் எனக்குக் கிடைத்த அனுபவங்கள் என் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அது சரியாக எக்கணத்தில் நிகழ்ந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது நிகழ்ந்தது என்பது மட்டும் உறுதி. என்னுள் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டிருந்ததை என்னால் உணர முடிந்தது. நான் அதிகமாகச் சிந்திக்கவும், என் நினைவுகளை அசைபோடவும் துவங்கினேன். அந்த மாபெரும் தொழில் நிறுவனம் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் எவ்வாறு செயல்பட்டது என்பது குறித்து நான் அலசி ஆராய்ந்தேன். என் சமஸ்கிருத அறிவைப் பயன்படுத்தி நான் மீண்டும் அர்த்தசாஸ்திரத்தைப் படிக்கத் துவங்கினேன். இப்போது சாணக்கியர் பயன்படுத்தியிருந்த வார்த்தைகள் குறித்தப் புதிய புரிதல்கள் எனக்குக் கிடைத்தன.

ஒவ்வொரு நாளும் நான் தவறாமல் குறிப்புகள் எடுத்துக் கொண்டேன். என் அலுவலகத்தில் நான் கற்றப் பாடங்களை நான் எழுதி வைத்தேன். இன்னொரு நோட்டுப் புத்தகத்தை என் சமஸ்கிருத அறிவை விசாலப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டேன்.

ஆறுமாத காலத்தில் என்னிடம் இருபத்தைந்து நோட்டுப் புத்தகங்கள் சேர்ந்திருந்தன. ஒரு நோட்டுப் புத்தகத்தில், அர்த்தசாஸ்திரத்திலிருந்து

ஒரு சூத்திரத்தை நான் குறித்து வைத்தேன். அது ஓர் ஆசான் தன் மாணவனுக்குக் கொடுத்த அறிவுரை:

> ஒரு நாளின் மீதிப் பகுதிகளில் ஒருவன் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும், தான் ஏற்கனவே கற்றுக் கொண்டிருந்த விஷயங்கள் குறித்து மேலும் தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும், கற்றுக் கொள்ளாத விஷயங்கள் குறித்துக் காதைத் தீட்டிக் கொண்டிருக்க வேண்டும். ***(1.5.15)***

நான் இடைவிடாது கற்றுக் கொண்டே இருந்தேன், ஒவ்வொரு கணத்தையும் ரசித்து அனுபவித்தேன். நான் எந்தத் தேர்வுக்கும் படித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் வாழ்வின் சவால்களை எதிர்நோக்க என்னைத் தயார் செய்து கொண்டிருந்தேன்.

ஒரு நாள் தலைவர் திடீரென்று என்னிடம், "இப்போது நீ என்ன கேள்வி வேண்டுமானாலும் என்னிடம் கேட்கலாம்," என்று கூறினார்.

அது என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. ஏனெனில், என் மனத்தில் தோன்றும் கேள்விகளைக் கேட்காமல் இருக்கும் பழக்கம் என்னிடம் படிந்திருந்தது. நான் என் வாயைத் திறப்பதற்குச் சிறிது நேரம் ஆனது.

"ஒருவரால் செல்வத்தை எவ்வாறு உருவாக்க முடியும்?" நான் முதன்முதலில் இங்கு வந்தபோது இதைத்தான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

"செல்வச் சேகரிப்பில் நான்கு கட்டங்கள் அடங்கியுள்ளன. முதலாவது செல்வத்தைக் கண்டுபிடித்தல், இரண்டாவது செல்வத்தை உருவாக்குதல், மூன்றாவது செல்வத்தை நிர்வகித்தல், நான்காவது செல்வத்தைப் பகிர்ந்தளித்தல்," என்று அவர் எடுத்துரைத்தார்.

"ஒருவர் செல்வந்தராக ஆக விரும்பினால், முதலில் அவர் அதற்கான வாய்ப்புகளைக் கண்டுபிடிக்க வேண்டும். மக்கள் பொதுவாக வாய்ப்புகளை வெளியில் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அதற்கு நேரெதிரானதையே அவர்கள் செய்ய வேண்டும். உன்னுடைய திறமைகளையும் வலுவையும் நீ கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் கடவுள் கொடுத்தச் சொத்து. உள்ளார்ந்த இச்சொத்தைக் கண்டுபிடிக்க நம்மில் பெரும்பாலோர் தவறிவிடுகின்றோம்."

அவர் மேலும் தொடர்ந்து பேசினார்: "ஒரு வாய்ப்பைக் கண்டுபிடித்துவிட்டால் மட்டும் செல்வத்தைக் குவித்துவிட முடியாது. செல்வத்தை உருவாக்க ஒருவர் கடினமாக உழைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஓரிடத்தில் பூமிக்கு அடியில் தங்கம் இருப்பது உனக்குத் தெரியும் என்று வைத்துக் கொள்வோம். அதனால் உனக்குத்

தங்கம் கிடைத்துவிடாது. நீ சுரங்கம் அமைத்துத் தோண்டி அத்தங்கத்தை வெளியே எடுத்து, அதைச் சுத்திகரித்துச் சுத்தமாக்க வேண்டும். அது கடின உழைப்பின் மூலமே சாத்தியம்.”

பின் அவர் தன் சொந்த அனுபவம் ஒன்றை விவரித்தார்: “ஒரு சமயம், ஒரு பத்திரிகை நிருபர் எங்களுடைய புதிய தொழில் முயற்சி ஒன்றைக் குறித்து என்னிடம், ‘சார், உங்களுடைய தொழில் ஒரே இரவில் பெரும் வெற்றி பெற்றுவிட்டது,’ என்று கூறினார்.

“செல்வத்தைச் சேர்ப்பது குறித்து மக்கள் மிகவும் மேலோட்டமான கருத்தைக் கொண்டிருப்பது என்னை ஆச்சரியப்படுத்தியது,” என்று தலைவர் வருத்தத்துடன் கூறினார்.

“நான் அந்த நிருபருக்கு இவ்வாறு பதிலளித்தேன்: ‘ஆமாம். என் வெற்றி ஒரே இரவில் ஏற்பட்டதுதான். ஆனால் அந்த இரவு மிகவும் நீண்டதாக இருந்தது.’ “

நாங்கள் இருவரும் சிரித்தோம்.

“செல்வத்தைச் சேர்த்ததும் அதை நாம் செம்மையாக நிர்வகிக்க வேண்டும்,” என்று அவர் தொடர்ந்து கூறினார். “அதைச் சேமித்து வைக்க வேண்டும், முதலீடு செய்ய வேண்டும், பின்னாளில் தேவைப்படும் காலத்திற்காக ஒதுக்கி வைக்க வேண்டும். செல்வத்தைச் சேர்த்தப் பிறகு, அதை நாம் சிறப்பாக நிர்விக்காவிட்டால், நாம் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடுவோம். பணத்திற்காக வாழ்நாள் முழுவதும் நீ வேலை செய்து கொண்டிருக்கக்கூடாது. அது உனக்காக வேலை செய்ய வேண்டும்.” அவரது இந்த அறிவுரை எனக்குப் பிடித்திருந்தது.

அவர் ஓர் ஆழமான மூச்சை உள்ளிழுத்துவிட்டு, “இறுதியில் செல்வத்தைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்,” என்று கூறினார்.

இது குறித்து நான் அவரிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்பினேன். நான் வாயைத் திறக்கும் முன்பாக அதைப் புரிந்து கொண்ட அவர் என்னைத் தடுத்து நிறுத்தினார். “இப்போதைக்குக் கேள்விகள் போதும்.” நான் அமைதியானேன். ஆனால் உடனடியாக எனக்கு இன்னோர் ஆச்சரியம் காத்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

“என் அலுவலகத்தில் உன் பயிற்சி முடிவடைந்துவிட்டது. நாளையிலிருந்து நீ நமது நிறுவனத்தின் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறையில் சேர்ந்து கொள். அங்கு நீ அத்துறையின் முதன்மை நிர்வாக அதிகாரியின் கீழ் நேரடியாக வேலை செய்வாய்.”

அவர் தன் தொலைபேசியை எடுத்துத் தன் உதவியாளரிடம்,

“கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறை முதன்மை நிர்வாக அதிகாரியை உள்ளே வரச்சொல்,” என்று கூறினார்.

# 32

## என் புதிய தலைவர்

கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறை முதன்மை நிர்வாக அதிகாரி பழுத்த அனுபவம் வாய்ந்தவர். அவர் நிறையப் படித்திருந்தார். எப்போதும் உலகெங்கும் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் ஏதாவது சொன்னால், பங்குச் சந்தையில் சலசலப்பு ஏற்படும்.

"நான் கடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் கூறியபடி, இந்த இளைஞன் உங்கள் அணியில் நாளையிலிருந்து சேர்ந்து கொள்வான்," என்று தலைவர் அந்த முதன்மை நிர்வாக அதிகாரியிடம் கூறினார்.

"சார், இவரது செயல்பாடுகள் குறித்து உங்கள் அலுவலகத்திலிருந்து நேர்மறையான செய்திகளே வந்து கொண்டிருக்கின்றன," என்பதுதான் அவரது வாயிலிருந்து வந்த முதல் வார்த்தைகள்.

எந்தச் செயல்பாடுகளைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கிறார்? நான் மௌனமாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தது தவிர வேறு எதையும் செய்யவில்லையே! கேள்விகள் எதுவும் கேட்கக் கூடாது என்று எனக்குக் கட்டளையிடப்பட்டிருந்ததால், நான் இதைக் குறித்தும் வாயைத் திறக்கவில்லை.

"நீ மாதம் ஒருமுறை என்னை வந்து சந்திக்க வேண்டும். நீ நமது முதன்மை நிர்வாக அதிகாரியின் கீழ் வேலை பார்த்து வந்தாலும், நான் உன்னுடைய முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனித்து வருவேன்," என்று நிறுவனத் தலைவர் கூறினார். அட, எல்லோரையும் கவனித்து வருவதற்கு இத்தலைவர் ஏதோ வழி வைத்திருக்கிறார் போலிருக்கிறது.

பின் அவர் என்னை நோக்கிப் புன்னகைத்தார். "நாளையிலிருந்து உனக்குச் சம்பளம் வழங்கப்படும்," என்று கூறிய தலைவர், முதன்மை நிர்வாக அதிகாரியைச் சுட்டிக்காட்டி, "மற்ற விபரங்களை இவர் உன்னிடம் கூறுவார்," என்று தெரிவித்தார்.

"அதைவிட முக்கியமான ஒன்று. நீ இவரிடம் எப்போதும் வேண்டுமானாலும் எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கலாம். அதற்கு எந்தத் தடையும் கிடையாது." நாங்கள் மூவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

நான் அந்த முதன்மை நிர்வாக அதிகாரிக்குத் தாரை வார்த்துக்

கொடுக்கப்பட்டுவிட்டதால், அவருடன் கிளம்பினேன். கேள்விகள் எதுவும் கேட்காமல் இருப்பதற்கு என் மனம் பழகிவிட்டிருந்ததை நான் உணர்ந்தேன். கேள்விகள் கேட்காமல் இருப்பது எனக்கு ஒரு பெரிய விஷயமாகவே படவில்லை.

அன்று மாலை நான் வீட்டிற்குத் திரும்பியபோது, அடுத்த மாதத்திலிருந்து எனக்குச் சம்பளம் கிடைக்கும் என்ற தகவல் என்னைப் பெரிதாக உற்சாகப்படுத்தவில்லை. என்னை அறியாமலேயே உள்ளுக்குள் நான் வெகுவாக மாறியிருந்தேன்.

அடுத்த நாள் காலையில் நான் நேரடியாக, கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறை முதன்மை நிர்வாக அதிகாரியின் அலுவலகத்திற்குச் சென்றேன். அது நிர்வாகத் தலைவரின் அலுவலகத்தைவிடச் சிறியதாக இருந்தாலும் அதே அளவு கம்பீரமாக இருந்தது. இவரிடமும் நிர்வாகத் தலைவரிடம் இருந்ததைப்போலவே அதிகாரத்துவம் மிகுந்திருந்தது.

தன் தளத்திற்குள் அமைச்சர்கள்கூட அரசர்கள்தான் என்ற சாணக்கியரின் கூற்று என் நினைவுக்கு வந்தது.

அந்நிறுவனத்தின் மொத்த வருவாயில் நாற்பது சதவீதத்தைக் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறை அளித்து வந்தது. அதனால் அதைச் சிறியது என்று கூற முடியாது. அதில் ஆயிரக்கணக்கான பொறியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், மற்றும் பிறர் வேலை செய்து வந்தனர். அதன் அலுவலகங்கள் நாடு முழுவதிலும் இருந்தன. அந்நிய நாடுகளில்கூட அதற்குக் கிளைகள் இருந்தன.

நான் அவரைச் சந்தித்ததும், "உன் புதிய அலுவலகத்திற்கு உன்னை நான் வரவேற்கிறேன்," என்று கூறி அவர் என்னை வரவேற்றார். அவர் என்னிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்து, "இது பணி நியமன உத்தரவு. இதில் நம் நிறுவனத்தின் விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் போன்ற இதர விஷயங்கள் உனக்குப் பிடித்திருக்கும் என்று நான் நம்புகிறேன்," என்று கூறினார்.

அது முக்கியமானது என்பதுபோல நான் அதை வாசித்தேன். அதில், என் பதவியின் பெயர் மூத்த மேலாளர் — ஆப்பரேஷன்ஸ் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. என் சம்பளம் என் துவக்ககாலச் சம்பளத்தைவிட நான்கு மடங்கு அதிகமாக இருந்தது. அது எனக்கு இனிமையான அதிர்ச்சியைக் கொடுத்தது. பொதுவாகவே இந்நிறுவனம் தன் ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் வழங்கும் நிறுவனம் என்று பெயரெடுத்திருந்ததை நான் அறிவேன். ஆனாலும் என்னைப் போன்ற

இளைஞனுக்கு நான்கு மடங்கு சம்பளமா? நான் அதில் கையெழுத்திட்டுவிட்டு என் பிரதியை எடுத்துக் கொண்டேன்.

“சரி, நீ இப்போது என்னிடம் கேள்விகள் கேட்கலாம்,” என்று அவர் கூறினார். அது ஓர் உத்தரவுபோல இருந்தது.

நான் ஒருவழியாக என் தைரியத்தைத் திரட்டிக் கொண்டேன். அது நான் முற்றிலும் மறந்து போயிருந்த ஒரு பழக்கமாக இருந்தது.

“சார், இத்துறை தொடர்பான தொழில்நுட்பத் தகுதிகள் எதுவும் என்னிடம் கிடையாது. அது மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சியைப் பற்றிக் கற்றுக் கொள்ளத்தான் நான் இங்கு வந்தேன். அப்படியிருக்கும்போது நீங்கள் எதற்காக இப்பதவியை எனக்கு அளித்துள்ளீர்கள்?”

“நமது நிர்வாகத் தலைவர் அற்புதமானவர். ஒருவரிடம் ஒளிந்திருக்கும் திறமைகளைக் கண்டுபிடிப்பதில் அவர் வல்லவர். சமயங்களில் தங்களிடம் அத்திறமை ஒளிந்திருக்கிறது என்பது அந்த நபர்களுக்கே தெரிந்திருக்காது,” என்று அவர் கூறினார்.

“பல வருடங்களுக்கு முன்பு நான் இந்த நிறுவனத்தில் சேர்ந்தபோது என்னிடமும் தொழில்நுட்பத் தகுதிகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் அதைக் காலப்போக்கில் உருவாக்கிக் கொள்ளலாம். ஒரு தொழிலை வளர்த்தெடுப்பதில் தொழில்நுட்ப அறிவு வெகுவாக உதவும். களத்தில் நேரடியான அனுபவத்தைப் பெறுவதுதான் இதைத் துவக்குவதற்கான சரியான வழி.

“நாங்கள் உன்னை ஆப்பரேஷன்ஸ் பிரிவில் போட்டுள்ளதற்குக் காரணமே நம் தொழில் தொடர்பான விஷயங்களை உன்னால் களத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும் என்பதுதான்.” என்று அவர் கூறினார். “உன் வேலையில் நீ அதிகமாகப் பயணிக்க வேண்டியிருக்கும். உன் பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடம் இது குறித்துத் தெரிவித்துவிடு. நீ ஒருசில வகுப்புகளைத் தவறவிட்டுவிட நேர்ந்தால், அதை அவர்களால் புரிந்து கொள்ள இயலும்,” என்று கூறினார். அப்படியானால் நான் சமஸ்கிருத வகுப்பிற்குப் போவதை இவரும் தெரிந்து வைத்திருக்கிறார்.

புதிய வேலையில் மூச்சுவிடக்கூட நேரம் இருக்கவில்லை. சுரங்கங்களுக்கு நான் செல்ல வேண்டியிருந்தது. அவை தொலைதூரத்தில் இருந்தன. சில சுரங்கங்கள் காட்டுப்பகுதிகளில்கூட இருந்தன. சில சமயங்களில் நான் அவற்றை அடையப் பல மணிநேரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அனேக நேரங்களில் நான் வெகுவாகக் களைத்துப் போயிருந்தேன். அச்சமயங்களில், நாம்

எப்போது வீட்டுக்குத் திரும்புவோம் என்ற நினைப்பு என்னிடம் அதிகமாக இருக்கும்.

முன்பு நிறுவனத் தலைவரின் குளிரூட்டப்பட்ட அறையில் சொகுசாக அமர்ந்திருந்த நான், இப்போது உடல் முழுவதும் படிந்திருந்த புழுதியுடன் பல மணிநேரம் பயணிக்க வேண்டியிருந்ததால், இதை நான் மிகப் பெரிய மாற்றமாக உணர்ந்தேன்.

இத்தொழில் குறித்து அறிந்து கொள்ள எனக்கு உதவிய பயிற்சிகளுக்குப் பிறகு, என்னுடைய முதன்மை நிர்வாக அதிகாரிக்கு அவ்வப்போது நான் பலதரப்பட்ட அறிக்கைகளை அளிக்க வேண்டியிருந்தது.

விடுமுறை நாட்களில்கூட நான் ஊரில் இருக்கவில்லை. அப்படி இருந்த நாட்களில்கூட நான் சமஸ்கிருத வகுப்புகளுக்குச் சென்றேன். நான் போக முடியாத வகுப்புகளில் நடத்தப்பட்ட பாடங்களைப் படிப்பதில் மீதி நேரம் செலவானது. நான் அலுவலகத்திலும் வீட்டிலும் கடுமையாக உழைத்தேன்.

கடந்த ஒரு வருடத்தில் ஒரே ஒரு வாரம் மட்டுமே நான் என் வேலையிலிருந்து விடுப்பு எடுத்திருந்தேன். சமஸ்கிருதத் தேர்வு எழுதுவதற்காகத்தான் அதையும் எடுத்தேன். எல்லோரும் ஆச்சரியப்படும் விதமாக அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாக நான் தேறியிருந்தேன்.

நான் அந்த சமஸ்கிருதப் பேராசிரியரிடம் மீண்டும் சென்று, “சார், நான் இப்போது சமஸ்கிருத முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்து கொள்ளலாமா?” என்று கேட்டேன். அவர் கடந்த வருடம் முழுவதும் என்னை உன்னிப்பாக கவனித்து வந்திருந்தார்.

“சமஸ்கிருத முதுகலைப் பட்டப்படிப்பில் சேர வேண்டுமென்றால் நீ சமஸ்கிருத இளங்கலைப் பட்டப் படிப்பை முடித்திருக்க வேண்டும். ஆனால் நீ உன் இளங்கலைப் பட்டத்தை வேறு ஒரு துறையில் இருந்தல்லவா பெற்றிருக்கிறாய்?”

பின் அவர் ஒரு கணம் யோசித்துவிட்டு, “சரி, சமஸ்கிருத முதுகலைப் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பி. அடிப்படை வகுப்பில் நீ முதலாவதாக வந்துள்ளாய். உன்னிடம் அர்த்தசாஸ்திரம் படித்தது குறித்த இந்தியவியல் சான்றிதழும் இருக்கிறது என்பதால் உன் விண்ணப்பத்திற்கு அந்த விதியிலிருந்து விலக்கு அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு நான் பரிந்துரை செய்கிறேன். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்,” என்று கூறினார்.

நான் பெற்றிருந்த சான்றிதழ் எனக்கு இவ்வளவு தூரம் உதவியது

குறித்து நான் மிகவும் மகிழ்ந்தேன்.

அப்போது நான் என் குருவை நினைத்துக் கொண்டேன்.

# 33

## இரு நல்ல செய்திகள்

எங்கள் கல்லூரி நண்பர்கள் வெகுநாட்களுக்குப் பிறகு மீண்டும் கூடிச் சந்திக்க முடிவு செய்தனர். இம்முறை ஓர் உணவகத்தில் சந்திப்பதற்கு பதிலாக நாங்கள் படித்தக் கல்லூரியிலேயே சந்திக்க நாங்கள் முடிவு செய்தோம். அவர்கள் தங்களுக்குள் அடிக்கடி சந்தித்துக் கொண்டபோதிலும் நான் அவர்களைச் சந்தித்து வெகு நாட்கள் ஆகிவிட்டிருந்தன.

“நீ எங்கே காணாமல் போய்விட்டாய்?” என்று அனைத்து நண்பர்களும் என்னிடம் கேட்டனர்.

வேலை, படிப்பு என்று என் வாழ்க்கை எப்படிப் படு சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டிருந்தது என்பதை நான் அவர்களிடம் தெரிவித்தேன். அதே சமயம், ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை செய்தது எவ்வளவு சிறப்பான கற்றல் அனுபவமாக இருந்தது என்பதையும் நான் அவர்களிடம் கூறினேன்.

இச்சமயத்தில் அலுவலகத்தில் எனக்கு இரண்டு உதவியாளர்கள் இருந்தனர். நான் வேறு ஒருவரின் கீழ் வேலை செய்து வந்தபோதிலும், என்னிடம் அறிக்கைகள் சமர்ப்பிக்க இருவர் இருந்தனர்.

என் நண்பர்கள் அனைவரும் ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருந்தனர். “வாழ்க்கையில் நீ என்ன செய்யப் போகிறாய்?” என்ற கேள்வி அவர்களை இனியும் பயமுறுத்திக் கொண்டிருக்கவில்லை. சிலர் வேலையில் இருந்தனர். சிலர் குடும்பத் தொழிலில் சேர்ந்திருந்தனர். ஒருத்தி முனைவர் பட்டப்படிப்பில் சேர்ந்திருந்தாள்.

முனைவர் பட்டப்படிப்பை எவ்வாறு படிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நான் அவளுடன் அதிக நேரத்தைச் செலவிட்டேன். முதுகலைப் படிப்பை முடித்தப் பிறகு நான் முனைவர் பட்டமும் பெற விரும்பினேன் என்பதை நான் எவரிடமும் கூறியிருக்கவில்லை. என் முதுகலைப் பட்டப்படிப்பு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக நான் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தேன்.

“எங்கள் கல்லூரியில் ஒரு கருத்தரங்கு நடைபெறுகிறது. உன்னால்

அதில் கலந்து கொண்டு ஒரு கட்டுரையை வாசிக்க முடியுமா?" என்று அவள் கேட்டாள். ஆசிரமத்திலிருந்து வந்த பிறகு அர்த்தசாஸ்திரம் தொடர்பாக நடத்தப்பட்ட ஒரே ஒரு கருத்தரங்கில்தான் நான் கலந்து கொண்டிருந்தேன். அது இப்போது என் நினைவிற்கு வந்தது.

"இப்போது என்னால் ஒரு கருத்தரங்கில் பேச முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. கடந்த சில வருடங்களில் நான் ஆய்வுகள் எதிலும் ஈடுபடவில்லை. நான் என் வேலையில் தீவிரமாக மூழ்கியிருந்துவிட்டேன். உங்களுடைய கருத்தரங்கிற்கு என்னால் உருப்படியான பங்களிப்பு எதையும் அளிக்க முடியுமா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது," என்று என் எண்ணத்தை அவளோடு பகிர்ந்து கொண்டேன்.

"அது ஒன்றும் பிரச்சனையே இல்லை. நீ அர்த்தசாஸ்திரம் பற்றியும் நவீனத் தொழிலுலகில் அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் பேசு. அது ஒரு நல்ல தலைப்பாக இருக்கும். இது நிர்வாகவியல் குறித்தக் கருத்தரங்கு என்பதால் பொருத்தமாகவும் இருக்கும். ஒரு புராதன அறிவு நவீனக் காலகட்டத்தில் எவ்வளவு தூரம் பொருத்தமாக இருக்கிறது என்பது குறித்து நீ சில விளக்கங்களை அளிக்கலாம்," என்று அவள் கூறினாள். அது எனக்குப் பிடித்திருந்தது.

நான் வீட்டிற்குத் திரும்பிச் சென்றவுடன், என் அம்மா புன்முறுவலுடன், "பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறையிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. நீ நாளை அங்கு சென்று உன் முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்து கொள்ளலாம் என்று அவர்கள் கூறினார்கள்," என்று தெரிவித்தார்.

என்னால் என் காதுகளை நம்பவே முடியவில்லை. நான் நேரடியாக முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்து கொள்வதற்குப் பல்கலைக்கழகம் அனுமதித்துவிட்டது. அப்போது என் முதன்மை நிர்வாக அதிகாரியிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "நாளை என்னை வந்து பார். நிர்வாகத் தலைவரிடமிருந்து ஒரு முக்கியத் தகவல் வந்துள்ளது," என்று அவர் கூறினார்.

இரண்டுமே நல்ல செய்திகள்.

அடுத்த நாள் காலையில் நான் முதலில் பல்கலைக்கழகத்திற்குச் சென்று முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்து கொண்டேன். பின்னர் சமஸ்கிருதப் பேராசிரியரைச் சந்தித்து, என்னைப் பரிந்துரை செய்தமைக்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்தேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "உன் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்குச் சிரமம் ஏதும் இருக்காது என்றுதான் நான்

நினைத்திருந்தேன்," என்று கூறினார். நான் அதில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

"ஆனால் முதுகலைப் பட்டப் படிப்பிற்கு அதிக அர்ப்பணிப்புத் தேவை என்பதை ஞாபகம் வைத்துக் கொள். நீ வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். வேலையையும் இதையும் எப்படிச் சமாளிப்பாய்?" என்று கேட்டார்.

நான் எதுவும் யோசிக்காமல், "சார், நீங்கள் அது பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று கூறினேன். அவருக்கு மீண்டும் நன்றி கூறிவிட்டு, என் அலுவலகத்திற்கு விரைந்தேன்.

என் முதன்மை நிர்வாக அதிகாரியும் நானும் எங்கள் நிர்வாகத் தலைவரின் அறைக்குள் நுழைந்தபொது இது வழக்கமாக நடக்கும் சந்திப்பு அல்ல என்பதை நான் உணர்ந்தேன். நிர்வாகத் தலைவருடன் மேலும் இரண்டு பேர் இருந்தனர். அவர்கள் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த இரு மூத்த உறுப்பினர்கள். அவர்கள் அனைவரும் என்னைப் புன்முறுவலுடன் வரவேற்றனர்.

நிர்வாகத் தலைவர் என்னிடம், "நாங்கள் உனக்கு நல்ல செய்தி ஒன்றைக் கூறப் போகிறோம்," என்று தெரிவித்தார். முதுகலைப் பட்டப்படிப்பில் இடம் கிடைத்த நல்ல செய்தியையே நான் இன்னும் சீரணித்தப் பாடில்லை. அதற்குள் மற்றொன்றா? இப்புதிய நல்ல செய்தி என்னவாக இருக்கும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

"உன்னைக் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் துறையின் உதவி இயக்குனராக ஆக்க நமது நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது."

அட, எவ்வளவு நல்ல செய்தி!

"நமது நிறுவனத்தின் வரலாற்றில் இவ்வளவு குறைந்த காலத்தில் இவ்வளவு குறைந்த வயதில் இப்பதவியைப் பெறப் போகும் முதல் நபர் நீதான்," என்று முதன்மை நிர்வாக அதிகாரி கூறினார். நிர்வாகத் தலைவரிடம் கேள்விகள் கேட்கும் பழக்கத்தை நான் விட்டுவிட்டிருந்தாலும், நான் கேட்காத கேள்விகளுக்கு பதிலளிக்கும் பழக்கத்தை அவர் உருவாக்கிக் கொண்டிருந்தார்.

"உன் வேலையில் நீ மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளாய். இக்குறுகிய காலத்தில் நீ சாதித்ததைச் சாதிப்பதற்குப் பலருக்கு பல ஆண்டுகள் பிடித்திருக்கும். நீ உன் பணியின் மூலம் நம் நிறுவனத்திற்கு ஏராளமான பங்களிப்பை அளித்துள்ளதோடு, ஒரு நல்ல தொழிலதிபருக்குத் தேவையான மனப்போக்கையும் உருவாக்கிக்

கொண்டுள்ளாய்," என்று நிர்வாகத் தலைவர் கூறினார்.

"ஊடகங்களுக்கு இது ஒரு முக்கியச் செய்தி. நீ பிரபலமாகப் போகிறாய்." பலதரப்பட்டத் தொலைக்காட்சிப் பேட்டிகளை அளித்திருந்த தலைமை நிர்வாக அதிகாரியான அவர், வர்த்தகம் தொடர்பான செய்திகளைத் தொகுத்தளிக்கும் தொலைக்காட்சி நிருபர்கள் இதை ஒரு முக்கியமான செய்தியாகக் கருதுவார்கள் என்று நினைத்தார்.

நிறுவன அதிகாரியின் அலுவலகத்திலிருந்த அனைவரும் என் செயல்பாடு குறித்துப் பெரிதும் பாராட்டினர். ஆனால் என் மனத்திற்குள் ஆழமாக ஏதோ ஒரு சோகம் இருந்தது. இன்னுமொரு பதவி உயர்வா என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன்.

இதற்காகத்தான் நான் இந்த நிறுவனத்திற்கு வந்தேனா? வாழ்க்கை நன்றாகவே போய்க் கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நான் வாழ விரும்பிய வாழ்க்கை இதுதானா? உயர் பதவி என்றால் கூடுதல் பொறுப்புகள். நான் இதுவரை செயல்பட்டு வந்ததுபோலவே இனியும் செயல்பட்டு வர வேண்டும். அது இன்னொரு பதவி உயர்வுக்கு இட்டுச் செல்லும்.

இது ஒரு நச்சுச் சுழற்சி வட்டம். இது ஒருபோதும் முடிவுக்கு வராது.

நான் இந்நிறுவனத்திற்கு வந்தது தொழிலைப் பற்றிக் கற்றுக் கொள்ளத்தான். ஓர் ஊழியனாக ஆவதற்காக வரவில்லை. அதோடு, நான் இப்போதுதான் முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளேன். அப்படிப்பு என்னிடமிருந்து அதிகமான நேரத்தையும் அதிகமான அர்ப்பணிப்பையும் எதிர்பார்க்கும்.

நான் இந்நிறுவனத்தில் ஒரு கழுதைபோல வேலை செய்து வந்திருந்தேன். இப்போது இக்கழுதை இன்னும் கூடுதலான பொதியைச் சுமக்க வேண்டும்.

"இது தொடர்பான அனைத்து வேலைகளையும் செய்து முடிக்குமாறு நான் முதன்மை நிர்வாக அதிகாரியிடம் கூறியுள்ளேன். நீ புதிய பொறுப்புக்குத் தயாராகிக் கொள்," என்று நிர்வாகத் தலைவர் என்னிடம் கூறினார்.

நாங்கள் நிர்வாக அதிகாரியின் அறையைவிட்டு வெளியே வந்தோம். முதன்மை நிர்வாக அதிகாரி மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தார். அவர் என்னிடம், "எனக்கு உன்னைப் பார்த்துப் பெருமையாக இருக்கிறது. நீ பெரிய விஷயத்தைச் சாதித்து விட்டாய். வாழ்த்துக்கள்," என்று கூறினார்.

நான் அவருடைய கண்களை நேரடியாகப் பார்க்காமல், என் குரலைத்

தாழ்த்திக் கொண்டு, “சார், நான் என் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்,” என்று கூறினேன்.

# 34

# தொடர்பு

அடுத்த நாள் அதிகாலை நான்கு மணிக்கே எனக்கு விழிப்பு வந்துவிட்டது. நான் பொதுவாக அவ்வளவு சீக்கிரம் எழுந்திருப்பதில்லை. இரவு வெகுநேரம்வரை வேலை செய்துவிட்டு, காலையில் புத்துணர்ச்சியின்றி எழுந்திருப்பது எனக்குப் பழக்கமாகியிருந்தது.

ஆனால் அன்றைய நாள் வித்தியாசமாக இருந்தது. நான் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, இவ்வளவு சீக்கிரம் எழுந்து கொள்ள வேண்டுமா என்று யோசித்தேன். மீண்டும் படுத்தேன். ஆனால் தூக்கம் வரவில்லை.

நான் எழுந்து உடற்பயிற்சிகளை மேற்கொண்டேன். சூரிய நமஸ்காரம் பயிற்சியைச் செய்ய அன்று என்னிடம் அதிகமான ஆற்றல் இருந்தது. குளித்துவிட்டு வழக்கமான பூசையைச் செய்துவிட்டு அன்றைய நாளுக்காக நான் தயாரானேன். என்னிடம் நிறைய நேரம் இருந்ததை நான் உணர்ந்தேன்.

நான் தியானம் செய்ய உட்கார்ந்தேன். முதன்முறையாக என்னால் ஆழமான தியானத்தில் ஈடுபட முடிந்தது. நான் என் கண்களைத் திறந்தபோது சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது. நகர்ப்புற இளைஞனின் வாழ்க்கையில் உதிக்கும் சூரியனுக்கு இடமே கிடையாது. தகதகவென உதித்துக் கொண்டிருக்கும் சூரியனைப் பார்ப்பது ஒரு தெய்வீக அனுபவம்.

பொன்னிற ஒளியை வீசிக் கொண்டு அச்சூரியன் மேலெழுந்தபோது ஓர் இளைஞனிலிருந்து ஒரு வயது வந்த மனிதனாக நான் மாறிவிட்டிருந்ததாக நான் உணர்ந்தேன்.

“உனக்கு என்னவாயிற்று?” என்று கேட்டுக் கொண்டே என் அம்மா என் அறைக்குள் நுழைந்தார். “ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டாய்? எங்காவது போகப் போகிறாயா?”

கன்னாபின்னாவென்று இருந்த என்னுடைய பயண நேரங்கள் பற்றி அம்மா அறிவார். அதிகாலை விமானப் பயணங்கள், வேறு ஒரு நகரத்திற்கு என்னைக் கூட்டிச் செல்வதற்காக வாசலில் காத்திருக்கும்

கார், நடுநிசிக்குப் பிறகு வீடு திரும்புதல் போன்ற என் பழக்கங்கள் அவருக்கு அத்துப்படி. அச்சமயங்களில், எனக்குச் சாப்பாடு தயாரிக்க வேண்டுமா என்ற ஒரே ஒரு கேள்வியை மட்டும்தான் அவர் கேட்பார்.

அது எனக்குத் தெரியும் என்பதால் நான் அவரிடம், "நான் எங்கும் போகப் போவதில்லை. வழக்கமான நேரத்திற்கு நான் காலையுணவைச் சாப்பிடுகிறேன்," என்று கூறினேன்.

நான் என் கனவு வேலையை விட்டுவிட்டேன் என்ற அதிர்ச்சியான தகவலை நான் வீட்டில் எவரிடமும் இன்னும் கூறியிருக்கவில்லை. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவு எனக்குப் பிறப்பதற்காக நான் காத்திருந்தேன். தொழிலில் இறங்க வேண்டும் என்பது என் விருப்பமாக இருந்தபோதிலும், எந்தத் தொழில் என்பதை என்னால் இன்னும் தீர்மானிக்க முடியவில்லை.

என் நிர்வாகத் தலைவர், பின்னர் என்னிடம், "நீ எங்கள் நிறுவனத்தைவிட்டுப் போய்விடுவாய் என்பது நான் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான். ஆனால் அது இப்படித் திடீரென்று ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை," என்று கூறினார். அவர் என்னைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார்.

"உனக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்ற முடிவு என்னுடையது அல்ல. முதன்மை நிர்வாக அதிகாரிதான் அதைப் பரிந்துரைத்தார். நிர்வாகக் குழுவும் அதை உடனே ஏற்றுக் கொண்டது. நீ எங்கு சென்றாலும் சிறப்பாகச் செயல்படுவாய் என்பதை நான் அறிவேன். என் எண்ணம் சரிதான் என்பதை நீ நிரூபித்துள்ளாய். உன் வருங்காலத்தைத் தீர்மானிப்பதற்கு நான் உனக்கு உதவ விரும்புகிறேன்."

"சார், நான் இங்கு நிறைய கற்றுக் கொண்டுள்ளேன். நீங்கள் என் மேலதிகாரியாக மட்டும் இருக்கவில்லை. என் வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளீர்கள். என் வாழ்நாள் முழுவதும் எனக்கு உங்கள் உதவி தேவைப்படும். என் வாழ்வின் இக்கட்டத்தில் நான் அடுத்து என்ன செய்யப் போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது உடனடியான பிரச்சனை அல்ல. நான் என்னுடன் சிறிது காலத்தைச் செலவிடப் போகிறேன். எனக்குச் சிறிது ஓய்வு தேவை," என்று நான் அவரிடம் தைரியமாகக் கூறினேன்.

அவர் நான் கூறியதை ஆமோதிக்கும் விதமாகத் தன் தலையை ஆட்டினார். "போ, வாழ்க்கை உனக்கு விடுக்கும் அறைகூவல் என்ன என்பதைக் கண்டுபிடி. உனக்கு உதவ எப்போதும் நான் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறேன்."

என் தோழி அழைத்திருந்த கருத்தரங்குப் பேச்சிற்கான உரையைத் தயாரிப்பதில் அன்றைய தினத்தை நான் கழித்தேன். ‘கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலுள்ள நிர்வாக அடிப்படைகள்’ என்ற தலைப்பில் அமைந்திருந்த அக்கட்டுரையை நான் மிகவும் சிரத்தையோடு தயாரித்தேன்.

நானும் என் தோழியும் மீண்டும் சந்தித்துக் கொண்டபோது, “உன் கட்டுரை மிகவும் வித்தியாசமாக இருக்கிறது,” என்று அவள் கூறினாள். என் கட்டுரையை மேலும் மெருகூட்ட அவளிடம் சில யோசனைகளை நான் கேட்டேன். கருத்தரங்கு தொடங்குவதற்கு ஒரு வாரம் இருந்தபோது, அக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்களிடம் அக்கட்டுரையை நான் சமர்ப்பித்தேன்.

“நீ ஏன் அர்த்தசாஸ்திரத்தில் முனைவர் பட்டம் பெற முயலக்கூடாது?” என்று அவள் கேட்டாள். நான் ஏற்கனவே அந்த யோசனையில்தான் இருந்தேன் என்பது அவளுக்குத் தெரியாது.

“டாக்டர்,” என்று அவளை நான் அழைத்தேன். அவள் முனைவர் பட்டப்படிப்பில் பாதிக்கு மேல் முடித்திருந்தாள். முனைவர் பட்டம் பெற்றப் பிறகு அவள் பெயருக்கு முன்னால் எப்படியும் ‘டாக்டர்’ பட்டம் வந்து ஒட்டிக் கொள்ளத்தானே போகிறது?

“என்னை இப்போதே டாக்டர் என்று அழைக்காதே. அதற்கு இன்னும் வெகுதூரம் இருக்கிறது.”

அவளுடைய பதில் எனக்குப் பிடித்திருந்தாலும் நான் அவளை வேண்டுமென்றே சீண்டினேன்: “டாக்டர் . . . இதற்கு இப்போதே பழகிக் கொள். வெகு விரைவில் எல்லோரும் உன்னை இப்படித்தான் அழைக்கப் போகின்றனர்.” நான் அவளுடைய தன்னம்பிக்கையை உயர்த்த விரும்பினேன். சீக்கிரமாக முனைவர் பட்டப்படிப்பை முடித்துவிட்டுக் கல்வித் துறையில் பணியாற்ற அவள் விரும்பியதை நான் புரிந்து கொண்டுள்ளது குறித்து அவள் மகிழ்ச்சியுடன் என்னை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள்.

அக்கருத்தரங்கில் நான் சமர்ப்பித்த உரைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நான் வெகுவாகப் பாராட்டப்பட்டேன். நிர்வாகத் துறையின் தலைவர் என்னைத் தனியாக அழைத்து, “நீ கௌடில்யரின் தத்துவம் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும்,” என்று கூறினார்.

என் தோழி மிகவும் ஆச்சரியம் அடைந்தாள். “உனக்கு ஒன்று தெரியுமா? அந்த நிர்வாகத் துறையின் தலைவர், பிறர்மீது கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவர் என்று பெயர் எடுத்தவர். அவரே உன்னைப் பாராட்டுகிறார் என்றால், நீ உண்மையிலேயே நன்றாகப்

பேசியிருக்க வேண்டும். வாழ்த்துக்கள்!”

“நான் எதைச் செய்தாலும் மிகச் சிறப்பாகவே செய்வேன்,” என்று நான் திமிராகக் கூறினேன்.

“ஆனாலும் உனக்கு அகங்காரம் அதிகம்தான்,” என்று கூறி அவள் என்னைப் பரிகசித்தாள்.

நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம். ஆய்வு உலகில் எனக்கும் ஓர் இடம் கிடைக்கவிருந்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். நான் அவளுடைய கண்களை நேராகப் பார்த்து, “நன்றி, டாக்டர்,” என்று கூறினேன். என்னால் அவளுடன் ஓர் ஆழமான தொடர்பை உணர முடிந்தது. நேரம் உறைந்துவிட்டதுபோல எங்களுக்கு இடையே வெகுநேரம் மௌனம் நிலவியது.

“என்னைத் திருமணம் செய்து கொள்ள உனக்குச் சம்மதமா?” என்று நான் கேட்டேன்.

எங்களுக்கு இடையே நிலவிய மௌனம் தொடர்ந்தது . . .

# 35

## முன்னோக்கி

நானும் என் தோழியும் ஒரே கல்லூரியில்தான் படித்தோம். நாங்கள் ஒரே வகுப்பில் இல்லாவிட்டாலும் ஒரே நண்பர்கள் வட்டத்தில் இருந்தோம். பின்னாளில் நான் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண் அவளாக இருப்பாள் என்று அப்போது நான் நினைத்திருக்கவில்லை.

நான் என் விருப்பத்தை அவளிடம் வெளிப்படுத்திய பிறகு எனக்கு என்மீதே ஆச்சரியம் ஏற்பட்டது. அது திடீரென்று நிகழ்ந்துவிட்ட ஒன்றாக இருந்ததால், அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது குறித்து நான் யோசித்திருக்கவில்லை. அதைவிடப் பெரிய ஆச்சரியம் அவள் உடனடியாக எனக்குச் சம்மதம் தெரிவித்ததுதான்.

நீங்கள் யாரையாவது காதலித்தால் அதை அந்த நபரிடம் தெரிவிக்கக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை ஒருபோதும் தவறவிடக்கூடாது என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். என் வாழ்க்கைத் துணையாக இருக்க அவள் ஒப்புக் கொண்டவுடன்தான், என் வாழ்க்கையில் நான் எந்தத் திசையில் பயணிப்பது என்பது குறித்தத் தெளிவு இல்லாத ஒரு கட்டத்தில் நான் இருந்து கொண்டிருந்தேன் என்பது எனக்குப் புரிந்தது. அப்படியிருக்கும்போது திருமணம் போன்ற பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள நான் ஏன் துணிந்தேன்?

எனக்குக் குற்றவுணர்வு ஏற்பட்டது. நான் அவளிடம் சென்று, “நான் உன்னைக் காதலிக்கிறேன். ஆனால் நீ எப்போது வேண்டுமானாலும் உன் மனத்தை மாற்றிக் கொண்டு வேறு எவரை வேண்டுமானாலும் மணம் முடித்துக் கொள்ளலாம்,” என்று கூறினேன். அவள் தன் முடிவை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன்.

“உனக்கு என்னவாயிற்று? நீ வேறு எவளையாவது மனத்தில் வைத்திருக்கிறாயா?”

“இல்லையில்லை, திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை நான் இதுவரை உன் ஒருத்தியிடம்தான் வெளிப்படுத்தி இருக்கிறேன். ஆனால் நமது உறவு முறிந்துவிடக்கூடாது என்று நான் விரும்புகிறேன்.” நான் பதற்றமாக இருந்தேன். “இப்போது

நான் வாழ்க்கையில் எந்த இலக்குமின்றி இருக்கிறேன். ஒரு பெரிய நிறுவனத்தில் பார்த்துக் கொண்டிருந்த நல்ல வேலையை நான் விட்டுவிட்டதால் பலர் என்னை முட்டாள் என்று கருதுகின்றனர். என் நிலையில் வேறு யாராவது இருந்திருந்தால், அந்தக் கனவு வேலையில் இருந்திருக்கும்போதே திருமணம் செய்திருப்பர். அடுத்து நான் என்ன செய்யப் போகிறேன் என்பதுகூட எனக்கு இப்போது தெரியாது," என்று நான் என் நிலையை விவரித்தேன்.

அவள் என் தோளைத் தொட்டு, "கவலைப்படாதே. ஒருநாள் மிகப் பெரிய ஆளாக நீ ஆவாய் என்பது எனக்குத் தெரியும். உன்னிடம் இப்போது இருக்கும் விஷயங்களுக்காக நான் உன்னை விரும்பவில்லை. பெரிய விஷயங்களைச் சாதிப்பதற்கான ஆற்றல் உன்னிடம் இருக்கிறது என்பதுதான் நான் உன்னை நோக்கிக் கவரப்பட்டதற்குக் காரணம்," என்று கூறினாள்.

"எனக்கு வாழ்க்கையில் ஒரு கனவு இருக்கிறது. அது சிறுபிள்ளைத்தனமான ஒன்றாக இருக்கலாம். நான் உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக விரும்புகிறேன்," என்று கூறிவிட்டு, அவள் என்னைப் பார்த்துச் சிரிப்பதற்காகக் காத்திருந்தேன்.

ஆனால் அவள் ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு, "உனக்கு நான், எனக்கு நீ என்று நாம் இருவரும் ஏற்கனவே செழிப்பாகத்தான் இருக்கிறோம். நிறையப் பணம் வருவதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம்," என்று கூறினாள். அவள் படித்துக் கொண்டிருந்ததால், படிப்பு முடியும்வரை அவளது வீட்டில் அவளது திருமணப் பேச்சை எடுக்க மாட்டார்கள் என்பதால், என் வாழ்க்கையின் அடுத்தக் கட்டம் குறித்துச் சிந்திப்பதற்கு எனக்குச் சிறிது அவகாசம் கிடைத்தது.

அக்காலகட்டத்தில் கும்பமேளாவிற்குச் செல்லும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கங்கை ஆற்றில் புனித நீராடுவதற்காக நான் என் நண்பர்களுடன் சென்றிருந்தேன். அலைகடலென மக்கள் அங்கு திரண்டிருந்தனர். அச்சூழ்நிலை தெய்வீகமாக இருந்தது.

நாங்கள் ஆற்றின் கரையோரம் நடந்து கொண்டிருந்தபோது, எங்கள் அருகே ஒருசில வெளிநாட்டவர் நடந்து வந்து கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்களுடன் ஒரு சுற்றுலாப் பயணியர் வழிகாட்டியும் வந்திருந்தார். அவர் அவர்களுக்கு அந்த இடத்தைப் பற்றி விளக்கிக் கொண்டே வந்தார். அவர்கள் சுற்றுப்புறங்களைப் புகைப்படம் எடுத்துக் கொண்டே சென்றனர்.

சிறிது தூரம் நடந்து வந்த பிறகு நாங்கள் ஒரு தேநீர்க் கடைக்குச் சென்று அமர்ந்தோம். அங்கு அந்த வெளிநாட்டவர்களும் எங்களுடன்

வந்து அமர்ந்தனர். நாங்கள் மரியாதை நிமித்தம் பரஸ்பர நலன் விசாரித்துவிட்டுப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

"இந்தியாவில் நாங்கள் அடுத்து எங்கே செல்லலாம்? எங்களிடம் ஏராளமான தகவல்கள் இருக்கின்றன. உண்மையான இந்தியாவை நாங்கள் உணர்ந்து கொள்ள உதவும் ஏதாவது ஓரிடத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அதை நாங்கள் அனுபவிக்க விரும்புகிறோம். அதைப் புகைப்படமெடுத்து எங்களுடன் கொண்டு செல்ல விரும்புகிறோம்," என்று அவர்களில் ஒருவர் என்னிடம் கேட்டார்.

"உங்களால் உண்மையான இந்தியாவை ஒரு புகைப்படத்திற்குள் அடைத்துவிட முடியாது," என்று நான் கிண்டலாகக் கூறினேன்.

"இந்தியா என்பது பார்ப்பதற்கோ அல்லது பயணிப்பதற்கோ ஆன ஓர் இடம் அல்ல. நீங்கள் இந்தியாவை வேறொரு கோணத்திலிருந்து பார்க்க வேண்டும். அதனிடமுள்ள ஆற்றல் உங்களை மாற்றவல்லது. நீங்கள் இந்தியாவில் எங்கு சென்றாலும் அதை உணர முயலுங்கள். அது இந்தியாவின் ஆன்மீகப் பக்கம்," என்று நான் கூறியவுடன் அந்த வெளிநாட்டவர்கள் பெரும் ஆச்சரியம் அடைந்தனர்.

"இந்தியாவில் தாஜ்மகால், அஜந்தா மற்றும் எல்லோரா குகைகள் போன்றவை இருந்தாலும், பிறரோடு பகிர்ந்து கொள்ள அதனிடம் ஒரு வரலாறும் தத்துவங்களும் இருக்கின்றன. அதனிடம் ஏராளமான உணவு வகைகளும் திருவிழாக்களும் இருந்தாலும், ஆன்மீகம் தொடர்பான ஒரு கலாச்சாரமும் அதனிடம் இருக்கிறது." நான் என் தாய் நாடு குறித்துக் கொண்டிருந்த பெருமையை நான் தொடர்ந்து பறைசாற்றிக் கொண்டிருந்தேன்.

"நீங்கள் சுற்றுலாப் பயணியர் வழிகாட்டியா அல்லது பயணியர் முகவரா?" என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

"அதெல்லாம் இல்லை," என்று கூறி நான் புன்னகைத்தேன். ஆனால் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு நாங்கள் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, நான் தீவிர யோசனையில் இருந்தேன்.

இந்தியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பற்றியும், அவர்களுக்கு நம் நாட்டின் வரலாற்றையும் கலாச்சாரத்தையும் சுவைபட எடுத்துக் கூறக்கூடிய திறமை படைத்தச் சுற்றுலாப் பயணியர் வழிகாட்டிகளுக்கான தேவைகள் பற்றியும் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். சுற்றுலாப் பயணியர் வழிகாட்டிகள் தேவைப்படும் அளவுக்கு அவர்களின் எண்ணிக்கை இருந்ததா என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

என் தோழி எங்களுடன் வரவில்லை என்பதால் அவளைத்

தொலைபேசியில் அழைத்து, “எனக்கு விடை கிடைத்துவிட்டது,” என்று உற்சாகமாகக் கூறினேன்.

நான் கூறியது அவளுக்குப் புரியவில்லை. “என்ன விடை?” என்று அவள் கேட்டாள்.

“நான் போராடிக் கொண்டிருந்த கேள்வி . . . எந்த மாதிரியான தொழிலை நான் துவக்க வேண்டும் என்ற கேள்வி. நான் பயணத் தொழிலில் இறங்க விரும்புகிறேன்.” நான் இதைக் கூறி முடித்தபோது என்னிடம் ஒரு மனநிறைவு ஏற்பட்டிருந்தது.

மறுமுனையில் முழு அமைதி நிலவியது.

“நான் அங்கு வந்தவுடன் இது பற்றி மேலும் கூறுகிறேன்.” அப்போது அதற்கு மேல் எதுவும் கூற நான் விரும்பவில்லை.

அன்று இரவு என் நண்பர்கள் அனைவரும் தூங்கச் சென்ற பிறகு, நான் கங்கைக் கரையோரம் ஆசுவாசமாக நடந்து சென்றேன். நான் தனியாக இருந்தாலும், தனிமையாக உணரவில்லை. நான் மிகவும் முழுமையாக உணர்ந்தேன்.

லட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய உள்ளார்ந்த விருப்பத்தைக் கண்டுபிடிக்க கங்கை ஆறு உதவியுள்ளது. கங்கை இன்னோர் ஆறு அல்ல. ஒரு மாபெரும் முனிவர் தவமிருந்து சொர்க்கத்திலிருந்து அதை பூமிக்குக் கொண்டு வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தலைமுறை தலைமுறையாக இந்த ஆறு தன்னிடம் வந்தவர்களையெல்லாம் புனிதப்படுத்தியிருக்கிறது.

அந்த வருடக் கும்பமேளாவில், அன்னை கங்கையின் முன்னிலையில், வெளிநாட்டவர் சிலரோடு நான் மேற்கொண்ட உரையாடல் மூலமாக, நான் எந்தத் திசை நோக்கி நடைபோட வேண்டும் என்பதை நான் கண்டுபிடித்தேன்.

# 36

## வணிக முன்வரைவுத் திட்டம்

சுற்றுலாத் துறை பற்றி நான் விரிவாக ஆராய்ந்தேன். உலகளாவிய விதத்தில் அத்துறை எவ்வாறு இருந்தது, அது எவ்வாறு இயங்கியது ஆகியவை குறித்து நான் அலசினேன். சில நாடுகளின் பொருளாதாரம், அதன் சுற்றுலாத் துறையைப் பெருளமவிற்கு நம்பி இருந்ததை நான் கண்டுபிடித்தேன்.

மக்கள் பல காரணங்களுக்காகப் பயணங்களை மேற்கொள்கின்றனர். சாகசம், கல்வி, வியாபாரம், ஓய்வு போன்றவை அவற்றில் அடங்கும். சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்திழுக்க இந்தியாவிடம் எண்ணற்ற விஷயங்கள் இருந்தன.

இந்தியாவிற்கு ஓரளவு சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டுதான் இருந்தனர். ஆனால் இதை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளுக்கு அளவே இல்லை.

நான் என் வணிக முன்வரைவுத் திட்டத்தை விரிவாக எழுதி, அதை என் தோழியிடம் காண்பித்தேன். “இதற்கான வாய்ப்புகள் பிரம்மாண்டமாக இருக்கின்றன,” என்று நான் துவக்கினேன். “இந்தியாவில் இன்று எண்ணற்றச் சுற்றுலா முகவர்கள் இருக்கின்றனர். ஆனால் சிறந்த வழிகாட்டிகளோ அல்லது சிறந்த சுற்றுலா நிறுவனங்களோ இல்லை. இத்துறையை நம்மால் பெரியதாக வளர்த்தெடுக்க முடியும்.”

“இத்தொழிலுக்கு எவ்வளவு முதலீடு தேவைப்படும்?” என்று அவள் அதிக ஆர்வமின்றிக் கேட்டாள்.

“அதுதான் இதிலுள்ள மிகச் சிறப்பான விஷயம். இத்தொழிலின் துவக்கக் காலத்தில் எந்த முதலீடும் தேவை கிடையாது,” என்று நான் கூறியதும் அவளுக்குக் குழப்பம் ஏற்பட்டது. முதலீடே இல்லாமல் எப்படி ஒரு தொழிலைத் துவக்க முடியும்?

“சுற்றுலாத் துறையைப் பொருத்தவரை, வாடிக்கையாளர்கள் முதலில் பணத்தைக் கொடுப்பர், அவர்களுக்கான சேவை பின்னர் வழங்கப்படும்,” என்று நான் கூறினேன்.

ஆனாலும் அவளுக்குக் குழப்பம் தெளியவில்லை. “நான் இதை

உனக்கு விளக்குகிறேன். நீ ரயிலிலோ அல்லது விமானத்திலோ பயணிப்பதற்கு முன்னால் அதற்கான கட்டணத்தைச் செலுத்திவிடுகிறாய், இல்லையா?" என்று கேட்டேன். அவள் அதற்கு ஆமாம் என்று தலையசைத்தாள்.

"அப்படியானால் நீ முன்கூட்டியே பணத்தைக் கொடுத்துவிடுகிறாய், அதற்கான சேவை உனக்குப் பின்னால் கிடைக்கிறது." அவள் புரிந்து கொள்ளத் துவங்கினாள்.

"நீ ஒரு விமானப் பயணச்சீட்டு வாங்கிக் கொள்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். கடைசி நேரத்தில் நீ உன் பயணத்தை ரத்து செய்தால் என்னவாகும்?"

"ரத்து செய்ததற்கான கட்டணம் ஒன்றைக் கழித்துவிட்டு அவர்கள் மீதித் தொகையை என்னிடம் தந்துவிடுவார்கள்," என்று அவள் கூறினாள்.

"அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். நீ பயணம் செல்ல முடிவு செய்தால், பணத்தை முதலிலேயே கொடுத்துவிடுகிறாய். அதாவது, நீ உன் சேவையைப் பெறுவதற்கு முன்பே உன் பணத்தை அந்த நிறுவனம் பயன்படுத்திக் கொள்ள நீ அனுமதிக்கிறாய். நீ பயணம் செய்யாவிட்டாலும்கூட, ரத்துக் கட்டணம் என்ற பெயரில் ஒரு சிறிய அளவு பணத்தைக் கொடுக்கிறாய். எப்படிப் பார்த்தாலும் அந்த நிறுவனம் முதல் நாளிலிருந்தே லாபம் ஈட்டத் துவங்கிவிடுகிறது."

சுற்றுலாத் தொழில் பற்றிய விவரிப்பை நான் தொடர்ந்தேன்: "இதையே பல பேரை உள்ளடக்கிய ஒரு பெரிய சுற்றுலாப் பயணக் குழுவிற்குப் பொருத்திப் பார். ஒரு சுற்றுலா முகவர் என்ற முறையில் பயணம், தங்குமிடம், உணவு உட்பட மொத்தச் சுற்றுலாப் பயணத்திற்குமான கட்டணத்தை நீ அக்குழுவினரிடம் தெரிவிப்பாய். நீ அதை அவர்களிடம் விற்பனை செய்துவிட்டால், இப்பெரிய தொழிலுக்குள் குதித்துவிடலாம்."

"நன்றாக இருப்பதுபோலத்தான் தோன்றுகிறது," என்று அவள் கூறினாள்.

"இப்படிப்பட்ட முன்பணத்தைக் கொண்டு நம்மால் ஒரு சிறிய அளவில் இத்தொழிலைத் துவக்க முடியும். பின்னர் இத்தொழிலை பிரம்மாண்டமாக வளர்க்க முடிவு செய்தால், அப்போது கண்டிப்பாகப் பெரிய முதலீடு தேவைப்படும்." இந்த யோசனை குறித்து மேலும் தீவிரமாக யோசிக்க நாங்கள் ஒருவரையொருவர் ஊக்குவித்துக் கொண்டோம்.

இது எளிதாகத் தெரிந்தது. பல விஷயங்கள் ஒரு காகிதத்தில் ஒரு

திட்டமாக உருவெடுக்கும்போது சுலபமானதாகத்தான் இருக்கிறது என்பதையும் அதை நடைமுறைப்படுத்தும்போது ஏராளமான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும் நான் பின்னர்தான் உணர்ந்தேன். நான் எத்தொழிலில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன் என்பது இதனால் விளைந்த முக்கியமான பயன்.

பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கும் தொழிலை நான் துவக்கவிருந்ததை நான் என் பெற்றோருக்குத் தெரியப்படுத்தினேன். வழக்கம்போல அவர்கள் என்னை இதிலும் ஊக்குவித்தனர்.

“நானும் என் பெற்றோரிடம் கூறிவிடட்டுமா?” என்று என் தோழி கேட்டாள்.

எங்கள் உறவு பற்றித் தன் பெற்றோரிடம் கூற அவள் ஒரு சரியான தருணத்திற்காகக் காத்திருந்தாள் என்பது எனக்குப் புரிந்தது. நான் இப்போது என் சொந்தத் தொழிலைத் துவக்கவிருந்ததால், எல்லாப் பெண்களின் பெற்றோரும் வழக்கமாகக் கேட்கும், “பையன் என்ன செய்கிறான்?” என்ற கேள்விக்கு இப்போது அவளால் பதிலளிக்க முடியும்.

“தொழில் ஓரளவு நல்ல நிலைமைக்கு வரும்வரை நாம் காத்திருக்கலாம்,” என்று நான் கூறினேன்.

அவளுக்கு என்னுடைய பதில் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால் தன் பெற்றோருக்கும் தன் காதலனுக்கும் இடையே தடுமாறிக் கொண்டிருக்கும், மணமுடிக்க வேண்டிய பருவத்திலிருக்கும் ஓர் இளம் பெண்ணால் வேறு என்ன செய்ய முடியும்?

“நீ உன் முனைவர் பட்டப்படிப்பு முடியும்வரை காத்திருக்கலாம் என்று முன்பு கூறியிருந்தாயே?” என்று நான் அவளுக்கு நினைவுபடுத்தினேன்.

“ஆனால் என் பெற்றோர் வேறு எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். கல்யாணத்திற்குப் பிறகு நான் என் படிப்பைத் தொடர்ந்து கொள்ளலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.” தனக்கு ஏகப்பட்ட வரன்கள் வந்து கொண்டிருந்ததாகவும், தன் பெற்றோர் அவற்றை கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருந்ததாகவும் அவள் என்னிடம் தெரிவித்தாள்.

நான் என் தொழில் யோசனை குறித்து மிகுந்த உற்சாகத்துடன் இருந்தேன். ஆனால் இச்சமயத்தில் அவள் தன் பெற்றோரிடம் எங்கள் உறவு பற்றிக் கூறினால், நான் ஒரு வெற்றியாளன் இல்லை என்பதை எனக்குச் சுட்டிக்காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக அது அமையக்கூடும் என்று நான் கவலை கொண்டேன்.

பெண்கள் உளவியல் கலையில் வல்லவர்கள். உங்கள் முகத்தைப் பார்த்தே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை அவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள். அவள் என் அருகே நெருங்கி வந்து, “அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். என் பெற்றோரை நான் பார்த்துக் கொள்கிறேன். உங்கள் தொழிலைத் துவக்குங்கள். அதை பிரம்மாண்டமான ஒன்றாக நாம் ஆக்கலாம்,” என்று கூறினாள்.

என் தோழியிடமிருந்து வந்த ‘அதை பிரம்மாண்டமான ஒன்றாக நாம் ஆக்கலாம்’ என்ற வார்த்தைகள் என்னை வெகுவாக ஊக்குவித்தன. பிரம்மாண்டமாகச் சிந்திக்க எனக்குப் பிடிக்கும் என்றாலும், அவள் பயன்படுத்திய ‘நாம்’ என்ற வார்த்தை என்னை மிகவும் கவர்ந்தது. இப்போது அவளும் என் கனவில் ஓர் அங்கம்.

நான் ஒரு தொழிலைத் துவக்கவிருந்த விஷயத்தை என் குருவிடமும் அறங்காவலரிடம் தெரிவித்து அவர்களது ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக நான் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அறங்காவலரிடம், “நான் ஒரு தொழிலைத் துவக்க நீங்கள்தான் என்னை ஊக்குவித்தீர்கள். நானும் உங்களைப்போல ஆக வேண்டும் என்று விரும்புகிறேன்,” என்று கூறினேன்.

அதற்கு அவர், “நீ என்னைவிட மேலானவனாக வருவாய்,” என்று பதிலளித்தார். அது என்னை மகிழ்ச்சிப்படுத்தியது.

அவர் சிறிது இடைவெளி விட்டுவிட்டு, “அது எதனால் தெரியுமா?” என்று கேட்டார்.

தன் கேள்விக்கு அவரே விடையளிக்கட்டும் என்று நான் மௌனமாக இருந்தேன். “ஏனெனில், நீ அர்த்தசாஸ்திரத்தை இளமையிலேயே, தொழிலில் குதிக்கும் முன்பாகவே கற்றுக் கொண்டுவிட்டாய். எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை.”

அடுத்து நான் என் குருவைத் தொடர்பு கொண்டேன். அவர் என்னிடம், “தினசரி அர்த்தசாஸ்திரத்திலிருந்து ஒருசில சூத்திரங்களைப் படிக்க மறந்துவிடாதே. தினசரிப் பிரச்சனைகளைச் சாணக்கியரின் வழியில் எவ்வாறு எதிர்கொள்வது என்பதை அது உனக்குக் காட்டும்,” என்று கூறினார்.

என் தலைவிதி வெகுவாக மாறவிருந்தது.

# 37

# முதலடி

நான் முன்பு வேலை பார்த்த நிறுவனத்தின் தலைவரைச் சிறிது தயக்கத்துடன் நான் தொடர்பு கொண்டேன். ஓர் அருமையான வாய்ப்பைக் கொடுத்திருந்தும் அதை உதறித் தள்ளிவிட்டுச் சென்ற ஒரு முன்னாள் ஊழியர் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக அவரைத் தொடர்பு கொள்வதை அவர் விரும்புவாரா என்று எனக்கு சந்தேகமாக இருந்தது.

"வா, வந்து என்னைப் பார்," என்று அவர் கூறினார். "எங்கே நீ ஒரேயடியாகக் காணாமல் போய்விட்டாய் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்." அவரது வார்த்தைகள் என்னைப் பெரிதும் ஊக்குவித்தன.

தன்னை சந்திக்க அவர் என்னை அழைத்ததை எனக்கு அளிக்கப்பட்ட ஒரு சிறப்புரிமையாக நான் உணர்ந்தேன். நான் என் யோசனையை அவரிடம் தெரிவித்து, அது குறித்து நான் தயாரித்திருந்த வணிக முன்வரைவுத் திட்டத்தையும் அவரிடம் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியதை அவர் ஆர்வத்துடன் கேட்டார். "பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கும் தொழில் ஒரு நல்ல தொழில். அத்தொழிலில் இறங்க வேண்டும் என்று நான் எப்போதும் விரும்பி வந்தேன். ஆனால் அது குறித்துத் தீவிரமாக ஆலோசிக்க எனக்கு நேரமிருக்கவில்லை."

நிர்வாகத் தலைவரின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவரைப்போலப் பெருவெற்றி பெற்ற ஒருவர் என் யோசனையை அங்கீகரித்தார் என்பதுதான் அதற்குக் காரணம். ஆனால் அடுத்து அவர் கூறிய வார்த்தைகள் என்னை இன்னும் குஷிப்படுத்தின. "ஒரு வேளை நான் என் கனவை உன் மூலமாக நிறைவேற்றக்கூடும்."

என் தொழிலில் முதலீடு செய்ய நான் ஒரு முதலீட்டாளரைக் கண்டுபிடித்துவிட்டேன் என்று எனக்குப் பட்டது. ஆனால் பணம் கேட்பதற்கான நேரம் அதுவல்ல. முதலில் நான் என்னை நிரூபித்தாக வேண்டும். நான் பெரிதாகச் சிந்தித்தாலும் சிறிதாகத் துவக்கவே விரும்பினேன்.

நான் வசித்து வந்த நகரத்திலிருந்த பிரபலமான கோவில்களுக்கு ஒரு —நாள் புனிதப் பயணமாக ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்ததுதான் நான் மேற்கொண்ட முதல் காரியம். இதில் கலந்து கொள்ளப் பலர் முன்வருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

நானே எல்வாவற்றையும் ஏற்பாடு செய்தேன். கோவில்களின் தலபுராணத்தைப் படிப்பதிலிருந்து, உணவு மற்றும் பேருந்து ஏற்பாடுகள் போன்ற அனைத்தும் அதில் அடங்கும்.

எந்தவொரு தொழிலிலும் அதன் அடைப்படைகளை அறிந்து வைத்திருப்பது அதைப் பெரிய அளவுக்கு வளர்த்தெடுக்க உதவும் என்பதை என் முந்தைய நிர்வாகத் தலைவர் எனக்கு ஏற்கனவே கற்றுக் கொடுத்திருந்தார். இது ஒரு முக்கியமான அம்சம். என் முயற்சி ஓர் உல்லாசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதுபோல இருந்தது. அதை நான் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செய்தேன்.

இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இதில் கலந்து கொள்ள முன்வந்தவர்களில் பலரும் எனக்குத் தெரிந்தவர்கள்தான். என் சுற்றுலாப் பயணத்தில் கலந்து கொண்டவர்களில் எனக்கு அதிக ஆச்சரியத்தை ஏற்படுத்தியவர் என் வருங்கால மாமியார்தான். என் தோழி என் சுற்றுலாவைத் தன் குடும்பத்தாரிடமே வெற்றிகரமாக விற்பனை செய்திருந்தார்.

“என் கல்லூரி நண்பர்களில் ஒருவர் புதிதாக ஒரு சுற்றுலாப் பயணத் தொழிலைத் துவக்கியுள்ளார். அவரை உனக்குத் தெரியும். நம் நகரிலுள்ள கோவில்களுக்குச் செல்லும் சுற்றுலா அது. அம்மா, நீ ஏன் இதில் கலந்து கொள்ளக்கூடாது?”

தன் வருங்கால மருமகனின் தொழில் சாமர்த்தியத்தைத் தன் அம்மா நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக என் தோழி செய்த ஏற்பாடு இது.

என் தொழிலில் நான் எடுத்து வைத்த முதலடியின்போது என் தோழியும் என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் மிகவும் விரும்பியபோதிலும் அவள் வரவில்லை. தன் அம்மா என்னைத் தனியாக எடை போட்டுக் கொள்ளட்டும் என்று அவள் நினைத்திருக்கலாம். தொழிலில் தன் மகனின் முதல் செயல்பாட்டைப் பார்ப்பதற்காக என் அம்மா இதில் கலந்து கொள்ள வந்திருந்தார். நான் எவ்வளவோ மறுத்தும் என் அம்மா சுற்றுலாப் பயணச் செலவிற்கான பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டிருந்தார்.

இதில் சிறப்பு என்னவென்றால், பயணம் முழுவதும் என் அம்மாவும் என் தோழியின் தாயாரும் அருகருகே உட்கார்ந்திருந்தனர்.

அவர்களுக்கு ஒருவரையொருவர் தெரியாது. ஆனால் வேறு யாரோ ஒருவர் பரஸ்பரம் அவர்களை அறிமுகப்படுத்தி வைக்க வேண்டிய தேவை பெண்களுக்கு எப்போது இருந்தது?

அந்நாளின் முடிவில் அவர்கள் இருவரும் அடுத்தவரது குடும்பம், சொந்த ஊர், உணவுப் பழக்க வழக்கங்கள், தங்களுக்குப் பிடித்தமான விஷயங்கள் போன்ற சகல விபரங்களையும் அறிந்து கொண்டிருப்பர் என்று நான் ஊகித்தேன். திருமணப் பேச்சுவார்த்தையைத் துவக்க என்னவோர் அருமையான வழி.

நான் ஒரு சிறப்பான வழிகாட்டியாக, ஒரு திறமையான சுற்றுலா மேலாளராக, ஒரு நல்ல உபசரிப்பாளனாகச் செயல்பட்டேன். பெரும்பாலான பயணிகள் வயது முதிர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் பேருந்தில் ஏறி இறங்கியபோது நான் அவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டேன்.

பயணத்தின்போது ஒரு சிறிய அசௌகரியம் ஏற்பட்டது. பேருந்தின் ஒரு டயர் பஞ்சர் ஆகிவிட்டது. அதை அவர்கள் உடனே சரி செய்துவிட்டனர். ஆனால் வருங்காலத்தில் எப்போதும் ஒரு மாற்று ஏற்பாட்டிற்குத் தயாராக இருக்க வேண்டும் என்ற பாடத்தை நான் அப்போது கற்றுக் கொண்டேன்.

அன்றைய நாளின் முடிவில் எல்லோரிடமிருந்தும் எனக்குப் பாராட்டுகள் கிடைத்தன. ஆனால் நான் அவர்களிடமிருந்து ஆசீர்வாதங்களைத்தான் எதிர்பார்த்திருந்தேன். என் அம்மாவும் என் தோழியின் அம்மாவும் தொடர்ந்து தொடர்பு வைத்திருப்பதற்காகத் தொலைபேசி எண்களைப் பரிமாறிக் கொண்டனர். என் தோழியின் திட்டம் கச்சிதமாகச் செயல்பட்டது குறித்து நான் மனத்திற்குள் சிரித்துக் கொண்டேன்.

நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். எனவே, நான் உடனடியாகப் படுக்கைக்குச் செல்ல விரும்பினேன். அப்போது தொலைபேசி ஒலித்தது. அழைத்தது என் தோழிதான் என்பதை நான் அறிந்திருந்தேன். என் சுற்றுலா குறித்துத் தனக்கு எதுவுமே தெரியாததுபோல, “எப்படிப் போயிற்று?” என்று அவள் கேட்டாள்.

அன்று இரவு உணவு பரிமாறியபோது, அன்று நடந்த விஷயங்கள் ஒன்று பாக்கியில்லாமல் என் அம்மா என் அப்பாவிடம் ஒப்பித்தார். அதே கதைதான் என் தோழியின் வீட்டிலும் அரங்கேறியிருக்கும் என்று நான் உறுதியாக நம்பினேன்.

நான் என் தோழியிடம் தொலைபேசியில், “இன்று என்ன நடந்தது என்று உனக்கு இதுவரை தெரிந்திருக்காவிட்டால், உன் அம்மாவிடம்

கேள்,'' என்று கூறினேன்.

அந்த வார்த்தைகள் அவளிடம் வெட்கத்தைத் தோற்றுவித்தன. "இப்போது நீ என்னைத் திருமணம் செய்த கொள்ள விரும்புகிறாய் என்று உன் பெற்றோரிடம் கூறிவிடு,'' என்று நான் உத்தரவிட்டேன்.

இப்போது அவளுடைய முறை. அவள் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "இப்போது வேண்டாம். வேறொரு நல்ல வேளை வரும்போது பார்த்துக் கொள்ளலாம்,'' என்று கூறினாள்.

அன்றைய தினத்தின் வரவு—செலவுக் கணக்குகளை நான் சரிபார்த்தபோது நான் சிறிய அளவு லாபம் அடைந்திருந்தது தெரிய வந்தது. நான் அத்தொகையை எடுத்துச் சென்று என் பெற்றோரின் முன்னால் வைத்து, "இது உங்களுடைய ஆசீர்வாதத்தால் கிடைத்த ஒன்று. நன்றி,'' என்று கூறினேன்.

என் அப்பா அம்மா இருவரும் என்னைக் கட்டியணைத்துக் கொண்டனர். இச்சிறிய துவக்கம் எனக்கும் சரி, என் பெற்றோருக்கும் சரி, மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்தது. நிறைய வெளிநாட்டவரை நம் நாட்டிற்கு அழைத்து வர வேண்டும் என்பது என் நோக்கமாக இருந்தபோதிலும், உள்நாட்டிலும் இதற்கு அதிகக் கிராக்கி இருந்ததை நான் உணர்ந்து கொண்டேன்.

இந்தியா வேகமாக மாறிக் கொண்டிருந்தது. இந்தியர்களும் உலகத்தரம் வாய்ந்த பயண அனுபவங்களைப் பெற விரும்பினர். தங்களுக்கு நல்ல சேவை கிடைக்கும் பட்சத்தில் அதற்காக அதிகப் பணத்தைக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர்.

அடுத்தச் சுற்றுலாவை இன்னும் எப்படிச் சிறப்பாகச் செய்யலாம் என்பது பற்றித் திட்டமிட்டுக் கொண்டே நான் தூங்கிப் போனேன்.

# 38

# விற்பனையாளரிலிருந்து தொழிற்கூட்டாளிக்கு

நான் அடுத்த நாள் காலையில் எழுந்து அர்த்தசாஸ்திரத்திலிருந்து ஒரு சில பக்கங்களைப் படித்தேன். நான் படித்த முதல் சூத்திரமே என்னுடைய அப்போதைய சூழலுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

> கூட்டாளிகளின் உதவியோடு மட்டுமே ஒருவரால் வெற்றிகரமாக ஆட்சி செலுத்த இயலும். ஒரே ஒரு பற்சக்கரத்தை வைத்துக் கொண்டு எதையும் சுழற்ற இயலாது. அதனால் அரசன் அமைச்சர்களை நியமித்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். ***(1.7.9)***

நான் என் தொழிலை வெற்றிகரமாகத் துவக்கியிருந்தபோதிலும், அது ஒற்றை ஆள் படையாக மட்டுமே இருந்தது என்பதை நான் உணர்ந்தேன். நான் என் தொழிலைப் பெரிதாக்க வேண்டுமென்றால், கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பயண ஏற்பாட்டுத் தொழில் பல விற்பனையாளர்களையும் இதற்குத் தேவையானவற்றைக் கொடுக்கும் நிலையில் இருப்பவர்களையும் வெகுவாகச் சார்ந்த ஒன்று. பயணியர் பயணம் செய்யும் பேருந்துகளின் முதலாளிகள், தங்குமிடத்தின் சொந்தக்காரர்கள், ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனர்கள் போன்றோர் இதில் அடங்குவர். ஒரு சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், இவர்கள் அனைவரோடும் கச்சிதமாக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

முதல் காரியமாக, எனக்கு இவற்றை வழங்கியவர்கள் மற்றும் என் சுற்றுலாவை விற்பனை செய்து கொடுத்தவர்களை நான் கூட்டாளிகள் என்று அழைக்க முடிவு செய்தேன். நாங்கள் கூட்டாளிகளாக இருந்தால் மட்டுமே நாங்கள் செய்யும் காரியங்களுக்கு நாங்கள் முழுப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும், மிகத் தரமான சேவையை வழங்க முடியும்.

என்னுடன் கூட்டாளிகளாக இயங்கத் தயாராக இருக்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் அடங்கிய ஒரு தொடர்பு வட்டத்தை

உருவாக்கிக் கொள்வது என்னுடைய அடுத்தக் கட்ட நடவடிக்கையாக இருந்தது. அதில் சுற்றுலா வழிகாட்டிகள், சுற்றுலா முகவர்கள், தங்குமிடங்களின் சொந்தக்காரர்கள், தொழிற்கூட்டாளிகள் ஆகியோர் அடங்குவர்.

சுற்றுலாத் துறையில் அங்கம் வகித்தக் குழுக்களின் பட்டியல் ஒன்றை நான் தயாரிக்கத் தொடங்கினேன். ஆனால் அது மிகப் பெரிய வேலை என்பதை விரைவில் நான் உணர்ந்து கொண்டேன். இத்தொழில் பிரம்மாண்டமானது என்பதால் இதில் ஏராளமானோர் ஈடுபட்டிருந்தனர். ஒருசில சுற்றுலா வழிகாட்டிகளை மட்டுமே கொண்டிருந்த சிறிய நிறுவனங்களிலிருந்து பன்னாட்டு நிறுவனங்கள்வரை பலரை உள்ளடக்கியிருந்த இத்துறை ஏராளமான மக்களுக்கு வேலை கொடுத்து வந்தது.

தொலைபேசி மூலம் வாடகைக்குக் கார்களைப் பதிவு செய்யும் வேலையை மட்டும் செய்து கொண்டிருந்த பயண முகவர்களும் இத்தொழிலோடு தொடர்பு கொண்டிருந்தனர். சிலர் தங்கள் வீட்டில் இருந்தே இத்தொழிலைச் செய்து வந்தனர். வேறு சிலர் குளிரூட்டப்பட்டிருந்த அறைகளிலிருந்து அதை மேற்கொண்டனர்.

நான் இவர்களை நேரில் சந்தித்து, என்னால் முடிந்த அளவு இத்துறை பற்றிய தகவல்களைத் திரட்டினேன். எனக்குக் கிடைத்த அனுபவங்கள் எதிரும் புதிருமாக இருந்தன. சில பெரிய நிறுவனங்கள் என்னை அலட்சியம் செய்தன. நான் எதுவும் தெரியாத ஒரு புது வரவு என்று அவர்கள் நினைத்தனர். சிறிய அளவில் செயல்பட்டுக் கொண்டிருந்தவர்களில் பலர் என்னைப் பெரிதும் ஊக்குவித்தனர். நான் அவர்களுக்கு அதிகமான வணிகத்தைக் கொண்டு வருவேன் என்று அவர்கள் கருதியதுதான் அதற்குக் காரணம்.

பின்னர் நான் எழுபது வயதைத் தாண்டிய முதியவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் தன் அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார்: “தனித்தனியாக ஒவ்வொருவரையாகச் சென்று சந்திப்பதைவிட சுற்றுலாத் தொழில் தொடர்பான கண்காட்சிகளுக்குச் செல்வது நல்லது. அங்கு இத்துறையில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் வருவர். அங்கு தொழில் பரிமாற்றங்கள் பெரிய அளவில் நடைபெறும்.” அடுத்தப் பெரிய கண்காட்சி ஒரு மாதத்திற்குள்ளாக நடைபெற இருந்தது என்ற தகவலையும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

அக்கண்காட்சிக்கு ஒரு சிறிய நுழைவுக் கட்டணம் இருந்தது. ஆனால் அதனால் எனக்குக் கிடைக்கவிருந்த பலன்களோடு ஒப்பிடுகையில் அது ஒன்றுமேயில்லை. அதில் பங்கேற்றிருந்தவர்கள் மக்களுக்கு அளித்து

வந்த பலதரப்பட்டச் சேவைகள் குறித்தும் நாட்டில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த பல்வேறு விதமான சுற்றுலாக்கள் குறித்தும் நான் நிறைய அறிந்து கொண்டேன்.

மூன்று நாட்கள் நடைபெற்ற அக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்த ஒவ்வோர் அரங்கிற்கும் சென்று நான் அவர்கள் கொடுத்தப் பிரசுரங்கள் மற்றும் சிற்றேடுகளைச் சேகரித்துக் கொண்டேன். மதிய வேளைகளில் அங்கு நடைபெற்றச் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டேன். சுற்றுலாத்துறை வல்லுனர்கள் பலர் அதில் பேசினர். அங்கு நான் நிறையப் பேரை நண்பர்களாக ஆக்கிக் கொண்டேன். அவர்கள் என் வருங்காலக் கூட்டாளிகள் என்பது எனக்குப் புரிந்தது. இது பரஸ்பர வெற்றிக்கு உதவும் ஓர் ஏற்பாடாக இருந்தது. சுற்றுலாத் துறை பெருமளவுக்குப் பிறரைச் சார்ந்துள்ள துறை. இதில் ஒருவருடைய உதவி மற்றொருவருக்குத் தேவை.

நான் அவர்களிடம் வாடிக்கையாளர்களை அனுப்புவேன். அவர்கள் பதிலுக்கு நல்ல பேருந்து, நல்ல ஹோட்டல் போன்ற தரமான சேவையைத் தருவர். குறைந்த விலையில் தரமான சேவையைப் பெற்றுக் கொண்டு பல இடங்களைச் சுற்றிப் பார்க்க விரும்பும் சுற்றுலாப் பயணியர்தாம் என்னுடைய வாடிக்கையாளர்கள்.

அன்று கண்காட்சியின் கடைசி நாள். பங்கேற்க வந்திருந்தவர்கள் அரங்குகளை மூடிக் கொண்டிருந்தனர். இந்த முறையும் கண்காட்சி சிறப்பாக நடந்தது குறித்து அதை ஏற்பாடு செய்தவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். வீட்டிற்குத் திரும்பும் முன்பு நான் காபி குடிப்பதற்காக அங்கிருந்த உணவகத்திற்குச் சென்றேன். என்னருகே ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் என்னுடன் பேச்சுக் கொடுத்தார். அவர் எதற்காக இக்கண்காட்சிக்கு வந்தார் என்பதைத் தெரிந்து கொள்ள நான் விரும்பினேன்.

“நான் இந்தியாவிற்கு வேறு ஒரு காரியமாக வந்தேன். சுற்றுலாத் துறையில் இந்தியாவில் புதிதாக என்ன வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நான் இக்கண்காட்சிக்கு வந்தேன்,” என்று அவர் கூறினார்.

அவர் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர். அயல்நாட்டில் மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக அவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. அங்குள்ள இந்தியக் கழகத்தின் தலைவராக அவர் இருந்தார். அக்கழகம் அந்நாட்டில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. அவற்றில் தீபாவளி, ஹோலி, நவராத்திரி போன்ற கொண்டாட்டங்களும் அடங்கும். அக்கழகம், அந்நாட்டிற்கு வருகை தந்த அரசியல்வாதிகளை அழைத்துத்

தம் மக்களிடம் பேச ஏற்பாடு செய்வதையும் வழக்கமாக்கிக் கொண்டிருந்தது.

“ஒரு சில வருடங்களுக்கு முன்பு எங்கள் கழகம் ஹரித்துவாருக்கு ஒரு சுற்றுலாப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர். இப்போது இந்தியாவிற்கு மற்றொரு சுற்றுலாவிற்கு வரலாம் என்று நாங்கள் திட்டமிட்டுள்ளோம். எந்த இடத்திற்குச் செல்லலாம் என்பதை முடிவு செய்வதற்காகத்தான் நான் இங்கு வந்துள்ளேன்,” என்று அவர் தன் வருகையின் நோக்கம் குறித்துக் கூறினார்.

“எந்த மாதிரியான இடங்களுக்குச் செல்ல நீங்கள் விரும்புகிறீர்கள்?” என்று நான் வினவினேன்.

“உம் . . . என்னால் உறுதியாகக் கூற முடியவில்லை. வழக்கமான தாஜ்மகால், ஜெய்பூர் சுற்றுலாக்கள் எங்களுக்குத் தேவையில்லை. ஏனெனில், எங்களில் பெரும்பாலானோர் அவற்றை ஏற்கனவே பார்த்துவிட்டோம். எங்கள் ஆன்மாவைத் தொடும் இடங்களுக்கு விஜயம் செய்ய நாங்கள் விரும்புகிறோம்,” என்று அவர் தெரிவித்தார்.

பின்னர் அவர் இவ்வாறு தொடர்ந்தார்: “கடந்த வருடம் ஒரு சாமியார் எங்கள் நாட்டிற்கு வந்தார். அவர் ராமாயணம் குறித்து ஓர் ஆன்மீகச் சொற்பொழிவாற்றினார். நாங்கள் ராமாயணத்தின் அழகால் கவரப்பட்டோம். இப்போது அந்த இடங்களைப் பார்க்க விரும்புகிறோம்.”

“எந்த இடங்கள்?” என்று நான் கேட்டேன். இங்கு எனக்குத் தொழில்முறைரீதியான ஒரு வாய்ப்பு இருந்ததை என்னால் பார்க்க முடிந்தது.

“ராமர் பிறந்த இடமான அயோத்தி; ராமன், சீதை மற்றும் லட்சுமணன் வனவாசம் சென்ற பஞ்சவடி காட்டுப்பகுதி . . . மற்றும் ராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற பிற இடங்கள்,” என்று அவர் பதிலளித்தார்.

“ராமாயணச் சுற்றுலாவா?” நான் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினேன்.

“ஆமாம். ராமாயணச் சுற்றுலா. ஆனால் எங்கள் குழுவிற்காகப் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒன்றாக அது இருக்க வேண்டும்,” என்று அவர் உற்சாகமாகக் கூறினார்.

“அதில் எவ்வளவு பேர் கலந்து கொள்வார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?” என்று நான் கேட்டேன்.

“சுமார் இருநூறு பேர் இருக்கலாம். அதற்கு அதிகமானவர்கள்கூடக் கலந்து கொள்ளலாம்.”

“நான் அதை உங்களுக்காக ஏற்பாடு செய்து தரவா?” என்று கேட்டேன். எனக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவவிட நான் விரும்பவில்லை.

“உங்களால் அதை ஏற்பாடு செய்து தர இயலுமா?” அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தபோதிலும், என்னைப் போன்ற ஓர் இளைஞனால் அதை நிறைவேற்ற முடியுமா என்று அவர் சந்தேகித்தார். சிறிது நேர யோசனைக்குப் பிறகு அவர், “சரி, எனக்கு விபரங்களை அனுப்புங்கள்,” என்று கூறினார்.

என் தொழில்வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த முதல் பெரிய வாய்ப்பு அதுதான்.

# 39

## பிரம்மாண்டமான சுற்றுலா

நான் ஒரு சிறிய தொழிலதிபர். என் தொழில் குறித்து விளம்பரம் செய்வதற்கு ஒதுக்கப் பணம் ஏதும் என்னிடம் இருக்கவில்லை. வாடிக்கையாளர்களைக் கவர மக்கள் ஏராளமான பணத்தைச் செலவழிப்பது வழக்கம். ஆனால் என்னிடம் அப்படிப்பட்ட நிதி தொடர்பான பின்புலம் எதுவும் இருக்கவில்லை.

என் வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்றாற்போல நான் என் வேலையை அமைத்துக் கொண்டால், மாயாஜாலம்போல ஏதாவது நிகழும். நான் அர்த்தசாஸ்திரம் புத்தகத்தை விரித்தேன். அதிலிருந்து எனக்கு இன்னொரு யோசனை கிடைத்தது:

> பொருளாதார நிர்வாகத்தில் எப்போதும் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருங்கள்**.** ஏனெனில்**,** பொருளாதார நிர்வாகம்தான் செல்வத்தின் அடிப்படை**.** நடவடிக்கையின்மை என்பது பொருளின்மை தொடர்பான மன அழுத்தங்களைக் கொண்டுவரும்**.** செயல்நடவடிக்கைமிக்கக் கொள்கை இல்லாவிட்டால்**,** தற்போது இருக்கும் செல்வச் செழிப்பும் வருங்காலச் செல்வச் செழிப்பும் அழிக்கப்பட்டுவிடும்***. (1.19.35,36)***

செல்வத்தை உருவாக்குவதற்குச் செயல்நடவடிக்கையில் இறங்க வேண்டியதன் அவசியத்தைச் சாணக்கியர் வலியுறுத்தியுள்ளார். எனக்கு முன்னனுபவம் இல்லை என்று கூறி எனக்குக் கிடைத்த வணிக வாய்ப்புகளை நான் எளிதாக உதறித் தள்ளியிருக்கலாம். ஆனால் நான் என் இலக்கு நோக்கித் தீவிரமாகச் செயல்பட்டால், என்னால் செல்வச் செழிப்பை உருவாக்கிக் கொள்ள முடியும்.

நான் சில ஆய்வுகளில் ஈடுபட்டேன். கண்காட்சியில் நான் சந்தித்திருந்த அனுபவம் வாய்ந்த சுற்றுலா முகவர்கள் பலரிடம் பேசினேன். ராமாயணச் சுற்றுலா குறித்து ஒரு திட்டவரைவை நான் உருவாக்கினேன். பயண ஏற்பாடு, தங்குமிடம் மற்றும் பிற விபரங்கள் குறித்துப் பல கேள்விகளை அவர்களிடம் கேட்டேன்.

“எத்தனை சுற்றுலாப் பயணிகள் வருவர்?” இக்கேள்வியைத்தான் எல்லோரும் கேட்டனர்.

நான் இங்கு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும் என்று உணர்ந்தேன். அதனால் “சுமார் இருநூறு பேர். ஆனால் நீங்கள் நல்ல விலை கொடுத்தால் அதற்கு மேலும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது,” என்று அவர்களிடம் கூறினேன். இது நல்ல எண்ணிக்கை என்று நான் சந்தித்த அனைவருமே கூறினர். அதனால் அவர்கள் நான் கூறியதைக் காதுகொடுத்துக் கேட்டனர்.

ஒரு வாரத்தில் நான் விரிவான சுற்றுலாப் பயணத் திட்டம் ஒன்றை உருவாக்கினேன். ஒவ்வொரு நாளும் எந்தெந்த நேரத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்ற விபரம், தங்குமிடங்கள் குறித்தத் தகவல்கள், உணவுத் தேர்வுகள், பொதுவாகச் சுற்றுலாப் பயணிகள் முன்கூட்டியே தெரிந்து கொள்ள விரும்பும் இதர விபரங்கள் ஆகியவை அதில் இடம்பெற்றிருந்தன. பின் நான் கண்காட்சியில் சந்தித்த அந்நபரைத் தொடர்பு கொண்டேன்.

என்னிடமிருந்து அழைப்பு வந்தது குறித்து அவர் மகிழ்ச்சியடைந்தார். “நான் உங்களைப் பற்றியும் நமது உரையாடல்கள் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்,” என்று அவர் கூறினார்.

“சார், நீங்கள் கேட்டிருந்த சுற்றுலாப் பயணம் குறித்த விரிவான விபரங்கள் இப்போது என்னிடம் உள்ளன,” என்று நான் பெருமையாகக் கூறினேன்.

“நல்லது. அதை எனக்கு அனுப்பி வையுங்கள். நான் நாளை இந்தியாவிலிருந்து கிளம்புகிறேன். நான் என் நண்பர்களுடன் பேசினேன். ஓர் ஆன்மீகச் சுற்றுலாவுக்காக இந்தியாவுக்கு வரும் யோசனை அவர்களை மிகவும் கவர்ந்துள்ளது,” என்று அவர் தெரிவித்தார்.

இச்சுற்றுலா குறித்து நான் கொண்டிருந்த அதே அளவு தீவிரத்தை அவரும் கொண்டிருந்தது எனக்கு ஒரு நல்ல செய்தியாகத் தோன்றியது.

அவர் சிரித்துக் கொண்டே, “நீங்கள் எங்களுக்கு ஒரு நல்ல விலையில் இவற்றை அளிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்,” என்று கூறினார்.

தொழிலில் எல்லாத் தீர்மானங்களும் பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்தே எடுக்கப்பட்டன என்பதை நான் அறிவேன். ஆனால் நான் எதையும் கூறுவதற்கு முன்பாக அவர் தன் பேச்சைத் தொடர்ந்தார்: “அது குறித்துக் கவலைப்படாதீர்கள். எங்களுக்குத் தரம்தான் முக்கியம். அதை நீங்கள் எங்களுக்கு அளித்தால், நீங்கள் கேட்பதற்கு அதிகமாகவே பணம் கொடுக்க நாங்கள் தயாராக

இருக்கிறோம். அதோடு, வருங்காலத்திலும் நம் உறவு தொடரும்.” அவர் அதோடு தன் பேச்சை முடித்துக் கொண்டார்.

இரண்டு வாரங்கள் தொடர்ந்து அவரும் நானும் இது குறித்து விபரமாகப் பேசினோம். நான் முன்மொழிந்த சுற்றுலாப் பயணத் திட்டம் அவர்களுக்குப் பிடித்துப் போனது. தங்களுக்குத் தேவையான சில விஷயங்களை அவர்கள் என் திட்டத்தில் சேர்த்தனர். உணவு சைவமாக இருக்க வேண்டும், ஓர் அறையில் இரண்டு பேருக்கு மேல் தங்க வைக்கப்படக்கூடாது, பேருந்துகள் குளிரூட்டப்பட்டவையாக இருக்க வேண்டும், எல்லோரையும் எப்போதும் அவசரப்படுத்தும் விதத்தில் பயணங்கள் இருக்கக்கூடாது போன்றவை அவற்றில் அடங்கும். இதிலிருந்து நானும் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன்.

இறுதியாக அவர் ஒரு நாள் என்னை அழைத்து, “இச்சுற்றுலாவிற்கு நாங்கள் தயார். உங்களுக்கு முன்பணத்தை எப்படி அனுப்ப வேண்டும்?” என்று கேட்டார். நான் மிகவும் குஷியானேன். அதற்கு எப்படி பதிலளிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. நான் என் உற்சாகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “சார், எவ்வளவு பேர் வருவார்கள்?” என்று அவரிடம் கேட்டேன். சரியான எண்ணிக்கையை அறிந்திருப்பது முக்கியம்.

“நாங்கள் முதலில் இருநூறு பேருக்குத்தான் திட்டமிட்டோம். ஆனால் இதற்கு அமோகமான வரவேற்பு இருக்கிறது. முந்நூறு பேர் வரலாம். அதற்கு மேல் வேண்டாம் என்று நான் கருதுகிறேன். நான் தடுக்காவிட்டால் ஐநூறு பேர்வரை வருவார்கள்.”

ஐநூறு பேரா? நான் பேராசை கொண்டவனாகத் தோன்ற விரும்பவில்லை. அவர் தொடர்ந்து கூறியதைக் கேட்டேன்.

“நிறையப் பேரைக் கூட்டிக் கொண்டு வருவது பெரிய பொறுப்பு. ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டால் பழி என்மீதுதான் வந்து விழும்,” என்று அவர் தீவிரமான குரலில் கூறினார்.

“எனக்குப் புரிகிறது சார்,” என்று கூறி நான் ஒரு கணம் நிறுத்தினேன். பின்னர் தொடர்ந்து, “நான் இச்சுற்றுலாவிற்கு முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் உங்களுடைய அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்று நீங்கள் நம்பலாம்,” என்று தெரிவித்தேன்.

ஒரு தாத்தா தன் பேரனிடம் பேசுவதுபோல, “நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா?” என்று அவர் வினவினார்.

“கண்டிப்பாக,” என்று நான் கூறினேன்.

“நான் உங்கள் பின்புலத்தைப் பற்றி விசாரித்தேன்.

வெளிநாட்டிலிருந்து இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் வரும் சுற்றுலாப் பயணிகளைக் கையாண்ட அனுபவம் உங்களுக்குக் கிடையாது என்பதை நான் அறிந்தேன். அப்படியிருக்கும்போது, உங்களால் இச்சுற்றுலாவை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று நீங்கள் எப்படி நம்புகிறீர்கள்?"

அவர் என்னைப் பற்றி விசாரித்திருந்தார் என்ற செய்தி எனக்கு ஆச்சரியம் அளித்தது. என்னை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைக்கத் துணிந்திருந்த ஒருவரிடம் பொய் பேச நான் விரும்பவில்லை.

அதனால் நான் நேர்மையாக அவரிடம், "சார், இது ராமாயணச் சுற்றுலா. முதலில் ராமனிடம் பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் நான் இச்சுற்றுலா குறித்தத் திட்டத்தைத் துவக்கினேன்," என்று கூறினேன்.

பின்னர் நான் சிறிது இடைவெளி விட்டுத் தொடர்ந்து பேசினேன்: "என் குடும்பம் மிகவும் ஆன்மீகமானதொரு குடும்பம். எந்தவொரு வேலையானாலும் அதை மிகுந்த பயபக்தியுடன் செய்ய வேண்டும் என்று என் பெற்றோரும் என் தாத்தா பாட்டியும் எனக்கு போதித்துள்ளனர். என்னைப் பொருத்தவரை இது ஒரு சாதாரணச் சுற்றுலா அல்ல. ராமனின் பக்தர்களுக்கு நான் ஆற்றும் சேவை. அனுமான் தன் கடமைகளைச் செய்ய அவனுக்குத் தேவையான பலத்தை ராமன் அளித்ததுபோல, இச்சுற்றுலாவை மேற்கொள்வதற்கான ஆற்றலையும் ராமன் எனக்கு அளிப்பான்."

அக்கணத்தில் என் மனத்தில் இந்த வார்த்தைகள் எப்படித் தோன்றின என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவற்றை நான் இதயப்பூர்வமாகக் கூறினேன். இச்சுற்றுலாவைப் பொருத்தவரை ஒரு வர்த்தகனாக இருப்பதைவிட ஒரு பக்தனாக இருக்கவே நான் விரும்பினேன்.

ஓரிரு மாதங்கள் கழித்து அக்குழு வந்து சேர்ந்தபோது அதன் எண்ணிக்கை 650ஆக இருந்தது! இச்சுற்றுலாவில் கலந்து கொள்ள அதிகமான எண்ணிக்கையில் மக்கள் முன்வந்தனர். அதோடு, அவர் என்மீது வைத்திருந்த நம்பிக்கை வலுவானதாக இருந்திருக்க வேண்டும்.

இந்தியாவின் பல பகுதிகளை உள்ளடக்கியிருந்த அச்சுற்றுலாவிற்காக நான் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. ஆனால் சுற்றுலாவின் முடிவில் அதில் பங்கு கொண்டவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்ததோடு ஆன்மீகரீதியாக தங்களைப் பெருமளவுக்கு உயர்த்திக் கொண்டிருந்தனர். அக்குழுவிலிருந்த வயதான பெண்மணி ஒருவர் என்னிடம், "ராமனின் அனுமானைப்போல நீ ஆவாய்!" என்று ஆசீர்வதித்தார். அதை ஏற்பாடு செய்தவர், "நாங்கள் மிகவும் மகிழ்ச்சி

அடைந்துள்ளோம். அதனால் உங்களுக்கு ஒரு பரிசளிக்கப் போகிறோம்," என்று கூறினார்.

"அடுத்து மகாபாரதச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கூறி அவர் புன்முறுவல் பூத்தார்.

# 40

## ஆன்மீகரீதியான ஒரு சக பயணி

என் சுற்றுலாக்கள் பிரபலமடைந்தன. அதற்குப் பிறகு ஏறுமுகம்தான். ராமாயணச் சுற்றுலா, மகாபாரதச் சுற்றுலா போன்ற தனித்துவமான சுற்றுலாக்களை நான் ஏற்பாடு செய்து வந்ததால், என் சுற்றுலாக்களுக்கு வெளிநாட்டவர்கள் வந்து குவிந்தனர். நான் அர்த்தசாஸ்திரத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். மேலும் அதிகமான வழிகாட்டுதல்கள் அதிலிருந்து வந்தன:

> ஒரு கூட்டாளியின் உதவியுடன் சாதிக்க முடிகின்ற வேலைகளில் ஒருவன் இருதரப்பட்டக் கொள்கைகளை வைத்திருக்க வேண்டும். ***(7.1.18)***

இச்சூத்திரத்தின் ஆழமான பொருள் என்னவாக இருக்கும் என்று நான் சிந்தித்தேன். நீங்களே எல்லா வேலைகளையும் செய்வதைவிட ஒரு கூட்டாளியுடன் சேர்ந்து செய்வது நல்லது என்பது எனக்குப் புரிந்தது. அப்படிப்பட்டச் சூழலில் ஒருவன் இருதரப்பட்டக் கொள்கைகளை வைத்திருக்க வேண்டும். அதாவது, இருவருக்கும் அது சம அளவில் பயனளிக்க வேண்டும்.

விற்பனையாளர்கள் மற்றும் எனக்குப் பல விதமான விஷயங்களைக் கொடுத்தவர்கள் என்ற வடிவில் என் தொழிற்கூட்டாளிகள் இருந்தனர். ஆனால் எனக்கு ஒரு வியாபாரக் கூட்டாளி தேவைப்பட்டார். ஏற்கனவே நான் என் உச்சக்கட்ட ஆற்றலுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். நான் என் கீழ் ஒரு சில ஊழியர்களை வைத்திருந்தேன். ஆனால் அவர்கள் என் வழிகாட்டுதலுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். என் தொழில் அடுத்தக் கட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் நான் ஒரு வியாபாரக் கூட்டாளியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

நான் இது குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, என் தோழி என்னை அழைத்து, "முனைவர் பட்டத்திற்கான என்னுடைய ஆய்வு இறுதிக் கட்டத்தில் இருக்கிறது," என்று கூறினாள். அவள் அது குறித்து மகிழ்ச்சி அடைந்தாளா அல்லது சோகமடைந்தாளா என்று என்னால்

கண்டுபிடிக்க முடியவில்லை. முனைவர் ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆய்வைச் சமர்ப்பித்தல் என்பது ஒரு பயணத்தின் முடிவுக்கு வருவதற்குச் சமானம். அப்படியிருக்கும்போது, என் தோழியின் குரலில் ஏன் மகிழ்ச்சியில்லை?

“இதற்கு மேல் என்னால் இதை இழுக்க முடியாது. நாம் நம் பெற்றோரிடம் கூறியாக வேண்டும்,” என்று அவள் உறுதியான குரலில் கூறினாள்.

அன்று மாலையில் நாங்கள் நேரில் சந்தித்தோம். அவள் இதுவரை தன்னுடைய முனைவர் ஆய்வைக் காரணம் காட்டித் தனக்கு வந்த வரன்களைத் தட்டிக் கழித்திருந்தாள் என்பது எனக்குத் தெரிய வந்தது. இனியும் அதைக் காரணம் காட்ட முடியாது.

“நீ உன் வீட்டில் சொல்கிறாயா? அல்லது நான் என் பெற்றோரிடம் முதலில் கூறட்டுமா?” என்று அவள் கேட்டாள். அவள் இக்கணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

நான் ஒரு கணம் நிதானித்தேன். சிறிது காலமாக நான் என் தொழிலில் தடுமாறிக் கொண்டிருந்தேன். தொழில் சுமாராகச் சென்று கொண்டிருந்தாலும், நான் பெரிதாகப் பணம் சம்பாதித்திருக்கவில்லை.

நான் சம்பாதித்ததையெல்லாம் மீண்டும் தொழிலுக்குள்ளேயே நான் முதலீடு செய்திருந்தேன். போராட்டக் காலம் இன்னும் முடிவடைந்திருக்கவில்லை என்றாலும் நல்ல காலம் மெதுவாகத்தான் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

எனக்கு ஒரு தொழிற்கூட்டாளி அவசியம் தேவை என்றாலும் முதலில் எனக்கு ஒரு வாழ்க்கைக் கூட்டாளி தேவை என்பதை நான் உணர்ந்தேன். வாழ்க்கையில் என்னால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்ததால், நான் இதற்குத் தயாராக இருந்தேன்.

நான் என் பெற்றோரிடம் சென்று என் தோழி பற்றிக் கூறினேன். கல்லூரி நாட்களிலிருந்தே அவள் என் தோழி என்பதை அவர்கள் அறிவர். ஆனால் நாங்கள் ஒருவரையொருவர் காதலித்து வந்தோம் என்பது அவர்களுக்குத் தெரியாது.

நாங்கள் இது குறித்துப் பேசிக் கொண்டிருந்தபோது என் அம்மா எங்கள் உறவு பற்றி சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரிய வந்தது. அதே சமயம், என் அம்மாவும் என் தோழியின் அம்மாவும் கோவில் சுற்றுலா தினத்திலிருந்தே பரஸ்பரத் தொடர்பு வைத்திருந்தனர்.

என் தோழியின் வீட்டிலும் எங்கள் உறவை நன்றாகவே எடுத்துக்

கொண்டனர். அவர்களுக்கு என்னைத் தெரியும். அவளுடைய அப்பாவும் ஒரு தொழிலதிபர் என்பதால், நான் என் தொழிலில் தடுமாறிக் கொண்டிருந்ததை அவர்கள் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. இரு குடும்பங்களும் சந்தித்துக் கொண்டன. நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. என் நண்பர்கள் பலருக்கு இச்செய்தி ஆச்சரியமாக இருந்தது. ஆனால் எல்லோருக்கும் மகிழ்ச்சி.

பெற்றோர்கள் நடத்தி வைக்கும் காதல் திருமணங்களே சிறந்த காதல் திருமணங்கள். நாங்கள் இருவரும் வெவ்வெறு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் இரு குடும்பங்களின் மனப்போக்கும் ஒத்திசைவாக இருந்தது. நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் இரு குடும்பங்களும் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொண்டன. அது சிறப்பாக நடைபெற்றது. நாங்கள் வாழ்நாள் முழுவதும் இணைந்திருக்கப் போகிறோம்.

திருமண நாள் குறிக்கப்பட இருந்தபோது என் தோழி ஒரே ஒரு நிபந்தனையை விதித்தாள்: “ஆறு மாதங்கள் கழித்து வைத்துக் கொள்ளலாம். அதற்குள் நான் என் முனைவர் ஆய்வை முடித்துவிடுவேன்.” அவள் ஆய்வின் கடைசிக் கட்டத்தில் இருந்ததால், திருமணம் அதற்குத் தொந்தரவாக இருப்பதை அவள் விரும்பவில்லை. இதை ஒப்புக் கொள்வதில் எங்களில் யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

என் அப்பா என்னைத் தனியாக அழைத்துப் பேசினார். இந்தியத் திருமணங்கள் குறித்து அவர் கொண்டிருந்த அழகான கண்ணோட்டம் என்னை வெகுவாகக் கவர்ந்தது: “நம் நாட்டில் திருமணம் என்பது இன்னோர் உறவாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இது உங்கள் இருவருக்கும் மட்டும் இடையேயான உறவல்ல. இது நம் இரு குடும்பங்களுக்கும் இடையேயான உறவு. இது திருமணம் மூலம் இணையவிருக்கும் உங்கள் இருவருக்கும் கடவுளுக்கும் இடையையான உறவுமாகும்.

“ஒரு தந்தை தன் மகளை ஒருவனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும்போது, வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கக்கூடிய ஓர் ஆன்மீகத் துணையை அவர் அவனுக்குக் கொடுக்கிறார். நீங்கள் இருவரும் இந்த ஆன்மீகப் பயணத்தில் சேர்ந்தே பயணிக்க வேண்டும்.” திருமணத்தை தெய்வீகத்தோடு சேர்த்துப் பின்னிப் பிணைத்தது எனக்குப் பிடித்திருந்தது.

என் அப்பா என்னிடம், “சமஸ்கிருதத்தில் மனைவி ‘சமதர்மசாரினி’ என்று அழைக்கப்படுகிறாள் என்பது உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

“சமதர்மசாரினி என்றால் ஆன்மீகரீதியான சக பயணி என்று பொருள்,” என்று கூறிய அவர் ராமாயணத்திலிருந்து ஒரு பாடலை மேற்கோள் காட்டினார். “ஒவ்வொரு மனிதனும் கடவுளைக் கண்டுபிடிப்பதற்கான ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்கிறான். அவனுடைய வாழ்க்கைத் துணை அவனது ஆன்மீகப் பயணத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டுமே தவிர முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.

“அப்படிப்பட்ட ஆன்மீக அடித்தளத்தின்மீது ஒரு திருமணம் கட்டியெழுப்பப்பட்டால் அந்த உறவு வலுப்பெறும், தழைத்தோங்கும். எல்லாத் திருமணங்களும் மேடு பள்ளங்களைச் சந்திக்கும், அவற்றுக்கே உரித்தான தனித்துவமான சவால்களைச் சந்திக்கும். ஆன்மீக அடித்தளத்தின்மீது அந்த உறவு அமைக்கப்பட்டிருந்தால், அந்த இணையர் எப்போதும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பர். தங்கள் இல்லத்தை ஒரு வாழும் கோவிலாக மாற்றியமைப்பர்.” இதை நான் என் தோழியிடம் கூறியபோது இது அவளையும் நெகிழ வைத்தது.

எங்களது நிச்சயதார்த்தம் முடிந்த சில மாதங்களுக்குப் பிறகு அவள் முனைவர் பட்டம் பெற்றாள். இனி அவளை ஒட்டுமொத்த உலகமும் டாக்டர் என்று அழைக்கும்.

எங்கள் வாழ்விலேயே அழகான நிகழ்ச்சியாக எங்கள் திருமணம் அமைந்தது. எங்களது இரு குடும்பங்களும் அன்பால் பிணைக்கப்பட்டன. நான் முக்கியமானவர்கள் என்று கருதிய என் குரு, குருவம்மா, அறங்காவலர், நிர்வாகத் தலைவர், முதன்மை நிர்வாக அதிகாரி மற்றும் என்னுடைய எண்ணற்ற நண்பர்கள் அனைவரும் என் திருமண விழாவிற்கு வந்திருந்தனர்.

என் வாழ்க்கையின் மற்றொரு புது அத்தியாயம் தொடங்கியது. கணவன் என்ற பதவிக்கு நான் உயர்த்தப்பட்டேன்.

# 41

## அடுத்தக் கட்ட வளர்ச்சி

சுற்றுலாத் துறைத் தொழிலில் இருப்பதில் சில அனுகூலங்கள் இருந்தன. நான் என் தேனிலவுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோது அதன் பலன்களில் ஒன்று எனக்குக் கிட்டியது.

என்னுடைய தொழிலில் எனக்கு உதவிய ஒரு சுற்றுலா முகவர் என் நெருங்கிய நண்பராக ஆனார். தேனிலவுச் சுற்றுலாக்களை அமைத்துக் கொடுப்பதில் அவர் தனித்துவம் மிக்கவராகத் திகழ்ந்தார். தேனிலவுக்கு உகந்த, அதிகமான நபர்கள் செல்லாத பல இடங்கள் அவருக்குத் தெரியும். அவர் என்னுடைய தேனிலவுச் சுற்றுலாவை எனக்கு இலவசமாக ஏற்பாடு செய்து கொடுத்தார்.

“செலவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்,” என்று அவர் கூறினார். நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலும் நாங்கள் பயன்படுத்திய வாகனங்களும் தரமானவையாக இருந்ததை அவர் உறுதி செய்தார். நாங்கள் அவற்றுக்குப் பணம் எதுவும் கொடுக்கவில்லை. எங்களுடைய தேனிலவு எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது.

என் மனைவி என்னிடம் ஒரே ஒரு புகாரை மட்டும் தெரிவித்தார்: “ஒரு கணவனால் எப்படித் தன் தேனிலவுக்குப் பணம் செலவழிக்காமல் இருக்க முடியும்?” என்பதுதான் அது. தன் மனைவிக்காக ஒரு கணவன் செலவு செய்வதில் ஓர் அலாதி இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

அவள் ஒரு மாற்று ஏற்பாட்டைப் பரிந்துரைத்தாள்: “நீங்கள் இனி ஒவ்வொரு வருடமும் என்னைத் தேனிலவுக்கு அழைத்துச் செல்லுங்கள்!” எனக்கு இன்ப அதிர்ச்சி. “அதோடு, ஒவ்வொரு முறையும் அது ஒரு புது இடமாக இருக்கட்டும்,” என்று அவள் கோரினாள்.

என் காதல் மனைவியின் முதல் கோரிக்கையை எவ்வாறு என்னால் நிராகரிக்க முடியும்? வாழ்க்கை முழுவதும் தொடர்ந்த ஓர் ஒப்பந்தமாக அது ஆனது. அதற்குப் பிறகு நாங்கள் ஒவ்வொரு வருடமும் எங்கள் மணநாளைக் கொண்டாட வெவ்வேறு இடங்களுக்குச் சென்றோம். இந்த வருடாந்திரச் சுற்றுலாவை நாங்கள் இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்தோம்.

என் தொழிலை விரிவாக்க நான் ஏதாவது ஒரு புது உத்தியைப் பயன்படுத்த வேண்டும் என்று உணர்ந்தேன். புதிய நபர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும், விளம்பரத்திற்குக் கூடுதலான பணம் செலவழிக்க வேண்டும், சுற்றுலாவுக்கு ஏற்றப் புதிய இடங்களைக் கண்டுபிடிக்க வேண்டும், ஒரு பெரிய அலுவலகத்திற்கு மாற வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். என் தொழில் நன்றாகச் சென்று கொண்டிருந்தாலும், அடுத்தப் பெரிய அடியை எடுத்து வைக்கத் தேவையான பணம் என்னிடம் இருக்கவில்லை.

வழக்கம்போல வழிகாட்டுதலுக்காக நான் அர்த்தசாஸ்திரத்தைப் புரட்டினேன்:

> இரு வலுவான அரசர்களுக்கு இடையே ஒருவன் அல்லாடிக் கொண்டிருந்தால், தனக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய தகுதி படைத்த அரசனிடம் அவன் தஞ்சம் அடைய வேண்டும். ***(7.2.13)***

“எனக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வலுவான அரசன் யார்?” என்று நான் யோசித்தேன். எனக்கு ஒரே ஒருவர்தான் நினைவுக்கு வந்தார். அது நான் முன்பு வேலை பார்த்து வந்த நிறுவனத் தலைவர்.

நான் பதவி விலகியபோது அவர் என்னிடம் கூறியிருந்ததும் என் நினைவுக்கு வந்தது. அப்போது அவர், “போ, வாழ்க்கை உனக்கு விடுக்கும் அறைகூவல் என்ன என்பதைக் கண்டுபிடி. உனக்கு உதவ எப்போதும் நான் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறேன்,” என்று கூறியது என் கண் முன்னால் வந்தது.

என் தொழிலை விரிவாக்க எனக்கு அவருடைய உதவி கண்டிப்பாகத் தேவை. முன்னனுமதி பெற்று அவரைப் பார்க்கச் சென்றேன்.

“நீ சரியான வழியில்தான் சென்று கொண்டிருக்கிறாய். நல்ல வணிகத் திட்டம் ஒன்றை நீ தயாரிக்க வேண்டும்,” என்று அவர் பரிந்துரைத்தார்.

“எந்தவொரு தொழிலும் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் அதில் மேம்பாடு செய்வதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். அதோடு, உன்னிடம் நல்ல நிர்வாகக் குழு ஒன்றும் இருக்க வேண்டும்.” நான் அவரிடம் பணம் கேட்கத்தான் வந்தேன். ஆனால் அவர் குறிப்பிட்டப் பல விஷயங்களை கவனமாகப் பரிசீலிக்க நான் தவறிவிட்டிருந்தேன்.

“நீ இத்துறையில் நிபுணர்களாக இருப்பவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வரும்போது தங்களுடன் செழிப்பான அனுபவங்களையும் கொண்டு வருவார்கள். அது மிகவும் முக்கியம். தனிப்பட்ட ஒருவரின் மூளையை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவரால் ஒரு தொழிலைப் பெரிதாக வளர்த்தெடுக்க முடியாது.

அதற்குப் பலரது கூட்டு முயற்சி தேவைப்படும்.” அவரது பழுத்த அனுபவம் பேசியது.

“நான் இது குறித்து மேலும் சிந்திக்கிறேன். நாம் அடுத்த வாரம் மீண்டும் சந்திக்கலாம். அப்போது இருவருமாகச் சேர்ந்து வணிகத் திட்டம் ஒன்றை உருவாக்கலாம்.” அவர் கூறியதை என் வாயைத் திறக்காமல் நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

நான் என் தொழிலைத் துவக்கிய பிறகு அப்போதுதான் முதன்முறையாக நான் கவலைப்படத் தொடங்கினேன். நான் என் தொழிலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் இனி என் நிறுவனத்தை நடத்திச் செல்ல இத்துறையில் அனுபவம் வாய்ந்த நபர்கள் எனக்குத் தேவைப்படுவார்கள் என்று நான் சிந்திக்கவில்லை.

மறுவாரம் நான் அந்நிறுவனத் தலைவரைச் சந்தித்தபோது அவருடன் ஒரு குழுவும் இருந்தது. இத்துறையில் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள், அதன் சாதக பாதகங்கள், அரசுக் கொள்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான பிரசன்டேஷனை அக்குழு தயாரித்திருந்தது.

நிறுவனத் தலைவர் இவ்வாறு கூறினார்: “இத்துறையில் மாபெரும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் புதுமையான ஒன்றைக் கையில் எடுத்தால்தான் பெரிதாக சாதிக்க முடியும். பலரும் ஏற்கனவே பயணித்துக் கொண்டிருக்கும் பாதையில் நாம் பயணிக்கக்கூடாது. நாம் உருவாக்கும் புதிய பாதையில் பலரும் நடைபோட வேண்டும்.”

சிறிது யோசனைக்குப் பிறகு அவர் மீண்டும் தொடர்ந்தார். “நாம் இத்தொழிலைத் தானியங்கி முறைக்கு மாற்ற வேண்டும். அதற்கு நமக்கு இப்போது இருப்பதிலேயே சிறந்த தொழில்நுட்பம் தேவைப்படும். அதுதான் முன்னோக்கிச் செல்வதற்கான வழி.” அக்குழுவிலிருந்தவர்கள் அவர் கூறியதைக் குறித்துக் கொண்டனர். வணிகத் திட்டத்தில் கணினிப் பிரிவுக்காகத் தனியாக ஒரு தொகை ஒதுக்கப்பட்டது.

“சர்வதேசச் சந்தை நமது இலக்காக இருக்க வேண்டும். அதை நாம் கணினி மூலம் கைப்பற்றலாம்.” தொழில் உலகத்திற்குள் கணினிகள் அப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

“இந்தியாவிலேயே இந்த முறையில் தொழிலை மேம்படுத்தும் முதல் நிறுவனமாக நம் நிறுவனம் இருக்கும்,” என்று நிர்வாகத் தலைவர் உற்சாகமாகக் கூறினார்.

அதற்கு அடுத்து நடைபெற்ற ஒரு சில சந்திப்புகளில் அவருடைய நிதித் துறையினரும் கலந்து கொண்டனர். இத்தொழிலில் எவ்வளவு

பணத்தை முதலீடு செய்ய வேண்டும் என்பதை அவர்கள் நிர்ணயம் செய்தனர்.

நான் முதலில் அவரிடம் கேட்கலாம் என்று கணக்குப் போட்டு வைத்திருந்ததைவிட அத்தொகை மிக அதிகமாக இருந்தது.

நிர்வாகத் தலைவர் அடுத்து என்னிடம் கடினமான ஒரு கேள்வியைக் கேட்டார்: "இந்நிறுவனத்தின் பங்குகள் எப்படி பிரித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நீ விரும்புகிறாய்?"

அப்படிப்பட்ட ஒரு விவாதத்திற்கு நான் தயாராக இருக்கவில்லை. ஒரு முதலீட்டாளர் உங்களுடைய தொழிலில் முதலீடு செய்ய முன்வந்தால், அவர் உங்கள் நிறுவனத்தில் ஒரு பங்கை எதிர்பார்ப்பார் என்பது பின்னர்தான் எனக்கு உறைத்தது.

நான் சிரமப்பட்டு உருவாக்கிய ஒரு தொழிலின் பெரிய பங்கை நான் ஏன் இன்னொருவருக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். நிர்வாகத் தலைவர் வெறுமனே இதில் முதலீடு செய்வதோடு நிறுத்திக் கொள்ள மாட்டார். நான் என் தொழிலின் சகல விஷயங்களையும் அவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும். ஒரு தொழிலதிபர் என்ற முறையில் நான் போற்றிப் பாதுகாத்து வந்த என் சுதந்திரத்தை நான் இழக்க நேரிடும்.

நான் மீண்டும் அவரின்கீழ் வேலை பார்க்கும் ஓர் ஊழியனாக ஆகிவிடுவேனா? புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் வந்துவிடுவதற்காகவா நான் என் வேலையைத் துறந்தேன்? அவரிடமிருந்து பணம் எதையும் பெற இப்போது நான் தயங்கினேன். இன்று அவர் என் தொழிலில் பங்குகளைக் கேட்கிறார். நாளை அவர் என் தொழிலை முழுவதுமாகத் தன்வசம் எடுத்துக் கொள்ள மாட்டார் என்பது என்ன நிச்சயம்?

நாம் இதை மறந்துவிடலாம், நான் ஒரு சிறிய தொழிலதிபராகவே இருந்துவிட்டுப் போகிறேன் என்று கூற எத்தனித்த நான், "எனக்குச் சிறிது அவகாசம் கொடுக்க முடியுமா?" என்று அவரிடம் கேட்டேன்.

# 42

## என் பால்ய நண்பனின் வழிகாட்டுதல்

நான் ஓர் இக்கட்டான சூழலில் இருந்தேன். என் தொழில் வளர்ச்சிக்கு எனக்கு அதிகமான முதலீடு தேவைப்பட்டது. ஆனால் அதே சமயம், நான் சிரமப்பட்டு வளர்த்து உருவாக்கியிருந்த என் தொழிலின் கட்டுப்பாட்டை இழக்கவும் நான் விரும்பவில்லை.

இக்கட்டான சூழல்களில் நண்பர்களின் உதவியை நாட வேண்டும் என்று சாணக்கியர் எப்போதும் பரிந்துரைத்துள்ளார். எனக்கு ஒரு பால்ய நண்பன் இருந்தான். எனக்குச் சிரமமான காலங்களிலெல்லாம் நான் அவனைத்தான் நாடுவேன். நான் அவனைச் சந்தித்து என் பிரச்சனையைக் கூறினேன்.

எண் நண்பன் ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தில் நிதித் துறையின் தலைவராக இருந்தான். அவனும் தன் வேலையில் வெகு விரைவாக முன்னேறி இருந்தான். தொழிற்துறை தொடர்பான விஷயங்களில் ஆலோசனை வழங்குவதில் அவன் தேர்ந்தவனாக இருந்தான்.

“முதலீட்டாளர்களின் உதவியுடன் தன் தொழிலை வளர்த்துக் கொள்ள விரும்பும் தொழிலதிபர்கள் அனைவரும் இச்சூழ்நிலையைக் கண்டிப்பாக எதிர்கொள்கின்றனர். நீ வளர வேண்டும் என்று விரும்புகிறாய். ஆனால் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை, அப்படித்தானே?” என்று அவன் கேட்டான்.

“அவர் என் நிறுவனத்தில் பங்குகளைக் கேட்கிறார்,” என்று நான் புகார் செய்தேன்.

“அவர் வேறு எதைக் கேட்பார்?” என்று அவன் பதிலுக்குக் கேட்டான். அதற்கு என்னிடம் தெளிவான பதில் எதுவும் இருக்கவில்லை.

அவர் மேலும் விவரித்தான்: “ஒரு தொழிலில் பணத்தை முதலீடு செய்யும் எவருக்கும் அதில் பங்கு கேட்க உரிமையுள்ளது. உனக்கு அது ஒரு தொழில். அவருக்கும் அது ஒரு தொழில். அதனால் பங்கைப் பிரித்துக் கொள்வது தொடர்பாக அவரிடம் பேசுவதுதான் நல்லது.”

அவன் மேலும் தொடர்ந்தான். “இதிலுள்ள நல்ல விஷயத்தைப் பார். நீ இங்கு அவரிடமிருந்து பணத்தை மட்டும் பெறவில்லை. ஒரு பெரிய நிறுவனத்தை நடத்தி வரும் ஒருவரின் செழிப்பான அனுபவத்தையும்

பெறுகிறாய். அப்படிப் பார்த்தால் நீ அதிர்ஷ்டசாலி என்றுதான் கூற வேண்டும்."

என்னால் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் மனத்தைப் படித்த என் நண்பன் வேறு ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விவரிக்க முயன்றான்.

"எந்தவொரு தாய்க்கும் தன் குழந்தை முக்கியம்தான். அவள் தன் குழந்தையிடம் நெருக்கமாக இருக்கிறாள். அன்பையும் அக்கறையையும் அவள் அக்குழந்தைமீது பொழிகிறாள். அவள் அதற்கு உணவூட்டுகிறாள், நோய் வரும்போது கவனித்துக் கொள்கிறாள், அதற்குப் பேசவும் நடக்கவும் கற்றுக் கொடுக்கிறாள்." நான் என் தொழிலை ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வதுபோல முதல் நாளிலிருந்தே சீராட்டி வளர்ந்து வந்திருந்தேன்.

அவன் தொடர்ந்தான்: "பின் அக்குழந்தையின் வாழ்வில் ஒரு முக்கியமான கட்டம் வருகிறது. பள்ளியில் சேர்க்க வேண்டிய வயதை அது அடைகிறது. அந்த அன்னைக்கும் குழந்தைக்கும் பரிச்சயமில்லாத ஓரிடமான ஒரு பள்ளிக்கு அக்குழந்தையை அனுப்ப அத்தாய்க்குச் சிரமமாக இருக்கிறது. அன்னியர்களைச் சந்திக்க அக்குழந்தையும் பிரியப்படாது.

"அதே சமயம், உலகின் சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் அக்குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதையும் அத்தாய் அறிவாள்," என்று அவன் கூறினான்.

பின்னர் அவன் என்னிடம், "பள்ளியிலேயே மிகவும் முக்கியமான நபர் யார்?" என்று கேட்டான்.

நான் உடனே, "ஆசிரியர்," என்று பதிலளித்தேன்.

புன்னகைத்துக் கொண்டே அவன் தொடர்ந்தான்: "சரியாகச் சொன்னாய். தாய்தான் ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர் என்றாலும் அவளால் ஓர் எல்லைவரைதான் கற்றுக் கொடுக்க முடியும். சிறப்பாகப் பயிற்சி பெற்றிருக்கும் ஆசிரியர்களிடமிருந்து தன் குழந்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அது பள்ளிக்குச் செல்ல வேண்டியது அவசியம் என்பதை அத்தாய் அறிவாள்." இப்போது என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன் மேலும் விவரித்தான்: "தொழில் முதலீட்டார்களைப் பொறுத்தவரை, அவர்கள் எவ்வளவு பணத்தை உன் தொழிலில் முதலீடு செய்கிறார்கள் என்பதை மட்டுமே நீ பார்க்கக்கூடாது. அந்த முதலீட்டாளரால் உனக்கு ஒரு நல்ல ஆசானாக இருக்க முடியுமா என்பதையும் நீ பார்க்க வேண்டும்." நான் சந்தித்திருந்ததிலேயே சிறந்த

ஆசான் அந்த நிர்வாகத் தலைவர்தான் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை.

“நண்பா, நீ அதிர்ஷ்டசாலி. உனக்கு ஒரு முதலீட்டாளர் மட்டும் கிடைக்கவில்லை. இந்த நாட்டிலிலேயே பெரிதும் மதிக்கப்படுகின்ற, மிகச் சிறந்த ஒரு தொழிலதிபரை உன் தொழிற்கூட்டாளியாக நீ பெறப் போகிறாய்.” எனக்குக் கிடைத்திருந்த வாய்ப்புக் குறித்து என் நண்பன் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தான்.

அவன் கடைசி அறிவுரை ஒன்றையும் வழங்கினான்: “இது குறித்து யோசிக்கவே யோசிக்காதே. உன் தொழிலை மேம்படுத்த இது ஒரு பொன்னான வாய்ப்பு. இதை நழுவ விட்டுவிடாதே.”

“நம் இருவருக்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்கம் என்றாலும், நான் உன்மீது வைத்திருந்த மதிப்பு சமீபக் காலங்களில் பெரிதும் அதிகரித்துள்ளது,” என்று அவன் கூறினான்.

“என்ன சொல்கிறாய்? மதிப்பா?” நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினேன்.

“ஆமாம். மதிப்புதான். என்னைப் போன்றவர்கள் கொழுத்தச் சம்பளத்திற்காகப் பெரிய நிறுவனங்களில் வேலை பார்த்து வருவதால், ஒரு தொழிலதிபராக ஆக முயலும் ஆபத்தான முயற்சியில் இறங்க முடியாது. என்னைப்போலவே நல்ல சம்பளத்தில் அந்த நிறுவனத் தலைவரின் நிறுவனத்தில் உனக்கு ஓர் உயர்ந்த பதவி கிடைத்தது. ஆனால் நீ துணிந்து அதை உதறித் தள்ளிவிட்டாய்.” அவன் குரலில் உணர்ச்சிப் பொங்கியது.

“இப்போது அதே தொழிலதிபர் உன் தொழிலில் முதலீடு செய்யவும் உன் தொழிற்கூட்டாளியாக ஆகவும் முன்வருகிறார். உனக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?”

நாங்கள் விடைபெற்றுக் கொண்டபோது அவன் என் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து, “நீ என் நண்பன் மட்டுமல்ல. நான் பின்பற்ற நினைக்கும் ஒரு முன்மாதிரியும்கூட. ஒருநாள் நானும் என் வேலையைத் துறந்துவிட்டு ஒரு சிறிய தொழிலைத் துவங்குவேன்,” என்று கூறினான்.

நான் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, “உண்மையாகவா? நீ என்னைவிடச் சிறந்த தொழிலதிபராக ஆவாய். நான் ஒரு தொழிலதிபராக இருந்தாலும் எனக்கு அறிவுரை வழங்கும் நிலையில் நீ இருக்கிறாய்,” என்று கூறினேன்.

அவன் சிரித்தான். “பிறருக்கு அறிவுரை வழங்குவது சுலபமானது. ஆனால் அதைச் சொந்த வாழ்வில் நடைமுறைப்படுத்துவதுதான் சிரமமான காரியம்.”

என் வாழ்வில் நான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொண்டது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன். நான் நிறுவனத் தலைவரைச் சந்தித்து அவருக்குச் சம்மதம் தெரிவித்தேன். பங்குகளை எவ்வாறு பிரித்துக் கொள்வது என்பது குறித்து நாங்கள் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தோம். "நாம் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்யலாம்," என்று அவர் பரிந்துரைத்தார். "நாம் இப்போது சர்வதேசச் சந்தைக்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். உன் நிறுவனத்தின் இரண்டாம் பாகம் . . . "

நான் இடைமறித்து, "சார், நமது நிறுவனத்தின் . . ." என்று கூறினேன். அவர் பலமாகச் சிரித்தார்.

அவர் என் தொழிலில் ஒரு முதலீட்டாளராகவும் கூட்டாளியாகவும் ஆன பிறகு, என் தொழில் தொடர்பான பல விஷயங்கள் மாறியிருந்ததை நான் கவனித்தேன். என் தன்னம்பிக்கை மிகவும் அதிகரித்திருந்தது. உலகம் நெடுகிலும் இருந்த வல்லுனர்கள் எப்போதும் என்னைச் சூழ்ந்திருந்தனர்.

நாங்கள் ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மதிய விருந்திற்கு ஏற்பாடு செய்தோம். என் நிறுவனத்தின் புதிய வடிவின் அறிமுகத்தை நிறுவனத் தலைவரும் அவரது குழுவினரும் பார்த்துக் கொண்டனர். பத்திரிகையாளர்கள் அங்கு குவிந்திருந்தனர்.

தொழில்துறையைச் சேர்ந்த பெரிய புள்ளிகள் பலர் வந்திருந்தனர். நிறுவனத் தலைவர் எல்லோரிடமும் என்னைப் பெருமையாக அறிமுகம் செய்து வைத்தார். பல தொலைக்காட்சி நிலையங்கள் என்னைப் பேட்டி எடுத்தன.

அங்கு வந்திருந்த என் பால்ய நண்பன், "நிறுவனத் தலைவர் முதலீடு செய்ய முன்வந்ததை நீ மறுத்திருந்தால், உன் நிறுவனம் இப்படிப்பட்டப் பெரிய பாய்ச்சலில் இறங்கி இருக்குமா?" என்று கேட்டான்.

நான் தலையை ஆட்டி அவன் கூறியதை ஆமோதித்தேன். "ஒரு நல்ல ஆசிரியரின் வழிகாட்டுதலில் தன் குழந்தை வளர்வதைப் பார்க்கும் எந்தத் தாயும் கண்டிப்பாக மகிழ்ச்சி அடையவே செய்வாள்," என்று நான் கூறினேன். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் அரவணைத்துக் கொண்டோம்.

# 43

## என் மனைவியின் வேண்டுகோள்

என் மனைவி என் வீட்டில் வெகு சுலபமாகத் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாள். என் அப்பா அம்மாவுடனும் என் உறவினர்களுடனும் அவள் நன்றாகப் பழகினாள். என்னைப் பொருத்தவரை இது ஒரு நல்ல சகுனம்.

திருமணம் முடிந்த கையோடு எங்கள் உறவினர்களும் நண்பர்களும் தங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட எங்களை அழைத்தனர்.

ஒரு சில நாட்களுக்குள் இந்த அழைப்புகள் முடிந்துவிடும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அவை ஒரு வருடம்வரை தொடர்ந்தன. கணவன் என்ற பொறுப்பையும் என் வேலையையும் ஒருசேர நான் சமாளித்து வந்தேன்.

நம் கலாச்சாரத்தில் பெண்கள் எவ்வாறு சிந்திப்பர் என்பது எனக்குப் புரியத் துவங்கியது. அன்பு, அக்கறையான கவனிப்பு, படிப்பு ஆகியவற்றைக் கொடுத்து வளர்க்கப்பட்ட ஒரு பெண், திருமணம் முடிந்தவுடன், ஒரு மனைவி மற்றும் மருமகள் எனும் புதிய பாத்திரத்தை வகிப்பதற்காகத் தன் பெற்றோர் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். அவள் தன் புகுந்த வீட்டைத் தன் புதிய குடும்பமாக வரித்துக் கொண்டாலும், அவளால் தன் தாய் வீட்டை முற்றிலுமாக உதறித் தள்ள முடியாது. சாகும்வரை அவள் தன் இரண்டு குடும்பங்களையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முனைவர் பட்டத்தைப் பெற்றப் பிறகு அவள் பல்கலைக்கழகத்தில் வேலை பார்த்து வந்தாள். அவள் தன் துறையில் ஒரு வல்லுனராக இருந்ததால், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களுக்கு அடிக்கடிச் சென்று வந்தாள்.

ஒரு நாள் மாலையில் அவள் திடீரென்று என்னிடம், “நீங்கள் எப்போது உங்கள் முனைவர் பட்டத்திற்காகப் படிக்கப் போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

அவளது கேள்வி என்னை ஆச்சரியப்படுத்தியது. என் தொழிலை வளர்த்தெடுக்கும் முயற்சியில் மூழ்கிப் போன நான் முனைவர் பட்டம் பற்றிய கனவை எப்போதோ துறந்துவிட்டிருந்தேன். அவளுடைய

கேள்வி என் கடந்தகால நினைவைத் தூண்டிவிட்டது. “முனைவர் பட்டமா? அது எனக்குச் சரிப்பட்டு வராது.”

அவள் ஏன் என்று கேட்கும் முன்பாகவே நான் பதிலளித்தேன்: “நான் இப்போது ஒரு தொழிலை வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஏராளமான பொறுப்புகள் இருக்கின்றன. மீண்டும் படிப்பில் என்னால் எப்படிக் குதிக்க முடியும்? அது சாத்தியமென்று நான் நினைக்கவில்லை. படிக்கும் ஆர்வம் என்னிடம் இப்போது சுத்தமாக இல்லை.”

என் மனைவி புத்திசாலி. அவள் அதற்குமேல் என்னை நெருக்கவில்லை. அவள் மனத்தில் வேறு ஒரு திட்டம் வைத்திருந்தாள்.

“நீங்கள் இந்தச் சனிக்கிழமை ஓய்வாக இருக்கிறீர்களா? எங்கள் பல்கலைக்கழகத்திற்கு வர முடியுமா? என் மாணவர்கள் உங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டே இருக்கின்றனர். அவர்களுக்கு உங்களால் நேரம் ஒதுக்க முடிந்தால், ஒரு தொழிலை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பது குறித்த உங்கள் அனுபவங்களை உங்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள்,” என்று கேட்டாள்.

“உன் மாணவர்கள் எதற்காக என்னைப் பற்றி உன்னிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்?” எனக்குப் புரியவில்லை.

“தொலைக்காட்சிகளுக்கு நீங்கள் அளித்தப் பேட்டியை அவர்கள் பார்த்துள்ளனர். அதனால் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். உங்களுடைய தொழில் மாதிரியைப் பற்றித் தங்களிடம் பேச நீங்கள் வர வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.” எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று மக்கள் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்பது நான் அறிந்திராத ஒன்று.

என் அப்பாவும் அம்மாவும் எங்கள் உரையாடலில் கலந்து கொண்டனர். என் அம்மா, “என் தோழிகளும் உன் தொலைக்காட்சிப் பேட்டிகளைப் பார்த்து பாராட்டினர்,” என்று கூறினார். என் அப்பா, “செய்திப் பத்திரிகைகளில் அந்தப் பெரிய நிறுவனத்தின் தலைவருடன் நீ இருந்த புகைப்படத்தைப் பற்றிக்கூடச் சிலர் கேட்டனர்,” என்று கூறினார்.

என் கர்வம் அதிகரித்தது. ஒரு தொழிலதிபர் என்ற முறையில் நான் சாதித்திருந்தவற்றைப் பற்றி மக்கள் அறிந்திருந்தனர் என்ற தகவல் எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. “ஓர் உரையைத் தயாரிப்பதற்கு எனக்கு நேரம் கிடையாது,” என்று நான் என் மனைவியிடம் கூறினேன்.

அது ஒரு பெரிய விஷயமே அல்ல என்பதுபோல அவள், “நீங்கள் உரை நிகழ்த்த வேண்டிய அவசியமில்லை. வெறுமனே அங்கு வந்து மாணவர்களுடன் பேசிக் கொண்டிருந்தால் போதும்,” என்று கூறினாள்.

நான் அது குறித்து யோசித்துக் கொண்டிருந்தபோது, அவள், “ஒரே ஒரு மணி நேரம் ஒதுக்கினால் போதும். நீங்கள் உங்கள் தொழிலை எவ்வாறு துவக்கினீர்கள், அதை எப்படி நடத்தினீர்கள், பெரிய முதலீட்டாளர்கள் எவ்வாறு அதில் முதலீடு செய்தனர், ஓர் ஊழியர் என்ற நிலையிலிருந்து நீங்கள் எப்படி ஒரு தொழிலதிபராக உயர்ந்தீர்கள் என்பது பற்றிப் பேசுங்கள்,” என்று கூறினாள்.

என் அப்பா, “உன் தொழிலின் ஒவ்வொரு கட்டத்திலும் அர்த்தசாஸ்திரம் எவ்வாறு உனக்குக் கைகொடுத்தது என்பது பற்றியும் நீ கூறலாம். சாணக்கியரின் தொடர்பு பற்றி நீ கூறினால், இந்திய ஞானம் குறித்து இன்றைய இளைஞர்களிடமும் யுவதிகளிடமும் ஆர்வம் ஏற்படும்,” என்று கூறினார்.

என் மனைவி தொடர்ந்தாள்: “உண்மைக் கதையைக் கேட்க என் மாணவர்கள் பெரும் ஆர்வம் கொண்டிருப்பர். இறுதியில் நீங்கள் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கலாம்.”

இப்போது நான் நிம்மதியடைந்தேன். நான் இதற்காக உரை எதையும் தயாரிக்க வேண்டியதில்லை. கதை சொன்னால் போதும். அதுவும் என் சொந்தக் கதையைக் கூறினால் போதும். “சரி. வருகிறேன். சனிக்கிழமை எத்தனை மணிக்கு வர வேண்டும்?”

“நாளை நான் பல்கலைக்கழகத்திற்குச் சென்றவுடன் அதை உறுதிப்படுத்துகிறேன்,” என்று அவள் கூறினாள். அடுத்த நாள் மாலை அவள் என்னிடம், “சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு உங்களால் வர முடியுமா?” என்று கேட்டாள். அதற்கு நான் சம்மதம் தெரிவித்தேன்.

என் மனைவி மிகவும் உற்சாகம் அடைந்திருந்தாள். “நீங்கள் வரப் போகிறீர்கள் என்று நான் கூறிய செய்தி மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் காட்டுத்தீபோலப் பரவிவிட்டது. இப்போது மற்றத் துறை மாணவர்களும் இதில் கலந்து கொள்ள துடித்துக் கொண்டிருக்கின்றனர். என் துறைத் தலைவர் உட்படப் பல ஆசிரியர்களும் இதில் கலந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்.”

இப்போது நான் பதற்றமடைந்தேன். எனக்குக் கவலையும் ஏற்பட்டது. “இது வெறும் கலந்துரையாடலாக மட்டுமே இருக்கும் என்றுதானே நீ முதலில் கூறினாய். இப்போது இது வேறு மாதிரியாகப் போய்க் கொண்டிருக்கிறது. நான் எதைப் பற்றி பேசுவது?”

“என் வகுப்பு மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ள நீங்கள்

திட்டமிட்டிருந்த அதே கதையை இவர்களிடம் கூறுங்கள். பார்வையாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பார்க்ள. அதனால் என்ன?”

என் அம்மா, “நானும் வரலாமா? என் மருமகள் வேலை பார்க்கும் இடத்தைப் பார்த்த மாதிரியும் இருக்கும், என் மகன் பேச்சைக் கேட்ட மாதிரியும் இருக்கும்,” என்று கூறினார்.

என் மனைவி மகிழ்ச்சி அடைந்தார். “அம்மா, இது நல்ல யோசனையாக இருக்கிறதே! கண்டிப்பாக வாருங்கள். நான் என் சக ஆசிரியர்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். நீங்கள் எனக்குக் கொடுத்தனுப்பும் சாப்பாட்டை அவர்கள் தினமும் விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.” காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் பெண்களின் வழியே தனி.

பின் என் மனைவி என் அப்பாவைப் பார்த்து, “அப்பா, நீங்களும் வாருங்கள்,” என்று கூறினாள்.

நான் என் அப்பாவின் முகத்தைப் பார்த்தேன். எப்போது தன்னைக் கூப்பிடுவார்கள் என்று அவர் காத்துக் கொண்டிருந்தார்போலத் தெரிந்தது.

நான் இடைமறித்து, “இதோடு போதும். போய் நீ உன் அம்மா அப்பாவையும் கூப்பிட்டுவிடாதே,” என்று கூறினேன். என் மனைவியின் முகம் தொங்கிப் போனது. “சரி, நான் அவர்களை அடுத்த முறை கூப்பிட்டுக் கொள்கிறேன்.”

நான் வெளியே பதற்றமாக இருந்தாலும், உள்ளுக்குள் மகிழ்ச்சியாக இருந்தேன். நான் இருக்க விரும்பிய ஓரிடமான கல்வி கற்பிக்கப்படும் இடத்திற்கு மறுபடியும் செல்லவிருந்தேன். நான் என்னுடனேயே மீண்டும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதுபோல உணர்ந்தேன்.

பின் அந்தச் சனிக்கிழமையும் வந்தது . . .

# 44

# ஓர் இந்தியத் தொழிலதிபரின் உரை

நான் கோட் சூட் அணிந்து வர வேண்டும் என்று என் மனைவி கூறினாள். நான் அதை அணிந்து கொண்டதும் நான் மிகவும் வசீகரமாக இருந்ததாக அவள் என்னிடம் கூறினாள். அது என் தன்னம்பிக்கையை மேலும் அதிகரித்தது. நாங்கள் அனைவரும் பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம்.

ஒரு சிறு யோசனையாகத் துவங்கியது ஒரு பெரிய கூட்டமாக மாறியிருந்தது. என் கூட்டத்தை அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்த ஓர் அரங்கில் ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு இருநூறு மாணவர்களும், துறைத் தலைவர்கள் உட்படப் பல ஆசிரியர்களும் குழுமியிருந்தனர்.

என் மனைவியின் துறைத் தலைவரிடம் நான் முதலில் அழைத்துச் செல்லப்பட்டேன்.

"நீங்கள் எங்கள் பல்கலைக்கழத்திற்கு வருகை தந்துள்ளது குறித்து எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. இதற்காக நேரம் ஒதுக்கியதற்கு நன்றி. உங்களுடைய வேலை பற்றி உங்கள் மனைவி அவ்வப்போது கூறுவார். நீங்கள் அர்த்தசாஸ்திரத்தில் ஆய்வு மேற்கொண்டது பற்றி அவர் கூறியுள்ளார்."

அவரிடம் நான், "என் சிறிய சாதனைகளைப் பற்றிப் பேச நான் அழைக்கப்பட்டிருப்பதை எனக்குக் கிடைத்த கௌரவமாக நான் கருதுகிறேன். இதற்குக் கடவுளின் அனுக்கிரகமும் பெரியவர்களின் ஆசீர்வாதங்களும்தான் காரணம்," என்று கூறினேன்.

நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது, நான் அவரிடம், "உங்கள் மாணவர்களிடம் நான் குறிப்பாக எதையாவது பேச வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"அர்த்தசாஸ்திரம் உங்களுடைய வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் எவ்வாறு உதவியது என்பது குறித்து நீங்கள் குறிப்பிட்டால், எங்கள் மாணவர்கள் புராதன இந்திய இலக்கியங்களைப் படிக்க ஆர்வம் காட்டுவார்கள்," என்று அவர் பதிலளித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து, "நீங்கள் இளைஞராக இருந்தும் அதற்குள் ஏகப்பட்ட சாதனைகளைப் புரிந்துள்ளீர்கள். இளைய சமுதாயம்

உங்களை ஒரு முன்மாதிரியாகப் பார்க்கிறது. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான யோசனைகளை நீங்கள் அவர்களுக்குக் கொடுங்கள்," என்று தெரிவித்தார்.

நான் அந்த அரங்கிற்குள் நுழைந்தபோது அது முற்றிலும் நிரம்பியிருந்தது. அறிமுகம் முடிந்தவுடன் நான் மேடைக்கு அழைக்கப்பட்டேன். 'நவீன வர்த்தகத்தில் சாணக்கியரின் ஞானத்தைப் பயன்படுத்துவது எப்படி?' என்ற தலைப்பில் நான் ஓர் உரை நிகழ்த்தினேன்.

"என் தாத்தா எனக்கு அர்த்தசாஸ்திரத்தை அறிமுகம் செய்து வைத்தபோது, பின்னர் ஒரு நாள் அப்புத்தகம் பற்றி இது போன்ற ஒரு மதிப்புமிக்கப் பல்கலைக்கழக மேடையில் நான் உரையாற்றிக் கொண்டிருப்பேன் என்று நான் கற்பனை செய்திருக்கவில்லை," என்று நான் என் உரையைத் துவக்கினேன்.

பின் நான் இவ்வாறு தொடர்ந்தேன்: "நான் முதலில் என் தாத்தாவிற்கும், என் குருவிற்கும், இங்கு வந்திருக்கும் என் பெற்றோருக்கும், இப்பல்கலைக்கழகப் பேராசிரியார்களுக்கும் மாணவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்." இது என் பார்வையாளர்களைத் தொட்டிருக்க வேண்டும்.

"ஆசிரியராக இருப்பதுதான் இருப்பதிலேயே மிகப் பெரிய பாக்கியம் என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். என் மனைவி இங்கு கற்றுக் கொடுத்து வருகிறார் என்பது குறித்து நான் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். என் தொழிலை அவளுடைய தொழிலோடு ஒப்பிடும்போது நான் அவள்மீது பொறாமைப்படுகிறேன்."

எல்லோரும் சிரிக்கத் துவங்கினர்.

"சாணக்கியரின் போதனைகளை நான் எவ்வாறு என் வாழ்க்கையிலும் என் தொழிலிலும் பயன்படுத்தினேன் என்பது குறித்துப் பேசுமாறு நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். நீங்கள் சாணக்கியரின் போதனைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நீங்க்ள முதலில் இந்திய ஆன்மீகத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். சாணக்கியர் ஒரு மாபெரும் ஆசிரியர், ஒரு ராஜதந்திரி. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஓர் ஆன்மீகவாதி."

நான் தொடர்ந்தேன்: "சாணக்கியரைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் முதலில் பகவத் கீதை, ராமாயணம், உபநிஷத்துகள் போன்றவற்றைப் படிக்க வேண்டும். இதை நான் சிறுவனாக இருந்த காலத்திலிருந்து செய்து வந்துள்ளேன்.

வாழ்க்கையில் எதிர்ப்படும் அனைத்துச் சவால்களையும் துணிச்சலாக எதிர்கொள்ள அது எனக்கு உதவியுள்ளது.”

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு சமஸ்கிருதப் பேராசிரியரிடமிருந்து நான் எவ்வாறு அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுக் கொண்டேன், ஒரு தொழிலதிபராக ஆக வேண்டும் என்ற முடிவுக்கு நான் எப்படி வந்தேன் ஆகியவற்றைக் குறித்து நான் பேசினேன். வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், என் வாழ்வின் பிற அனுபவங்களைப் பற்றியும் நான் குறிப்பிட்டேன்.

“வேலையைத் தேடுவதற்கு பதிலாக வேலையை உருவாக்க முனையுங்கள்,” என்று நான் கூறியவுடன் பலத்தக் கரவொலி எழுந்தது. “இன்று என் நிறுவனத்தில் ஐநூறு பேர் வேலை பார்த்து வருகின்றனர்.

“ஆனால் சவால்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு முறையும் நான் அர்த்தசாஸ்திரத்தைப் படிக்கிறேன். மாயாஜாலம்போல எனக்குத் தீர்வு கிடைக்கிறது.”

நான் ஒரு மணி நேரம் பேசினேன். அதைத் தொடர்ந்து என்னிடம் நிறையக் கேள்விகள் கேட்கப்பட்டன. தொழிலில் முதலீடு பெறுவது எப்படி, எந்தவொரு தொழிலிலும் வெற்றி பெறுவது எப்படி என்பது போன்ற கேள்விகள் என்னை நோக்கி வீசப்பட்டன.

நான் அனைத்திற்கும் பதிலளித்தேன். ஆனால் ஓர் இளம்பெண் என்னிடம் கேட்டக் கேள்விதான் என்னை மிகவும் கவர்ந்தது. அவள், “ஒரு பெண்ணால் தன் வேலையையும் வீட்டையும் வெற்றிகரமாக நிர்வகித்துக் கொள்ள முடியுமா?” என்று கேட்டாள்.

“கண்டிப்பாக. சாணக்கியரைப் பொருத்தவரை, முடியாத காரியம் என்ற ஒன்று கிடையாது. ஒரே சமயத்தில் பல வேலைகளைச் செய்வதில் பெண்கள் வல்லவர்கள். உண்மையைக் கூற வேண்டுமென்றால், ஆண்களால் அவ்வாறு செய்ய இயலாது. ஆண்களைவிடப் பெண்களிடம் உணர்ச்சி அறிவாற்றல் கூடுதலாக இருக்கிறது. அதனால் அவர்களால் இவ்விரண்டிலும் வெற்றிகரமாக விளங்க முடியும். அதே சமயம், தாய்மையை மகிழ்ச்சியுடன் கொண்டாடக் கற்றுக் கொள்ளுங்கள். அதில்தான் பெண்களுக்குப் பூரணத் திருப்தி கிடைக்கிறது.”

இதற்குப் பிறகு பார்வையாளர்களிடம் பலத்த அமைதி நிலவியது. இப்படிக் கூற வேண்டும் என்று நான் திட்டமிட்டு இருக்கவில்லை. அது இயல்பாக வந்துவிட்டது. நான் என் அம்மாவையும் என் மனைவியையும் பார்த்தேன். அவர்கள் இருவரும் தம் கண்களாலேயே பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

நான் என் உரையை முடித்துக் கொண்டவுடன் அத்துறைத் தலைவர் என்னிடம், “உங்கள் உரை பிரமாதமாக இருந்தது. அது நடைமுறைக்கு உகந்ததாகவும் எங்கள் எல்லோருக்கும் பயனளிப்பாகவும் இருந்தது,” என்று கூறினார்.

நாங்கள் விடைபெற்றுக் கொண்டபோது அவர், “நீங்கள் அடிக்கடி இது போன்ற உரைகளை நிகழ்த்த வேண்டும். அது இளைஞர்களை ஊக்குவிக்கப் பெரிதும் உதவும்,” என்று கேட்டுக் கொண்டார்.

அதை மறுத்த நான், “நான் அவ்வளவு பெரிய ஆள் இல்லை. என் மனைவிபோல நான் முனைவர் பட்டம் எதுவும் பெற்றிருக்கவில்லை. இது அவளுடைய வேலை. நான் ஏன் அதில் குறுக்கிட வேண்டும்?” என்று கேட்டேன்.

“அப்படியானால் நீங்களும் முனைவர் பட்டம் பெறலாமே?” என்று அவர் எதிர்க் கேள்வி போட்டார்.

என் மனைவி என்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள். அவள் தன் பேராசிரியர் மூலமாக என்னிடம் பேசியதுபோல எனக்குத் தோன்றியது. நான் இப்போது அது குறித்துத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தேன்.

நாங்கள் வீட்டிற்குத் திரும்பினோம். என் பெற்றோர்கள் என்னைக் குறித்துப் பெருமை கொண்டிருந்ததாக என்னிடம் தெரிவித்தனர்.

நானும் என் மனைவியும் தனியாக இருந்தபோது அவள் தொண்டையைச் செருமிக்கொண்டு என்னிடம் இவ்வாறு கூறினாள்: “நீங்கள் இன்று பேசியபோது பெண்கள் தாய்மையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்று கூறினீர்கள் அல்லவா . . . “

# 45

## பெற்றோர் எனும் ஆனந்தத்தில்

திருமணம் என்பது இரு தனி நபர்களுக்கு இடையேயான ஒன்றல்ல. இரு குடும்பங்களுக்கு இடையேயான ஒன்று. அது அந்த உறவின் மூலமாக வரவிருக்கும் குழந்தைகளையும் அவர்களைத் தொடர்ந்து வரவிருக்கும் தலைமுறைகளையும் பற்றியதும் கூட.

என் மனைவி தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டு, “நான் முழுகாமல் இருக்கிறேன்,” என்று கூறினாள். இதற்கு எப்படி பதிலளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் வினோதமாக உணர்ந்தேன். நான் அப்பாவாகவும் என் மனைவி அம்மாவாகவும் ஆகவிருந்தோம். நான் மகிழ்ச்சி அடைந்தேன். அதே சமயம், நான் உறைந்தும் போனேன். இப்புதிய பொறுப்பை எவ்வாறு கையாள்வது என்று எனக்குத் தெரியவில்லை.

என் மனைவி மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள். நான் குழப்பமாக இருந்ததை கவனித்த அவள், “உங்களுக்கு மகிழ்ச்சியாக இல்லையா?” என்று ஆச்சரியத்தோடும் கவலையோடும் கேட்டாள்.

“மகிழ்ச்சிதான், ஆனால் நான் . . .” என்று நான் இழுத்தேன். நான் தனியாக இருந்து சிந்திக்க விரும்பினேன்.

“ஆனால் என்ன?” அவள் திடீரென்று மனவருத்தம் அடைந்தாள்.

“நாம் பெற்றோராக ஆகப் போகிறோம், அப்படித்தானே?”

“ஆமாம். வெகு விரைவில் நாம் பெற்றோராக ஆகப் போகிறோம்.”

நான் என்னை நிலைப்படுத்திக் கொண்டு அவளை நோக்கிப் புன்னகைத்தேன். “வாவ்! என்னால் நம்ப முடியவில்லை.” நான் ஆனந்தத்தில் கூச்சலிட்டேன். அவளைக் கட்டி அணைத்துக் கொண்டேன்.

பெற்றோராக இருப்பது ஆனந்தம்தான். ஆனால் அதோடு பெரிய பொறுப்பும் வருகிறது அல்லவா? நான் ஒரு பொறுப்புள்ள அப்பாவாக இருக்க விரும்பினேன்.

மறுநாள் நான் என் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு யோசித்துக் கொண்டிருந்தேன். நான் அப்போதுதான் முதன்முறையாக அப்பாவாக

ஆகவிருந்தேன் என்றாலும் எனக்கு ஏற்கனவே ஒரு பெரிய குடும்பம் இருந்தது. என் நிறுவனத்தில் என்னிடம் வேலை பார்த்து வந்தவர்கள் அடங்கிய ஒரு குடும்பம் அது. இவ்வளவு பேரை என்னால் நன்றாகப் பார்த்துக் கொள்ள முடியும் என்றால் என் சொந்தக் குழந்தைகளை என்னால் பார்த்துக் கொள்ள முடியாதா என்ன?

குழந்தை வளர்ப்புக் குறித்துச் சாணக்கியர் ஓர் அற்புதமான அறிவுரையை வழங்கியுள்ளார்:

> முதல் ஐந்து வருடங்கள் உங்கள் குழந்தைகளை நேசியுங்கள். அடுத்தப் பத்து வருடங்களுக்கு அவர்களை நெறிப்படுத்துங்கள். அதற்குப் பிறகு அவர்களை உங்கள் நண்பர்களாகப் பாவியுங்கள். *(சாணக்கியர் நீதி)*

கடவுள் எங்களுக்கு இரட்டைக் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார். ஓர் ஆண், ஒரு பெண். அவர்கள் இருவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தனர். இருந்தாலும் அவர்களுக்கு இடையேயான வேறுபாட்டை ஒருவரால் கண்டுபிடிக்க முடிந்தது.

குழந்தைகளின் வருகையானது, பெயர் சூட்டு விழா, கோவில்களுக்குப் படையெடுப்பு என்று பல நிகழ்ச்சிகளையும் சடங்குகளையும் உடன் கொண்டு வந்தது. அலுவலகத்தில் இருந்தபோதுகூட என் மனம் வீட்டைத்தான் சுற்றிக் கொண்டிருந்தது. குழந்தைகளைப் பார்ப்பதற்காக நான் மாலை நேரத்தை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் பெற்றொருக்கும் என் மாமனார் மாமியாருக்கும் இடையேயான தொடர்பு அதிகரித்தது. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் போக்குவரத்தும் அதிகரித்தது.

குழந்தை வளர்ப்பின் துவக்கக் காலம் மிகவும் அருமையாக இருந்தது. குழந்தைகள் தங்களுடைய பெற்றோரைக் கடவுளாகக் கருதினர். நீங்கள் கூறிய அனைத்தையும் அவர்கள் உண்மை என்று நம்பினர்.

எங்கள் குழந்தைகள் வளர வளர, என் பெண், என் பையனைவிட மேலோங்கி இருந்ததை நான் கவனித்தேன். அவள் என் பையனிடம், “நான் உன்னைவிட ஐந்து நிமிடங்கள் மூத்தவள். அதனால் என்னிடம் மரியாதையுடன் நடந்து கொள்,” என்று கூறுவாள்.

இக்காலகட்டத்தில் நான் என் வாழ்க்கையின் கடினமானதொரு முடிவையும் எடுத்தேன். முனைவர் பட்டப் படிப்பிற்காகப் பதிவு செய்து கொண்டதுதான் அது. இப்போது நான் என் பொறுப்புகளை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. என் தொழிலை

கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது; நல்ல அப்பாவாக இருக்க வேண்டியிருந்தது; முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

என்னுடைய முனைவர் பட்ட வழிகாட்டியாக இருந்த அம்மையார் அறிவாற்றல் மிக்கவராகவும் தாய்மை உணர்வு கொண்டிருந்தவராகவும் இருந்தார். வீட்டிலும் வேலையிலும் எனக்கிருந்த பொறுப்புக் குறித்து அவர் அறிந்திருந்ததால் அவர் எனக்குச் சில யோசனைகளைக் கொடுத்து உதவினார்.

"பல்கலைக்கழகத்தில் ஆய்வை மேற்கொள்ளும் வருடங்களில் நீங்கள் இருவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். முதலாவது, படிப்பது மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வது. இரண்டாவது, முனைவர் பட்டம் தொடர்பாகப் பின்பற்றியே ஆக வேண்டிய நிர்வாகம் தொடர்பான நடைமுறைகள். இவை இரண்டுக்கும் நீங்கள் சமமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்." அவரது யோசனை எனக்கு மிகவும் உதவியது.

நான் இப்போது முனைவர் ஆய்வுக்கு முறைப்படிப் பதிவு செய்திருந்ததால் அடிக்கடிப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. நான் புத்தகங்களைப் படிப்பதிலும் பிற ஆய்வாளர்களிடம் உரையாடுவதிலும் நிறைய நேரத்தை நூலகத்தில் செலவழித்தேன்.

அப்பல்கலைக்கழகத்தில் முனைவர் ஆய்வு எவ்வாறு நடத்தப்பட்டது என்பது குறித்துத் தெரிந்து கொள்வதற்காக, ஆய்வு முறை பற்றிய வகுப்புகளிலும் நான் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அப்போதுதான் என்னுடைய இப்பயணத்தில் இணைந்து கொள்ள வேறு பல மாணவர்களும் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது.

என் சக ஆய்வு மாணவர் ஒருவர் என்னிடம், "நீங்கள் எதில் ஆய்வு மேற்கொள்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும் அதன் தலைமைத்துவத் தத்துவமும். குறிப்பாக, நவீன வர்த்தகத்தில் அதன் பயன்பாடு."

அவன் பிரமிப்படைந்தான். "பிரமாதம்! இது சுவாரசியமாக இருக்கிறதே. இந்த ஆய்வை முடித்ததும் நீங்கள் இதைக் கற்றுக் கொடுக்கும் பேராசிரியராக ஆவீர்கள், அப்படித்தானே?" என்று கேட்டான்.

பெரும்பாலான மக்கள் முனைவர் பட்டம் பெறுவதே கல்லாரிகளில் பேராசிரியராகப் பணியாற்றுவதற்குத்தான் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால் நான் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை என்

தொழிலில் ஏற்கனவே பயன்படுத்தி வந்திருந்தேன். நான் கல்வித் துறையில் நுழைய விரும்பவில்லை.

துரதிர்ஷ்டவசமாக என் தொழில் படுத்துவிட்டால், என்னாலும் என் மனைவிபோல ஒரு பேராசிரியராக ஆகிவிட முடியும். பெரிதாகத் திட்டமிடாமலேயே ஆசிரியர் பணி எனும் மாற்று வேலைக்கு என்னை நான் தயார்படுத்திக் கொண்டிருந்தேன்.

“நீண்டகாலம் கழித்து நான் ஓர் ஆசிரியராக ஆகத் திட்டமிட்டுள்ளேன்,” என்று என் சக ஆய்வாளரிடம் கூறினேன்.

என் வாழ்வின் இக்கட்டம் எனக்கு மிகுந்த மன அழுத்தத்தைக் கொடுத்தது. எல்லாப் பக்கங்களிலிருந்தும் எனக்கு நேர நெருக்கடி ஏற்பட்டது. நான் நேரம் காலம் பார்க்காது கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தேன்.

பல நேரங்களில் நான் என் தொழில் தொடர்பாகப் பல நகரங்களுக்குப் பயணம் செய்ய நேரிடும். அப்போது என் ஊழியர்கள் அனுப்பும் அறிக்கைகளைப் படிப்பதற்கும் சந்திப்புக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் நான் அதிகமான நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருப்பேன். அதே நேரத்தில் நான் என்னுடைய ஆய்வு நூல்களைப் படித்துக் கொண்டும், குறிப்புகள் எடுத்துக் கொண்டும் இருப்பேன்.

ஆனால் நான் வீடு திரும்பும் ஒவ்வொரு முறையும் என் குழந்தைகள் ஓடி வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டு, “அப்பா,” என்று அழைக்கும்போது அத்தனை அலுப்பும் களைப்பும் பறந்துவிடும். என்னுள் புது உற்சாகம் ஊற்றெடுக்கும். ஒவ்வோர் இரவும் என் குழந்தைகள் என்னிடம், “அப்பா, அப்பா, ஒரு கதை சொல்!” என்று கேட்பதைக் கேட்க எனக்கு மிகவும் பிடிக்கும்.

குழந்தைகளின் வெகுளித்தனம் உங்களுக்குப் பலவற்றைக் கற்றுக் கொடுக்கும். அவர்கள் உங்களைக் கொண்டாடுவார்கள், நீங்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்பார்கள், உங்களைப் பெரிதும் மதிப்பார்கள். அவர்களுக்கு நீங்கள் கதைகளைச் சொல்லும்போது, அவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள அது ஒரு சிறப்பான வழி என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

அதோடு, என் குழந்தைப்பருவத்தில் என் தாத்தா பாட்டி எனக்குக் கதை கூறிய காலத்தை அது எனக்கு நினைவுபடுத்தியது.

# 46

## பணம் உன்னை விடுதலை செய்யும்

ஒரு நாள் நான் என் அலுவலகத்தில் உட்கார்ந்திருந்து என்னுடைய தொழில் தொடர்பான சில விஷயங்களை அலசிக் கொண்டிருந்தேன். அப்போது நான் பல நிறுவனங்களை நடத்தி வந்தேன். சுற்றுலாத் தொழில் என்னுடைய முக்கியமான தொழிலாக இருந்தபோதிலும், நான் வேறு சில புதிய தொழில்களையும் துவக்கியிருந்தேன்.

நான் ஒரு பேருந்துச் சேவையையும் ஆரம்பித்திருந்தேன். இந்திய நினைவிடங்கள் பற்றிய தகவல்களை எக்கச்சக்கமாக அறிந்து வைத்திருந்த, அவற்றைச் சுற்றுலாப் பயணிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கத் தேவையான திறமை பெற்றிருந்த, சிறந்த தகுதிகள் வாய்ந்த சுற்றுலா வழிகாட்டிகளைப் பிற சுற்றுலா நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும் ஒரு தொழிலையும் நான் துவக்கியிருந்தேன்.

இந்நிறுவனங்களைப் பார்த்தபோது, வர்த்தகம் குறித்து முதலில் நான் கொண்டிருந்த எண்ணம் இன்றைய வர்த்தகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்ததை நான் உணர்ந்தேன். நான் பின்னால் சாய்ந்து உட்கார்ந்தேன்.

இச்சமயத்தில் நான் பணத்தைக் குவித்திருந்தேன். என் தொழிலும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது. பல வருடங்களின் ஊடாக நான் போட்டக் கடின உழைப்பு இன்று பலன் கொடுத்துக் கொண்டிருந்ததை நான் கண்டபோது, அது எனக்கு மனநிறைவைக் கொடுத்தது.

பின் நான் பணத்தைப் பற்றித் தத்துவார்த்தமாக யோசிக்கத் துவங்கினேன். பணம் என்றால் என்ன? உலகை இயக்குவதே பணம்தான் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. மொத்த உலகமும் பணத்திற்கு முன்னால் மண்டியிட்டு நிற்கிறது.

பணத்தின் இயல்பு என்ன? அர்த்தசாஸ்திரம் பணத்தைப் பற்றிப் பேசுகிறது. அப்புத்தகம் பணத்தைப் பற்றியும் செல்வத்தைப் பற்றியும் பேசுகின்ற காரணத்தால்தான் அது காலங்காலமாக நிலைத்து நிற்கிறது.

நான் அர்த்தசாஸ்திரம் புத்தகத்தைப் பிரித்தேன். அதில் இந்தச் சூத்திரம் இடம்பெற்றிருந்தது:

ஆன்மீகரீதியான நன்மைகள், லௌகீகப் பயன்கள் மற்றும் இன்பங்களை எவ்வாறு உருவாக்கிப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது என்பதை அர்த்தசாஸ்திர அறிவியல் காட்டுகிறது. அதே சமயம், ஆன்மீகத் தீமைகள், லௌகீக இழப்புகள், வெறுப்பு ஆகியவற்றிலிருந்து மீளவும் அது உதவுகிறது. ***(15.1.72)***

பணம் என்பது உங்களுக்கு லௌகீகரீதியான மகிழ்ச்சி அளிப்பதோடு ஆன்மீகரீதியான சந்தோஷத்தையும் கொடுக்கும் என்பதை நான் உணர்ந்தேன். பக்குவம் வாய்ந்த ஒரு நபரோடு இது குறித்து விவாதிக்க நான் விரும்பினேன். நிர்வாகத் தலைவரை அழைத்து நான் அவரைச் சந்திக்க விரும்பியதாகத் தெரிவித்தேன்.

“கண்டிப்பாக. ஏதாவது அவசர வேலையா?” என்று அவர் கேட்டார். என் குரலில் தொனித்த அவசரத்தன்மையை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

“சார், நான் பணம் மற்றும் செல்வத்தின் இயல்பு குறித்து உங்களுடன் பேச விரும்புகிறேன்.”

மறுமுனையில் சில கணங்கள் அமைதி நிலவியது. பின்னர் அவர், “உடனே வா,” என்று பதிலளித்தார்.

அன்றைய தினத்தின் வேலைகள் அனைத்தையும் அவர் முடித்திருந்ததால், என்னை வரவேற்க அவர் தயாராக இருந்தார். “நாம் கடற்கரைக்குச் சென்று இது குறித்துப் பேசலாம்.”

ஏதாவது ஒரு விஷயம் குறித்துத் தீவிரமாக யோசிக்க விரும்பினால் அவர் கடற்கரையோரம் காலார நடந்து செல்ல விரும்புவார். அப்போது மாலை வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. மாலைச் சூரியனைப் பார்க்க அது உகந்த நேரம்.

“சார், பணம் குறித்த உங்கள் கருத்துக்களை எனக்குக் கூறுங்கள்,” என்று நான் துவக்கி வைத்தேன்.

“இவ்வுலகில் பணம் ஓர் ஆற்றல்மிக்கக் கருவி: அதனால் அற்புதங்களை உருவாக்க முடியும், உனக்கு எண்ணற்ற லௌகீகப் பொருட்களைப் பெற்றுத் தர முடியும்; புதிய பொருட்களைக் கண்டுபிடிக்க உதவ முடியும்; செய்ய முடியாது என்று கருதும் விஷயங்களை நீ முயற்சி செய்ய அது உனக்கு உதவும்: பிறருக்கு உதவவும் அது உனக்கு உதவும்,” என்று கூறிய அவர் சிறிது இடைவெளி விட்டுவிட்டு இவ்வாறு கூறினார்: “பணம் உன்னை விடுதலை செய்யும்.”

நான் ஆடிப் போனேன். “சார், நீங்கள் ஆன்மீக விடுதலையைப்

பற்றியா கூறுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆமாம். மோட்சத்தைப் பற்றி . . . அகவிடுதலையைப் பற்றி."

"பணத்தின் மூலமாக மோட்சமா?" என்னால் நம்ப முடியவில்லை.

அவர் என்னைப் பார்த்து இவ்வாறு கூறினார்: "பணம் தீயது என்றும் உலகிலுள்ள அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அதுதான் காரணம் என்றும் எண்ணற்ற மக்கள் கருதுகின்றனர். இம்மக்கள் குறுகிய மனம் படைத்தவர்கள்." அவர் விரக்தி அடைந்திருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

அவர் மேலும் தொடர்ந்தார்: "பல்லாண்டு காலமாக இந்தியா செல்வச் செழிப்பான ஒரு நாடாக இருந்து வந்தது. அதே சமயம், அது ஆன்மீகரீதியாகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. பணம் ஆன்மீகத்தை ஆதரிக்கிறது. வறுமை நிலையில் இருக்கும் ஒருவன் எப்போதும் வாழ்க்கையை ஓட்டுவதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் அவனால் கடவுள்மீது கவனம் செலுத்த முடியாது.

"மறுபுறம், ஒருவனிடம் அபரிமிதமாகப் பணம் இருக்கும்போது, 'நான் யார்? இறப்புக்குப் பின்னால் ஏதாவது இருக்கிறதா?' என்பது போன்ற, வாழ்க்கை பற்றிய தத்துவார்த்தமான கேள்விகளை அவன் கேட்கத் துவங்குகிறான்."

இப்படிப்பட்டக் கண்ணோட்டத்தை நான் அப்போதுதான் முதன்முறையாகக் கேட்டேன். "எல்லாப் பணக்காரர்களும் ஆன்மீகவாதிகளாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் ஒரு பணக்காரனால் ஆன்மீகத்தை வித்தியாசமாகப் புரிந்து கொள்ள முடியும்," என்று அவர் விளக்கினார்.

நான் அவரிடம் இவ்வாறு கேட்டேன்: "சார், பணம், ஒருவர் அதன்மீது அதீதமான பற்றை உருவாக்கிக் கொள்ள வழி வகுத்துவிடாதா?"

அதற்கு அவர் என்னிடம் எதிர்க்கேள்வி போட்டார்: "ஏழ்மை என்பது பற்றின்மைக்கு உத்தரவாதம் அளிக்குமா?"

நான் தொடர்ந்தேன்: "பணம் ஒருவனுக்கு ஆணவத்தைக் கொண்டுவந்துவிடக்கூடுமே?"

அதற்கு அவர், "உன்னிடம் அபரிமிதமாகப் பணம் இருக்கும்போது அது உன்னிடம் அதிகமான வள்ளல்தன்மையைக் கொண்டுவரும்."

"பணம் பேராசையை வளர்க்கும்."

"தேவைப்படுபவர்களுக்குச் சேவை செய்யப் பணம் உனக்கு உதவும்."

"பணம்தான் சகலமும் அல்ல."

அவர் புன்னகைத்துக் கொண்டே, "ஏழ்மை ஒரு போற்றத்தக்க

அம்சமா?" என்று கேட்டார்.

ஆனாலும் எனக்கு முழு உடன்பாடு ஏற்படவில்லை. "அதிகமான பணம் இருந்தால், அதிகமான பிரச்சனை இருக்கும்."

"அதிகமான பணம் இருந்தால், தேர்ந்தெடுப்பதற்கு அதிகமான சுதந்திரம் இருக்கும்."

"பணத்திற்கான தேடலுக்கு எல்லையே இல்லை."

"மகிழ்ச்சிக்கும் எல்லை விதிக்கக்கூடாது."

நான் தொடர்ந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தேன், அவரும் சளைக்காமல் பலதரப்பட்டக் கண்ணோட்டங்களுடன் எனக்கு பதிலளித்துக் கொண்டே இருந்தார். நீண்ட விவாதத்திற்குப் பிறகு அவர் அழகான ஒன்றைக் கூறினார்.

"நம் நாட்டில் பணம் தெய்வீகமான ஒன்றாகக் கருதப்படுகிறது. லட்சுமி என்ற வடிவம் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. பணத்திற்கு இத்தகைய ஆன்மீக வடிவம் கொடுக்கப்படாவிட்டால் அது அழிவைக் கொண்டுவரும் என்பதை நினைவில் வைத்துக் கொள். பணம் என்பது நல்லதும் அல்ல, கெட்டதும் அல்ல. அது, அதைப் பயன்படுத்துபவனின் கையில் இருக்கிறது."

லட்சுமியைப் பற்றிக் குறிப்பிட்டவுடன் அவரது கூற்றில் எனக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. "சார், ஒருவனால் எவ்வாறு பணத்தைத் தெய்வீகப்படுத்த முடியும்?"

அவர் மகிழ்ந்தார். "நல்ல கேள்வி. அதற்கு ஒரு வழி இருக்கிறது," என்று கூறி அதை அவர் விளக்கினார். "லட்சுமி விஷ்ணுவின் மனைவி. விஷ்ணுதான் உலகை நிர்வகித்து வருகிறார். லட்சுமி அதைச் செய்ய வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆனால் லட்சுமி விஷ்ணுவின் காலடியில் உட்கார்ந்து கொண்டு அன்புடனும் அக்கறையுடனும் அவருக்குச் சேவை புரிந்து கொண்டிருக்கிறாள்."

எனக்கு இந்த ஒப்புமை பிடித்திருந்தது. அவர் மேலும் கூறினார்: "விஷ்ணு அறிவைப் பிரதிநுதப்படுத்துகிறார். லட்சுமி செல்வத்தைப் பிரதிநுதப்படுத்துகிறாள். நீ லட்சுமியை மட்டுமே வணங்கினால், அவளது கணவன் கோபப்படுவான். ஆனால் விஷ்ணுவை மட்டும் நீ வணங்கினால், லட்சுமி உடன் வருவாள். கணவன் செல்லுமிடத்திற்குத்தான் மனைவி செல்வாள். அதனால், அறிவின்மீது கவனத்தைக் குவி. செல்வம் தானாகப் பின்தொடர்ந்து வரும்."

இதைக் கேட்டு நாங்கள் இருவரும் சிரித்தோம். சூரியன் ஏற்கனவே மறைந்திருந்தான். அன்று நான் வீடு திரும்பியபோது அந்தச் செல்வச் சிறப்புமிக்கத் தொழிலதிபரின் வார்த்தைகள் என் காதுகளில்

ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன: “பணம் உன்னை விடுதலை செய்யும்.”

பணத்தின் உதவியாலும் ஒருவனால் மோட்சத்தை அடைய முடியும். பணம் குறித்து மக்கள் ஏராளமான குற்றவுணர்வைக் கொண்டுள்ளனர். உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக வேண்டும் என்று நான் கொண்டிருந்த இலக்குக் குறித்து முதன்முறையாக நான் குற்றவுணர்ச்சி கொள்ளாமல் இருந்தேன்.

நான் நிறைவான மனத்துடன் உறங்கச் சென்றேன்.

# 47

## உண்மையான சவால்

நான் என் தொழிலைப் படிப்படியாகவே வளர்த்துக் கொண்டு வந்தேன். அப்படிச் செய்யும்போது ஒருவரால் நிறையக் கற்றுக் கொள்ள முடியும். இப்போது என் நிறுவனங்கள் மிகப் பெரிதாக வளர்ந்திருந்தன. எனக்கு இப்போது பெயரும் புகழும் கிடைத்திருந்தன. பணம் வெள்ளமாக வந்து கொண்டிருந்தாலும், கூடவே சவால்களும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

ஒரு நாள், நிர்வாகத் தலைவர் என்னிடம், "தொழிலிலுள்ள மிக முக்கியமான சவால் எது தெரியுமா?" என்று கேட்டார்.

"மேலும் மேலும் பணத்தைப் பெற்றுக் கொண்டிருப்பது," என்று நான் பதிலளித்தேன்.

"அது பணத்தைக் கையாள்வது தொடர்பான சவால். அது ஒருபோதும் ஓயாது. தொழிலிலுள்ள முக்கியமான சவால் சரியான நபர்களை உன் நிறுவனத்தில் இணைத்துக் கொள்வதுதான்."

பொருத்தமான திறமைசாலிகளை உங்கள் நிறுவனத்திற்குக் கவர்ந்திழுப்பதிலும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும்தான் ஒரு தொழிலின் வெற்றி ரகசியம் இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டிருந்தேன்.

"தொழிலில் நான் எப்படி இவ்வளவு மாபெரும் வெற்றி பெற்றேன் என்று பலர் என்னிடம் கேட்டுள்ளனர்." நிர்வாகத் தலைவர் எனக்கு உண்மையான ஞானத்தை வழங்கிக் கொண்டிருந்தார்.

"நான் அவர்களுக்குப் பலதரப்பட்டப் பதில்களைக் கொடுத்துள்ளேன். ஆனால் என்னுடைய நிறுவனத்தில் உள்ளவர்கள்தான் என் வெற்றிக்கான உண்மையான காரணம். ஒரு தலைவர் என்ற முறையில், 'இத்திசையில் செல்,' என்று உன்னால் சுட்டிக்காட்ட முடியும், உத்திகளையும் கொள்கைகளையும் வகுத்துக் கொடுக்க முடியும். ஆனால் உன்னை உண்மையிலேயே வெற்றியாளனாக ஆக்குவது உன்னிடமிருக்கும் மக்கள்தான்."

நான் அர்த்தசாஸ்திரத்தைப் புரட்டிக் கொண்டிருந்தபோது செயலாற்றல்மிக்க அமைச்சர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதை

விளக்கமாகக் கூறும் ஓர் அத்தியாயம் என் கண்ணில் பட்டது. நல்ல மேலாளர்களைத் தேர்ந்தெடுக்க விரும்பும் நிறுவனங்களுக்கும் அவரது அறிவுரை மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஓர் அமைச்சரிடம் அல்லது மேலாளரிடம் கீழ்க்கண்ட குணாதிசயங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்று சாணக்கியர் குறிப்பிடுகிறார்:

1. கற்றுக் கொள்ளும் ஆர்வம்: அந்நபர் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும். மேலாண்மை தொடர்பான அனைத்துக் கோட்பாடுகளையும் கற்றுக் கொண்ட பிறகு, ஒரு பயிற்சியாளர் தன்னுடைய மேலதிகாரிகளிடமிருந்து வேலை தொடர்பான நடைமுறை அம்சங்களைக் கற்றறிந்து கொள்ள வேண்டும்.

2. காது கொடுத்துக் கேட்கும் திறன்: காது கொடுத்துக் கேட்பது என்பது ஒருவர் கூறுவதை செவி மடுப்பதோடு அது குறித்துச் சிந்திப்பதும் ஆகும். நிர்வாகம் தன்னிடமிருந்து எதை எதிர்பார்க்கிறது என்பதை அவர் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

3. அலசி ஆராயும் திறன்: ஒருவர் ஒரு சூழ்நிலையை எல்லாக் கோணங்களிலிருந்தும் அலசி ஆராய வேண்டும். மேலாண்மையைப் பொருத்தவரை தர்க்கரீதியான சிந்தனையும் வேண்டும், படைப்பாற்றல்ரீதியான சிந்தனையும் வேண்டும்.

4. தவறான கண்ணோட்டங்களை ஒதுக்கித் தள்ளும் திறன்: ஒருவர் தனக்கென்று சொந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். பலதரப்பட்டக் கண்ணோட்டங்களுக்கு இடையேயான வேறுபாடுகளைக் கண்டறியும் திறன் அவரிடம் இருக்க வேண்டும்.

5. ஒரு நபரின்மீது அல்லாது உண்மையின்மீது கவனம் செலுத்தும் திறன்: ஒரு பிரச்சனையிலிருந்து ஒரு நபரைப் பிரித்துப் பார்க்கும் திறன் இது. ஒருவர் எல்லாவற்றையும் கவனமாக அலசி ஆராய்ந்து, தான் எடுத்திருக்கும் முடிவில் உறுதியாக இருக்க வேண்டும்.

ஒருவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் முன்பு அவரைக் குறித்த உளவியல்ரீதியான அம்சங்களைச் சாணக்கியர் அலசி ஆராய்ந்திருந்தது என்னை பிரமிக்க வைத்தது. என் நிறுவனத்தில் மக்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போதும், பயிற்சி மேலாளர்களுக்கு வேலை வழங்க முன்வரும்போதும் நான் இக்கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளேன்.

அதன் விளைவுகள் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன. புதிய மேலாளர்களை வேலைக்கு எடுத்தபோது நான் இன்னோர் உத்தியையும் கையாண்டேன்.

நான் உரையாற்றக் கல்லூரிகளுக்குச் சென்றபோது, என் நிறுவனத்தில் சேர்ந்து கொள்ள ஆவலாக இருந்த பல மாணவர்களை நான் சந்தித்தேன். அவர்களை நான் இம்முறையில் சோதித்து வேலைக்கு எடுத்துக் கொண்டேன்.

ஒரு பெரிய தொழிலை நடத்திக் கொண்டிருந்த என் நண்பன் ஒருநாள் என்னிடம் இவ்வாறு கேட்டான்: "உன் நிறுவனத்திலிருந்து ஏன் அதிகமான ஊழியர்கள் வெளியேறுவதில்லை? நான் என் நிறுவனத்தில் ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்ளப் படாதபாடு படுகிறேன். ஆனால் உன் ஊழியர்கள் எப்போதும் உன்னிடம் விசுவாசமாக இருப்பதன் ரகசியம் என்ன?"

"என் ஊழியர்கள் என்னிடம் ஊழியர்களாகச் சேர்ந்து கொள்வதில்லை. என்னிடம் மாணவர்களாகச் சேர்கின்றனர். அதுதான் உன் நிறுவனத்திற்கும் என் நிறுவனத்திற்கும் உள்ள வேறுபாடு," என்று நான் பெருமையுடன் கூறினேன்.

"உன் ஊழியர்கள் உன்னை ஒரு முதலாளியாகப் பார்க்கின்றனர். என் ஊழியர்கள் என்னை ஒரு வழிகாட்டியாக, ஆசானாகப் பார்க்கின்றனர். உன்னுடைய ஊழியர்கள் உன்னை ஓர் ஆசானாகப் பார்த்தால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் உன்னிடம் விசுவாசமாக இருப்பார்கள்."

"அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்?" என்று நண்பன் கேட்டான்.

"அவர்களுக்கு உன்னால் முடிந்த அளவு நல்ல சம்பளத்தைக் கொடு. ஆனால் பணத்திற்காக மட்டும் உன் ஊழியர்கள் உன் நிறுவனத்தில் இருப்பதில்லை. நீ தங்கள்பால் அக்கறை செலுத்துகிறாய் என்று அவர்கள் உணர வேண்டும். இது குறித்துச் சாணக்கியர் என்ன கூறியிருக்கிறார் என்று அவனிடம் எடுத்துரைத்தேன்:

> எல்லா சமயங்களிலும் ஒருவன் தன் குடிமக்களின் தந்தைபோல நடந்து கொள்ள வேண்டும்**. *(4.4.43)***

நான் அதை அவனுக்கு விளக்கினேன். "நீ உன் ஊழியர்களை உன் குழந்தைபோல நடத்து. பின் மாயாஜாலங்கள் நிகழ்வதைப் பார்ப்பாய்." நான் ஓர் இளமையான தொழிலதிபராகக் கருதப்பட்டாலும் ஏற்கனவே வயதானவன்போல சிந்திக்கத் துவங்கியிருந்தேன்.

நான் என் நிறுவனங்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமனம்

செய்யத் துவங்கினேன். என் முதல் முதன்மை நிர்வாக அதிகாரியை நான் நியமித்தது ஒரு தனித்துவமான அனுபவமாக இருந்தது. நான் ஒரு தொழிற்துறைத் தலைவனாக இருந்தேன். என்கீழ் பல தொழிற்துறைத் தலைவர்கள் வேலை பார்த்து வந்தனர்.

நிர்வாகத் தலைவர் ஒருமுறை என்னிடம் இவ்வாறு கூறியிருந்தார்: "பலதரப்பட்டத் தொழில்களை நடத்துவதுதான் உண்மையான வர்த்தகம்." மக்கள்தான் தொழில்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதை இப்போது நான் உணர்ந்திருந்தேன். அதனால் உங்களுக்காக அத்தொழில்களை நடத்த உங்களுக்கு நல்ல மனிதர்கள் தேவை.

ஆனால் உங்களுடைய நிர்வாக அதிகாரிகளை நீங்கள் பிற ஊழியர்கள்போல நடத்த முடியாது. நீங்கள் அவர்களுக்கு அதிகமான சுதந்திரத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குவதோடு லாபத்தில் பங்கும் அளிக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் தங்கள் வியாபாரத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்வதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

என் நிறுவனங்களில் ஒன்று மிகவும் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் அதை ஒரு பொது நிறுவனமாக ஆக்குவதன் மூலம் அதற்கு நிதியைத் திரட்ட நான் முடிவு செய்தேன்.

முதலீட்டாளர்களுக்குப் பல விதமான பிரசன்டேஷன்களைத் தயாரித்தது எனக்குச் சிறந்த அனுபவமாக இருந்தது.

நான் ஊடகங்களுக்கு அளித்தப் பிரசன்டேஷன் ஒன்றில், ஒரு பத்திரிகையாளர் என்னிடம், "உங்களுக்கு இப்போது நல்ல தொழில் அனுபவம் இருக்கிறது. உங்கள் அனுபவங்களைத் தொகுத்து நீங்கள் ஒரு புத்தகம் எழுதினால் என்ன?" என்று கேட்டார்.

ஒரு நிமிடம் நான் ஆடிப் போய்விட்டேன். "புத்தகம் எழுதுவது பற்றி நான் யோசிக்கவேயில்லை," என்று நான் அவருக்கு பதிலளித்தேன்.

"எப்போதும் ஏதாவது ஓரிடத்திலிருந்துதானே எதையும் துவக்க வேண்டும்!" என்று அவர் புன்னகையுடன் கூறினார்.

ஒரு புத்தகத்தை எழுதும் திறமை என்னிடம் இருந்ததா? நான் அதை ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. ஆனால் ஒரு பிரபல பத்திரிகையாளர் அப்படிப்பட்ட ஒன்றைப் பரிந்துரை செய்தார் என்றால் அது குறித்து நான் சிந்திக்க வேண்டும் என்று நான் முடிவு செய்தேன்.

அன்றைய தினம், எனக்கு அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுக் கொடுத்த குருவின் பிறந்தநாள். வருடாவருடம் அவருக்கு நாள் வாழ்த்துத் தெரிவிப்பது வழக்கம். அன்றும் நான் அவரை அழைத்தேன்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவர் திடீரென்று, "உன் முனைவர் பட்டப்படிப்பு என்னவாயிற்று?" என்று கேட்டார்.

# 48

## முனைவரை உருவாக்கிய முனைவர்

முனைவர் படிப்பிற்குப் பதிவு செய்து மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. என் மனைவியின் நிர்ப்பந்தத்தால்தான் நான் அதற்கு ஒப்புக் கொண்டிருந்தேன்.

வெற்றியாளனாக உருவாக வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் கடினமான பாதையில் பயணிக்கப் பலர் முன்வருவதில்லை. கல்வியில் வழங்கப்படும் உச்சகட்டப் பட்டம் முனைவர் பட்டம் என்பதால், கல்வி கற்ற எல்லோருமே அதைப் பெற விரும்புகின்றனர்.

ஆனால் விரும்பத்திற்கும் இலக்கிற்கும் வேறுபாடு உள்ளது. எல்லோரும் ஏதாவது ஒன்றை விரும்புகின்றனர். ஒரு சிலர்தான் தங்களுடைய விருப்பத்தை இலக்காக மாற்றி, அதற்காகக் கடுமையாக உழைத்து, இறுதியில் அதை அடைகின்றனர்.

நானும் முனைவர் பட்டம் பெற வேண்டும் எனும் என் விருப்பத்தை ஓர் இலக்காக மாற்றி அதற்காகக் கடுமையாக உழைத்தேன். இறுதியில் தொழிலிலும் வீட்டிலும் எனக்குத் தீவிரமான நேர நெருக்கடி இருந்தும் அதை முடித்துவிட்டேன். ஆனால் அதை நான் மெதுவாகத்தான் அடைந்தேன்.

ஒரு நாள் என் முனைவர் ஆய்வு வழிகாட்டி என்னை அழைத்து, “என்னை நேரில் வந்து சந்தியுங்கள். நான் உங்களோடு முக்கியமான ஒன்றைப் பற்றி விவாதிக்க வேண்டும்,” என்று கூறினார். அப்பெண்மணி என்னை அழைத்தபோதெல்லாம் நான் பதற்றமடைந்தேன். ஏனெனில், ஓர் ஆசிரியர் என்ற முறையில் என் ஆய்வு குறித்து ஏதாவது முக்கியமான யோசனை ஒன்றை அவர் தெரிவிப்பார்.

நான் அவரைச் சந்தித்தபோது அவர் மிகவும் சுவாரசியமான ஒன்றை என்னிடம் தெரிவித்தார். “நாம் கிரீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகருக்குச் செல்லவிருக்கிறோம்.” அந்த வருடம் உலகத் தத்துவக் காங்கிரஸ் கிரீஸில் கூடவிருந்தது. பிரம்மாண்டமாக நடைபெறும் அக்கூட்டங்களில், உலகின் பல பகுதிகளிலுள்ள கல்வியாளர்கள்,

அறிஞர்கள், மற்றும் தத்துவவியலாளர்கள் ஓரிடத்தில் கூடிப் பலதரப்பட்ட விஷயங்கள் குறித்து விவாதிப்பர்.

நான் அர்த்தசாஸ்திரத்தில் முனைவர் ஆய்வை மேற்கொண்டு வந்ததால், அக்கூட்டத்திற்காக, தலைமைத்துவம் பற்றிய சாணக்கியரின் தத்துவம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தேன்.

“சர்வதேச அறிஞர்கள் அடங்கிய குழு உங்களுடைய கட்டுரையைத் தேர்ந்தெடுத்துள்ளது. அங்கு பேச நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்,” என்று அவர் புன்னகையுடன் கூறினார்.

கிரீஸ், மேற்கத்தியக் கலாச்சாரத்தின் தொட்டில். சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மாபெரும் சிந்தனையாளர்கள் பிறந்த நாடு அது. அவர்கள் மனிதகுலத்திற்குப் புதிய திசையைக் காட்டியிருந்தனர்.

கிரீஸின் தலைநகரமான ஏதென்ஸில் அக்ரோபோலிஸ் போன்ற பல வரலாற்றுப் புகழ்மிக்க இடங்கள் உள்ளன. இன்றுகூட உலகம் தனக்கான உத்வேகத்தை அங்கிருந்துதான் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒலிம்பிக் விளையாட்டுகள்கூட ஏதென்ஸில்தான் துவங்கின.

“நாம் இந்தியக் குழுவின் ஒரு பகுதியாக அங்கு செல்கிறோம். நீங்களும் எங்கள் குழுவில் இடம்பெற்றுள்ளீர்கள்.” இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்வது என்பது மிகப் பெரியதொரு கௌரவம். கிழக்கத்தியத் தத்துவம் இந்தியாவிலிருந்தும், மேற்கத்தியத் தத்துவம் கிரீஸிலிருந்தும் உதயமாகியிருந்தன.

நான் நம்முடைய தத்துவத்தை அவர்களுக்கு எடுத்துச் செல்லவிருந்தேன். ஒருசில மாதத் தயாரிப்பிற்குப் பிறகு, இந்தியக் குழு கிரீஸுக்குக் கிளம்பியது.

நான் சமர்ப்பித்தக் கட்டுரை உலக அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. நான் பிற நாட்டு அறிஞர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டேன்.

கல்வியாளர்களின் உலகம் பிரம்மாண்டமானதாக இருந்ததையும், அவர்களுக்கு இடையே ஒரு நெருங்கிய தொடர்பு இருந்ததையும் நான் அறிந்து கொண்டபோது, நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். அக்கூட்டத்தில் நூறு நாடுகளிலிருந்து வந்திருந்த ஐயாயிரம் அறிஞர்கள் கலந்து கொண்டனர். எனக்கு ஒரு புதிய உலகம் திறந்துவிடப்பட்டது.

நாங்கள் விமானத்தில் நம் நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, என் வழிகாட்டி என்னிடம், “உங்களுடைய முனைவர் ஆய்வை சீக்கிரமாக முடிக்கப் பாருங்கள். மற்றுமொரு புதிய உலகம்

உங்களுக்காகத் தன் கதவைத் திறந்துவிடும்,” என்று கூறினார்.

அடுத்த ஆறு மாதங்களுக்குள் என் ஆய்வை முடிப்பது என்று நான் உறுதி பூண்டேன். என்ன வந்தாலும் சரி அதற்குள் அதைச் சாதித்துவிட நான் விரும்பினேன்.

அடுத்த நடவடிக்கையாக, பல ஆண்டுகளாக நான் மேற்கொண்டிருந்த ஆராய்ச்சியின் முடிவுகளை ஓர் ஆய்வுச்சுருக்கமாக எழுதி அதைச் சமர்பிக்க வேண்டும். அது அங்கீகரிக்கப்பட்டவுடன் என் இறுதி ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளப்படுவேன். பின் இறுதிக் கட்டமாக நான் ஒரு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவேன். அதில் நான் தேர்ச்சி பெற்றுவிட்டால், எனக்கு முனைவர் பட்டம் வழங்கப்படும்.

என் ஆய்வுப் பயணம் இறுதிக் கோட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒரு மராத்தான் ஓட்டம்போல இருந்த அதில் இறுதிக் கட்டம் நெருங்கியபோது நான் என் செயற்பாட்டை விரைவுபடுத்த வேண்டியிருந்தது.

அப்போது நான் என் முனைவர் பட்ட ஆய்வு குறித்துக் கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்தேன். அப்பயணத்தின்போது நான் பல உள்நோக்குகளை தரிசித்திருந்தேன்.

முனைவர் பட்டம் என்பது மற்றபிற படிப்புகளைப் போன்ற ஒன்றல்ல என்பதுதான் நான் கற்றுக் கொண்ட முதற்பாடம். மற்றப் படிப்புகளில் மாணவர்கள் படித்து ஒரு தேர்வு எழுதுவர். அதில் அவர்கள் எடுக்கும் மதிப்பெண்களைப் பொருத்து அவர்களது எதிர்காலம் நிர்ணியிக்கப்படும். ஆனால் முனைவர் ஆய்வில் அதிகாரப்பூர்வமான தேர்வுகள் எதுவும் கிடையாது. இது ஆய்வு மற்றும் அதன் முடிவைச் சார்ந்தது.

ஆய்வு மாணவருக்கும் அவரது வழிகாட்டிக்கும் இடையே நல்ல ஐக்கியத்தன்மை நிலவ வேண்டியது அவசியம் என்பது நான் கற்றுக் கொண்ட இரண்டாவது பாடம். இது ஒரு தீவிரமான பயணம்.

ஒரு விதத்தில் இது குரு—சீடன் உறவைப் போன்றது. குருவின் பல்லாண்டுகாலக் கல்வி அனுபவம் மாணவனுக்கு உதவும். மாணவன் ஆய்வை முடிக்க அவர் ஒரு சரியான வழியைக் காட்டுவார்.

நான் என்னுடைய இறுதி ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டு, நேர்முகத் தேர்வில் அமர்ந்து கொண்டிருந்தேன். என் வழிகாட்டியைத் தவிர, வெளியிலிருந்து வந்த ஓர் அறிஞரும் என்னுடைய ஆய்வை எடை போடுவார்.

இரண்டு மணிநேரம் நீடித்த அந்த நேர்முகத் தேர்வில் என் ஆய்வு

குறித்துப் பல கோணங்களில் இருந்தும் கேள்விகள் கேட்கப்பட்டன. கல்வி உலகிற்கு என் ஆய்வு எந்தவிதமான பங்களிப்பை அளிக்கும் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் அதன் நோக்கம்.

இரண்டு மணிநேரத்திற்குப் பிறகு, வெளியிலிருந்து வந்த அறிஞர் என்னிடம், “சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள், டாக்டர். இதன் முடிவை வெகு விரைவில் உங்களுக்குத் தெரிவிக்கிறோம்,” என்று கூறினார். நான் அந்த அறைக்கு வெளியே காத்திருந்தேன்.

அங்கிருந்து வெளியே வந்த என் வழிகாட்டி என்னை நோக்கிப் புன்முறுவல் பூத்தார். வெளியிலிருந்து வந்திருந்த அறிஞர் என்னை ‘டாக்டர்’ என்று அழைத்தது அப்போதுதான் எனக்கு உறைத்தது. நான் அதில் வெற்றிகரமாகத் தேறியிருந்தேன் என்பதை அவர் நாசூக்காகத் தெரிவித்திருந்தார். நேர்முகத் தேர்வின் முடிவை வாய் வார்த்தைகளின் மூலம் தெரிவிக்க விதிமுறைகள் இடம் கொடுக்கவில்லை. அதனால் நான் அதிகாரப்பூர்வமான கடிதத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் நான் நன்றாகச் செய்திருந்தேன் என்பதை நான் உணர்ந்திருந்தேன்.

அடுத்த சில மாதங்களில் அதை உறுதி செய்யும் கடிதம் ஒன்று எனக்கு வந்தது. முனைவர் பட்டமளிப்பு விழாவிற்கு வருமாறும் அக்கடிதம் கேட்டுக் கொண்டது. நான் என் மனைவிக்கு நன்றி தெரிவித்தேன். ஒரு முனைவர் இன்னொரு முனைவரை உருவாக்கிவிட்டார்.

என் மனைவி என்னை உற்று நோக்கி, “வாழ்த்துக்கள், டாக்டர்! இப்போது கல்வித் துறையில் நீங்கள் உங்களுடைய முதல் இலக்கை அடைந்துவிட்டீர்கள். உங்களுடைய அடுத்த இலக்கை எப்போது அடையப் போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

என்னுடயை அடுத்த இலக்கு எது?

# 49

# அறிஞரிலிருந்து நூலாசிரியர்

கல்வி உலகம் வினோதமானது. முனைவர் பட்டம் பெறுவது என்பது என் கல்விப் பயணத்தின் இறுதிக் கோடு என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அது இன்னொரு பயணத்தின் துவக்கம் என்பது அதை முடித்தபோதுதான் எனக்குத் தெரிந்தது.

என் ஆய்வில் தொடர்ந்து எனக்கு உதவி செய்து வந்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காக நான் என் வழிகாட்டியைச் சந்திக்கச் சென்றேன். பல விதமான கேள்விகளைக் கேட்கும் அளவுக்கு என் குழந்தைகள் இப்போது வளர்ந்திருந்தனர்.

உலகம் எப்படி இயங்கிக் கொண்டிருந்தது என்று அவர்கள் என்னிடம் கேட்டபோது, அவர்கள் என்னுடைய ஆய்வு குறித்துக் கேட்டதாகவே எனக்குத் தோன்றியது.

நான்கு வருடங்கள் நீடித்த என் ஆய்வு என்னுள் ஒரு புதிய மனிதனை உருவாக்கியிருந்தது. தெளிவான சிந்தனை இல்லாமல் எதையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதை நான் கற்றுக் கொண்டிருந்தேன். அது ஒரு நல்ல மனப்போக்கு. அது சரியான வழியில் சிந்திப்பதைக் கற்றுக் கொடுத்திருந்தது. அதாவது, அன்விக்ஷிக்கியைக் கற்றுக் கொடுத்திருந்தது.

இந்த மனப்போக்கு உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் தங்கிவிடும். உங்களுடைய டாக்டர் பட்டமும் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் இருக்கும். எங்கு சென்றாலும் நீங்கள் டாக்டர் என்றே அழைக்கப்படுவீர்கள். ஓர் அறிஞர் என்று உலகம் உங்களை மதிக்கும், ஒரு புதிய கண்ணோட்டத்தில் உங்களைப் பார்க்கும்.

“முனைவர் பட்டம் உங்களுக்கு ஒரு புதிய பார்வையைக் கொடுக்கும். வெளியுலகத்தை நீங்கள் ஒரு புதிய சன்னல் வழியாகப் பார்ப்பீர்கள்,” என்று என் வழிகாட்டி கூறினார்.

“பல புதிய சாத்தியக்கூறுகள் உங்கள் முன்னால் தோன்றும். உங்கள் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள், காதுகளைக் கூர்தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். சந்தர்ப்பம் வரும்போது அதைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள்.”

என் வழிகாட்டி தன்னுடைய கதையை என்னிடம் பகிர்ந்து கொண்டார்: "முனைவர் பட்டம் எனக்கு எதைக் கொண்டு வரும் என்பதை நான் அறியாமல் இருந்தேன். என் ஆய்வு வழிகாட்டி இதை என்னிடம் கூறினார். நான் ஒரு சராசரியான பெண்ணாகத்தான் இருந்தேன். அவருடைய வழிகாட்டுதலின் காரணமாகத்தான் நான் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். வருங்கால அறிஞர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன்."

அவருடைய அனுபவம் என்னை பிரமிக்க வைத்தது.

"நான் உலகெங்கும் பயணித்திருக்கிறேன், அரசின் பல குழுக்களில் இடம்பெற்றிருக்கிறேன், கல்விக் கொள்கைகளை வகுக்க உதவியிருக்கிறேன்," என்று அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

நான் அவரிடம், "ஓர் ஆசிரியராக இருந்தால் போதாதா? அது ஓர் உன்னதமான தொழில்தானே? முனைவர் பட்டம் பெறாமலேயே ஒருவரால் ஓர் ஆசிரியராகத் தன் பங்களிப்பை நல்க முடியாதா?" என்று கேட்டேன்.

"ஆசிரியர் பணி உன்னதமானது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் ஒருவர் முனைவர் பட்டத்தைப் பெறும்போது அவர் தன் மாணவர்கள்மீது மட்டும் தாக்கத்தை விளைவிப்பதில்லை. மாறாக, ஒட்டுமொத்தக் கல்வி அமைப்புமுறைமீதே அவரால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்."

அவரது சிந்தனை எப்படிச் சென்றது என்பது எனக்குப் புரிந்தது. உலகெங்கும் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருசிலர்தான் முனைவர் பட்டம் பெறுகின்றனர். அப்படிப் பெறுகின்றவர்கள் வேறு விதமான பங்களிப்பை அளிக்கின்றனர்.

நான் என் அர்த்தசாஸ்திர குருவுடன் ஒரு கருத்தரங்கிற்குச் சென்றபோது, அங்கு வந்திருந்த மாநில முதல்வர், தன் அமைச்சர்களிடையே உரையாற்றுவதற்கு என் குருவிற்கு அழைப்பு விடுத்தது என் நினைவுக்கு வந்தது.

அந்த முதல்வருக்கு ஏராளமான ஆசிரியர்களைத் தெரிந்திருக்கும். ஆனால் அவர் ஏன் மற்றவர்களை விட்டுவிட்டு என் குருவை மட்டும் அழைத்தார்? அறிவுக் களத்தில் என் குரு அபூர்வமானவராக இருந்த காரணத்தினால்தான் அவர் அவ்வாறு செய்தார்.

வல்லுனர்களுக்கு எப்போதும் கிராக்கி இருந்து கொண்டேயிருக்கும்.

முனைவர் பட்டம் பெறுவது ஒருவரை அத்துறையில் ஒரு வல்லுனராக ஆக்குகின்றது. “நீங்கள் அர்த்தசாஸ்திரத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளீர்கள். இந்த ஆய்வின் மூலம் நீங்கள் பெற்ற அறிவை உலகில் பரப்புங்கள். அது உங்களுடைய அடுத்த இலக்காக இருக்கட்டும்,” என்று என் வழிகாட்டி எனக்கு அறிவுறுத்தினார்.

நான் பேசுவதற்கு முன்பாக அவர் தொடர்ந்தார்: “உங்கள் தொழில் அது இது என்று உங்களுக்குப் பல வேலைகளும் அவை சார்ந்த பொறுப்புகளும் இருக்கும். ஆனால் அதிலிருந்து எப்படியாவது உங்களை விடுவித்துக் கொண்டு நம் நாட்டின் இளைஞர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயலுங்கள். உங்களைப் போன்ற ஒரு முன்மாதிரி அவர்களுக்குத் தேவை.”

இவை என் வழிகாட்டியின் பரிந்துரைகள் அல்ல, அறிவுறுத்தல்கள். “அதோடு, குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது, தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிக் கொண்டிருங்கள். முடிந்தால் உங்கள் அனுபவங்களைத் தொகுத்து ஒரு புத்தகத்தை எழுதுங்கள்.”

ஒரு நீண்ட விவாதத்திற்குப் பிறகு நான் அங்கிருந்து கிளம்பினேன். அப்போது அவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டு, “பல்கலைக்கழகத்திற்கு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருங்கள். முனைவர் பட்டம் பெற்றதோடு ஓடிப் போய்விடாதீர்கள்,” என்று கூறினார்.

நான் தலையை ஆட்டினேன். அவர் தொடர்ந்து, “முனைவர் பட்டத்தைப் பெற்றது ஒரு பயணத்தின் முடிவல்ல, அது இன்னொரு பெரிய பயணத்தின் துவக்கம் என்பதை நினைவில் வைத்திருங்கள். இப்பயணம் ஒருபோதும் முடிவடையாத ஒன்று,” என்று கூறினார்.

என் ஆய்வை முடித்தபோது ஒரு பெரிய பாரத்தை இறக்கி வைத்தாற்போல நான் உணர்ந்தேன். இப்போது நான் இன்னும் பெரிய பொறுப்புகளைச் சுமக்கத் தயாராகிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் என் அலுவலகத்தில் ஒரு கூட்டத்தில் நான் கலந்து கொண்டிருந்தபோது, அதில் பங்கு கொண்டிருந்த ஒரு விற்பனை மேலாளர் தன் குழுவினரிடம், “வியாபாரத்தைப் பெருக்குவதற்குச் சிறந்த வழி நெம்புகோல் தத்துவத்தைப் பயன்படுத்துவதுதான். உங்களால் பத்துப் பேரைத் தொடர்பு கொள்ள முடியுமென்றால் இத்தத்துவத்தைப் பயன்படுத்தினால் நூறு பேரை உங்களால் தொடர்பு கொள்ள முடியும். அதனால் வாழ்க்கையில் இதைப் பயன்படுத்த மறக்காதீர்கள்,” என்று கூறியதை நான் கேட்டேன்.

உடனே எனக்கு ஒரு யோசனை உதித்தது. என் முனைவர் பட்ட

ஆய்வின் முடிவை அதிகமான மக்களுக்கு எடுத்துச் செல்ல நான் எந்த நெம்புகோலைப் பயன்படுத்த வேண்டும்? நான் வெறுமனே உரையாற்றிக் கொண்டிருந்தால் என்னால் ஓராயிரம் கல்லூரிகளிலுள்ள மாணவர்களை வேண்டுமானால் சென்றடைய முடியும்.

ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டு லட்சக்கணக்கானவர்களைச் சென்றடைவதற்கு வழியேதும் இருந்ததா? அறிவுத் துறையைப் பொருத்தவரை, என் ஆய்வின் முடிவுகளை ஒரு புத்தகமாக வெளியிடுவதன் மூலம் என்னால் அதைச் சாதிக்க முடியும் என்பதை நான் உணர்ந்தேன்.

எண்ணற்ற மக்கள் புத்தகங்களைப் படிக்கின்றனர். உங்களைத் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள்கூட உங்கள் புத்தகத்தின் மூலம் உங்கள் அறிவாற்றலால் பயனடைய முடியும். புத்தகங்கள் அவற்றின் ஆசிரியர்கள் இறந்து போன பின்பும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும்.

வேறு எந்த வழியில் சாணக்கியரால் தன் அறிவை நம் தலைமுறைவரை பகிர்ந்து கொண்டிருக்க முடியும்? தன் கண்டுபிடிப்புகளையும் தன் அனுபவங்களையும் அர்த்தசாஸ்திரம் என்ற வடிவில் தொகுத்து வைத்திருக்க வேண்டும் என்ற முன்னோக்கு அவருக்கு இருந்திருக்கிறது.

சாணக்கியர் மட்டும் அர்த்தசாஸ்திரத்தை எழுதி வைத்திருக்காவிட்டால், நாம் அவரது ஞானத்தை என்றென்றைக்குமாக இழந்திருப்போம். சாணக்கியரால் உந்தப்பட்ட நான் ஒரு புத்தகத்தை எழுதவது என்று முடிவெடுத்தேன். என்னுள் இருந்த அறிஞன் ஒரு நூலாசிரியனாக ஆக விரும்பினான்.

எனக்குப் பதிப்பகத் துறை பற்றி எதுவும் தெரியாது. ஆனால் விற்பனையில் சாதனை படைக்கக்கூடிய ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்பது என் அடுத்த இலக்காக இருந்தது.

# 50

# விற்பனையில் சாதனை படைத்த ஒரு புத்தகத்தை எழுதுதல்

“ஒரு புத்தகத்தை எழுதுவதற்குச் சிறந்த வழி அதை எழுதுவதுதான்,” என்று நான் ஒரு புத்தகத்தில் படித்திருந்தேன். ஒரு புத்தகத்தை எவ்வாறு எழுத வேண்டுமென்றோ அல்லது அதை எவ்வாறு பிரசுரிக்க வேண்டுமென்றோ எனக்குத் தெரியாது. ஆனால் எப்படியாவது ஒரு புத்தகத்தை எழுதிவிடுவது என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

என் வர்த்தகப் பங்காளிகளில் ஒருவர் ஒரு பிரபலமான கிளப் ஒன்றில் உறுப்பினர். அவ்வப்போது தங்கள் உறுப்பினர்களுடன் கலந்துரையாட வெளியிலிருந்து பேச்சாளர்களை அந்தக் கிளப் அழைப்பது வழக்கம். அந்த நண்பர் ஒரு முறை அவருடைய கிளப்பில், ‘நவீன வர்த்தகத்தில் சாணக்கியரின் ஞானத்தைப் பயன்படுத்துவது எப்படி?’ என்ற தலைப்பில் உரையாற்ற முடியுமா என்று என்னைக் கேட்டார். நான் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

நான் அங்கு உரையாற்றச் சென்றபோது அதன் உறுப்பினர்களில் பலர் அந்நகரத்தின் பெரிய தொழிலதிபர்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. அவர்கள் பலவிதமான பின்புலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

சாணக்கியரின் ஞானத்தைத் தெரிந்து கொள்ள அந்த உறுப்பினர்கள் அனைவரும் வந்திருந்தனர். நான் அரைமணி நேரம் உரை நிகழ்த்தினேன். அவர்கள் அதை வெகுவாக ரசித்தனர் என்று எனக்குப் பட்டது. உரை நிறைவுற்றதும் விவாதங்கள் தொடர்ந்தன.

நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு வயதானவர் என்னிடம், “நீங்கள் அருமையாகப் பேசினீர்கள். இது குறித்து நீங்கள் ஒரு புத்தகம் எழுத விரும்புகிறீர்களா?” என்று கேட்டார். நான் ஆச்சரியம் அடைந்தேன். என் புத்தகத்தை எப்படிப் பிரசுரிப்பது என்று சிறிது காலமாகவே நான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தேன்.

அவர் தன் முகவரி அட்டையை எடுத்து என்னிடம் கொடுத்தார். இந்தியாவின் மிகப் பெரிய பதிப்பகம் ஒன்றின் தலைவர் அவர். நான்

பிரமிப்படைந்தேன். ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் புத்தகத்தைப் பிரசுரிக்க அவரை அணுகிக் கொண்டிருந்தாலும் ஒரு சிலருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும். ஆனால் இங்கு கடவுளின் அனுக்கிரகத்தால், ஒரு புத்தகம் எழுதுமாறு அவரே என்னிடம் கூறினார்.

“கண்டிப்பாக, சார்,” என்று நான் உடனடியாக பதிலளித்தேன்.

“அப்படியானால், நாம் என் அலுவலகத்தில் சந்திக்கலாம். என் ஆசிரியர் குழுவையும் வரச் சொல்கிறேன்,” என்று அவர் பரிந்துரைத்தார்.

அதற்கு அடுத்த வாரம் நான் அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அதில் எங்கள் இருவரைத் தவிர மேலும் மூன்று பேர் கலந்து கொண்டனர். அந்த ஆசிரியர் குழுவினர் பழகுவதற்கு இனிமையானவர்களாக இருந்தனர்.

அதில் ஒருவர் என் பேச்சைக் கேட்க வந்திருந்தார். அவர் என்னிடம், “சார், அன்று நீங்கள் அபாரமாகப் பேசினீர்கள். நீங்கள் பேசும் பொருள்மீது உங்களுக்கு ஆழ்ந்த பிடிமானம் இருக்கிறது. எங்கள் நிறுவனத் தலைவர் கேட்டுக் கொண்டபடி, இதே தலைப்பில் நீங்கள் எங்களுக்கு ஒரு புத்தகத்தை எழுதிக் கொடுங்கள்,” என்று கேட்டுக் கொண்டார்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், நான் தயங்கினேன். “நன்றி. நான் ஒரு புத்தகத்தை எழுதத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒரு புத்தகத்தை எவ்வாறு எழுதுவது என்று எனக்குத் தெரியாது என்ற உண்மையை நான் உங்களிடம் ஒத்துக் கொள்ள வேண்டும்,” என்று தெரிவித்தேன்.

“அதற்குத்தானே நாங்கள் இருக்கிறோம்,” என்று அவர்கள் புன்னகையுடன் கூறினர். “அதைப் பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். எங்கள் பதிப்பகத்திற்கு மதிப்புக் கூட்டும் நல்ல நூலாசிரியர்களை நாங்கள் எப்போதும் தேடிக் கொண்டிருக்கிறோம். சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் குறித்தும் நவீன வர்த்தகத்தில் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் நீங்கள் கொண்டிருக்கும் புலமை எங்களுக்குப் பிடித்திருக்கிறது.”

நான் இத்திட்டத்தில் குதிக்க அது எனக்கு தைரியம் அளித்தது. ஆசிரியர் குழுவிலிருந்த இன்னோர் இளம்பெண், “நாங்கள் உங்களைப் பற்றிச் சிறிது ஆய்வு செய்துள்ளோம். நீங்கள் எண்ணற்றத் தொழில்களை நடத்தி வருவதோடு, சாணக்கியரைப் பற்றி முனைவர் பட்டமும் பெற்றுள்ளீர்கள் என்று அறிந்தோம்,” என்று கூறினாள்.

“ஆமாம். அது உண்மைதான்,” என்று நான் பெருமையுடன் கூறினேன். நான் என் முனைவர் பட்டத்தைப் பெற்ற பிறகு வேறு ஒரு

தளத்தில் இருப்பேன் என்று என் வழிகாட்டி கூறியிருந்தது என் நினைவுக்கு வந்தது.

“முதலில் நீங்கள் உங்களுடைய முனைவர் பட்டத்திற்குச் சமர்பித்த ஆய்வறிக்கையை நாங்கள் பார்க்கலாமா?” என்று முதன்மை ஆசிரியர் கேட்டார்.

“தாராளமாக,” என்று நான் பதிலளித்தேன்.

அப்பதிப்பகத்தின் தலைவரும் விவாதத்தில் சேர்ந்து கொண்டார். “நல்லது. அப்படியானால் எழுதுவதில் உங்களுக்கு ஏற்கனவே அனுபவம் இருக்கிறது. ஒரு புத்தகம் எழுதிய அனுபவம் உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். அது ஒரு பிரச்சனை அல்ல. ஆனால் ஆய்வு செய்துள்ள அனுபவமும், ஆய்வறிக்கையை எழுதிய அனுபவமும் இதற்கு வெகுவாக உதவும்.”

நான் என் முனைவர் பட்ட ஆய்வறிக்கையை அனுப்பி வைத்தேன். ஒரு வாரம் கழித்து ஆசிரியர் குழுவிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. “உங்களுடைய முனைவர் ஆய்வறிக்கையை அப்படியே புத்தகமாகப் போட்டால் என்ன?” என்று அவர்கள் கேட்டனர். எனக்கு இன்ப அதிர்ச்சி.

“உங்களுடைய ஆய்வுக் கட்டுரை சாதாரண வாசகர்கள் படித்துப் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிமையாக எழுதப்பட்டுள்ளது. அதை லேசாக மெருகேற்றினால் அது ஒரு சிறந்த புத்தகமாக உருவெடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்,” என்று அவர்கள் கூறினர்.

முதன்முதலாகப் புத்தகம் எழுதும் ஒரு நூலாசிரியருக்கு இதைவிட என்ன வேண்டும்? முதலில் ஒரு பதிப்பகத்தின் தலைவர் உங்களை அணுகுகிறார்; நீங்கள் ஏற்கனவே எழுதியுள்ள கட்டுரையையே புத்தகமாகப் போட்டுவிடலாம் என்று பதிப்பாசிரியர் கூறுகிறார். நான் துவக்கத்திலிருந்து ஒரு புத்தகத்தைத் தனியாக எழுதத் தேவையில்லை என்பதை உணர்ந்தேன். எல்லாம் ஏற்கனவே தயாராக இருந்தது.

அடுத்த சில மாதங்களில் நாங்கள் என் ஆய்வுக் கட்டுரையை மெருகேற்றி அதை ஒரு நல்ல புத்தகமாக மாற்றினோம். அப்பதிப்பகம், சாதாரண வாசகர்களும் வாங்கும் விதத்தில் அப்புத்தகத்தை மலிவு விலையில் வெளியிட்டது.

அதன் முதல் பிரதி என் கைக்கு வந்ததும் நான் பெரிதும் உணர்ச்சிவசப்பட்டேன். அப்போதுதான் பிறந்த என் குழந்தையை நான் என் கையில் வைத்திருந்தது போன்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது.

ஓர் அம்மாவைப்போல நான் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக்கவில்லை என்றாலும், ஒரு குழந்தையைப்

பெற்றெடுத்தப் பிறகு ஒரு தாய் எவ்வாறு உணர்வாள் என்பதை என்னால் உணர முடிந்தது.

அப்போதுதான் தன் குழந்தையை ஈன்றெடுத்திருந்த ஒரு தாய் தன் உணர்வைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "என்னுடைய ஒரு பகுதி என்னிலிருந்து பிரிந்துவிட்டது. ஆனால் நான் முழுமை அடைந்துவிட்டேன்."

நான் என் பதிப்பகத்தாரிடம் இவ்வாறு கேட்டேன்: "இப்போது புத்தகம் தயாராகிவிட்டது. விற்பனையில் சாதனை படைக்கும் ஒன்றாக இதை எவ்வாறு மாற்றுவது?"

"அதை அடைய வேண்டுமென்றால் நாம் குறைந்தபட்சம் பத்தாயிரம் பிரதிகளையாவது விற்பனை செய்ய வேண்டும்," என்று பதிப்பகத் தலைவர் கூறினார்.

நான் ஒரு தொழிலதிபராக இருந்ததால், எனக்கு எந்த விற்பனை இலக்கும் பெரிய இலக்காக ஒருபோதும் இருந்ததில்லை. "அவ்வளவுதானா? அதை நானே எளிதாக எட்டிவிடுவேன். நாம் இன்னும் பெரிய இலக்காக நிர்ணயித்துக் கொள்ளலாம்," என்று நான் தைரியமாகக் கூறினேன்.

அடுத்த சில மாதங்களில், பல்கலைக்கழகத்தில் ஒரு பெரிய விழாவில் அப்புத்தகம் வெளியிடப்பட்டது. அதில் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நானும் அப்புத்தகத்தை முழுவீச்சில் பிரபலப்படுத்தினேன். பதினான்கு நகரங்களில் புத்தக அறிமுக விழா நடத்தப்பட்டது. இறுதியில் அதன் விற்பனை ஒரு லட்சம் பிரதிகளைத் தொட்டது.

அப்புத்தகம் தேசிய அளவில் ஐம்பது பதிப்புகளுக்கு மேல் விற்று, விற்பனையில் பெரும் சாதனை படைத்தது. இதற்காக ஊடகங்களுக்கும் நான் நன்றி கூற வேண்டும். இப்புத்தகம் பற்றி அவை சாதகமான விமர்சனங்களை எழுதின.

பதிப்பாசிரியர் புன்னகைத்துக் கொண்டே, "அடுத்தப் புத்தகத்தை நீங்கள் எப்போது எழுதப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

# 51

## அற்புதமான சுதந்திர உணர்வு

புத்தகங்கள் உங்களைப் பிரபலமாக்கும். விற்பனையில் சாதனை படைக்கும் புத்தகங்கள் உங்களை மிகமிகப் பிரபலமாக்கும். பதிப்பக உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பது எனக்குத் தெரியாமல் இருந்ததால், முதல் புத்தகத்திற்காக நான் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

நான் என் பதிப்பாளர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், அப்புத்தகத்திற்காக நான் அவர்களுடன் நெருக்கமாக இணைந்து வேலை செய்ததன் மூலம் பதிப்பகத் துறையில் காய்கள் எவ்வாறு நகர்த்தப்பட்டன என்பதை நான் நன்றாக அறிந்து கொண்டேன்.

அடுத்த ஐந்து வருடங்களில் நான் மூன்று புத்தகங்களை எழுதினேன். அவை அனைத்தும் விற்பனையில் சாதனை புரிந்தன.

ஒரு தொலைக்காட்சிப் பேட்டியின்போது என்னிடம் இவ்வாறு கேட்கப்பட்டது: "உங்களால் எப்படி விற்பனையில் சாதனை படைக்கும் புத்தகங்களை அடுத்தடுத்து எழுத முடிகிறது ?"

அதற்கு நான் இவ்வாறு பதிலளித்தேன்: "நான் முதலில் புத்தகங்களை எழுதுகிறேன். பின்னர் அவை விற்பனையில் சாதனைகள் படைப்பதை உறுதி செய்கிறேன்." கடந்த சில வருடங்களில் பதிப்பகத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சந்தைப்படுத்துதலும் விளம்பரப்படுத்துதலும்தான் இங்கு மிகவும் முக்கியம் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

நீங்கள் ஒரு சிறந்த புத்தகத்தை எழுதலாம். ஆனால் அதை நீங்கள் சரியாகச் சந்தைப்படுத்தாவிட்டால், அது புத்தகக் கடைகளில், யாருமே அணுகாத மூலகளில் தூங்கிக் கொண்டிருக்கும், காலப்போக்கில் இயற்கை எய்திவிடும்.

ஆனால் ஒரு புத்தகத்தைச் சுற்றி ஏதாவது ஒரு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தால், அது மக்களின் கவனத்திற்கு வரும், அதை அவர்கள் வாங்குவர், பிறருக்குப் பரிந்துரைப்பர். இறுதியில் அப்புத்தகம் விற்பனையில் சாதனை படைக்க இது வழிவகுக்கும்.

அக்காலகட்டத்தில் ஒரு பிரபல திரைப்பட நிறுவனம் என்னை அணுகி என் முதல் புத்தகத்தை அடிப்படையாக வைத்து ஒரு திரைப்படம் தயாரிக்கத் தாங்கள் விரும்பியதாகத் தெரிவித்தனர். நான் மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். ஏனெனில், அது மேலாண்மை பற்றிய ஒரு புத்தகம். அதை வைத்து எப்படி ஒரு திரைப்படம் எடுக்க முடியும் என்று நான் வியந்தேன்.

அதன் தயாரிப்பாளர் என்னிடம், “அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். ஒரு திரைப்படத்தை எவ்வாறு எடுப்பது என்று எங்களுக்குத் தெரியும். நீங்கள் இதற்குச் சம்மதம் மட்டும் தெரிவியுங்கள். மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்,” என்று உறுதியளித்தார்.

நான் அதற்குச் சம்மதம் தெரிவித்தேன்.

ஓராண்டுக்குள் என் புத்தகத்தை அடிப்படையாக வைத்து ஒரு மேலாண்மைப் படம் எடுக்கப்பட்டது. அதை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மேலாண்மைக் கல்லூரிகள் வெகுவாகப் பாராட்டின. அத்திரைப்படம் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் போட்டியிட்டுப் பல விருதுகளையும் பெற்றது. விரைவில் என் புத்தகங்களை அடிப்படையாக வைத்துத் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் எடுக்கப் பலர் என்னை அணுகினர்.

வாழ்க்கை புதிய திசையில் திரும்பியது. நான் கனவுலகில் வாழ்ந்து கொண்டிருந்தேன். புகழ், பணம், கௌரவம் அனைத்தும் என்னிடம் தாமாகவே வந்து குவியத் துவங்கின. அப்போது யாரோ ஒருவர் என்னிடம், “உங்களுடைய அடுத்த இலக்கு எது?” என்று கேட்டார்.

என்னுடைய பதில் அவரைப் பெரும் வியப்புக்குள்ளாக்கியது: “எனக்கு மேலும் இலக்குகள் இல்லை. நான் அனைத்தையும் அடைந்துவிட்டேன். இதற்கு மேலும் கடவுளிடம் என்னால் என்ன கேட்க முடியும்?” நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கும் தொழில், அன்பான குடும்பம், புத்திசாலியான குழந்தைகள், ஏராளமான நல்ல நண்பர்கள் என்று அனைத்தும் எனக்குக் கிடைத்திருந்தன.

ஆனால் இன்னொரு சுவாரசியமான திருப்பமும் ஏற்பட்டது. பல பணக்காரத் தொழிலதிபர்கள் என்னிடம் அறிவுரை கேட்டு என்னை அணுகத் துவங்கினர். அவர்களில் பலர் என்னைவிடப் பணக்காரர்களாகவும், வயதிலும் அனுபவத்திலும் என்னைவிட மூத்தவர்களாகவும் இருந்தனர்.

நான் ஒரு முறை ஒரு பணக்காரத் தொழிலதிபரிடம், “சார், நீங்கள் என்னைவிட வயதில் மூத்தவர். வியாபாரத்தில் என்னைவிட அனுபவசாலி. இருந்தும் என்னை ஏன் அணுகுகிறீர்கள்?” என்று

கேட்டேன்.

அதற்கு அவர், “என்னிடம் இல்லாத ஒன்று உங்களிடம் இருக்கிறது,” என்று பதிலளித்தார்.

“அது என்ன?” நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

“சாணக்கியரின் தத்துவம் குறித்த ஆழ்ந்த அறிவு.”

அது உண்மைதான். நான் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை என் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் மறைமுகமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். ஓர் ஆசிரியர் என்ற முறையிலும், ஒரு தொழிலதிபர் என்ற முறையிலும், ஓர் ஆலோசனையாளர் என்ற முறையிலும் நான் சாணக்கியரின் அறிவுரைகளின்படி நடந்து கொண்டிருந்தேன்.

தங்களுடைய கூட்டங்களில் முக்கியப் பேச்சாளராக உரையாற்றும்படி பல நிறுவனங்கள் என்னைக் கேட்டுக் கொள்ளத் துவங்கின. வர்த்தகத்தை முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்க அவை எனக்கு உதவின. நான் முனைவர் பட்டம் பெற்றிருந்ததாலும் ஒரு பிரபல நூலாசிரியராக விளங்கியதாலும் பேசுவதற்கு எனக்கு அழைப்புகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன.

என் சொற்பொழிவைக் கேட்க வந்திருந்த ஒரு நிறுவனத்தின் தலைவர் ஒருவர் என்னிடம், “நீங்கள் பல விஷயங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய நிறுவனத்தின் நிர்வாக ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ள உங்களால் முடியுமா? அது என் தொழில் எத்திசையில் செல்ல வேண்டும் என்பதை நான் தீர்மானிக்க உதவும்,” என்று கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசினார்: “நான் என் நிறுவனத்தில் உங்களைப் பங்குதாரராகவும் ஆக்குகிறேன். நீங்கள் எங்களுக்காகச் செலவிடும் நேரத்தை நான் ஈடுகட்டிவிடுகிறேன்.”

பிறருக்கு அறிவுரை வழங்குவதன் மூலம், என்னால் வேறொருவரின் தொழிலில் பங்குதாரராக ஆக முடியும் என்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை.

எனக்கு வழிகாட்டுதல் வேண்டி, அர்த்தசாஸ்திரம் குறித்துச் சிறந்த ஓர் அறிஞர் எழுதியிருந்த உரையைத் திறந்து படித்தேன். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

> உங்களுடன் கூட இருப்பது மட்டும் செல்வமல்ல**.** உங்களுக்குள் இருப்பதும் செல்வம்தான்**.**

நான் உள்ளுக்குள் வெகுவாக வளர்ந்திருந்தேன். வேறு ஒருவர்

சுட்டிக்காட்டும்வரை என் சுயமதிப்பு எனக்குத் தெரியாமல் இருந்தது. நான் என் கண்களை மூடிக் கொண்டு, இப்படி ஆசீர்வதிப்பட்ட ஒரு வாழ்க்கை எனக்குக் கிடைத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறினேன்.

அன்று நான் பகவத் கீதையைப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு வெற்றிகரமான தொழிலதிபரின் இறுதி நோக்கம் சமூகத்திற்குச் சேவை செய்வதாக இருக்க வேண்டுமே தவிர, பணத்தைக் குவித்து அதைப் பதுக்கி வைத்துக் கொள்வதும் மேலும் மேலும் பணத்தைக் குவிக்க வேண்டும் என்று பேராசை கொள்வதுமாக இருக்கக்கூடாது என்பதை உணர்ந்தேன்.

இறுதியில், உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக வேண்டும் என்ற என் விருப்பத்தை நான் துறந்தேன். நான் சுதந்திரமானவனாக உணர்ந்தேன். எனக்கு வேறு எதுவும் தேவையில்லை. நான் ஆசைகளிலிருந்து விடுதலை அடைந்தேன். நான் முழுமை பெற்றவனாகவும் பூரண திருப்தி அடைந்தவனாகவும் உணர்ந்தேன்.

உயர்ந்த, பொருள் பொதிந்த ஒரு வாழ்க்கையை மற்றவர்கள் வாழ நான் அவர்களுக்கு உதவும் வேலையில் ஈடுபட வேண்டும். தங்களுடைய தொழிலில் சாணக்கியரின் ஞானத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்ற அறிவுரையைப் பிறருக்கு நான் வழங்கத் துவங்கினேன்.

நான் பிற தொழிலதிபர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்ததால், தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்த என் தொழில்கள் என்னவாயிற்று என்ற கேள்வி ஒருவருக்கு எழலாம்.

என்னுடைய பல தொழில்களை என் நிர்வாக அதிகாரிகளும் மேலாளர்களும் மற்ற பிற குழுவினரும் பார்த்துக் கொண்டனர். பிறரிடம் திறம்பட வேலை வாங்கும் கலையை நான் கற்றுக் கொண்டேன். என் சொந்தத் தொழில்களை நிர்வகித்து வந்தவர்களுக்கு நான் உத்திப்பூர்வமான அறிவுரைகளை மட்டுமே கொடுத்து வந்தேன்.

“உங்கள் ஆசைகள் முடிவுக்கு வந்துவிட்டால், கடவுள் தன் ஆசையை உங்கள் மூலமாக நிறைவேற்றுவார்,” என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். உலகிலேயே பெரிய பணக்காரனாக ஆக வேண்டும் என்ற ஆசையை நான் துறந்துவிட்ட போதிலும் நான் அப்படி ஆக வேண்டும் என்பது கடவுளின் விருப்பமாக இருந்திருக்க வேண்டும்.

சில சமயங்களில் நீங்கள் வழியைக் கண்டுபிடிப்பீர்கள். சில சமயங்களில் வழி உங்களைக் கண்டுபிடிக்கும் . . .

# 52

## எனக்குள் இருந்த தலைவன்

காலம் உங்களுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்கும். நான் இளமையைக் கடந்திருந்தேன். என்னைவிட வயதில் மூத்தவர்கள் வேகமாக முதுமையடைந்து கொண்டிருந்தனர்.

சில நாட்களாக, நிர்வாகத் தலைவரின் உடல்நிலை மோசமடைந்து கொண்டிருந்தது. கடந்த சில வருடங்களில் அவருடைய நிறுவனங்கள் அசுர வளர்ச்சி பெற்றிருந்தன.

என் சுற்றுலா நிறுவனமும் பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. எங்கள் குழுவிலிருந்த நிறுவனங்களில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த நிறுவனங்களில் அதுவும் ஒன்று.

ஒரு நாள், நிர்வாகத் தலைவர் என்னை அவரது வீட்டிற்கு அழைத்தார். அவர் ஒரு படுக்கையில் படுத்திருந்தார். ஒரு மருத்துவர் அவரை கவனித்துக் கொண்டிருந்தார். நிர்வாகத் தலைவர் என்னிடம், "நான் என் வாழ்க்கையை நன்றாக வாழ்ந்துவிட்டேன்," என்று துவக்கினார். மிகவும் முக்கியமான ஒன்றைக் கூறுவதற்காகத்தான் அவர் என்னை அழைத்திருந்தார் என்பது எனக்குப் புரிந்தது.

"நான் என் உடல்நிலையை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று என் மருத்துவர் எனக்கு அறிவுறுத்தியுள்ளார். நான் இவ்வுலகில் அதிக காலம் இருக்க மாட்டேன்," என்று அவர் தொடர்ந்தார்.

"இத்தொழிலை என் அப்பா என்னிடம் கொடுத்தார். நான் அதைப் பெரிதாக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளேன். நான் என் பாத்திரத்தை நன்றாகச் செய்துள்ளது குறித்து எனக்கு மகிழ்ச்சி," என்று திருப்தியுடன் அவர் கூறினார். "இப்போது எனக்கு இறுதிக் கடமை ஒன்று உள்ளது. எனக்கு அடுத்த நிர்வாகத் தலைவரை நியமிப்பதுதான் அது."

அவர் தன் கடந்தகாலத்தை நினைவுகூர்ந்தார். "பல வருடங்களாக நமது குழுவிலுள்ள நிறுவனங்களில் பல, தலைமுறை தலைமுறையாக என் குடும்ப உறுப்பினர்களாலேயே நிர்வகித்து வரப்பட்டுள்ளன. ஆனால் இப்போது அதில் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்வதற்கான வேளை வந்துள்ளது."

அவர் என் கண்களைப் பார்த்து, “காலம் மாறிவிட்டது. தொழில்முறைரீதியாக நாம் இப்போது தொழில்களை நிர்வகித்து வருகிறோம். முதன்முறையாக, இந்த மாபெரும் இந்திய நிறுவனத்தை நிர்வகிக்க, குடும்ப அடிப்படையில் அல்லாமல், செயல்பாட்டின் அடிப்படையில் அடுத்த நிர்வாகத் தலைவர் நியமிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.”

பின் அவர் நேரடியாக விஷயத்திற்கு வந்தார். “நீ நம் குழுவின் நிர்வாகத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,” என்று கூறிவிட்டு அவர் நிறுத்தினார். நான் மௌனமாக இருந்தேன்.

நிர்வாகத் தலைவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. அவர் தன் தொழிலைத் திருமணம் செய்து கொண்டிருந்ததாக நினைத்தார். அவரது ஊழியர்கள் அனைவரையும் அவர் தன்னுடைய குழந்தைகளாகக் கருதினார்.

அவருடைய உறவினர்களில் யாராவது ஒருவர்தான் அவருக்குப் பிறகு நிர்வாகத் தலைவராக ஆவார் என்று எல்லோரும் நினைத்திருந்தனர். ஆனால் அது யாராக இருக்கும் என்பது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவருடைய உறவினர்களில் பலர் இதற்கான தகுதியும் திறமையும் கொண்டிருந்தனர். ஆனால் அவர் என்னைத் தேர்ந்தெடுத்திருந்தார்.

அவர் பழைய சம்பவங்களை நினைவுகூர்ந்து புன்னகைத்தார். “நான் முதன்முறையாக என் அறைக்குள் உன்னை அழைத்தபோது, உன்னில் ஒரு தலைவன் இருந்ததை நான் கண்டேன். ஒரு சிறந்த அரசனாக வளர்த்தெடுக்கப்படக்கூடிய ஒரு நல்ல இளவரசனாக நீ இருந்தாய். ஆனால் நான் உன்னைச் சோதிக்க விரும்பினேன். நீ அனைத்துச் சோதனைகளிலும் சிறப்பாகத் தேறிவிட்டாய்.”

அப்போது அர்த்தசாஸ்திரத்தில் சாணக்கியர் கூறியிருந்தது என் நினைவுக்கு வந்தது:

> அரசன் தன் இளவரசனுக்கு அனைத்துப் பயிற்சிகளையும் அளிக்க முன்வர வேண்டும். ***(5.6.39)***

நிர்வாகத் தலைவர் என்னை நன்றாகத் தயார் செய்திருந்தார். பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பட்டத்து இளவரசனாக நான் இருந்தேன் என்பதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். “அடுத்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நான் இதை முறைப்படி அறிவிக்கப் போகிறேன்,” என்று கூறி அவர் முடித்துக் கொண்டார்.

இவ்வளவு பெரிய பதவி என்னைத் தேடி வரும் என்று நான் ஒருபோதும் நினைத்திருந்ததில்லை. எனக்கு வந்திருந்த பதவியைவிட அது கொண்டு வரக்கூடிய மாபெரும் பொறுப்புகள் குறித்தே நான் சிந்தித்தேன்.

“கவலைப்படாதே. உன்னால் இவற்றைத் திறமையாகக் கையாள முடியும். நம் குழுவின் எதிர்காலத்தை நான் திறமையான கரங்களில்தான் ஒப்படைத்துள்ளேன் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை,” என்று நிர்வாகத் தலைவர் என்னை ஊக்குவித்தார்.

எனக்கு என்மீது சந்தேகங்கள் இருந்தன. ஆனால் அவரது ஞானத்தையும் பிறரிடம் ஒளிந்திருக்கும் திறமைகளைக் கண்டுபிடிப்பதில் அவருக்கு இருந்த திறமையையும் நான் சந்தேகிக்கவில்லை. நான் அமைதியாக இருந்தேன்.

நிர்வாகத் தலைவரின் உடல்நிலை மிகவும் நலிவடைந்திருந்ததால், அவர் மிகுந்த சிரமத்துடன்தான் அடுத்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இதுதான் அவர் கலந்து கொள்ளும் கடைசி நிர்வாகக் குழுக் கூட்டமாக இருக்கும் என்பதையும் அவர் அடுத்த நிர்வாகத் தலைவரை முறைப்படி அறிவிக்க இருந்தார் என்பதையும் எங்களில் பலர் அறிந்திருந்தோம்.

நிர்வாகத் தலைவர் என் பெயரை வெளியிடும்போது மற்றவர்கள் அதை எவ்வாறு எடுத்துக் கொள்வார்களோ என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எல்லோரும் அதை மிகவும் மகிழ்ச்சியுடன் கைதட்டி வரவேற்றது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவரது முடிவை ஒருவர்கூட எதிர்க்கவில்லை.

அந்த நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களில் யாராவது ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், நான் அப்பதவியை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று முடிவு செய்திருந்தேன். ஆனால் இப்போது நான் செய்வதற்கு எதுவுமே இல்லை. “நாங்கள் எல்லோரும் உன் பக்கம் இருக்கிறோம்,” என்று மொத்த நிர்வாகக் குழுவும் அறிவித்துவிட்டது.

அடுத்து வரவிருந்த நாட்கள் வித்தியாசமாக இருந்தன. அக்குழுவின் இளமையான தலைவராக நான் பதவி ஏற்றேன். ஒரு புறம் நான் ஒரு புதிய பாத்திரத்தை வகிக்க இருந்தேன் என்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைந்திருந்தேன். மறுபுறம் என்னை ஒரு மகனைப்போல வழிகாட்டி வந்த நிர்வாகத் தலைவர் தன் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தது குறித்து நான் மனவருத்தம் அடைந்திருந்தேன்.

அது ஒரு நாள் மதியம் நிகழ்ந்தது. அப்போது நான் என் அலுவலகத்தில் இருந்தேன். என் தொலைபேசி ஒலித்தது: “அவர்

மறைந்துவிட்டார்.”

அதை எப்படி எதிர்கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. மரணம் வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அம்சம். நிர்வாகத் தலைவர் தன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் இப்படிப்பட்டச் சூழ்நிலையில் தன் மனத்தில் ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை எவராலும் கட்டுப்படுத்த இயலாது.

அவர் உட்கார்ந்திருந்த அதே அறையில் உட்கார்ந்து கொண்டு நான் ஒரு குழந்தையைப்போல அழுதேன். இதே அலுவலகத்தில் இருந்து கொண்டுதான் அவர் பல வருடங்களாக என்னை வளர்த்து ஆளாக்கியிருந்தார். இன்றிலிருந்து எனக்கு வழிகாட்ட யாருமே இல்லை. என் வாழ்க்கை குறித்தும் என் தொழில் குறித்தும் நான் எதிர்கொள்ளும் சிரமமான கேள்விகளை இனி நான் யாரிடம் எடுத்துச் செல்வேன்? யார் எனக்கு அறிவுரை வழங்குவர்?

மேசைமீது வைக்கப்பட்டிருந்த நாட்காட்டியின்மீது என் கவனம் சென்றது. அதில் விவேகானந்தரின் மேற்கோள் ஒன்று அவருடைய படத்துடன் அச்சிடப்பட்டிருந்தது. அது இவ்வாறு கூறியது:

“அப்பா இறந்த அன்று மகன் வயது வந்த மனிதனாக உருவெடுக்கிறான்.”

எனக்கு இனி வழிகாட்டி யாரும் கிடையாது. நான்தான் பிறருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். நான் நிர்வாகத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டேன். வழிகாட்டி எனும் புதிய பாத்திரத்தை வகிக்க என்னை நான் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். என் கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டு, காதுகளை கூர்தீட்டிக் கொண்டு, அடுத்த இளவரசனுக்காக நான் காத்திருக்க வேண்டும் . . .

# 53

# குடும்பத் தலைவன்

என் குழந்தைகள் வளர்ந்துவிட்டிருந்தனர். இப்போது அவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தனர். என் பெற்றோரும் என் மனைவியும் அவர்களைச் சரியான ஆன்மீகப் பின்புலத்துடன் மிகச் சிறப்பாக வளர்த்து வந்தனர்.

“உங்கள் குழந்தைகளுக்கு முதலில் விழுமியங்களைக் கற்றுக் கொடுங்கள், பின் விலைமதிப்புள்ள பொருட்களைக் கொடுங்கள்,” என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும்.

என் குழந்தைகள் செல்வச் செழிப்போடுதான் பிறந்தனர். அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்தனர். ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு முந்தைய தலைமுறையின் வேலைகளை மேம்படுத்துகிறது.

நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும், நான் ஒரு தொழிலதிபராக உருவானதால் என் குடும்பம் ஒரு பணக்காரக் குடும்பமாக உருவெடுத்தது.

என்னைப் பொருத்தவரை, ஒருவரின் பொருளாதாரப் பின்புலத்தை வைத்து அவர் உயர்தர வர்க்கத்தைச் சேர்ந்தவரா அல்லது நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவரா என்று நான் எடை போடுவதில்லை. ஒருவருடைய ஆன்மீக வளர்ச்சியை வைத்தே நான் மக்களைச் சீர்தூக்கிப் பார்க்கிறேன்.

பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் ஆன்மீக அடிப்படையில் வறியவராக இருக்கலாம். ஆனால் ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையை எய்தியிருக்கலாம்.

என்னைப்போலவே என் குழந்தைகளும் ஆன்மீகச் சூழலில் வளர்ந்தனர். பகவத் கீதையைப் படிப்பது, உபநிஷத்துக்களைப் புரிந்து கொள்வது, ராமன், கிருஷ்ணன் போன்றோரின் கதைகளைக் கேட்பது ஆகியவை அவர்களது வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்திருந்தது.

என் குழந்தைப்பருவத்தோடு ஒப்பிடுகையில் என் குழந்தைகளுக்குச் சில அனுகூலங்கள் இருந்தன. என் தாத்தா பாட்டியைப் பார்ப்பதற்காக நான் என் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. என் பெற்றோர் என்னுடனேயே வசித்து வந்ததால் அவர்களுடைய தாத்தாவும்

பாட்டியும் எப்போதும் அவர்களுடனேயே இருந்தனர்.

என் மனைவி பல்கலைக்கழகத்தில் தான் பார்த்து வந்த ஆசிரியப் பணியை அர்ப்பணிப்போடு செய்து வந்ததால், காலப்போக்கில், கல்வித் துறையில் அவளுக்கு நிறைய அங்கீகாரம் கிடைத்தது. அவளும் புத்தகங்களை எழுதத் துவங்கினாள். அவளது வாசகர்கள் அவளது படைப்பை வெகுவாகப் பாராட்டினர்.

பல நாடுகளிலும் பரவியிருந்த ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் தலைவராக நான் இருந்ததால் என் என் நேரத்தின் பெரும்பகுதியை என்னுடைய தொழில் விழுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் குடும்ப உறவுக்கும் நான் முக்கியத்துவம் கொடுத்து வந்தேன். என்னால் முடிந்தபோதெல்லாம், வேலைக்கும் வீட்டிற்கும் இடையே ஒரு சமநிலையைக் கொண்டுவர நான் பாடுபட்டேன்.

என் நிறுவனத்தின் பல பொறுப்புகளை நான் சுமந்து கொண்டிருந்ததால், அது எப்போதும் சாத்தியப்படவில்லை என்பதை நான் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் எனக்கு நேரம் கிடைத்தபோதெல்லாம் என்னால் முடிந்த அளவு தரமான நேரத்தை என் குடும்பத்தாருடன் செலவிட்டேன். சாணக்கியர் கூறியதுபோல, குழந்தைகள் வளர்ந்தவுடன் அவர்களைச் சமமானவர்களாக நடத்த வேண்டும்.

என் குழந்தைகள் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தாலும் தங்கள் சொந்த முயற்சியின் மூலம்தான் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பது அவர்களுக்கு அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தப்பட்டு வந்தது.

ஒரு நாள் நான் என் குழந்தைகளுடன் உட்கார்ந்திருந்தபோது, என் பெண் என்னிடம், “அப்பா, ஒருவரை எது உண்மையான வெற்றியாளராக ஆக்குகிறது?” என்று கேட்டாள்.

நான் ஆச்சரியம் அடைந்தேன். அவள் ஏன் அக்கேள்வியைக் கேட்டாள் என்பதைத் தெரிந்து கொள்ள நான் விரும்பினேன்.

“நீங்கள் முதலில் என் கேள்விக்கு பதில் கூறுங்கள்,” என்று அவள் கூறினாள்.

நான் சிறிது யோசித்துவிட்டு பதிலளித்தேன்: “ஒருவன் பல காரணங்களின் விளைவாக வெற்றி பெறக்கூடும். ஆனால் என் அனுபவத்தின்படி, ஒருவன் வெற்றி பெறுவதற்கு மூன்று அம்சங்களின் கூட்டு அவசியமாகிறது. அவை கடின உழைப்பு, கூட்டு முயற்சி, மற்றும் கடவுளின் அனுக்கிரகம்.”

என் பையனும் விவாதத்தில் கலந்து கொண்டான். “நீங்கள் இதை

இன்னும் விரிவாக விளக்க முடியுமா?"

"ஆரம்பத்தில் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். பின்னர் கடின உழைப்பு மட்டும் போதாது என்பதை நீங்கள் உணர்வீர்கள். அப்போது நீங்கள் வேறு சிலருடன் இணைந்து செயல்படுவீர்கள். அப்போது கூட்டு முயற்சியின் அருமை உங்களுக்குப் புரியும்."

நான் தொடர்ந்தேன்: "உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தை உணர்ச்சிவசப்படாமல் பின்னோக்கித் திருப்பிப் பார்க்கும்போது, உங்களுடைய வெற்றிக்கு எது காரணம் என்று நீங்கள் யோசிப்பீர்கள். வெற்றிப் படிகளின் உச்சியை நீங்கள் எட்டுவதற்கு, இனம் புரியாத பல காரணிகளும் துணை நின்றுள்ளன என்பது உங்களுக்குத் தெரிய வரும். கடவுளின் அனுக்கிரகத்தால் விளைந்தவைதான் அவை."

என் பெண் தொடர்ந்து, "வெற்றியில் தலைவிதிக்கு ஏதாவது பங்கு இருக்கிறதா?" என்று கேட்டாள்.

நான் தத்துவார்த்தரீதியாக பதிலளித்தேன்: "கடவுளின் அனுக்கிரகத்திற்கு இடப்பட்டுள்ள மற்றொரு பெயர்தான் தலைவிதி. கடவுளின் வேலையைச் செய்ய நீங்கள் முன்வந்தால், உலகிலுள்ள அனைத்து சக்திகளும் உங்கள் உதவிக்கு ஓடோடி வரும்."

அவள் என்னை மேலும் துளைத்தாள்: "அப்பா, தொழிலில் உங்கள் பயணம் எப்படி இருந்தது?"

"என்னைப் பொருத்தவரை, என் தொழில்வாழ்க்கைப் பயணம் ஓர் ஆன்மீகப் பயணமாக இருந்தது," என்று நான் பதிலளித்தேன்.

நான் கூறிக் கொண்டிருந்தவற்றை அவள் ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டிருந்ததை நான் அப்போதுதான் கவனித்தேன். "நீ ஏன் இதை எழுதிக் கொண்டிருக்கிறாய்?" நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

என் மனைவியும் என் பெற்றோர்களும் சிரிக்கத் துவங்கினர். என் மனைவி விளக்கினாள்: "ஒரு கட்டுரை எழுதி வருமாறு கல்லூரியில் உங்கள் பெண்ணிடம் கூறியிருக்கிறார்கள். அவள் ஒரு வெற்றியாளரைப் பற்றிப் படித்து அவரது வெற்றிக்கான காரணங்களை அலசி ஆராய வேண்டும். அவள் உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளாள்."

"அம்மா, இது பற்றி அப்பாவிடம் மூச்சுவிடக்கூடாது என்று நான் சொல்லியிருந்தேனே, ஏன் அவரிடம் கூறினீர்கள்?" என்று என் பெண் கோபித்துக் கொண்டாள்.

என்னை ஒரு வெற்றியாளனாக என் குழந்தைகள் கருதியது குறித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். "கவலைப்படாதே. உன் கட்டுரை தொடர்பாக நீ என்ன கேள்வி கேட்டாலும் நான் பதில் கூறுகிறேன்,"

என்று அவளிடம் கூறினேன்.

அடுத்த சில வருடங்களில் என் மகள் இக்குறிப்புகளைப் பயன்படுத்தித் தன் முதல் புத்தக்கதை எழுதினாள். அதன் தலைப்பு: என் அப்பாவின் வெற்றி யோசனைகள்.

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க விரும்பலாம். ஆனால் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டும். அது நடக்கும்போது உங்களுடைய அனுபவங்கள் அடுத்தத் தலைமுறைக்குச் சுலபமாக மாற்றப்பட்டுவிடும்.

குழந்தைகள் நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதிலிருந்து கற்றுக் கொள்வதில்லை, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதிலிருந்துதான் கற்றுக் கொள்கின்றனர் என்பது எனக்குப் புரிந்தது. அவர்களை உங்களால் ஏமாற்ற முடியாது. விரைவில் அவர்கள் உங்களைக் கையும் களவுமாகப் பிடித்துவிடுவார்கள். நீங்கள் நினைப்பதைப் பேச வேண்டும், சொல்வதைச் செய்ய வேண்டும்.

குடும்பத்தைப் பொருத்தவரை இன்னொரு முக்கியமான விஷயம் உள்ளது. உங்கள் குடும்பத்தில் எவ்வளவு அதிகமான நபர்கள் இருக்கிறார்களோ, அந்த அளவு அதிகமாக உங்கள் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள்.

நாங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்ததால், பல தலைமுறையினரிடமிருந்தும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு என் குழந்தைகளுக்குக் கிடைத்தது.

என் குழந்தைகள் பிறந்த சில வருடங்களிலேயே அவர்களுடைய ஜாதகத்தை நான் விரிவாக அலசியிருந்தேன். அதனால், தங்களுக்குப் பிடித்தமான தொழில்முறை வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் புத்திசாலித்தனம் அவர்களுக்கு உண்டு என்பதை நான் அறிந்திருந்தேன். அதோடு, அவர்களுக்கு என்னைப்போலத் தொழிலில் ஈடுபட வேண்டும் என்ற ஆசையோ செல்வத்தைக் குவிக்க வேண்டும் என்ற விருப்பமோ எனக்குக் கிடையாது என்பதையும் நான் அறிவேன்.

தங்களுடைய பலம் என்ன என்பது குழந்தைகளுக்குச் சுட்டிக்காட்டப்பட வேண்டும் என்றாலும், அவர்கள் தங்கள் சொந்தப் பாதையை வகுத்துக் கொள்ளத் தேவையான சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஒருநாள் என் பையன் என்னிடம், “அப்பா, நான் ஓர் அரசாங்க வேலையில் சேர்ந்து கொள்ள விரும்புகிறேன்,” என்று கூறினான்.

நான் அதிர்ச்சி அடைந்தேன்.

# 54

# உங்கள் சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தல்

ஒரு தொழிலதிபர் என்ற முறையில் நான் அரசாங்கத்துடனும் அரசியல்வாதிகளுடனும் நெருங்கிப் பழகியிருந்தேன். அரசியல்வாதிகள் நல்லவர்களா கெட்டவர்களா என்று எடைபோட நான் விரும்பவில்லை. அதோடு, அரசாங்கமும் அவற்றின் விதிமுறைகளும் மோசமானவை என்று கூறவும் நான் வரவில்லை.

அரசாங்கத்தின் உலகம் தொழிலதிபர்களின் உலகத்திலிருந்து வெகுவாக மாறுபட்டுள்ள ஒன்று. நாம் அனைவருமே நம்முடைய சிறிய சொந்த உலகிற்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நான் எப்படிப்பட்டதொரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் என்னைப் போன்ற ஒரு தொழிலதிபருக்கு இருக்கிறது. ஆனால் ஓர் அரசாங்கம், விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள் அடங்கிய ஓர் உலகிற்குள் இருக்கிறது.

இப்போது எனக்கு அரசாங்கத்தில் பல நண்பர்கள் இருந்தனர். தான் எந்த உலகிற்குள் நுழையவிருந்தோம் என்பது குறித்தச் சரியான புரிதல் என் பையனுக்கு இருந்ததா என்று நான் சந்தேகித்தேன்.

நான் அவனிடம், "நீ தேர்ந்தெடுப்பதற்கு உனக்கு ஏராளமான வழிகள் இருந்தும் அரசாங்க வேலையைத் தேர்ந்தெடுக்க நீ ஏன் விரும்புகிறாய்?" என்று கேட்டேன்.

"நான் சாதாரண அரசாங்க வேலையில் சேர விரும்பவில்லை. இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியாக ஆக விரும்புகிறேன்," என்று அவன் பெருமையுடன் பதிலளித்தான்.

"அதைக் கொஞ்சம் விளக்கு," என்று அவனிடம் நான் கூறினேன். என் குழந்தைகள் தங்களுக்குப் பிடித்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் எப்போதும் விரும்பி வந்திருந்தாலும், அதற்கான வேளை வந்தபோது நான் அவர்களுடைய விருப்பத்திற்குத் தடையாக இருந்ததை நான் உணர்ந்தேன்.

"அப்பா, நம்முடைய நாட்டிற்குச் சேவையாற்றப் பல வழிகள் இருக்கின்றன. அதில் சிறந்தது பொதுச் சேவை," என்று அவன் கூறினான்.

பிறகு தொடர்ந்து, “இன்று உலகம் ஒரு கிராமம் அளவுக்குச் சுருங்கிவிட்டது. நாடுகளின் சார்புத்தன்மை அதிகரித்துள்ளது. நாம் நம்முடைய கலாச்சாரத்தை நம்மால் முடிந்த அளவு சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும். ஒரு வெளியுறவுத் துறை அதிகாரியாக, நம் நாட்டின் கலாச்சாரத் தூதுவராக இருப்பதன் மூலம் என்னால் நம் நாட்டிற்குச் சிறந்த சேவையை அளிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்,” என்று கூறினான்.

எனக்கு அவனது தேர்வில் முழு உடன்பாடு இல்லை. “அப்படியானால் நீ ஓர் அரசாங்க அதிகாரியாக ஆக விரும்புகிறாயா?” என்று நான் கேட்டேன்.

“ஏன் கூடாது?” என்று அவன் பதிலுக்கு என்னைத் திருப்பிக் கேட்டான். அவனது குரல் உயர்ந்திருந்தது. “கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தின் முதல் பகுதியின் பதினாறாம் அத்தியாயத்தில் ராஜதந்திரிகளின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பது உங்களுக்கும் தெரியும்தானே?”

என் வாழ்க்கை வழிகாட்டியாக நான் கடைபிடித்து வந்த ஒரு நூலிலிருந்து என் மகன் எனக்கே மேற்கோள் காட்டியதைக் கண்டு நான் வாயடைத்துப் போனேன். நான் அர்த்தசாஸ்திரத்தைப் பலருக்கும் கற்றுக் கொடுத்திருந்தேன், என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அதைப் பின்பற்றி வந்திருந்தேன். ஆனால் அது என் மகனின் வாயிலிருந்து என்னிடமே பாயும் என்று நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை.

நான் அதற்கு பதில் கூறுவதற்கு முன்பு, அவன் ஓடிச் சென்று தன்னுடைய அர்த்தசாஸ்திரப் பிரதியை எடுத்து வந்து, “அப்பா, சாணக்கியர் ராஜதந்திரிகள் மற்றும் தூதவர்கள் குறித்து என்ன கூறியிருக்கிறார் என்று பாருங்கள்,” என்று என்னிடம் காண்பித்தான்.

> தகவல்களை அனுப்புவது**,** உடன்படிக்கைகளின் ஷரத்துக்களைப் பாதுகாப்பது**,** அரசனின் மகத்துவத்தைத் தூக்கிப் பிடிப்பது**,** நட்பு நாடுகளை உருவாக்கிக் கொள்வது**,** எதிரிகளின் நண்பர்களைப் பிரிப்பது**,** மிரட்டுவது**,** எதிரிகளின் நாட்டிற்குள் ஒற்றர்களையும் படைகளையும் அனுப்புவது **. . .** ***(1.16.33)***

“அப்பா, நான் சிறுவனாக இருந்தபோது நீங்கள் எனக்கு அர்த்தசாஸ்திரத்தை அறிமுகம் செய்து வைத்தீர்கள். அன்றிலிருந்து இந்த அத்தியாயம் என் மனத்தில் தங்கிவிட்டது. ஒரு ராஜதந்திரி ஆற்றும் பங்கைப் பாருங்கள்,” என்று கூறினான். நான் மௌனமாகக் கேட்டுக்

கொண்டிருந்தேன்.

“நான் என் நாட்டிற்கு இந்த முறையில் கடமையாற்ற விரும்புகிறேன். வருங்காலத்தில் உலக அரங்கில் நமது நாடு ஆற்றவிருக்கும் பாத்திரத்தில் நானும் பங்கு கொள்ள விரும்புகிறேன்,” என்று அவன் முடித்தான்.

சில கணங்களுக்கு நாங்கள் இருவரும் அமைதியாக இருந்தோம். என் மகன் எனக்கு அளித்திருந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு நான் முயன்று கொண்டிருந்தேன். அவன் மௌனத்தை உடைத்தான். “நீங்கள் அனுமதி கொடுக்காவிட்டால் நான் அதைச் செய்ய மாட்டேன்.” அவன் கண்களில் நீர் அரும்பிக் கொண்டிருந்தது.

நான் மிகவும் நெகிழ்ச்சி அடைந்தேன். “நீ அரசாங்கப் பணியில் சேரக்கூடாது என்று நான் கூறவில்லை. நீ தேர்ந்தெடுத்துள்ள துறை பற்றிய அனைத்து அம்சங்களையும் நீ தீவிரமாக அலசி ஆராய்ந்துவிட்டாயா என்பதுதான் என் கவலை,” என்று நான் அவனுக்கு பதிலளித்தேன்.

“அப்பா, நான் சிறு வயதிலிருந்தே இக்கனவைத்தான் கண்டு வந்துள்ளேன். வெளியுறவுத் துறை அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்கு நான் தீவிரமாகப் படித்து வருகிறேன்,” என்று கூறிய அவன், தான் அதற்குத் தன்னைப் தயார்படுத்திக் கொண்டிருந்த விதத்தை எனக்கு விளக்கினான்.

அவன் மேலும் தொடர்ந்து பேசினான்: “அப்பா, நீங்கள்தான் என் முன்மாதிரி. நான் எப்போதும் உங்களைக் குறித்துப் பெருமை கொண்டுள்ளேன். உங்களைப்போலவே நானும் சாணக்கியரையும் அவரது கருத்துக்களையும் பெரிதும் விரும்பி வந்துள்ளேன். இப்போது நான் இத்துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்புகிறேன்.”

புதிய தலைமுறை முந்தைய தலைமுறையைவிட அதிக புத்திசாலித்தனத்துடன் இருந்ததை நான் உணர்ந்தேன். அவன் தன்னை நன்றாகவே தயார்படுத்திக் கொண்டிருந்தான். இத்துறையில் தனக்கு விருப்பம் இருந்ததை அவன் துல்லியமாக அறிந்து வைத்திருந்தான். நான் அவனை ஊக்கமிழக்க வைக்க விரும்பவில்லை. நான் அவனுக்கு ஒரு பாரமாக இருக்கவும் விரும்பவில்லை.

“உன் அம்மாவிடமும், தாத்தா பாட்டியிடமும் பேசி அவர்களது ஆசீர்வாதங்களையும் மறக்காமல் பெற்றுக் கொள்!” என்று கூறி நான் புன்னகைத்தேன்.

அவன் பதிலுக்கு என்னை நோக்கிப் புன்னகைத்தவாறே, “அதை நான் எப்போதோ செய்துவிட்டேன். உங்களிடம்தான் கடைசியாக

ஆசீர்வாதம் வாங்க வந்தேன்,” என்று கூறினான்.

என் குடும்பத்தினருடனும் என் குழந்தைகளுடனும் நான் இனியும் ஐக்கியமான உறவைக் கொண்டிருக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. ஆனால் அவன் தன் தேர்வைத் தன்னால் முடிந்த அளவு சிறப்பாக எழுத வேண்டும் என்று நான் விரும்பினேன். “உனக்கு எப்போதும் என் ஆசீர்வாதங்கள் உண்டு.” நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டி அணைத்துக் கொண்டோம்.

அவனைப் போன்ற ஒரு மகன் கிடைத்ததற்காக நான் பெருமையாக உணர்ந்தேன். அப்போது எனக்கு இன்னோர் எண்ணம் உதித்தது. நான் அவனிடம், “தான் என்ன செய்யப் போகிறோம் என்பதை உன் அக்காவும் முடிவு செய்துவிட்டாளா?” என்று கேட்டேன்.

“என்னப்பா, உங்களுக்குத் தெரியாததுபோல என்னைக் கேட்கிறீர்கள்?”

நான் ஒரு வடிகட்டிய மடையன்போல உணர்ந்தேன். என்னுடைய இரு குழந்தைகளும் தங்களுடைய வருங்காலத்தைப் பற்றி ஏற்கனவே முடிவு செய்துவிட்டிருந்தனர். ஆனால் அது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அதற்காக அவர்களைக் குற்றம் சாட்ட முடியாது. தவறு என் மேல்தான் என்பதை நான் உணர்ந்தேன். நான் அவனிடம், “இல்லையில்லை, எனக்குத் தெரியாது. அவள் என்ன செய்யப் போகிறாள்?” என்று கேட்டேன்.

“அவளிடமே போய்க் கேட்டுக் கொள்ளுங்கள்.”

மிரண்டிருந்த சுண்டெலிபோல நான் என் மகளைத் தேடிச் சென்றேன். அவள் தன் அறையின் ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

நான் அந்த அறைக்குள் ஓசையில்லாமல் நுழைந்தேன். என் பெண் நிமிர்ந்து பார்த்துவிட்டு, என்னிடம், “உங்கள் அருமை மகன் தான் என்ன செய்யப் போகிறோம் என்பதை உங்களிடம் கூறிவிட்டானா? நான் என்ன செய்யப் போகிறேன் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக இங்கு நீங்கள் வந்திருக்கிறீர்களா?” என்று கேட்டாள்.

பின் அவள், “நான் ஒரு கலைஞராக ஆகப் போகிறேன்,” என்று பெருமையுடன் கூறினாள்.

# 55

# உறுதியாக இரு

என் பெண் நன்றாக ஓவியம் வரைவாள் என்று எனக்குத் தெரியும். அவளுக்கு நன்றாகப் பாடவும் வரும். அதோடு, அவள் பரத நாட்டியத்தையும் குச்சுப்புடியையும் கற்றிருந்தாள்.

“எந்தக் கலை வடிவத்தை நீ தேர்ந்தெடுத்துள்ளாய்?” என்று நான் கேட்டேன்.

“இசை,” என்று அவள் தயக்கமின்றி பதிலளித்தாள். “ஆனால் இசையைப் பற்றி இன்னும் ஆழமாக மேலும் ஒருசில வருடங்களுக்கு நான் படிக்க விரும்புகிறேன்,” என்று கூறி அவள் தன் திட்டத்தை விவரித்தாள்.

“இசையைப் பாரம்பரிய முறைப்படிக் கற்றுக் கொடுக்கும் ஒரு சில பள்ளிகள் நம் நாட்டில் உள்ளன. பாரம்பரிய இசையில் வல்லுனர்களாக இருக்கும் ஒருவரிடம் சென்று, குருகுல முறைப்படி நான் இசையைக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்.”

குருகுலம் என்ற வார்த்தை என் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டது. அது என் வாழ்க்கைப் பாதையை மாற்றியிருந்த விதத்தை நான் நினைத்துப் பார்த்தேன்.

“ராஜஸ்தானில் இருக்கும் இந்தக் ‘கரானா’ பற்றிய விபரங்களை நான் சேகரித்துள்ளேன். இந்த வயதான குரு மிகவும் பிரபலமானவர். நான் அவரிடம் ஒரு வருடம் கற்றுக் கொள்ளப் போகிறேன். இசையில் முதுகலைப் பட்டம் பெறவும், அதைத் தொடர்ந்து அதில் முனைவர் பட்டம் பெறவும் நான் திட்டமிட்டுள்ளேன்.”

தங்களுக்குத் துல்லியமாக என்ன வேண்டும் என்பதை என் தலைமுறையினர் அறிந்திருக்கவில்லை. என் குழந்தைகள் வேறு ஒரு சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர். திட்டமிட்டுச் செயல்படுவதில் அவர்கள் என் தலைமுறையினரைவிட முன்னேறிய நிலையில் இருந்தனர்.

என் வீட்டில் நிலவிய யதார்த்தம் குறித்து நான் அறிந்திருக்கவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டபோது என்னுள் முரண்பட்ட உணர்ச்சிகள் ஊற்றெடுத்தன. என் குழந்தைகள் வயது வந்தவர்களாக

ஆகிவிட்டிருந்ததை நான் கவனிக்கத் தவறியிருந்தது குறித்து நான் வருத்தம் அடைந்தேன். அதே சமயம், சொந்தமாகச் சிந்திக்கும் திறனை அவர்கள் பெற்றிருந்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

என் மனைவியால் என் சிந்தனையோட்டத்தை ஊகிக்க முடிந்தது. "நம் பிள்ளைகளின் தேர்ந்தெடுப்பு நன்றாகத்தானே இருக்கிறது?" என்று அவள் கேட்டாள். இது போன்ற வித்தியாசமான தேர்ந்தெடுப்புகளை நான் மேற்கொண்டதால்தானே இன்று நான் இருந்த நிலையை என்னால் வந்தடைய முடிந்தது என்பதை அவளது கேள்வி மறைமுகமாக எனக்குச் சுட்டிக்காட்டியது.

"ஆமாம் . . ." என்று கூறி நான் புன்னகைத்தேன்.

நாங்கள் இருவரும் கலீல் ஜிப்ரானின் ரசிகர்கள். அவரது 'தீர்க்கதரிசி' புத்தகம் எங்களுக்கு மிகவும் பிடிக்கும். எங்களுக்கும் எங்கள் குழந்தைகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், அப்புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் கீழ்க்கண்ட வரிகளை என் மனைவி எடுத்துப் படிப்பாள்:

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல.

தனக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் குழந்தைகள்.

அவர்கள் உங்களின் வழியாக வருகின்றனர், உங்களிலிருந்து அல்ல.

அவர்கள் உங்களுடன் இருக்கலாம், ஆனால் அவர்கள் உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்லர்.

இந்த வரிகளுக்கு ஆழமான ஆன்மீக அர்த்தம் இருந்தது. நான் என்னைத் தேற்றிக் கொண்டு என் குழந்தைகள் குறித்தப் பெருமித உணர்வுடன் என் இயல்பு நிலைக்குத் திரும்பினேன்.

இன்று நம் நாட்டிலுள்ள பெற்றோர்களில் பெரும்பாலானோர் தங்கள் குழந்தைகள் குறித்துக் கவலை கொண்டுள்ளனர். கவலைப்படுவதற்கு பதிலாகப் பெற்றோர் தங்கள் குழந்தைகள் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். இவை இரண்டுக்கும் இடையே ஒரு வேறுபாடு உள்ளது. கவலைப்படுவது என்பது சாய்ந்தாடும் ஒரு நாற்காலி போன்றது. அது ஆடும். ஆனால் நகராது. அக்கறை என்பது உண்மையான அன்பு. அது பொறுப்புணர்விலிருந்து வருகிறது.

தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கியமான கட்டங்களில் அக்கறையுள்ள பெற்றோர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

வழக்கம்போல நான் அர்த்தசாஸ்திரத்தைப் பிரித்தேன். சாணக்கியர் இவ்வாறு கூறியிருந்தார்:

> விவாதங்களுக்குப் பிறகே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரே ஒருவருடன் மட்டும் விவாதித்தால், சிரமமான நேரங்களில் ஒருவரால் ஒரு தீர்மானத்திற்கு வர முடியாமல் போகலாம். ஆனால் பல பேருடன் விவாதித்தால் தீர்மானங்களை எடுப்பது கடினமாகிவிடுவதோடு, ரகசியத்தைக் காப்பாற்ற முடியாமலும் போய்விடும். ***(1.15.2,35,40)***

என் குழந்தைகளுக்குச் சரியான வழிகாட்டுதல்களை வழங்குவதற்குச் சிறந்த வழி அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்திருந்த துறைகளைச் சேர்ந்த வல்லுனர்களை நாடுவதுதான் என்பதை நான் உணர்ந்தேன். வெளியுறவுத் துறை அதிகாரிகளாகப் பணி புரிந்து ஓய்வு பெற்றிருந்த மூன்று பேரையும் இசைத் துறையில் வல்லுனர்களாகத் திகழ்ந்த மூன்று பேரையும் நான் கண்டுபிடித்தேன். பிறகு என் குழந்தைகளோடு சென்று அவர்களை நான் சந்தித்தேன்.

இவ்வுலகில் மூன்று விதமான மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. முதலாமவர்கள் தவறு செய்துவிட்டு அதிலிருந்து கற்றுக் கொள்கிறார்கள். இரண்டாமவர்கள் தவறுகளைச் செய்து கொண்டேயிருக்கின்றனர், ஒருபோதும் அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதில்லை. மூன்றாமவர்கள்தாம் சிறந்தவர்கள் — அவர்கள் பிறருடைய தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்கின்றனர்.

இந்த வல்லுனர்கள், என் குழந்தைகள் தேர்ந்தெடுத்திருந்த துறைகளில் அவர்களுக்கு வழிகாட்டினர். வெற்றிகரமாக விளங்கிய இந்த வல்லுனர்களின் அனுபவ ஞானம் விலை மதிக்க முடியாத ஒன்றாக இருந்தது. அந்தக் கலந்துரையாடல்களிலிருந்து நானும் பலவற்றை கற்றுக் கொண்டேன்.

நான் அவற்றை என் தொழிலிலும் பயன்படுத்தினேன். ஏதாவது ஒரு புதிய தொழிலைத் துவக்க வேண்டும் என்று நான் விரும்பியபோதெல்லாம், அத்துறையில் வெற்றிகரமாக விளங்கிய மூன்று வல்லுனர்களைச் சந்தித்து அவர்களுடைய அறிவுரையை நான் நாடினேன். நான் பல இடர்பாடுகளிலிருந்து தப்பிக்க அவை எனக்கு உதவின.

என் குழந்தைகள் ஒரு சாதகமான நிலையில் இருந்தனர். பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்கள்

அதிர்ஷ்டவசமாக ஒரு பணக்கார அப்பாவிற்குப் பிறந்திருந்தனர். பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கவில்லை. தங்களுக்கு விருப்பமானவற்றைப் பின்தொடர்ந்து செல்லும் அசாதாரணமான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருந்தது. என் குழந்தைகள் மிகவும் வசதியாக வாழத் தேவையான பணத்தை நான் அவர்களுக்காகச் சேமித்து வைத்திருந்தேன். அப்பா என்ற முறையில் நான் என் கடமையைச் சிறப்பாக ஆற்றியிருந்தாக நான் உணர்ந்தேன்.

ஆனால் என் குழந்தைகள் என்னைவிட அதிக சாமர்த்தியசாலிகளாக இருந்தனர். அவர்கள் இருவரும் என் மனைவியிடம், "நீங்கள் சேர்த்தச் செல்வத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தேவைப்படும் செல்வத்தை நாங்களே சேர்த்துக் கொள்கிறோம்," என்று கூறியிருந்தனர்.

அவர்கள் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். அவர்கள் பணத்தை மரியாதையுடன் கையாண்டனர். அவர்கள் ஊதாரித்தனமாக இருக்கவில்லை என்பதை நான் கவனித்து வந்தேன்.

கடவுள் தொடர்ந்து என்மீது ஆசீர்வாதங்களைப் பொழிந்து வந்தார். என் நிறுவனங்கள் வெகுவேகமாக வளர்ந்து கொண்டிருந்தன. இப்போது எங்களிடம் நூற்றுக்கும் மேற்பட்டத் தொழில்கள் இருந்தன. மூன்று லட்சம் பேர் அவற்றில் வேலை பார்த்து வந்தனர். கிட்டத்தட்ட உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் எங்கள் நிறுவனத்தின் கிளை அல்லது அலுவலகம் இருந்தது.

திடீரென்று நான் வேறுபட்டக் காரணங்களுக்காகப் பிரபலமடைந்திருந்தேன். 'இவ்வருடத்திய சிறந்த தொழிலதிபர்,' 'சிறந்த வர்த்தகத் தலைவர்' போன்ற மதிப்புமிக்க விருதுகள் எனக்கு வழங்கப்பட்டன.

தொழிற்துறை வளர்ச்சிக்காகப் பிரதமர் ஏற்படுத்திய குழுவில் நானும் இடம்பெற்றேன். இந்தியக் குழுவினருடன் நான் பல நாடுகளுக்கும் சென்று வந்தேன். சிறந்த பல வர்த்தகக் கொள்கைகளின் உருவாக்கத்திற்கு நான் உதவினேன்.

பின் திடீரென்று ஒரு நாள் மாயாஜாலம் நிகழ்ந்தது. என் நிர்வாக உதவியாளர்களில் ஒருவர் என்னைத் தொலைபேசியில் அழைத்தார்.

அவர் உற்சாகமாக, "நீங்கள் இன்றைய பத்திரிகையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை. என்ன விஷயம்?" என்று நான் கேட்டேன்.

"சார் . . . சார் . . ."

# 56

## நானா சாதித்தேன்?

அப்போது நான் வீட்டில் இருந்தேன். அலுவலகத்திற்குக் கிளம்ப நான் தயாராகிக் கொண்டிருந்தேன். “நீங்கள் எந்தப் பத்திரிகையைப் பற்றிக் கூறுகிறீர்கள்?”

“சார், எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் பாருங்கள். எல்லாவற்றிலும் தலைப்புச் செய்தி ஒன்றுதான்,” என்று என் உதவியாளர் கூறினார். அவர் கிட்டத்தட்ட இரைந்து கொண்டிருந்தார்.

அவர் மிகுந்த பரபரப்புடன் இருந்தார். அருகிலிருந்த ஒரு மேசைக்குச் சென்று ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்தேன். அதை எங்கள் வீட்டில் யாரும் தொட்டிருக்கவில்லை. ஏனெனில், எல்லோரும் அவரவர் வேலைகளில் மும்முரமாக இருந்தனர்.

முதல் பக்கத்தில் என் புகைப்படம் இடம்பெற்றிருந்தது. அது இவ்வாறு அறிவித்தது: நான் . . .

திடீரென்று என் மகள் தன் அறையிலிருந்து வேகமாக ஓடி வந்தாள். “அப்பா, அப்பா, நீங்கள் இன்றைய தினசரியைப் பார்த்தீர்களா?” அவள் கையில் இன்னொரு பத்திரிகை இருந்தது.

“நீங்கள்தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய பணக்காரர் என்று ஒரு பிரபலமான பத்திரிகை அறிவித்திருப்பதாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.”

நான் வாயடைத்துப் போனேன். நான் அப்பத்திரிகையைப் படித்தேன். இந்தியாவிலேயே பெரிய பணக்காரன் நான்தான் என்று ஏதோ ஓர் ஆய்வு கண்டறிந்திருந்ததாக அது கூறியது.

அது என் கனவாக இருந்த காலம் நோக்கி என் மனம் சென்றது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பாக, பணத்தின் யதார்த்தம் குறித்து நான் புரிந்து கொண்டவுடன் தானாகவே அந்த இலக்கு என்னிடமிருந்து கழன்று கொண்டது.

என்னைப் பொருத்தவரை, பணம் என்பது கூடிக் குறையும் சில எண்கள், அவ்வளவுதான். நான் எவ்வளவு பணத்தை வைத்திருந்தேன் என்பது உலகிற்குத் தெரிந்திருந்தது. ஆனால் உண்மையில்

வெளியுலகிற்குத் தெரியாத, என்னைவிடப் பெரிய பணக்காரர்கள் பலர் இருக்கக்கூடும். சுருக்கமாகக் கூறினால், ஒரு பெரிய சாதனை என்று உலகம் கருதும் ஒன்று என்னைப் பரவசப்படுத்தவே இல்லை.

அதே சமயம், இதே போன்ற கனவுகளுடன் இருக்கும் பிறரை நான் ஊக்கமிழக்கச் செய்யக்கூடாது என்பதையும் நான் உணர்ந்தேன். பல வருடங்களுக்கு முன்பு நானும் இப்படித்தானே இருந்தேன்?

பணம்தான் எல்லாம் என்று கருதக்கூடாது என்று கூறப்படுகிறது. ஆனால் இதைக் கூறுவதற்கு முன்பு நீங்கள் நிறைய சம்பாதித்திருக்க வேண்டும். நான் என் இலக்கை அடைந்திருந்ததால், பணத்தால் சிலவற்றை வாங்க முடியும், சிலவற்றை வாங்க முடியாது என்பதை என்னால் தைரியமாகக் கூற முடியும்.

ஆனால் தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் பணத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எக்காரணம் கொண்டும் நிராகரித்துவிடக்கூடாது.

தொலைபேசி தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது. அடுத்தப் பல வாரங்களுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. ஊடகங்கள் தொடர்ந்து என்னைப் பேட்டி கண்டன. என் வெற்றிக் கதையைப் பற்றிப் பேச எனக்கு வந்த அழைப்புகள் அதிகரித்துக் கொண்டே இருந்தன.

நான் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, அவர்கள், “நீங்கள் எப்படி இந்தியாவிலேயே பெரிய பணக்காரராக ஆனீர்கள்?” என்ற கேள்வியைக் கேட்க ஒருபோதும் தவறியதில்லை.

அதற்கு நான் வழக்கமாக, “நான் எப்போதும் மக்களிடம் மூலதனம் செய்கிறேன். திறமையாளர்களால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற, வெற்றி பெறுவதற்குச் சாத்தியமுள்ள ஒரு நிறுவனத்தை நான் கண்டால், அதில் நான் முதலீடு செய்கிறேன். அவர்கள் வளரும்போது நானும் உடன் வளர்கிறேன்,” என்று பதிலளிக்கிறேன்.

என் நிறுவனங்களை நான் வெற்றிகரமாக நடத்தி வந்து கொண்டிருந்தாலும், புதுமையான கருத்துக்களைக் கொண்டிருந்த இளைஞர்களையும் யுவதிகளையும் நான் ஊக்குவித்தும் வந்தேன்.

நான் அவர்களிடத்திலும் அவர்களது நிறுவனங்களிடத்திலும் முதலீடு செய்தேன். அவர்களுடைய வியாபார அறிவை நான் ஆய்ந்தறிந்தேன். நான் முதலீடு செய்த நிறுவனங்கள் அனைத்தும் வெற்றி பெற்றுவிடவில்லை. ஆனால் வெற்றி பெற்ற நிறுவனங்கள் ஈட்டிய லாபங்கள் தோல்வியடைந்த நிறுவனங்களின் இழப்புகளை ஈடுகட்டின. அதனால் மொத்தத்தில் நான் எப்போதும் ஒரு பெரிய வெற்றியாளனாக

விளங்கி வந்திருந்தேன்.

நான் இந்நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்ததோடு நிறுத்திக் கொள்ளவில்லை. என்னுடைய ஆரம்பகாலத்தில் என் நிர்வாகத் தலைவர் என்னிடம் நடந்து கொண்டதுபோல, அந்நிறுவனங்களை நடத்துபவர்களுக்கு வழிகாட்ட நான் சிறிது நேரத்தை ஒதுக்கினேன்.

ஒரு யோசனை என்ற வடிவத்திலிருந்து வெற்றிகரமான ஒன்றாக ஒரு நிறுவனம் உருவாகும்வரை எல்லாவற்றிலும் என்னை நான் ஈடுபடுத்திக் கொண்டதுதான் என் வெற்றிக்கான உண்மையான காரணம். முதலீடு எவ்வாறு வேலை செய்தது என்பதைக் காலப்போக்கில் நான் நன்கு புரிந்து வைத்திருந்ததால், அது எனக்கு ஒரு விளையாட்டுப்போல ஆகிவிட்டது. முதலில் நீங்கள் பணத்தின் பின்னால் ஓட வேண்டியிருக்கும், பின்னர் அது உங்கள் பின்னால் ஓடி வரும்.

நான் பெரிய அளவில் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்ததோடு, பெரிய அளவில் அதைப் பிறருக்குக் கொடுத்தும் உதவினேன். என் பணத்தின் பெரும்பகுதி சமூகக் காரணங்களுக்காகச் செலவிடப்பட்டது. ஆய்வு நடவடிக்கைகளில் பணத்தைச் செலவிட எனக்குப் பிடிக்கும்.

ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தவர்களுக்குப் பணம் கொடுத்து உதவ நான் ஒருபோதும் தயங்கியதில்லை. ஒரு நல்ல ஆய்வு, ஒரு தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகிற்கும் எந்த அளவு நன்மை செய்யும் என்பதை, அர்த்தசாஸ்திரம் குறித்து நான் மேற்கொண்ட ஆய்வு எனக்குப் புரிய வைத்திருந்தது.

என்னுடன் கல்லூரியில் படித்த நண்பன் ஒருவன் மேற்படிப்பிற்காகவும் ஆய்விற்காகவும் அமெரிக்கா சென்றான். ஒரு சமயம் அவன் என்னிடம், "பயன்படுத்தப்படாத அறிவைவிட, அறிவு ஏற்றுமதி ஒன்றும் ஆபத்தானது அல்ல," என்று கூறினான்.

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. இப்போது நம் நாட்டிலும் ஆய்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. பல கண்டுபிடிப்புகள் இங்கு நிகழ்ந்துள்ளன. ஆய்வு நடவடிக்கைகளில் தனிநபர்களுக்கு நிகராக அரசாங்கமும் ஏராளமான பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறது.

பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் புதுமைகளை ஊக்குவிக்க இந்திய அரசு ஏற்படுத்தியிருந்த ஒரு குழுவில் ஒரு சமயம் நானும் இடம்பெற்றிருந்தேன். அந்த வேலை எனக்கு அதிகமான திருப்தியை அளித்தது.

சிலர் என்னை நன்கொடையாளர் என்றும், சிலர் என்னை

முதலீட்டாளர் என்றும், சிலர் என்னைப் புதுமைகளை ஊக்குவிப்பவர் என்றும், புதுக்கண்டுபிடிப்புகளை ஆதரிப்பவர் என்றும் அழைத்தனர். ஆனால் யதார்த்தத்தில், இந்திய இளைஞர்களுடனும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புக் கொண்ட அவர்களுடைய கனவுகளோடும் நான் நெருக்கமாக வேலை செய்து கொண்டிருந்தேன்.

இந்திய இளைஞர்கள் என்னை ஒருபோதும் கைவிட்டதில்லை.

ஆனால் நான் அதிகமாக முதலீடு செய்ய விரும்பியது, அர்த்தசாஸ்திரம் குறித்து நான் ஆய்வு மேற்கொண்ட அந்த ஆசிரமத்தில்தான்.

கடந்த சில வருடங்களில் அந்த ஆசிரமம் ஒரு நவீன ஆசிரமமாக உருவெடுத்திருந்தது. அதில் நவீன ஆய்வு வசதிகளும் தங்குமிடம் போன்ற பிற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. அங்கு என்னைப்போலவே ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்தியவியல் குறித்த ஆய்வில் ஈடுபட்டு, பாரம்பரிய இந்திய ஞானத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

என் தொழில்களும் என் முதலீடுகளும் தொடர்ந்து கணிசமாக வளர்ந்து கொண்டிருந்ததால், ஒரு நாள், ‘உலகிலேயே பெரிய பணக்காரன்’ என்று நான் அழைக்கப்பட்டேன். தனியொருவனாக அதை நான் சாதித்திருந்தேனா? நான் இதற்குச் சாணக்கியருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

உலகிலுள்ள பெரிய பணக்காரர்களின் பட்டியலைத் தொகுத்து வழங்கிய ஒரு பிரபல சர்வதேசப் பத்திரிகை, என் புகைப்படத்தை அட்டையில் பிரசுரித்து, என்னைப் பற்றிய ஒரு தலைப்புக் கட்டுரையையும் வெளியிட்டிருந்தது.

என் புகைப்படத்திற்கு மேலே, “உன்னதமான தொழிலதிபர் . . .” என்ற தலைப்பு இடம்பெற்றிருந்தது:

# 57

# என்னை நான் கண்டுபிடித்தேன்

நீங்கள் பெரிதாக வளர வளர, கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி உங்களுடன் சேர்ந்து செயல்படுகிறது என்பதை நான் உணரத் தலைப்பட்டேன். ஒரு கட்டத்தில், என் வசம் எத்தனைத் தொழில்கள் இருந்தன என்று கணக்கிடுவதை நான் நிறுத்திவிட்டேன். என்னால் கட்டுப்படுத்த முடியாத அளவு அவற்றின் வளர்ச்சி இருந்தது.

என்னுடைய மாபெரும் தொழில் சாம்ராஜ்யத்திற்காக நான் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்ததாக மக்கள் நினைத்தனர். ஆனால் உண்மையில் நான் எதுவுமே செய்யவில்லை. வெளியுலகில் நான் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் எனக்குள் ஒரு பற்றின்மை உருவாகிக் கொண்டிருந்தது.

தான் விரும்பும் அனைத்தையும் ஒருவர் அடைந்த பிறகு, ஆன்மீக வளர்ச்சியில் அவர் கவனம் செலுத்த வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. எனக்கு வயதாகிவிடவில்லை. நான் ஆரோக்கியமாக இருந்தேன். ஆனால் நான் ஓர் அசாதாரணமான முடிவை எடுத்தேன். நிர்வாகத் தலைவர் பதவியைத் துறப்பது என்ற முடிவுதான் அது.

என் முடிவை நான் என் நிர்வாகக் குழுவினரிடம் அறிவித்தபோது அவர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். குறைந்தபட்சம் அடுத்தப் பத்து வருடங்களுக்காவது நான் என் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர்கள் அனைவரும் விரும்பினர். "என் இவ்வளவு சீக்கிரம் பதவி விலகுகிறீர்கள்?" "ஏதாவது பிரச்சனையா?" போன்ற கேள்விகள் எழுந்தன.

"எந்தப் பிரச்சனையும் இல்லை. நான் என் வேலைகளைச் சிறப்பாகச் செய்துள்ளேன். எனவே, மனநிறைவுடன் விலகிக் கொள்ள விரும்புகிறேன்," என்று நான் பதிலளித்தேன். நான் அதை உண்மையுடன் கூறினேன். என் தொழில்கள் அனைத்தும் தாமாகவே இயங்கும் நிலையில் இருந்தன. எங்கள் நிறுவனங்களில் இரண்டாம் மட்டத் தலைமைத்துவம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

இப்போது யாரை அடுத்த நிர்வாகத் தலைவராக நியமிப்பது என்பதுதான் நிர்வாகக் குழுவின் முன்னால் இருந்த பெரிய கேள்வி.

வெகு காலத்திற்கு முன்பே வருங்காலத் தலைவர் என்று நான் ஓர் இளம்பெண்ணைக் குறித்து வைத்திருந்தேன். அவள் என் முன்னாள் நிர்வாகத் தலைவரின் சகோதரியின் மகள்.

புத்திசாலியான அப்பெண்ணின் உடலில் வியாபார ரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. மிகச் சிறந்த வணிகக் கல்லூரி ஒன்றில் அவள் படித்திருந்தாள். அவளது மனப்போக்கும் மிகச் சிறப்பாக இருந்தது. சாணக்கியரின் ஞானத்தை நான் அவளிடம் பிரயோகித்தேன்:

அறிவை ஏற்றுக் கொள்ள இளவரசன் தயாராக இருக்கும்போது வல்லுனர்கள் அவனைத் தயார் செய்ய வேண்டும். ***(1.17.27)***

இங்கு ஒரே ஒரு வேறுபாடு இருந்தது. இளவரனுக்கு பதிலாக இளவரசி இருந்தாள்.

நான் அவளுக்குப் பயிற்சியளித்தேன். இப்பதவியை ஏற்றுக் கொள்வதற்கான முழுத் தகுதியையும் அவள் பெற்றுவிட்டிருந்ததை நான் அறிந்தேன். நூறு ஆண்டுகளாக இருந்து வந்திருந்த அத்தொழில்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவிருந்த முதல் பெண்மணி அவள்தான்.

பெண்களின் தலைமைத்துவத்திற்கான காலம் கனிந்துவிட்டிருந்தது. அவர்களுடைய தலைமைத்துவத்தில் நாங்கள் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருந்தோம் என்ற செய்தியை அது இச்சமுதாயத்திற்குத் தெரிவித்தது.

நிர்வாகக் குழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் என் தேர்வுடன் உடன்பட்டனர். ஒரு சிலருக்கு என் தேர்வில் சந்தேகம் இருந்தது. ஆனால் அவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில், என் தலைமைத்துவத்தின்கீழ் எங்கள் நிறுவனம் பன்மடங்கு வளர்ச்சி கண்டிருந்தது.

நான் அவர்களிடம், "என்னை நம்புங்கள். நான் எடுத்துள்ள முடிவுகளிலேயே மிகச் சிறந்த முடிவு இதுதான் என்பதைக் காலம் வெளிப்படுத்தும்," என்று நான் அவர்களிடம் கூறினேன்.

அன்று என் பதவிக் காலத்தின் கடைசி நாள். மறுநாள் புதிய தலைவர் அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்றுக் கொள்ளும் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து முடித்துவிட்டு நான் அமைதியாக அமர்ந்திருந்தேன். என் நிர்வாகத் தலைவரின் புகைப்படம் என் மேசைமீது இருந்தது.

"சார், நீங்கள் விரும்பியதை நான் செய்து முடித்துவிட்டேன் என்று

நான் நம்புகிறேன்,” என்று நான் என் வழிகாட்டியிடம் கூறினேன். வாழ்வில் நான் அடைந்திருந்த நிலைக்கு என்னை உயர்த்தியிருந்த அந்த மாபெரும் மனிதர்பால் நான் கொண்டிருந்த நன்றியுணர்வு என்னுள் ஊற்றெடுத்தது.

பல வருடங்களுக்கு முன்பு இதே போன்ற ஒரு நாளில் அவரது குடும்பத்தைச் சாராத என்னை அவர் நம்பிக்கையுடன் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருந்தார். இன்று நான் அதை அவர்களுடைய குடும்பத்தாரிடம் மீண்டும் ஒப்படைத்துவிட்டேன்.

என் அறைக் கதவை யாரோ தட்டினர். மறுநாள் பதவியேற்க இருந்த பெண் உள்ளே நுழைந்தாள். அவள் அமைதியாக என் முன்னால் வந்து அமர்ந்தாள். அவளுடைய உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நான் எதுவும் பேசவில்லை. உரையாடலை அவள் துவக்கட்டும் என்று நான் காத்திருந்தேன்.

ஒருசில கணங்களுக்குப் பிறகு அவள், “என் சகோதரனுக்கு பதிலாக என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்,” என்று கூறினாள்.

அவள் தன் திறமைமீது சந்தேகம் கொண்டிருக்கவில்லை, ஆனால் தான் ஒரு பெண்ணாக இருந்ததால் தனக்குத் தலைமைப் பதவியைத் தருவார்களா என்ற சந்தேகமே அவள் மனத்தில் ஓடிக் கொண்டிருந்தது என்பதை நான் அப்போதுதான் அறிந்தேன்.

ஒரு வணிகத் தலைவர் என்ற என் பாத்திரத்தை நான் நிறைவு செய்து கொண்டிருந்தபோது, நாம் வாழும் சமுதாயம் குறித்த ஒரு கடினமான பாடத்தை நான் கற்றுக் கொண்டிருந்தேன்.

இப்போதும் பெண்களுக்குச் சமமான வாய்ப்புகள் கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக, தொழிற்குடும்பங்களில் அது அறவே இல்லை. தலைமுறை தலைமுறையாக அவற்றை ஆண்களே ஆக்கிரமித்து வந்திருந்தனர். அதை உடைப்பது கடினமான காரியமாக இருந்தது.

என் இறுதி முடிவின் மூலம் என்னை அறியாமலேயே நான் ஒரு புதிய பாதையை உருவாக்கியிருந்தேன்.

அவள் என் கண்களைப் பார்த்து, “சார், நீங்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கை வீண்போகும்படி ஒருநாளும் நான் எதுவும் செய்துவிட மாட்டேன்,” என்று கூறினாள். அது உண்மைதான் என்பதை நான் அறிந்திருந்தேன்.

பிறகு அவள் என்னிடம் கேட்ட ஒரு கேள்வி என்னைச் சிந்திக்க வைத்தது: “ஒரு தலைவர் என்ற முறையில் நீங்கள் எனக்கு

வழங்கக்கூடிய சிறந்த அறிவுரை என்னவாக இருக்கும்?”

நான் அதற்கு இவ்வாறு பதிலளித்தேன்: “நீ பதவி விலகி, அடுத்தத் தலைவரை நியமிக்கும் வேளை வரும்போது, உன் இதயத்தின் சொல்லுக்கு ஏற்ப நடந்து கொள்.” நாங்கள் இருவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

அன்று மாலை நான் என்னுடைய தினசரி தியானத்தில் உட்கார்ந்தபோது என்னால் சுலபமாக அதில் கவனத்தைக் குவிக்க முடிந்தது. நான் மன அமைதி கொண்டிருந்தேன்.

யாரோ ஒருவர், “தியானம் என்பது ஒரு செயல்பாடு அல்ல. அது ஒரு மனநிலை,” என்று கூறியிருக்கிறார். நான் நிம்மதியாக இருந்தேன். நான் என்னைக் குறித்துச் சௌகரியமாக உணர்ந்தேன்.

அன்று இரவு எனக்கு ஒரு தெய்வீகமான ஆன்மீக அனுபவம் கிடைத்தது.

சூஃபி கவிஞர் ருமி இவ்வாறு கூறியுள்ளார்: “நீ ஆழ்கடலின் ஒரு துளியல்ல. ஒரு துளி ஆழ்கடல்.” அதை நான் அன்றிரவு அனுபவித்தேன்.

என் அகவிழிப்புணர்வு பரந்து விரிந்தது. நான் எல்லையற்றவனாக உணர்ந்தேன். எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்டிருந்த அனைத்து மனத்தடைகளையும் நான் தகர்ந்துவிட்டிருந்தேன் என்பதை நான் உணர்ந்தேன். என் உடல் என்னிலிருந்து தனிப்பட்ட ஒன்றாக எனக்குப் பட்டது. நான் என் உடலினுள் இருக்கவில்லை. என் உடல்தான் என்னுள் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அந்த விழிப்புணர்வு நிலையில், எதுவும் செய்யாமல் நான் அப்படியே லயித்திருந்தேன். முக்தியடைதல் என்றால் என்ன என்பதை அப்போதுதான் நான் முதன்முதலாகப் புரிந்து கொண்டேன். நான் என் உண்மையான சுயத்தை உணர்ந்தேன்.

நான் நிர்வாணத்தை அடைந்துவிட்டேன் . . . மோட்சத்தை எட்டிவிட்டேன் . . . ஜீவமுக்தியைப் பெற்றுவிட்டேன். மனிதப் பிறப்பின் உண்மையான நோக்கத்தைச் சாதித்துவிட்டேன்.

விளையாட்டு முடிந்துவிட்டது. ஆட்டமும் ஆடுபவனும் ஒன்றாகிவிட்டிருந்தனர். இருண்மை நிலை இனியும் இருக்கவில்லை. வெளிக்கும் உள்ளுக்கும் இடையே இருந்த வேறுபாடு மாயமாய் மறைந்துவிட்டது. எல்லாமே என்னுள் கரைந்துவிட்டது. நானே என்னுள் கரைந்து போய்விட்டேன்.

என் மனம் மனமற்ற நிலையை எய்தியது . . .

# 58

# என் மீதி நாட்கள்

மோட்சம் அல்லது முக்திநிலை என்பது பலவாறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இறப்பிற்குப் பிறகே இதை அடைய முடியும் என்று பலர் கருதுகின்றனர்.

ஆனால் இது அனைவருக்கும் சாத்தியம் என்பதை என் அனுபவம் எனக்கு உணர்த்தியுள்ளது. ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருக்கும் மனிதப் பிறவிகள் அல்ல நாம். மனிதப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் ஆன்மிகப் பிறவிகள் நாம்.

நம்முடைய உபநிஷத்துக்களும் பிற வேதங்களும் இவற்றைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளன. நான் அவற்றைப் பற்றிச் சிறு வயதிலிருந்தே படித்து வந்துள்ளேன். ஆனால் முதன்முறையாக இப்போதுதான் ‘நான் பிரம்மன்’ என்ற கோட்பாட்டை நான் அகவயமாக உணர்ந்துள்ளேன்.

முக்தி அடைந்த பிறகு என்னவாகும் என்ற சந்தேகம் ஒருவருக்கு ஏற்படலாம். அதற்குப் பிறகு அந்த மனிதர் என்ன செய்வார்?

அதற்குப் பிறகு வாழ்க்கை குறித்த உங்களுடைய கண்ணோட்டம் முற்றிலுமாக மாறிவிடும். எல்லாமே தெய்வீக நடவடிக்கையாகிவிடும். மகிழ்ச்சிக்காக நீங்கள் வேலை செய்ய மாட்டீர்கள். மகிழ்ச்சியிலிருந்து வேலை செய்வீர்கள். ஆசைகளிலிருந்து விடுதலை பெற்ற ஒரு மனநிலையில் நீங்கள் இருப்பீர்கள்.

அப்படியானால் அப்படிப்பட்ட ஒரு மனிதர் சோம்பேறியாக ஆகிவிடுவாரா?

இல்லை. உண்மையில் இதற்கு நேரெதிரானதுதான் நடக்கும். முக்தியடைந்த பிறகு நீங்கள் முற்றிலும் புதிய வழிகளில் வெளியுலகத்தோடு சுறுசுறுப்பாகத் தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

முக்திக்கு முன்னால் ஒருவர் தனிப்பட்ட இலக்குகளை அடைய முயன்று கொண்டிருப்பார். ஆனால் இப்போது நீங்கள் பரந்துபட்டச் சமுதாயத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பீர்கள். நீங்கள் கண்டுபிடித்துள்ள ஆன்மீக மகிழ்ச்சி நோக்கிப் பிறரையும் வழிநடத்தத் துவங்குவீர்கள்.

நானும் அப்படித்தான் செயல்பட்டேன். ஆனால் நான் ஈடுபட்டிருந்த நடவடிக்கைகள் வேறு மாதிரியாக இருந்தன. அதற்குப் பிறகு நான் தொழில் தொடர்பான விஷயங்களில் ஈடுபடவில்லை. மாறாக, பல்வேறுபட்ட சமூக மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளில் நான் ஈடுபட்டேன்.

நான் என் வீட்டைவிட்டு வெளியேறவில்லை. ஆனால் என் குடும்பம் பெரிதாகவிட்டது. ஒட்டுமொத்த உலகமும் என் குடும்பம் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

நான் முன்பைவிட அதிகத் துடிப்புடன் இயங்கினேன். நான் ஒரு சாதகமான நிலையில் இருந்தேன். என்னிடம் ஏராளமான பணம் இருந்ததால், பணம் தேவைப்பட்டத் திட்டங்களை நான் தேடினேன். மேலும் மேலும் நன்கொடைகளை அளித்து வந்தேன். ஆனால் நான் கேட்காமலேயே மேலும் மேலும் செல்வம் என்னை நோக்கிப் படையெடுத்து வந்தது.

நான் அதிகமாகக் கொடுக்கக் கொடுக்க, அதிகமாக எனக்கு வந்தது. ஆனால் செல்வத்தைச் சொந்தம் கொண்டாடும் உணர்வு எனக்கு இருக்கவில்லை. மேலும் மேலும் நல்ல வேலைகளைச் செய்வதற்காகக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஒரு கருவியாக நான் ஆனேன்.

என் பையன் வெளியுறவுத் துறை அதிகாரிகள் தேர்வில் முதன்மையானவனாகத் தேறினான். பல நாடுகளில் வேலை பார்த்தான். நல்ல வலுவான சர்வதேச உறவுகளை வளர்த்தெடுப்பதற்குத் தன் பங்களிப்பை அளித்தான். அவன் உண்மையிலேயே மகிழ்ச்சியுடன் இருந்தான், தன் வேலையை மகிழ்வுடன் செய்து வந்தான்.

இந்தியா பொருளாதாரரீதியாக வளர்ந்து கொண்டிருந்தது. நல்ல பல வெளியுறவுக் கொள்கைகளின் உருவாக்கத்தில் என் மகன் பங்கு பெற்றான். நம் நாட்டு அரசாங்கமும் வெளிநாட்டு அரசாங்கங்களும் அவனுடைய வேலையைப் பாராட்டின.

என் பெண் இசையில் முனைவர் பட்டம் பெற்று முழுநேரப் பாடகியாக ஆகிவிட்டாள். அவள் தன்னுடைய இசை அறிவைப் பெருக்கிக் கொண்டதோடு, ஓர் இசைப் பள்ளியையும் துவக்கினாள்.

புதிய பாடகர்கள் இத்துறையைத் தேர்ந்தெடுக்க அவள் அவர்களை ஊக்குவித்தாள். பாரம்பரிய குரு—சீடப் பாணியில் ஓர் இசைப் பள்ளியை அவள் நடத்தி வந்தாள். அதில் அவள் சிறுவர் சிறுமியருக்கு இலவசமாகக் கற்றுக் கொடுத்தாள்.

பின்னர் என் குழந்தைகளுக்குத் திருமணமானது. புரிதலுடன்கூடிய வாழ்க்கைத் துணைவர்கள் அவர்களுக்கு அமைந்தனர். உண்மையைக்

கூற வேண்டுமென்றால், அவர்களுடைய ஆன்மீகக் கூட்டாளிகளாக அவர்கள் விளங்கினர்.

பெரும்பாலான சமயங்களில் அவர்கள் வேறு இடங்களில் இருந்தபோதிலும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நாங்கள் எங்களுடைய தொடர்புகள் நலிந்துவிடாதபடி பார்த்துக் கொண்டோம்.

என் மனைவி கல்வித்துறையில் தன் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள். அவளுடைய வழிகாட்டுதலின்கீழ் எண்ணற்ற இளைஞர்களும் இளம்பெண்களும் முனைவர் பட்டம் பெற்றனர். பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்றப் பிறகும், தன்னை நாடி வந்த மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அவள் வழிகாட்டிக் கொண்டிருந்தாள்.

என் பெற்றோருக்கு வயதாகியிருந்தாலும் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தனர். ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகள் குறைந்திருந்தன.

ஒருமுறை என் பெற்றோர் இருவரும் வழக்கமான மருத்துவச் சோதனைக்குச் சென்றபோது, எங்களுடைய குடும்ப மருத்துவர் என்னிடம், "இனியும் நகர்ப்புற வாழ்க்கை உங்கள் பெற்றோருக்கு ஏற்றதாக இருக்காது. அவர்கள் இயற்கைக்கு அருகே வசித்துக் கொண்டு தங்களுடைய எஞ்சிய காலத்தை அமைதியுடன் கழிக்கட்டும்," என்று கூறினார். அந்த அறிவுரை என் பெற்றோருக்கு மட்டுமல்லாமல் எனக்கும் என் மனைவிக்கும் பொருந்தும் என்று எனக்குத் தோன்றியது.

எங்கள் நகரத்திற்கு வெளியே எங்களுக்கு ஒரு பண்ணை வீடு இருந்தது. அதில் பல பெரிய அறைகள் இருந்தன. அதோடு, அதில் ஒரு நூலகமும் இருந்தது. என்னால் அங்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் இருக்க முடியும்.

முன்பெல்லாம் வார இறுதியில் நாங்கள் அங்கு அடிக்கடிச் சென்றோம். இப்போது அந்த முறையைத் தலைகீழாக மாற்றிக் கொள்ளலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். நாங்கள் எங்கள் பண்ணை வீட்டிற்குக் குடி புகுந்தோம். வார இறுதி நாட்களில், நகரிலிருந்த எங்களுடைய வீட்டிற்கு வந்து சென்றோம்.

அதனால் பல நன்மைகள் விளைந்தன. நாங்கள் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தது போன்ற ஓர் உணர்வு எங்களுக்கு ஏற்பட்டது.

மொத்த வாழ்க்கையையும் நகர்ப்புறத்தில் செலவழித்திருந்த எனக்கு, இது துவக்கத்தில் மிகவும் வித்தியாசமாக இருந்தது. வாழ்க்கை மெதுவாக இயங்கிக் கொண்டிருந்தது. சிந்திப்பதற்கும் படைப்பாற்றல்மிக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் என்னிடம் நிறைய நேரம் இருந்தது.

இதில் இன்னொரு நன்மையும் இருந்தது. நான் தேவையற்ற நபர்களைச் சந்திக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. நான் ஓய்வு பெற்றிருந்தபோதிலும், நான் வெற்றிகரமான தொழிலதிபராக விளங்கியிருந்த காரணத்தால், பல வருடங்களுக்குப் பிறகு இப்போதும் பேசுவதற்கு அனேக அழைப்புகள் எனக்கு வந்தன.

நான் இப்போது நகர்ப்புறத்திலிருந்து தள்ளி வசித்து வந்ததால், பல தொலைபேசி அழைப்புகளைத் தவிர்ப்பது சுலபமானதாக ஆகிவிட்டது.

மேலும் பல புத்தகங்களை எழுதுவதற்கு நான் என் நேரத்தைச் செலவிட்டேன். என் புத்தகங்கள் விற்பனையில் சாதனை படைத்தனவா இல்லையா என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. எழுதுவதை நான் வெகுவாக ரசித்தேன். என்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவே நான் எழுதினேன்.

அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை என்றாலும், என் எழுத்துக்கள் புதிய விதமான வாசகர்களை ஈர்த்துக் கொண்டிருந்தன என்பதை நான் பின்னர் அறிந்தேன்.

முன்பு என் வாசகர்களில் பல தொழிலதிபர்கள் இருந்தனர். அவர்கள் என்னிடமிருந்து பணம் தொடர்பான அறிவுரைகளைப் பெற விரும்பினர். ஆனால் இப்போதுள்ள வாசகர்கள் என்னிடம் ஆன்மீகம் தொடர்பான கேள்விகளைக் கேட்டனர்.

என் எழுத்து மாறியிருந்ததை நான் உணர்ந்தேன். எது எனக்கு மகிழ்ச்சி அளித்தது என்பதை நான் கண்டுபிடித்திருந்தேன். தங்களுக்கு எது உண்மையான மகிழ்ச்சியை அளித்தது என்பதைப் பிறர் கண்டுபிடிக்க நான் வழிகாட்டினேன். அப்படிப்பட்ட வாசகர்களில் ஒருவர் ஒரு முறை என்னை அணுகி, “சார், எங்களுடைய கருத்தரங்கு ஒன்றில் பேச வர முடியுமா?” என்று கேட்டார்.

நான் அதற்கு பதிலளிக்க முயல்வதற்குள், இப்போதெல்லாம் நான் அதிகமாகச் சொற்பொழிவாற்றுவது இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது எனக்குப் புலப்பட்டது.

அவர் தொடர்ந்து இவ்வாறு கூறினார்: “இதை நீங்கள் மறுக்கும் முன்பு நான் கூறுவதைக் கேளுங்கள்.”

# 59

## கடைசிச் சொற்பொழிவு

“சார், நான் உங்களுடைய சுயசரிதை உட்பட எல்லாப் புத்தகங்களையும் படித்துள்ளேன்,” என்று அவர் ஆரம்பித்தார். “என் சிறு வயதிலிருந்தே நான் உங்களைப் பின்பற்றி வந்திருக்கிறேன். நீங்கள்தான் எனக்கு ஒரு முன்மாதிரி.”

நான் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுவதற்கு இது ஒரு நல்ல காரணமாகப் படவில்லை. என்னை ஒரு முன்மாதிரியாக வரித்துக் கொண்ட ஆயிரக்கணக்கான ரசிகர்கள் எனக்கு இருந்தனர்.

அவர் அடுத்துக் கூறியது என் கவனத்தைக் கவர்ந்தது. “நீங்கள் ஒரு முறை இந்தியாவின் பிரதிநிதியாக கிரீஸ் நாட்டிற்குச் சென்று உலகத் தத்துவக் காங்கிரஸில் பேசினீர்கள் அல்லவா?”

அவர் கூறிய தகவல்கள் துல்லியமாக இருந்தன. “அப்போது நீங்கள் அர்த்தசாஸ்திரத்தைப் பற்றியும் மேலாண்மைத் துறையில் அதன் பொருத்தம் பற்றியும் பேசியிருந்தீர்கள், சரிதானே?”

“அடுத்த வருடம் உலகத் தத்துவக் காங்கிரஸ் இந்தியாவில் நடைபெற உள்ளது. முதன்முறையாக நாங்கள் அதை நம் நாட்டில் நடத்தவிருக்கிறோம்,” என்று அவர் அறிவித்தார்.

இது எனக்குப் புதிய செய்தியாக இருந்தது. நான் என்னுடைய முனைவர் வழிகாட்டியுடனும் மற்ற பிற நண்பர்களுடனும் கிரீஸ் நாட்டிற்குச் சென்றிருந்த காட்சிகள் வேகமாக என் மனக்கண் முன்னால் வலம் வந்தன. “ஓ! அப்படியா? நம் நாடு அதை நடத்தவிருக்கிறதா?” என்று நான் கேட்டேன். ஓர் இந்தியனாக இருப்பதில் நான் மிகவும் பெருமை கொண்டிருந்தேன்.

“சார், பல வருடங்களாக இந்தியாவும் அதன் தத்துவங்களும் மதிக்கப்படவே இல்லை. நம்முடைய கலாச்சாரத்திற்கு நீங்கள் உயிரூட்டினீர்கள். நீங்கள் உலகிலேயே பெரிய பணக்காரராக ஆனது மட்டுமில்லாமல் ஆன்மீகக் கோட்பாடுகளின் அடிப்படையில் அந்த வெற்றியைச் சாதித்திருந்தீர்கள், உங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அர்த்தசாஸ்திரத்தைப் பின்பற்றி வந்திருந்தீர்கள்.”

அவர் தொடர்ந்தார்: “உங்களைத் தொடர்ந்து பலரும் சரியான

வழியில் பெரும் பணக்காரர்களாக உருவெடுத்தனர். இன்று உலகிலேயே பணக்கார நாடாக இந்தியா விளங்குகிறது.''

நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் தன் பேச்சை ஒரு வேண்டுகோளுடன் முடித்துக் கொண்டார்: "உலகத் தத்துவக் காங்கிரஸைத் துவக்கி வைத்துப் பேச நீங்கள் ஒப்புக் கொண்டால், அது சிறப்பாக இருக்கும். அது உலகிற்கு ஒரு புதிய பாதையைக் காட்டும். நம் நாட்டையும் நமது நாகரீகத்தையும் பிரதிநுதப்படுத்த உங்களைவிடப் பொருத்தமான நபர் வேறு எவரும் இருக்க முடியாது.''

நான் என்னுடைய குருக்கள் அனைவரையும் நினைத்துக் கொண்டு அவர்களை மானசீகமாக வணங்கினேன். "சரி, வருகிறேன்,'' என்று அவரிடம் கூறிய நான் என் மனத்தில் தோன்றிய ஒன்றையும் கூறினேன். "இதுதான் என்னுடைய கடைசிச் சொற்பொழிவாகவும் இருக்கும்.''

அவர் அது குறித்து மகிழ்ச்சி அடைந்தாரா அல்லது வேதனை அடைந்தாரா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் எதற்காக வந்தாரோ அது அவருக்குக் கிடைத்துவிட்டிருந்தது. என் ஒப்புதல்தான் அது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நான் ஒரு கருத்தரங்கில் பேச ஒப்புக் கொண்டிருந்தேன் என்ற செய்தி பலருக்கு ஆச்சரியம் அளித்தது. அது என்னுடைய 'கடைசிச் சொற்பொழிவு' என்று விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சி பிரம்மாண்டமான ஒன்றாகக் கருதப்பட்டது. சொல்லப் போனால், ஒலிம்பிக் போட்டியைவிட அல்லது உலகக் கால்பந்துக் கோப்பை நிகழ்ச்சியைவிடப் பெரிதாகக் கருதப்பட்டது. நூற்று எண்பது நாடுகளிலிருந்து எண்ணற்ற அறிஞர்கள், தத்துவவியலாளர்கள், மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் அனைவரும் இந்தியாவில் இதற்காகக் குழுமினர். இந்தியப் பிரதமரும் குடியரசுத் தலைவரும் உலக அறிஞர்களை வரவேற்றனர். அதைத் துவக்கி வைத்துப் பேசும் பேச்சாளராக நான் அதில் கலந்து கொண்டேன்.

இந்நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி, இணையத்தளம், அலைபேசிகள் போன்றவற்றின் மூலமாக லட்சக்கணக்கான மக்கள் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர் என்பதை நான் அறிந்திருந்தேன்.

நான் இவ்வாறு துவக்கினேன்: "இந்தியாவிற்கு நான் உங்களை வரவேற்கிறேன் . . . மாபெரும் ரிஷிகளின் பூமி உங்களை வரவேற்கிறது. முக்தி பூமி உங்களை வரவேற்கிறது. நான் இங்கு ஒரு நாட்டின் பிரதிநிதியாக நின்று கொண்டிருக்கவில்லை, ஒரு நாகரீகத்தின்

பிரதிநிதியாக நின்று கொண்டிருக்கிறேன். காலத்தால் அழியாத, உலகின் பழமையான கலாச்சாரத்தின் பிரதிநிதியாக உங்கள் முன் வந்திருக்கிறேன்.

“எங்கள் ஆன்மீக விழுமியங்களை அடித்தளமாகக் கொண்டு நாங்கள் எண்ணற்ற ஆண்டுகளாக உலகிற்கு வழிகாட்டியாக இருந்து வந்துள்ளோம். உண்மையைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு, அவர்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும், எங்களுடைய புராதன ஞானம் எப்போதும் சரியான பாதையைக் காட்டும். இன்று நீங்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து வந்திருக்கிறீர்கள். ‘எது இந்தியாவின் தத்துவம்?’ என்ற கேள்வி உங்கள் மனத்தில் எழலாம். இந்தியாவில் ஒரு தத்துவம் இல்லை. பல தத்துவங்கள் இருக்கின்றன.

“எங்களுடைய தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்காகப் பல நூற்றாண்டுகளாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் பலர் இங்கு வந்துள்ளனர். பதிலுக்கு நாங்களும் அவர்களுடைய தத்துவங்களிலிருந்தும் அவர்களுடைய கலாச்சாரங்களிலிருந்தும் நிறையக் கற்றுக் கொண்டுள்ளோம். எங்களுடைய செழிப்பான ஞானம் மேலும் விருத்தியடைய அது மிகவும் உதவியுள்ளது.

“வேற்றுமைகளை மதிக்கின்ற, அவற்றை பலவீனங்களாகப் பார்க்காமல் வலிமைகளாகப் பார்க்கின்ற கலாச்சாரம் எங்களுடையது. பேருண்மை குறித்தப் பல கண்ணோட்டங்களால் எங்கள் தத்துவம் செழிப்படைந்துள்ளது. நம் ஒவ்வொருக்குள்ளும் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் அதே ஆத்மாவைக் கண்டுபிடிக்க மேற்கொள்ளப்பட்டத் தர்க்க விவாதங்களும் கலந்தாய்வுகளும் நம்முடைய நான்கு வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும், ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் நிறைந்து கிடக்கின்றன.

“இங்கு வருகை தந்திருக்கும் உலகச் சிந்தனையாளர்களின் பார்வைக்கு நான் ஒரு முக்கியமான விஷயத்தை முன்வைக்கிறேன். நீங்கள் இந்தியாவை வெறும் ஆன்மீக நாடாக மட்டும் பார்க்காமல், பொருளியல்ரீதியாக வெற்றி பெற்றுள்ள ஒரு தேசமாகவும் அதைப் பார்க்க வேண்டும் என்பதுதான் அது. மனிதன் முழுமையான வளர்ச்சி பெற்றவனாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கு ஆன்மீகச் செழிப்பும் வேண்டும், லௌகீகச் செழிப்பும் வேண்டும்.

“தர்மம்தான் லௌகீகச் செழிப்பின் அடிப்படையாக இருக்க வேண்டும். தர்மம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் வழிகாட்டும். பேருண்மையை நோக்கிய தேடலில் ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டும் சக்தியாகவும் நம்மைப் பிணைத்து வைத்திருக்கும்

ஆற்றலாகவும் அது விளங்குகிறது.

"அப்படிபட்ட தர்மத்தைப் போதித்த ஒரு புத்தகம் என் வழிகாட்டியாக இருந்து வந்துள்ளது குறித்து நான் பெருமையடைகிறேன். அர்த்தசாஸ்திரம்தான் அப்புத்தகம். இந்நாட்டின் மிகப் பெரிய தத்துவஞானியான கௌடில்யரால் எழுதப்பட்ட நூல் அது. இறுதியில் மகிழ்ச்சி என்பது தர்மத்திலிருந்துதான் வருகிறது என்பதை அவர் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். உங்களுடைய நாடுகளுக்கு இச்செய்தியை நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நான் உங்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

"இன்று உலகை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் குறித்து நாம் மறுபடியும் தர்க்க விவாதங்களிலும் கலந்தாய்வுகளிலும் ஈடுபட வேண்டும், ஆன்மீகச் செழிப்பும் லௌகீகச் செழிப்பும் ஒரு பறவையின் இரண்டு இறக்கைகள் என்பதை நமது அடுத்தத் தலைமுறையினர் புரிந்து கொள்ள நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். வெற்றிகரமாகப் பறப்பதற்கு இரண்டு இறக்கைகளுமே தேவை."

அங்கு வந்திருந்த அனைவரும் எழுந்திருந்து கைதட்டினர். நான் என் கண்களை மூடிக் கொண்டேன். நான் விஜயம் செய்திருந்த கைலாச மானசரோவர் மலை என் மனத்தின் முன் தோன்றியது.

நான் அர்த்தசாஸ்திரத்தை வெறுமனே படித்து மட்டும் இருக்கவில்லை. அதை நான் என் வாழ்க்கையாக்கிக் கொண்டிருந்தேன்.

# 60

# என் பேரக்குழந்தைகளுக்கு அறிவுரை

காலம் உங்களிடமிருந்து பலவற்றைப் பறித்துச் சென்றுவிடுகிறது.

என் மனத்திற்கு நெருக்கமாக இருந்தவர்கள் அனைவரும் இப்பூவுலகைவிட்டு மறைந்துவிட்டனர். என் பெற்றோர், எனக்கு அர்த்தசாஸ்திரம் சொல்லிக் கொடுத்த குரு, அறங்காவலர், நிர்வாகத் தலைவர், பல ஆன்மீகத் தலைவர்கள், என் நண்பர்கள் ஆகியோர் அதில் அடங்குவர்.

இவர்கள் எனக்குக் கொடுத்துச் சென்ற ஞானத்தை நான் நினைவுகூர்ந்தேன். என் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் அவர்கள் எனக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். நான் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போதெல்லாம் என்னுள் நன்றியுணர்வு பெருக்கெடுத்து ஓடுகிறது.

வருடங்கள் செல்லச் செல்ல நானும் உடல்ரீதியாகத் தளர்வடைந்தேன். ஆனால் மனத்திற்குள் நான் வலிமையாகவும் முழுமையாகவும் உணர்ந்தேன். நான் எதற்காகக் காத்துக் கொண்டிருந்தேன்? ஒரு சௌகரியமான சாவிற்காகவா?

உண்மையில் நான் இறந்து போய் வெகுகாலம் ஆகியிருந்தது. உடலியல்ரீதியான இறப்பு உண்மையான இறப்பல்ல. அகங்காரத்தின் இறப்புதான் உண்மையான இறப்பு. அது எனக்கு நிகழ்ந்து வெகுகாலம் ஆகியிருந்தது. உடலானது இயற்கையின் வழிப்படி நடக்க வேண்டும்.

ஓர் இலை அதன் காலம் முடியும்போது மரத்திலிருந்து சருகாக உதிர்ந்துவிடுகிறது. அது கீழே விழுவதற்கு எந்த முயற்சியும் தேவைப்படுவதில்லை. அப்போது அந்த இலை தன்னிடமிருந்து பிரிந்து செல்ல அந்த மரம் அனுமதிக்கிறது. நான் எப்போது தன்னிடம் திரும்பி வர வேண்டும் என்று கடவுள் விரும்பினாரோ, அப்போது அவரிடம் செல்ல நான் தயாராக இருந்தேன். இப்போது எனக்கு எதுவுமே முக்கியமாகப் படவில்லை.

என் குழ்ந்தைகள் பெற்றோராக ஆகியிருந்தனர். எனக்கு நான்கு பேரக் குழந்தைகள் இருந்தனர். எங்களுடைய பண்ணை வீட்டில் பல வருடங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்த பிறகு, நானும் என் மனைவியும் ஒரு

கிராமத்திற்குக் குடிபெயர்ந்தோம். அவ்வப்போது என் குழந்தைகளும் என் பேரக் குழந்தைகளும் எங்களைப் பார்க்க வருவார்கள்.

நானும் என் மனைவியும் ஒன்றாக எங்கள் நேரத்தைக் கழிப்பதில் ஆனந்தமடைந்தோம். வயதாக ஆக உங்களுடைய காதலும் முதிர்ச்சி அடைகிறது என்று சொல்கிறார்கள். பல ஆண்டுகால மணவாழ்க்கைக்குப் பிறகு நாங்கள் ஒருவரையொருவர் முற்றிலுமாகப் புரிந்து வைத்திருந்தோம். பல சமயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள வேண்டிய தேவைகூட இல்லாமல் இருந்தது. சமயங்களில் மௌனமும் எங்களுக்கு இடையே நாங்கள் பரிமாறிக் கொண்ட ஒரு மொழியாகிப் போனது.

படிப்பதற்கும் எழுதுவதற்கும் தியானம் செய்வதற்கும் நான் நிறைய நேரத்தைச் செலவிட்டேன். செல்வத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதிலிருந்து கடவுளை எவ்வாறு சென்றடைவது என்பதுவரை பல விஷயங்களில் என் அறிவுரையை நாடி உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் என்னைத் தேடி வந்தனர்.

பள்ளி ஆண்டு விடுமுறைகளின்போது எங்கள் குழந்தைகள் தங்கள் குடும்பத்தோடு எங்களைப் பார்க்க வந்தனர். சிறு குழந்தைகள் புடைசூழ இருப்பது எப்போதும் மகிழ்ச்சியை வரவழைக்கும் ஒன்றுதான்.

ஒருநாள் நான் என் நூலகத்தில் அமர்ந்திருந்தேன். என் பேரக்குழந்தைகள் உள்ளே வந்தனர். என் புத்தகங்களைப் பார்ப்பதும் நான் கூறும் கதைகளைக் கேட்பதும் அவர்களுக்குப் பிடிக்கும். “தாத்தா, உங்களிடம் இவ்வளவு புத்தகங்கள் இருக்கிறதே, எல்லாவற்றையும் நீங்கள் படித்திருக்கிறீர்களா?”

நான் வாய்விட்டுச் சிரித்தேன். “எல்லாவற்றையும் அல்ல. பெரும்பாலானவற்றைப் படித்திருக்கிறேன்.”

என் பேத்திகளில் ஒருத்தி, “புத்தகங்களைப் படிப்பதற்குச் சிறந்த வழி எது?” என்று கேட்டாள்.

அதற்கு நான், “புத்தகங்களைப் படிப்பதற்குச் சிறந்த வழி, அதை ஒரு குருவிடமிருந்து கற்றுக் கொள்வதுதான்,” என்று பதிலளித்தேன்.

என் பேரன் ஒருவன், “தாத்தா, இங்குள்ள புத்தகங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தப் புத்தகம் எது?” என்று கேட்டான்.

நான் மௌனமானேன். பல வருடங்களுக்கு முன்பு என் தாத்தாவிடம் நான் இதே கேள்வியைக் கேட்டிருந்தது என் நினைவிற்கு வந்தது. அதற்கு அவர் அளித்த பதில் என் வாழ்க்கையை மாற்றியிருந்தது.

நான் புதிதாகச் சேர்ப்பதற்கு எதுவும் இருக்கவில்லை. “கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம்.”

என் பேரக்குழந்தைகள் என்னைவிட அதிக சாமர்த்தியசாலிகளாக இருந்தனர். அவன் உடனே, “கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் படிப்பதன் மூலம் நான் எப்படிப் பயன் பெறுவேன்?” என்று கேட்டான்.

“பயனா?” நான் அதிர்ச்சி அடைந்தேன். பிறகு, இப்பேரனின் உடலில் என் ரத்தம், ஒரு தொழிலதிபரின் ரத்தம் ஓடிக் கொண்டிருந்தது என்பதை நான் உணர்ந்தேன். ஒரு விஷயத்திலிருந்து தான் எப்படிப் பயன் பெறலாம் என்பதைத் தெரிந்து கொள்ளவே ஒரு வர்த்தகன் விரும்புவான்.

என் குழந்தைகள் எவரும் தொழிலுலகிற்குள் பிரவேசிக்கவில்லை என்றாலும், அவர்களுக்கு அடுத்தத் தலைமுறை அப்பயணத்தைத் தொடரக்கூடும் என்று எனக்குத் தோன்றியது.

நான் என் பேரனுக்கு ஒரு பொருத்தமான பதிலை அளிக்க வேண்டும் என்று எண்ணினேன். வழக்கம்போல அர்த்தசாஸ்திரம் கைகொடுத்தது:

> ஆன்மீகரீதியான நன்மைகள், லௌகீகப் பயன்கள் மற்றும் இன்பங்களை எவ்வாறு உருவாக்கிப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது என்பதை அர்த்தசாஸ்திர அறிவியல் காட்டுகிறது. அதே சமயம், ஆன்மீகத் தீமைகள், லௌகீக இழப்புகள், வெறுப்பு ஆகியவற்றிலிருந்து மீளவும் அது உதவுகிறது. ***(15.1.72)***

நான் இந்தச் சூத்திரத்தை விளக்கினேன்: “இது வெறுப்பிலிருந்து உங்களை விடுவிக்கும்.” பின் இறுதியாக, “நீங்கள் அர்த்தசாஸ்திரத்தைப் படித்தால் வினோதமான ஒன்று நிகழும். அதன் ஞானம் உங்களுடைய சிந்தனையின் ஒரு பகுதியாக ஆகிவிடும். உங்களுடைய சிந்தனை சிறந்த முறையில் வளர்ச்சியடையும்,” என்று நான் கூறினேன்.

பிறகு நான் இந்த அறிவுரையை என் பேரனுக்கு வழங்கினேன். உண்மையில் என் பேரக் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் நான் வழங்கிய கடைசி அறிவுரை அதுதான்:

“சமஸ்கிருத மொழியைப் படிக்க என் தாத்தா என்னை ஊக்குவித்தார். நீங்கள் இந்த மகத்தான மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நானும் உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன். நம்முடைய புராதன வேதங்களுக்கும் உங்களுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றத்திற்கு அது உதவும்.”

பின் சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவின் வளர்ச்சியை நினைத்துப் பார்த்து, நான் என் பேரக்குழந்தைகளிடம், “நீங்கள்

அதிர்ஷ்டக்காரத் தலைமுறையினர். பிழைப்பிற்காக நீங்கள் போராடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் உங்களுக்குக் கிடையாது. இன்று நாம் ஒரு வளர்ந்த, செழிப்பான நாடு. ஆனால் இந்தச் செழிப்புக் குறித்து மெத்தனமாக இருந்துவிடாதீர்கள். செய்வதற்கு உங்கள் அனைவருக்கும் வேலைகள் இருக்கின்றன," என்று கூறினேன்.

அவர்கள் என்னைக் குறுகுறுப்புடன் பார்த்தனர்.

"ஒரு நாடு உலகிலேயே பணக்கார நாடாக ஆனவுடன், பிற நாடுகள் அது கூறுவதைக் கேட்கின்றன. அந்த நாட்டின் சொற்களும் செயல்களும் உலகை வழிநடத்துகின்றன. இன்று உலகின் தலைமைத்துவத்தை இந்தியா பெற்றுள்ளதால், இந்தியாவிற்கும் இந்தியர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது."

இந்தியா மீண்டும் ஒரு மாபெரும் நாடாக உருவாகத் தங்களைத் தியாகம் செய்திருந்த பல ஆண்களையும் பெண்களையும் நான் நினைவுகூர்ந்தேன். "இழந்து போன தனது ஆன்மாவை இந்தியா மீண்டும் கண்டுபிடித்துள்ளது. அது லௌகீக மற்றும் ஆன்மீகச் செழிப்பை உள்ளடக்கிய ஒன்று. நீங்கள் அனைவரும் அந்த வேலையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்."

"அதை எப்படிச் செய்வது?" என்று என் பேரன் கேட்டான்.

"நம்முடைய வேதங்களைப் படியுங்கள். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அது உங்களை வழிநடத்தும். நீங்கள் அனைவரும் நம்முடைய பழைய ஞானத்திலிருந்து ஊக்கம் பெற்று, ஒரு மகத்துவமான எதிர்காலத்திற்காக நிகழ்காலத்தில் உழைக்க வேண்டும்."

இருப்பதிலேயே இளையவளான என் பேத்தி என்னிடம், "அப்படியானால், சாணக்கியரைப்போல நானும் சாமர்த்தியசாலியாக ஆகிவிடுவேனா?" என்று கேட்டாள்.

"கண்டிப்பாக ஆகிவிடுவாய். அதோடு, பிறரும் சாமர்த்தியசாலிகளாக ஆக அவர்களுக்கு உன்னால் உதவ முடியும்."

புன்னகையோடு நான் அவளிடம் இவ்வாறு கூறி முடித்தேன்:

"உன்னுள் இருக்கும் சாணக்கியரை . . .

அது வெளிக் கொண்டுவரும்."

# நிறைவுக் குறிப்பு

எழுதுவது எனக்கு எப்போதும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. விற்பனையில் சாதனை படைத்துள்ள இரண்டு புத்தகங்களை நான் எழுதிய பிறகு, இன்னொரு சிறப்பான புத்தகத்தை என் வாசகர்கள் என்னிடமிருந்து எதிர்பார்த்தது எனக்குத் திருப்தியளித்த அதே நேரத்தில், இப்பொறுப்பு எனக்கு சவாலானதாகவும் இருந்தது.

அடுத்து நான் எதைப் பற்றி எழுதுவது என்று யோசித்தேன்.

கதைகள் எப்போதும் என்னை ஈர்த்து வந்தன. எனக்கு நினைவு தெரிந்த சமயத்திலிருந்து அது என் இதயத்திற்கு நெருக்கமான ஒன்றாக இருந்து வந்துள்ளது. அதனால் வேறு ஒரு கண்ணோட்டத்திலிருந்து எழுதுவதற்கான வேளை வந்துவிட்டிருந்ததாக நான் உணர்ந்தேன்.

பல வருடங்களாக, பிரபலமான எண்ணற்றத் தொழிலதிபர்கள் வெற்றி பெறவும் வருங்காலத்தில் தொடர்ந்து அவர்களுடைய சந்ததியினர் வெற்றி பெறுவதை உறுதி செய்யவும் நான் அறிவுரை வழங்கி வந்துள்ளேன். இவர்கள் மட்டுமல்லாமல், தங்கள் வாழ்க்கையில் பெரும் வெற்றிகளைக் குவிக்கத் துடித்துக் கொண்டிருக்கின்ற ஒட்டுமொத்த இளைய சமுதாயம், தாங்கள் பின்பற்றுவதற்கான ஞானத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது.

இந்த எண்ணம்தான், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்து நான் கற்றுக் கொண்டிருந்த விஷயங்களையும் அதை ஒருவர் எவ்வாறு தன் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தலாம் என்பதையும் கற்பனையோடு கலந்து ஒரு கதையாகக் கொடுக்க என்னைத் தூண்டியது.

நான் என் கையெழுத்துப் பிரதியை என் பதிப்பாளர்களிடம் கொடுத்தபோது, அவர்களிடமிருந்து ஒரே ஒரு பின்னூட்டக் கருத்துதான் எனக்குக் கிடைத்தது — இதை நாங்கள் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டோம். அவர்கள் அடுத்து என்னிடம் கேட்டக் கேள்வி, “இது உங்கள் சொந்தக் கதையா?” என்பதுதான். எல்லாப் புத்தகங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஆசிரியரின் அனுபவங்களின் பிரதிபலிப்புகளாகத்தான் இருக்கும் என்று நான் அதற்கு பதிலளித்தேன்.

என் சொந்த வாழ்க்கையிலிருந்து சில விஷயங்களை நான் இப்புத்தகத்தில் சேர்த்திருப்பது உண்மைதான். அதே சமயம், நான் என்

வாழ்க்கையில் இதுவரை சந்தித்துள்ள பலதரப்பட்ட மக்களுடைய கதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

இளைய இந்தியாவின் கனவு, விரக்தி, அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் முயற்சிதான் இப்புத்தகம். அதோடு, செழிப்பு என்னும் சிகரத்திற்கு நம் நாட்டை எடுத்துச் செல்ல உந்தப்பட்டுள்ள முன்னோக்குச் சிந்தனையாளர்களின் கதையும்கூட இது.

நான் இதை மகிழ்ச்சியுடன் எழுதியுள்ளேன். வாசகர்களாகிய நீங்களும் இதை மகிழ்வுடன் படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அதோடு, இக்கதை உங்கள் சொந்தக் கதை என்பதுபோல இதனுடன் ஓர் ஆழமான தொடர்பை உருவாக்கிக் கொள்வீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

நீங்கள் இதை ஒரு புனைகதையாகவும் படிக்கலாம் அல்லது வாழ்க்கையில் உங்களுக்கு உதவக்கூடிய படிப்பினைகளை உள்ளடக்கிய ஒன்றாகவும், மேலாண்மை தொடர்பான ஒன்றாகவும் பார்க்கலாம். அர்த்தசாஸ்திரமும் சாணக்கியரின் ஞானமும் தொடர்ந்து என் வாழ்க்கைப் பயணத்தில் என்னை வழிநடத்திச் சென்று கொண்டு இருக்கின்றன . . .

ராதாகிருஷ்ணன் பிள்ளை

# நூலாசிரியரைப் பற்றி



மேலாண்மை, ஆலோசனையியல் ஆகியவற்றில் கல்வி கற்றுள்ள ராதாகிருஷ்ணன் பிள்ளை, சமஸ்கிருதத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அதோடு, சாணக்கியர் மற்றும் அர்த்தசாஸ்திரத்தில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளதற்கான சான்றிதழையும் அவர் பெற்றுள்ளார்.

இத்துறையில் அவரது பங்களிப்பைப் பாராட்டி, 2009ம் ஆண்டில் அவருக்கு சர்தார் பட்டேல் சர்வதேச விருது வழங்கப்பட்டது. எஸ்பிஎம் அறக்கட்டளையின் இயக்குனர் என்ற முறையிலும், மும்பைப் பல்கலைக்கழகக் குழு உறுப்பினர் என்ற முறையிலும், இத்துறையில் தான் பெற்றுள்ள ஆழ்ந்த அறிவைப் பயன்படுத்தித் தலைமைத்துவத் திட்டங்கள் பலவற்றை அவர் வடிவமைத்துள்ளார். ஆத்ம தர்ஷன் என்ற ஆன்மீகச் சுற்றுலா நிறுவனத்தின் நிறுவனர் அவர். அதோடு, சாணக்கியா இன்ஸ்டிடியூட் ஆஃப் பப்ளிக் லீடர்ஷிப் (www.ciplmumbai.in) என்ற, அரசியல் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற தலைமைத்துவப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவன இயக்குனராகவும் அவர் இருக்கிறார். மாபெரும் வெற்றி பெற்ற

அவருடைய முதல் புத்தகமான ‘கார்பரேட் சாணக்கியா’ நூலையும், ‘சாணக்கியரின் 7 தலைமை ரகசியங்கள்’ எனும் இரண்டாவது நூலையும் தொடர்ந்து, வர்த்தகப் புனைகதையான ‘உங்களுக்குள் இருக்கும் சாணக்கியன்’ என்ற இப்புத்தகத்தை ராதாகிருஷ்ணன் பிள்ளை எழுதியுள்ளார்.

# அத்தியாயங்களுக்கான பக்க எண்


தாத்தாவின் அறிவுரை, 1
இந்திய வரலாறு, 5
ராஜதந்திரி, 9
அர்த்த—சாஸ்திரம்?, 13
சதுரங்கம், 17
என்னுள் இருந்த தலைவரை வெளிக்கொண்டு வருதல், 21
புத்தகக் காதல், 25
சாணக்கியர் குறித்தக் குறிப்புகள், 29
குரு—மகத்தானவர், 33
தாத்தாவிடமிருந்து அப்பாவிற்கு, 37
ஓர் ஆசிரியர், ஒரு மாணவன், 41
ஆறு மாதப் பிரியாவிடை, 45
உள்முகமாக ஒரு பயணம், 49
என் அர்த்தசாஸ்திர குரு, 53
விதிமுறைகள், 57
தீட்சை, 61
ஆசிரம வாசம், 65
வித்தியாசமானதொரு கணக்காளன், 69
உன்னதமான தொழிலதிபர், 73
படிப்பு முறை, 77
மாறுபட்டக் கண்ணோட்டங்கள் — உன் கண்ணோட்டம், 81
சிந்தனை—மனிதகுலத்திற்குக் கிடைத்துள்ள ஒரு பரிசு, 85
சிந்தனை செய், அதே சமயம் செயலிலும் இறங்கு, 89
கருத்தரங்கு, 93
இறுதி நாட்கள், 97
வீடு திரும்புதல், 101
வழிகாட்டிய சோதிடம், 105
சமஸ்கிருதப் பேராசிரியர், 109

நேர்முகத் தேர்வு, 113
முன்னோக்கில் பங்கு, 117
தலைவரின் பயிற்சி, 122
என் புதிய தலைவர், 126
இரு நல்ல செய்திகள், 130
தொடர்பு, 134
முன்னோக்கி,137
வணிக முன்வரைவுத் திட்டம், 141
முதலடி, 145
விற்பனையாளரிலிருந்து தொழிற்கூட்டாளிக்கு, 149
பிரம்மாண்டமான சுற்றுலா, 153
ஆன்மீகரீதியான ஒரு சக பயணி, 157
அடுத்தக் கட்ட வளர்ச்சி, 161
என் பால்ய நண்பனின் வழிகாட்டுதல், 165
என் மனைவியின் வேண்டுகோள்,169
ஓர் இந்தியத் தொழிலதிபரின் உரை, 173
பெற்றோர் எனும் ஆனந்தத்தில், 177
பணம் உன்னை விடுதலை செய்யும், 181
உண்மையான சவால், 185
முனைவரை உருவாக்கிய முனைவர், 189
அறிஞரிலிருந்து நூலாசிரியர், 193
விற்பனையில் சாதனை படைத்த ஒரு புத்தகத்தை எழுதுதல், 197
அற்புதமான சுதந்திர உணர்வு, 201
எனக்குள் இருந்த தலைவன், 205
குடும்பத் தலைவன், 209
உங்கள் சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தல், 213
உறுதியாக இரு, 217
நானா சாதித்தேன்?, 221
என்னை நான் கண்டுபிடித்தேன், 225
என் மீதி நாட்கள், 229
கடைசிச் சொற்பொழிவு, 233
என் பேரக்குழந்தைகளுக்கு அறிவுரை, 237
நிறைவுக் குறிப்பு, 241

நூலாசிரியரைப் பற்றி, 243

**சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் நூலின் ஞானத்தைத் தேடத் தன் தாத்தாவால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு மனிதனின் சுவாரசியமான, எளிமையான, செறிவான கதைதான் இந்நூல்.**

இலக்கற்ற ஓர் இளைஞனாக இருந்து, பிறகு உலகிலேயே பெரிய பணக்காரனாக உருவாகிய நவீன சாணக்கியச் சீடன் ஒருவனின் சாகசக் கதை இது. வியாபாரத்தில் வெற்றியைக் குவிக்க ஒரு புராதன இந்திய இலக்கியப் படைப்பையும் சமஸ்கிருதத்தையும் படிக்க ஒரு நாட்டையே ஊக்குவித்தவன் அவன்.

வினோதமாக, இப்புத்தகத்தில் எந்தவொரு கதாபாத்திரத்திற்கும் பெயர் கிடையாது. இது உங்களுடைய கதை, உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தின் கதை. நீங்கள் இப்புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது, இப்புத்தகக் கதாநாயகனின் பாதையில் நீங்களும் நடைபோட்டு, உங்களுக்குள் இருக்கும் சாணக்கியனை வெளிக் கொண்டுவர நீங்கள் முயல்வீர்கள்.

நீங்கள் ஒரு பெற்றோராக இருந்தாலும் சரி, அல்லது ஓர் இளைஞனாக இருந்தாலும் சரி, ஒரு தொழிலதிபராக இருந்தாலும் சரி, அல்லது ஓர் ஆய்வறிஞராக இருந்தாலும் சரி, உங்களால் எளிதாகவும் சுவாரசியத்துடனும் இதைப் படிக்க முடியும். இது மக்களுக்கான புத்தகம். இது கண்டிப்பாக உங்களைச் சிந்திக்க வைக்கும்.

உங்களுக்குள் இருக்கும் சாணக்கியனைக் கண்டுபிடிக்கும்வரை இப்புத்தகத்தைக் கீழே வைத்துவிடாதீர்கள்.

சமஸ்கிருதத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள ராதாகிருஷ்ணன் பிள்ளை, சாணக்கியர் மற்றும் அவரது அர்த்தசாஸ்திரத்தின் மாயாஜாலங்களைப் பெருவிருப்பத்துடன் தொடர்ந்து தேடிக் கொண்டிருப்பவர். அவரது முதல் புத்தகமான 'கார்பரேட் சாணக்கியா' விற்பனையில் மகத்தான சாதனைகளைப் புரிந்தது. அதைத் தொடர்ந்து 'சாணக்கியரின் 7 தலைமை ரகசியங்கள்' எனும் இரண்டாவது புத்தகமும் விற்பனையில் கொடிகட்டிப் பறந்தது. கதை வடிவில் இருக்கும் இந்நூலின் மூலம் அவர் சாணக்கியரை மீண்டும் உயிர்த்தெழ வைத்துள்ளார்.

அவரைத் தொடர்பு கொள்ள: டுவிட்டர்: @rchanakyapillai

முகநூல்: /RadhakrishnanPillaiOfficial

Elevate Your Life. Transform Your World.

JAICO BOOKS

www.jaicobooks.com Self-Help/Business

ISBN-13: 978-81-8495-957-4

9788184959574

J-2389TM

e Book AVAILABLE